ஹெயிற்றி: அமெரிக்காவின் மிரட்டலுக்கு பணியுமா?

# உலக உலா

ஒக்ரோபர் 1994

20/10/94



## அடுத்த காலடி செவ்வாயில்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக உலா

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
19-10-1994
யாழ்ப்பாணம்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

## உலக விவகாரங்கள்


### ஆசியா

காஷ்மீரில் படுகொலை — 07
நேபாள நெருக்கடி — 09
கலங்கிய நீர் — 10
வியற்நாமின் பதிலடி — 12
அரண்மனைத் தகராறு — 13
மீண்டுமொரு பிரதமர் — 15
இஸ்ரேலுடன் இணக்கம் — 17
போராட்டமும் பணமும் — 20
தந்தையின் பின் மகன் — 21

### ஐரோப்பா

பொஸ்னிய யுத்தம் — 25
அலெக்சாந்தர் சொல்பெனின்சின் — 27
பிரிந்தவர் கூடுவார்களா? — 29

### அமெரிக்கா

அடிமைகள் குடியரசின் அவலங்கள் — 33
ஆர்ஜென்ரீனாவில் குண்டு வெடிப்பு — 36

### ஆபிரிக்கா

ருவாண்டாவின் சோகம் — 38

### சுற்றுலியல்

கும்பலுக்கேற்ற ஆட்டம் — 41

### வாணிகம்

மக் (MAC) தாக்குதல் — 43

### முகாமைத்துவம்

எதிர்ப்புக்களுக்கு முகங்கொடுப்பது எப்படி — 45

### மதம்

ஆபிரிக்காவில் கத்தோலிக்கம் — 49

### மனிதவியல் வரலாறு

அகதி — 52

### மருத்துவம்

சுருளுருக் கிருமி — 54

### வரலாறு

ஒபன் ஹைமர் மொஸ்கோவிற்கு உதவினாரா? — 57

### விளையாட்டு

ஓட்டங்கள் எடுக்கும் இயந்திரம் — 60

### திரைப்படம்

சிண்லர்ஸ் லிஸ்ட் — 62

### விண்வெளி

செவ்வாயில் மனிதனின் காலடி — 64
நாசா சந்தித்த வெற்றியும் தோல்வியும் — 68

### சமூகவியல்

ஆன்மாக்களை அழித்தல் — 71

### சுற்றுச்சூழல்

தொலைந்து போன மிருகங்கள் — 74

### பொது அறிவுப் புதிர்

உங்கள் உடலைப்பற்றி அறிந்து கொள்ளுங்கள் — 79

### பல்திணைப்பகுதி

செய்திச்சரம் — 02
புதியன அறிமுகம் — 03
பார்வைகள் — 06


PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY

விலை ரூபா: 100/-

உலக உலா
பல்துறைசார்
மாத இதழ்

உலா: 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய்வான்

### மரணதண்டனை நிறைவேற்றங்கள் கண்டனம் செய்யப்படுகின்றன

சீனாவின் சிஜியாஸ் மாநிலத்தில் உள்ள கியாண்டோ ஏரியில் சில மாதங்களுக்கு முன்பு உல்லாசப் பயணப்படகொன்றில் உலாவந்த 32 தாய்வானியர்கள் சில சீனர்களால் படுகொலை செய்யப்பட்டனர். அது தொடர்பாக அண்மையில், சீனாவில் 3 சீனர்கள் மரணதண்டனைக்கு உள்ளாக்கப்பட்டார்கள். ஆனால் தாய்வானில் பெருநிலப்பரப்பு சீனா சம்பந்தமான அலுவல்கள் அவையின் உப – தலைவரான சூசீ என்பவர், அந்த மரணதண்டனை நிறைவேற்றம் "அசட்டுத்தனமாகவும் அவசரப்பட்டும்" நிறைவேற்றப்பட்டு உள்ளது என்றும், அப்படி மரணதண்டனை பெற்றவர்கள் தான் உண்மையில் அந்தப் படுகொலைகளுக்கான குற்றவாளிகள் என்று தாய்வானில் உள்ள மக்கள் திருப்தியுறத்தக்க விதமாகச் சீன அதிகாரிகள் செயற்படவில்லை என்றும் குறை கூறுகின்றார்.

### கொமிஸ்டான் கட்சிக்கு ஆதரவு குறைகிறது

அண்மையில் தாய்வானில் நகர ஆட்சிகள் சிலவற்றிற்காக நடந்த உள்ளூர் சபைத் தேர்தல்களில் 901 இடங்களில் 665 மட்டும் தான் தாய்வானில் ஆளும் கொமிஸ்டான் கட்சி வெற்றி ஈட்டியுள்ளது. இது நான்கு ஆண்டுகளுக்கு முன்பு வெற்றி பெற்ற இடங்கள் தொகையிலும் 7 சதவீதம் குறைவானதாகும். எதிர்க் கட்சியான ஜனநாயகக் கட்சி 27 இடங்களை வென்றது. இது முந்திய முறையிலும் அது பெற்ற இடங்கள் தொகையில் இரு மடங்காகும். சுயேச்சை அபேட்சகர்கள் 208 இடங்களை வென்றனர்.

## மலேசியா

### இஸ்ரேலுடன் தொடர்பு

மலேசியப் பிரதமர் மஹதீர் மொகமட் தனக்கும் இஸ்ரேலியப் பிரதமர் யிற்சாக் ராபினுக்கும் இடையில் தொடர்புகள் ஏற்பட்டதாக வெளிப்படுத்தினார். ராபின் தான் அந்தத் தொடர்பு கொள்ளலைத் தொடக்கியதாக மஹதீர் கூறினார். மலேசிய அரசின் சகோதரரும், மிலிவார் கோர்ப்பரேஷன் என்ற வர்த்தக நிறுவனத்தின் தலைவருமான துங்கு அப்துல்லா றகுமான் அண்மையில் இஸ்ரேலுக்குச் சென்று அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் சிமோன் பெரஸைச் சந்தித்தது சம்பந்தமாக அறிக்கைகள் வெளிவந்தது தொடர்பாகவே, அவர் அப்படிக் கூறினார். இஸ்லாமிய நாடுகள் இஸ்ரேலை அங்கீகரிப்பதென்றால் ஜெருசலத்தின் அனைத்துலக நிலைப்பாடு ஏற்பட வேண்டும் என்ற நிபந்தனைப்படி மலேசியா நடந்து கொள்ளும்.

## இந்தியா

### இஸ்லாமிய மதத் தலைவர் படுகொலை செய்யப்பட்டார்

தெற்கு காஷ்மீரில் இஸ்லாமிய மதத் தலைவரான காஸி நிசார் அகமட் 42 வயது உடையவர், சென்ற ஜூன் 19 ஆந் தேதி துப்பாக்கி நபர்களால் கடத்திச் செல்லப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார். அதனால், காஷ்மீர் மாநிலத்தில் பதற்றம் அதிகரித்து உள்ளது. அந்தப் படுகொலை தொடர்பாக ஹிஸ்புல் முஜாஹிதீன் என்ற பாகிஸ்தான் பக்கச் சார்புள்ள அடிப்படைவாதப் பிரிவுக்குழுவைச் சேர்ந்த ஒருவரை அடையாளங் காணப்பட்டிருப்பதாகப் பொலிசார் கூறுகின்றனர். இக் கொலை காரணமாக மத்திய டோடா பகுதியில் ஏற்பட்ட இந்து முஸ்லிம் கலவரம் காஷ்மீரின் குழப்பங்களை விரிவுபடுத்தி உள்ளது.

### இரு தடவை நோபல் பரிசுபெற்ற பிரபல விஞ்ஞானி போலிவ் காலமானார்

பௌதிக விஞ்ஞானியும், சமாதான இயக்கத்தினரும், இருமுறை நோபல் பரிசு பெற்ற ஒரே ஒரு மனிதருமான லைனஸ் போலிங் தனது 93 ஆவது வயதில் காலமானார். போலிவ் விஞ்ஞான உலகின் மிகப் பெரியவர் என்றும், இவரைப் போல ஓரிருவர் மட்டுமே ஒரு நூற்றாண்டில் தோன்ற முடியும் என்றும் விஞ்ஞானம், வைத்தியம் சம்பந்தமான வைணன் போலிவ் கழகத்தின் பிரதான நிர்வாகி லாசன் கூறினார். நோபல் பரிசு தவிர இடசின்கணக்கான இதர கௌரவங்களையும் பெற்றவர் இவர்.

### பங்களாதேஷ் படகு விபத்தில் 300-க்கு மேலானோர் மூழ்கி மரணம்

பங்களாதேசிலுள்ள மெக்னா ஆற்றில் அதிக பிரயாணிகள் ஏற்றப்பட்டிருந்த படகு ஒன்று நீர்ச்சுழியில் அகப்பட்டுக் கவிழ்ந்ததால் 300-க்கு மேற்பட்டோர் காணாமற் போயுள்ளனர். இந்த விபத்து டாக்காவிலிருந்து 300 மைல் தூரத்தில் ஏற்பட்டது. எம். வீ. டினார் என்ற படகில் 400 இற்கு மேற்பட்ட பயணிகளும், ஏராளமான பொருள்களும் ஏற்றப்பட்டதால் அதிக சுமை காரணமாக இந்த விபத்து ஏற்பட்டது.

## சீனா

### அமெரிக்கக் காலக்கெடு

அமெரிக்கா சீனாவை புலமைச் சொத்துப் பிணக்குகளைத் தீர்த்துக் கொள்ள ஜூன் 30 ஆந் தேதி வரை காலக்கெடு விதித்தது. அது தவறினால் சீனா மீது தடைகள் விதிக்கப்படும் என்று அறிவித்திருந்தது சீனா அந்த அழுத்தத்தை நிராகரித்து உரிமைப்பதிவுகளும், இலட்சனைகளைக் களவாக எடுப்பதும் "காலங் கடந்த ஒரு விடயம்" என்று கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர் காக்கும் கருவி

இருதய நோயினால் பாதிக்கப்பட்டு அறிவிழந்த நிலையில் கிடப்போருக்கு சில சமயங்களில் அவசர சிகிச்சை அளிக்கும் போது நெஞ்சுப் பகுதி இரு கைகளினால் மேலுங் கீழுமாக அழுத்தப் படுகின்றது. இந்த ரக சிகிச்சை இதில் கைதேர்ந்தவர்களால் நோயின் தன்மை அறிந்து கொடுக்கப்படுகின்றது. இரண்டாம் மனிதர் கொடுக்குப் இத்தகைய மருத்துவ உதவியிலும் பார்க்க மிகத் திறமையாக ஒரு கணனிப் பொறி செயலாற்றுவதாகச் சொல்லப்



படுகிறது. மார்புப் பகுதியைச் சுற்றிப் போடடப்படும் மருத்துவ அங்கியை இந்தக் கணனி ஒரே சீராக மேலுங் கீழும் அழுத்துகின்றது. இதனால் தற்காலிகமாக நின்றுபோயுள்ள இருதயம் மீண்டும் இயங்குகின்றது. அத்துடன் இரத்த ஓட்டமும் தடையின்றி நடைபெறுகின்றது. அமெரிக்காவின் மதிப்புக்குரிய யோன்ஸ் ஹொப்கின்ஸ் (Johns Hopkins) மருத்துவ கூடம் இக்கருவியைப் பரீட்சித்துப் பார்த்துத் திருப்தி தெரிவித்துள்ளது. இதன் விலை இன்னும் நிர்ணயம் செய்யப்படவில்லை. 5,000 டொலரில் தொடங்கி 30, 000 டொலர் வரை செல்லலாமெனத் தெரிவிக்கப்படுகின்றது.



## சிறியதோர் ஒலி ஒளி வாங்கி

### Antenna

பொதுசன [illegible] யாழ்ப்பாணம்
[illegible] கிளை நூலகம்.

அமெரிக்காவின் முன்னணித் தகவல் தொடர்புச் சாதனத் தயாரிப்பு நிறுவனம் ஆர். சீ. ஏ. எனப்படும் றேடியோ கோர்பரேசன் ஒவ் அமெரிக்கா மிகவும் சிறப்பானதோர் அஃரெனாவைத் தயாரித்து விற்பனைக்கு விட்டுள்ளது. வட்ட வடிவான இச்சாதனம் 18 அங்குல குறுக்களவும், 10 இறாத்தல் நிறையும் கொண்டதாகும். கிண்ண அமைப்புக் கொண்ட இந்தக் கருவியை உங்கள் வீட்டின் மேல் இணைப்பதும் எளிது. 150 தொலைக்காட்சி மையங்களில் (அதாவது அமெரிக்காவில்) இருந்து நிகழ்ச்சிகளை எடுத்துத் தரும் திறன் இக்கருவிக்கு உண்டென்று தயாரிப்பாளர் இயம்புகின்றார். இது தரும் ஒலியும், ஒளியும் மிகவும் துல்லியமாக இருப்பதாகவும் தெரிவிசகப்பட்டுள்ளது. இதன் விலை 700 டொலர்.

இதென்ன பெரிய வேலை! பழைய சைக்கிள் றிம்மை மேலே உயர்த்தினால் இங்கே ரூபவாகினி பார்க்கலாம் என்பது அவர்களுக்குத் தெரியாது போலும்.

## "எளிதாகச் சுவாசியுங்கள்."
## [BREATHE EASIER]

கட்டடத்தளப்பகுதி இயந்திர அறையில் தீப்பற்றிக் கொள்வதுடன், மத்திய குளிரூட்டியின் காற்றுக் குழாய்க்குள் புகையை உங்கள் படுக்கையறைக்குள் கொண்டு சேர்க்குமானால், உங்களது உபசரிப்பு அறையிலிருக்கும் புகை உணர் கருவியால் அதிக பலன் ஏற்படப் போவதில்லை. சின்சினட்டியின் ( Cincinnati Product ) நியூட்ரொன் உற்பத்திகளாகிய 'சிஸ்ரெம் – 4 தயாரிப்புகள் இவ்விதம் நிகழாது தடுப்பதற்கென்றே வடிவமைக்கப்பட்டுள்ளன. மத்திய குளிரூட்டி அல்லது வெப்பமூட்டி செயற்பாட்டுடன் கூடிய காற்று வடிகட்டியாகிய இந்த எலெக்றோஸ்ட்டற்றிக் கருவி வீட்டுப் பாவனைக்கான ஒன்றாகும். புகை உணர்பொறியொன்றுடன் ஆளியொன்றும் உள்ளமைக்கப்பட்ட



தான வடிவத்தில் இந்த காற்று வடிகட்டிகள் கிடைக்கின்றன. 30 விநாடிகளுக்கு இவ்வுணரிகளால் புகை உணரப்படுமானால் ஆளி செயற்பட்டு, காற்றினை உட்செலுத்தும் கருவியின் இயக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தை நிறுத்துகிறது. அதே வேளை அபாய அறிவிப்பு ஒலியொன்றையும் எழுப்புகிறது. இவ்விதமான இயந்திரப் பொறி அநேகமான வர்த்தகக் கட்டடங்களுக்குத் தேவையானதொன்றென்பது ஒரு விதியாகவே கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஆனால் வதிவிடப் பிரயோகத்திற்கான முதலாவது பொறியமைப்பு இதுவேயாகும். இந்த நியூட்ரோன் வடிகட்டிகள் அவை சுத்தப்படுத்தப்பட வேண்டிய தருணத்தை நினைவூட்டுவதற்கென 'பீப்' ஒலியெழுப்பும் அமைப்பினையும் கொண்டுள்ளது. காலக் கணிப்பீட்டை, விரும்பியவாறு சீர் செய்து கொள்ளலாம். குளிரூட்டி மற்றும் வெப்பமூட்டித் தொழில் ஒப்பந்தக்காரரிடம் இந்த "சிஸ்ரம் – 4" (System–4) பொதுவாக அதனை வீட்டில் பொருத்தி விடுவதற்கான செலவுடன் மொத்தம் 300 டொலர்களே ஆகும்.

மண்ணெண்ணெய்ப் புகையை வடிகட்ட ஏதாவது கண்டு பிடித்து யாழ்ப்பாணத்துக்கு முதல்ல அனுப்ப வேணும் என்கிறார் ஒரு பாதசாரி.

## "எளிமை சோப்" (SIMPLE SOAP)



பழைய முறை பார்சோப் போன்று எளிதாகக் கையாளக் கூடிய வகையில் திரவசோப் இறுதியாக கையடக்கமான பிளாஸ்ரிக் புட்டிகளில் கிடைக்கிறது. மூடிகளுடன் சிரமப்பட வேண்டியதில்லை. புட்டியைக் கையிலெடுத்து சிறிது நசுக்க வேண்டியது தான் வேலை. புட்டியின் அடியிலிருக்கும் 'ஸெல் வால்வ்' (Zel Value) ஊடாக வேண்டிய அளவில் சோப் திரவம் வெளியேறும். ஜேர்மனிய ஸெலர் பிளாஸ்ரிக் (Zeller Plastik) நிறுவனத் தயாரிப்பாகிய, இந்த வால்வ் புட்டியைப் பற்றியிருக்கும் கையின் பிடி தளர, அது தானாகவே மூடிக்கொள்ளும். இது வரையில் இந்த 'ஸெல் வால்வ்களை கொல்கேட் பாமொலிவ் (Colgate Palmolive) மட்டுமே தனது சொஃவ்ட் சோப் ஷவர் ஸெல் உற்பத்திகளுக்குப் பயன்படுத்தி வருகிறது.

*அதன் விலை: 8 அவுன்ஸ் புட்டி – 2.19 டொலர் வரை.*

## "பாக்ஸ் பிளஸ்', (*FAX PLUS*)

அலுவலகக் கருவிகளில், பல்நோக்குப் பயன் கொண்ட பிரபல " சுவிஸ் இராணுவச் சக்திக்கு நிகரான ஒன்றே இதுவாகும். கையடக்கமான ஒன்றாக இருந்தாலும் சாதாரண காகிதத்தைப் (பயன்பாட்டைக் கொண்டதான) பயன்படுத்துவதற்கான இந்த 'ஃபாக்ஸ்' கருவி (Plain Paper Fax Machine) யானது பிரதிகளெடுக்கும் ஒரு கருவியாகவும் (Copier), அச்சுப் பிரதிக் கருவியாகவும் (Printer), ஸ்கானர் (Scanner) மற்றும் 'PC' ஃபாக்ஸ் எறெக்ரோனிக் செயற்பாடுகளுக்குமான (PC Fax Modem — அச்சுப் பதிவின்றி நேரடியாக உங்களது கம்பியூட்டர்களிலிருந்து ஃபாக்ஸ் தகவல்களை நேரடியாகவே நீங்கள் அனுப்ப முடியும்) ஒன்றேயாகும். ஓம்னி ஃபாக்ஸ் நிறுவன (Omnifax) தயாரிப்பான G–5, 13½ இறாத்தல் நிறை கொண்டதாகவும், மாஹட்டன் தொலைபேசித் தகவல் புத்தகத்தின் (Manhattan Phone Book) தகவல்கள் அளவில் உள்ளடக்கம் கொண்டதாகவும் இருப்பதுடன், மின்சாரத்தைப் பயன்படுத்தாத போது செயற்படுத்தக்கூடிய வகையில் கூடவே பற்றரிகளையுங் கொண்டவையாகக் கிடைக்கின்றன. மேசைமீது நிலைப்படுத்திப் பயன்படுத்தப்படும் சிறந்தவோர் அடிப்படை அச்சுப்பிரதிக் கருவியின் செயற்



திறனுக்கு நிகராக ஒரு சதுர அங்குலத்திற்கு 300 புள்ளிகள் விகிதம் என்ற, சிறந்த தர அடிப்படையில், நிமிடத்திற்கு 7 பக்க விடயங்களை இதனால் அச்சேற்றிவிட முடிகிறது. ஒரே நேரத்தில் அதாவது 'ஃபாக்ஸ்' அச்சுப்பிரதியொன்றை எடுக்கும் அதேவேளை உங்களது 'PC' யிலும் தகவல் ஆவணமொன்றினை ஸ்கான்னிங் (Scanning a document) செய்வது போன்று இரண்டு அல்லது மூன்று நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். உங்களது கருவியில் நீங்கள் அச்சுப் பிரதியெடுப்பதில் ஈடுபட்டிருந்தால் அல்லது பயன்படுத்தும் காகிதம் முடிவடைந்திருந்தால் (120 தாள்களை அது உள்ளடக்குமென்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிலும்) கருவிமூலம் உங்களுக்கு வருந் தகவலொன்றை அதனது நினைவுப் பகுதியில் பதிந்து வைக்கும்படி நெறிப்படுத்துவதற்கும், (Direct to memory) உங்களது ஃபாக்ஸ்ஸினால் முடியும். ஓம்னி ஃபாக்ஸ்ஸின் உப தயாரிப்பாளர்களான டண்கா பிஸ்னஸ் சிஸ்ரம்ஸ் நிறுவனத்தினரே இந்த G–5 உற்பத்தியாளருமாவார். ஜப்பான், இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட பகுதிகள் கொண்டு தயாரிக்கப்படும் அலுவலக உபகரணங்கள் போன்றவற்றுடன், அலுவலகச் சேவைகளுக்குமான முக்கியமான ஒரு விநியோகஸ்தரும் இவர்களேயாவர். இவர்களது விநியோகப் பொருள்களில் முற்றிலும் இவர்களது சொந்தத் தயாரிப்புக்களான சில மென்ரக உபகரணங்களும் (Software) அடங்கும். விலைப் பட்டியலில் இதற்கான விலை 1,995 டொலர்களாகும். இதற்கான உறை 99 டொலர்களாகும். 310 – 641 – 3690 என்ற இலக்கத்திற்கு தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு, இப்போதே நீங்கள் உங்கள் விநியோகக் கட்டளையை முன்வைக்கலாம். 'மினி மைட்ரி' (Minimyte) என்ற பெயரில் இதற்கான மாற்று ரகமொன்று யூலையில் அலுவலக விநியோகப் பொருள் பண்டகசாலையில் விற்பனைக்கு வரவிருக்கிறது.

உலக உலா செயலகத்தில் மிகவும் முக்கியமாக இருக்க வேண்டிய சாதனம். பொறுத்திருந்து பாருங்கள்.

## காவித்திரியும் ஒலி, ஒளிக்கருவி



இன்று ஒலிப்பதிவு நாடாக்களையும், வீடியோ நாடாக்களையும், கிடப்பில் போடச் செய்துள்ள பெருமை கையடக்கமான ஆங்கிலத்தில் கொம்பக்ற்டிஸ்க் (Compact Disc) எனப்படும் தட்டுகளுக்கு உரியதாகும். உல்லாசப் பயணம் போகும் போதும், விருந்து கேளிக்கைகளின் போதும் மின்சார வசதி இல்லாத இடங்களில் இயங்கும் பேழை (Player) தயாரிக்கப்பட்டு விற்பனையாகின்றது. இதில் ஒலி ஒளி இரண்டு அமைப்புக்களுடன் தொலைக் காட்சித் தரை விளையாட்டுக்களுக்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. இதன் நிறை 1.3 இறாத்தல், இதன் ஒலி அமைப்பு மிகவும் உயர் தரமான ஒலியைத் தருவதாக இதன் தயாரிப்பாளர்கள் விளம்பரம் செய்கின்றனர். இதன் விலை 400 டொலர். எலத்திரனியல் கருவிகளுக்குப் பிரசித்தமான கலிபோர்னியா மாகாணத்தில் (சேகா Sega) நிறுவனத்தினால் இது தயாரிக்கப் பட்டுள்ளது,

## யார் பேசப் போகிறார் என்பதைக் கூறும் தொலைபேசி

எமக்கு விருப்பமில்லாதவர்கள் தொலைபேசியில் அழைக்கும் போது எமக்கு முன் கூட்டியே தெரியாத படியால் மாட்டிக் கொள்கிறோம். தொலைபேசியின் மணி ஒலி கேட்டவுடன் எடுக்கவா, விடவா என்ற தடு மாற்றம் எமக்கு வருவது இயற்கையே. இப்போது எம் போன்றவர்களுக்கு உதவி செய்வதற்கென்றே தயாரிக்கப்பட்டது போன்ற கம்பி இணைப்பு இல்லாத தொலை பேசிச் சாதனம் அமெரிக்காவில் தயாரிக்கப் பட்டு விட்டது இக்கருவியில் நீங்கள் சேமித்து வைக்கும் தகவல்களில் இருந்து பேசுபவரின் குரல் அடையாளத்தை வைத்துக் கொண்டு இக் கருவி யார் பேசுவது என்பதைத் தெரிவிக்கின்றது. முன்பு ஒரு முறையும் அழைக்காதவர் பேசினால் இதனால் ஒன்றும் செய்ய முடியாது நீங்கள் எடுக்கவா விடவா என்று தீர்மானிக்க வேண்டியவர்கள் ஆகிறீர்கள். தொலைபேசியில் உங்களை அழைத்துத் தொல்லை கொடுப்போரின் குரல் அடையாளத்தைக் கொண்டு உங்களுக்கு எச்சரிக்கை தரும் இந்தக் கருவிக்கு நல்லதோர் எதிர் காலம் உண்டு. இதன் விலை 256 டொலர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதில் விழுந்தவை

- சீனாவின் பெய்ஜிங் நகரில் உள்ள தண்ணீர்க் குழாய்களிலிருந்தும், மலசல கூடங்கள், குளியலறைகளிலிருந்தும் வருடாவருடம் வீணே வெளியேறும் கோடிக்கணக்கான கலன் தண்ணீர் பற்றிச் சீனத் தலைவர் 'ஜியாங் சீமன்' குறிப்பிடுகையில்; ''விண்வெளிக்குச் செய்மதிகளையும், ஏவுகணைகளையும் அனுப்பும் எந்தவொரு நாடும் அங்கே தமது குளியலறைகள் வரண்டு போவதையிட்டுச் சிந்திப்பதில்லை'' என்றார்.







- தென்னாபிரிக்காவின் சுரங்கத் தொழிலாளரை ஒன்றிணைப்பது பற்றி வெள்ளையரின் சுரங்கத் தொழிலாளர் தலைவர் 'பிலிப்பைஸ்' கூறியபோது, எங்களில் சிலர் இனவாதிகளாக இருப்பதனால் இது பற்றி நாம் மறுப்புத் தெரிவிப்பதை விடுத்துச் சும்மா இருப்பது மேல் என்று கூறினார்.

- ஜப்பான் நாட்டின் முதல் பொதுவுடைமைப் பிரதமரும், சமாதானப் பிரியருமான ரொம் - இல்சி முறாயாமா அவர்கள், ''நாம் எமது நாட்டை அதிகாரம்மிக்க ஒரு நாடாக மாத்திரமன்றி நாகரிகம் மிக்க ஒரு நாடாகவும் கட்டி யெழுப்ப வேண்டும்'' என்றார்.

- ஜனாதிபதி கீம் - இல் - சுங் இன் மரணச் சடங்கின்போது. ''குழந்தைகள் முதியவர்கள், இளைஞர்கள், யுவதிகள் அனைவரும் இங்கு, எமது முது பெருந் தலைவர், தேசபிதாவாகிய நீங்கள் மீண்டும் ஒருமுறை கண்திறக்கமாட்டீர்களா என்று கதறியழுது மன்றாடுகின்றோம். எம்மக்களின் அனைத்துத் தேவைகளையும் பூர்த்திசெய்யக் கூடிய எமது தந்தையே நீங்கள் எமது கனவுகளை நனவாக்க மாட்டீர்களா?'' என்று புலம்பியதாக 'பியோங்கியாங்' வானொலி அறிவித்தது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிகவும் முரட்டுத் தனமான ஒரு கொலை

தமிழாக்கம்:
— திரு. அ. கிருபைராஜா —

நகருக்குள் புகும் இடத்தில் உள்ள பாலத்தின்மீது செலுத்தும் பொழுது இந்தச் செய்தியாளர் சென்ற வாடகைக் கார் வண்டி, கைகளில் பொல்லேந்திய இளைஞர் கும்பல் ஒன்றால் தடுத்து நிறுத்தப்பட்டது. அவர்கள் காரின் மீது தாவிப் பாய்ந்து அதன் மீது தடியடி நடத்தினர். அந்த வேளையில் இன்னும் ஒரு மோட்டார் வண்டி கும்பலுக்கூடாக வந்ததைக் கண்டதும் அவர்களுடைய கவனம் திசை திரும்பியது. அந்த வண்டியின் சன்னல்களும் அடித்து நொருக்கப்பட்டு உள்ளே இருந்த பயணிகள் பயத்தால் அடியில் விழுந்து கிடந்தனர். எங்கள் வண்டியோட்டி வேகமாகப் பெருந்தெருவை நோக்கி வண்டியைப் பின்னுக்குச் செலுத்தினார். அங்கே இந்தியப் பொலிசாரும், இராணுவத்தினரும் போக்குவரத்து, சுதந்திரமாக நடக்கக் கண்காணிப்புச் செய்து கொண்டு நின்றனர். அங்கே காரை விட்டு விட்டு வழிமறித்துக் கொண்டு ''அசாதி'' (விடுதலை) என்று கத்திக் குரலெழுப்பிக் கொண்டிருந்த வாலிபர்களை மெதுவாகக் கடந்து வெளிவந்த பின்பு ஆனன்தநாக் நகரை நோக்கி வெறிச்சோடிக் கடைகள் மூடப்பட்டுக் கிடந்த தெருவின் ஊடாக வெகுதூரம் நடக்க நேர்ந்தது.

காஷ்மீரின் பல விடயங்களும் தொங்கிப் பிடிக்கக்கூடிய ஒரு கொலை நடந்த மர்மமான இடம் ஆனன்தநாக் நகரம் ஆகும். சென்ற யூன் 20 ஆந் தேதி அந்த நகரிற்கு வெளியில் உள்ள கிராமம் ஒன்றின் மக்கள் அந்த மாவட்டத்திலேயே மிகவாக நேசிக்கப்படுபவரான பெரிய முஸ்லிம் மதபோதகரான குவாசி நிஸார் அகமதின் உடலைக் கண்டனர். 42 வயதான நிஸார் தலையில் இரண்டு முறையும், நெஞ்சில் ஒருமுறையும் துப்பாக்கியால் சுடப்பட்டுக் கிடந்தார். இந்திய ஆட்சிக்கு எதிரான எழுச்சியின் ஐந்தாவது ஆண்டில் அதன் காரணமாக 9,400 உயிர்கள் பலி கொள்ளப்பட்டிருக்கையில் இந்த ஒரு மனிதரின் கொலை காஷ்மீரியர்களைத் திடுக்கிடச் செய்து விட்டது. அந்தக் கொலைக்கான பழியை எங்கு சுமத்துகிறார்கள் என்பதைப் பொறுத்தே அது பிரிவினைவாத நடவடிக்கைகளின் போக்கின் மீது செல்வாக்குச் செலுத்த முடியும் என்பதுடன் அதன் மூலம் புதுடில்லிக்கும் காஷ்மீரத்திற்கும் இடையிலான அரசியற் பேச்சுக்களை அது வளர்க்கவோ, சிதறடிக்கவோ கூடும்.



நிஸாரின் கொலை காஷ்மீரின் பாதுகாப்பை வலுப்படுத்தியுள்ளது.

இந்தியப் பொலிசார் அந்தக் கொலைக்குக் காஷ்மீரத்தைப் பாகிஸ்தானுடன் இணையவேண்டும் என்று கோரும் முஸ்லிம் அடிப்படை வாதக் குழுவான ஹிஸ்புல் முகாஹிதீன் குழுவின் மீது பழியைப் போட்டனர். நிஸாரின் உடல் கண்டுபிடிக்கப்பட்டுச் சில மணித்தியாலங்களுக்குப் பின்பு காஷ்மீரின் பொலிஸ் தலைவர் மகேந்திரா ஷபர்வால் அந்த மதப் பெரியார் முதல் நாள் இரவு 4 பேரால் கடத்திக்கொண்டு செல்லப்பட்டதாகக் கூறினார். ஃபயிஸ்மீர் அல்லது அபூபாக்கர் நபர் ஹிஸ்புல் குழுவின் உள்ளூர்த் தளபதிகளில் ஒருவர் என்று அடையாளங் காணப்பட்டவர் ஆவார். நிஸாருடைய உடல் பொன்டயாள்கம் என்ற கிராமத்தில் ஃபயிஸ்மீரின் வீட்டுக்கு அருகிலேயே போடப்பட்டுக் கிடந்தது.

ஹிஸ்புல் இயக்கத்தின் தலைமறைவுத் தலைவரான சையிட் சலாஹீதீன் ஓர் அறிக்கை வெளியிட்டு அதில் தமக்கு எவ்விதத் தொடர்பும் இல்லை என்று வெளிப்படுத்தினார். ஃபயிஸ்மீரும் தாம் இந்த விடயத்தில் அப்பாவி என்று கூறினார். ஹிஸ்புல் இயக்கத்துடன் சார்புள்ள ஜமாயத்தே இஸ்லாமி என்ற மத அமைப்பு ''அரசாங்கத்தின் கையாட்களை'' அந்தக் கொலைக்குக் குற்றஞ் சாட்டியது.

போராளிக் குழுக்களின் தலைவர்கள் அரசாங்கத்தின் கையாட்கள் மீது பழி சுமத்தும்போது கவனம் மேற்கொண்டு இந்தியப் படைப் பிரிவுகள் புரட்சியை மழுங்கடிக்கச் செய்வதற்காகத் தங்கள் பிரிவுகளுக்குள் ''வேண்டத் தகாதவர்களை'' நுழைத்திருப்பதாகக் குறை கூறினார். இந்தக் கவனத்திற்கான ஒரு காரணம் ஹிஸ்புல்களுடனான கூட்டம் ஒன்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்து கொள்ள என்று தான் நிஸார் வீட்டை விட்டுப் போனார். கொலையுண்டவரின் மாமனாரான அப்துல்லா சிக் தனது மருமகனுக்கு ஒரு போராளிக் குழுவினரிடமிருந்து யூன் 15 ஆம் தேதி ஒரு கடிதம் வந்ததாகக் கூறினார். அந்தக் கடிதத்தில் நிஸாருடைய உம்மதி–இஸ்லாம் இயக்கத்துடன் நெருங்கிய உறவுகள் மேற்கொள்வதற்கான விருப்பம் தெரிவிக்கப்பட்டிருந்தது. யூன் 19 ஆம் தேதி பிற்பகல் 3.00 மணியளவில் ஹிஸ்புல் அனுதாபியும், அறிமுகமானவருமான குலாம் நபி ரிசி நிஸாரைக் கூட்டத்திற்கு அழைத்துச் செல்ல வந்தார். நிஸார் விருப்பத்துடனேயே புறப்பட்டுச் சென்றார். அவர் உள்ளூர் ஓட்டுநர் ஒருவர் செலுத்திய ஸ்கூட்டர் டாக்சியில் சென்றார். அந்த ஓட்டுநரின் பெயர் ஸிப்பாட் அல்லது பப்ளு என்பதாகும்.

அடுத்து என்ன நடந்ததென்று தெரியவில்லை. பாதுகாப்புப் படையினர் பொன் டயாள்கம் ஊரைச் சுற்றிவளைத்துத் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். நிஸாரின் உடல் கிடந்த இடத்தில் ஃபாயிஸ்ஸின் வீட்டிலும் தேடுதல் நடத்தப்பட்டது. இருந்தும் பொலிஸாரோ அல்லது இந்தக் கொலை பற்றித் தனது சொந்த விசாரணைகளை மேற்கொண்ட அனைத்துக் கட்சி ஹீறியாட் மகாநாடு என்ற பெயரிலான 34 புரட்சிக் குழுக்களின் கூட்டணியோ இன்னும் ரிசியையோ, ஸிப்பாட் பப்ளுவையோ சந்தித்து விசாரிக்கவில்லை.

புதுடில்லியைப் பொறுத்தவரை அந்தக் கொலை ஒரு பெரும் பிரச்சாரத்திற்குச் சாதகமானதாக ஆனது. ஏனெனில் அனந்தநாக்கில் சனக்கும்பல் ஹிஸ்புல் இயக்கத்திற்கும், பாகிஸ்தானுக்கும் எதிராகக் கூக்குரலிட்டது. அன்றே இந்தியத் தொலைக்காட்சியிலும் அந்தக் கண்டனந் தெரிவிக்கும் காட்சி வீடியோப் படமாகக் காட்டப்பட்டதுடன் அடுத்த பல நாள்களும் தேசியப் பத்திரிகைகள் ஹிஸ்புல் இயக்கத்தை அந்தக் கொலைக்குக் குறை கூறுமாப் போன்ற தலையங்கங்களை வெளியிட்டன. நிஸாரின் கொலையானது காஷ்மீரின் பயங்கரவாதத்திற்கு எதிராக மக்கள் மத்தியில் வளர்ந்து வரும் வெறுப்பை பலப்படுத்த உதவும் என்று இந்திய அதிகாரிகள் நம்புகின்றனர், பொலிஸ் தலைவர் ஷபர்வால், காஷ்மீர் மக்கள் போராளிகளின் மீது நம்பிக்கை இழந்து வருகின்றார். ஏனெனில் அந்தப் போராளிக் குழுக்களுக்கு இடையில் அநேக குற்றச் செயல் செய்வோர் நுழைந்துள்ளனர் என்று கூறுகிறார்.

இத்தகைய பேச்சுக்கள் புதுடில்லி அதிகாரம் பாகிஸ்தான் ஆதரவுடனான குழுக்களுக்கும், சுதந்திரமாக இயங்கும் ஓரளவு மதச்சார்புகுறைந்த ஜம்முகாஷ்மீர் விடுதலை முன்னணிக்கும் இடையில் வெறுப்பை வளரச் செய்ய உதவுகின்றன. அந்த முன்னணியின் தளபதியான மொகமட் யாசின் மாலிக் சென்ற மே 17 ஆம் தேதி உடல்நலக் குறைவைக் காரணமாகக் காட்டி விடுவிக்கப்பட்டார். அதன் பின்பு அவரைப் படுகொலை செய்ய இரண்டு முறை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அரச அதிகாரிகள் அவற்றிற்கு ஹிஸ்புல் இயக்கத்தின் மீதே பழி போட்டனர்.

இதே வேளையில் அரசு வேறு பல வழிகளிலும் தனது நடவடிக்கைகளை மென்மையானவையாக ஆக்க முயற்சிக்கின்றது. முரட்டு நடவடிக்கைகளுக்குப் பெயர்போன இராணுவத்தையும், துணைப்படைப் பிரிவுகளையும் மீள அழைத்துக்கொண்டு காஷ்மீர் நகரங்களின் பாதுகாப்பைப் பொலிசாரிடம் ஒப்படைக்க இருப்பதாகவும் கூறப்படுகிறது. அத்துடன் மாநில அரசின் பொருளாதார நிலையும் குழம்பியதாக உள்ளதால் காஷ்மீரின் மக்களின் நாளந்த வாழ்வைச் சுமை குறைந்ததாக்கவும் புதுடில்லி முயல்கிறது. சென்ற மே 8 இல் ரூ. 1.5 மில்லியன் உணவு மற்றும் நிவாரண சேவை மானியங்கள் கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்டது.

புதுடில்லியின் இறுதி விருப்பம் அடித்தளமான பல உள்ளூர்த் தலைவர்களை உருவாகச் செய்து அவர்கள் தேர்தலில் போட்டியிட்டு ஒரு மாநிலச் சட்டசபையை அமைக்கச் செய்வதாகும். அத்துடன் அந்தத் தேர்தலின் அதிக அளவு மக்கள் கலந்து கொண்டு வாக்களிக்கச் செய்து அதன் மூலம் அந்தத் தேர்தல் நீதியானதாக நடந்ததாகக் கருத இடம் ஏற்பட வைக்கவும் புதுடில்லி விரும்புகிறது. அதற்கான ஓர் உதாரணமாக இந்திய அதிகாரிகள் பஞ்சாப்பில் 1992-ல் நடந்த தேர்தலைக் கணிக்கின்றனர். அந்தத் தேர்தல் வாக்கெடுப்பின் போது 2,00,000 துருப்புக்கள் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப் பட்டதுடன் சீக்கியத் தீவிரவாதிகள் அந்தத் தேர்தலைப் புறமொதுக்கும்படி கேட்டிருக்கக் கூடியதாக 22 சத வீத வாக்காளர்கள் அதில் கலந்து கொண்டு வாக்குப் போட்டு அதனை நியாயப்படுத்தினர்.

ஆனால் இதுவரை காஷ்மீரில் நடுநிலைமை வாதிகளானவர்கள் கூட அத்தகைய எதிர்பார்ப்பை எண்ணுகின்றனர். ''இது பஞ்சாப் அல்ல காஷ்மீர், இங்கே அவர்கள் அதனைச் செய்ய முடியாது'' என்று ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் பசீ அகமட் பாட் கூறுகிறார். அதற்காக அரசாங்கத்திற்கு ஆகக் குறைந்தது 76 தேர்தல் அதிகாரிகளாவது தேவைப்படுவர். ''அவர்கள் அத்தகைய 76 தேர்தல் அதிகாரிகளைக் காஷ்மீரில் தேடிப் பிடிக்க முடியாது'' என்று அவர் சவால் விடுகிறார்.

நிஸார் கொல்லப்பட்டு ஒரு வாரம் கழிந்த பின்பும் கூட ஆனன்தநாக் நகரின் உணர்வுகள் கொதிப்பாகவே இருந்தன. அந்த நகரை உடைய தெற்குக் காஷ்மீர்ப் பள்ளத்தாக்குப் பகுதியின் முன்னணி மதபோதகராக இருந்தும் கூட இந்தியாவில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

காஷ்மீர் தன்னாட்சி பெறவேண்டும் என்ற போராட்டத்தில் நிஸார் முக்கியத்துவம் வகித்தார். முஸ்லிம் ஐக்கிய முன்னணியினைத் தொடங்கியவர்களுள் அவரும் ஒருவராவார். அந்த முன்னணி 1987 இல் நடந்த மாநில அரசுப் பேரவைத் தேர்தலில் தோற்றாலும் கூட அந்தத் தேர்தல் இந்திய சார்புக் கட்சிகளுக்குச் சாதகமாக மோசடியான வழிகளில் நடத்தப் பட்டதெனப் பரவலாகக் கருதப் பட்டதுடன் அதன் பின்புதான் பிரிவினைவாதப் போராட்டம் அங்கே ஆரம்பித்தது. அதனால் அவர் சிறை பிடிக்கப்பட்டு 2 வருடங்கள் இந்தியச் சிறைகளில் இருந்த பின்பு 1992 மார்ச்சில் விடுவிக்கப்பட்டார்.

எவருக்கும் பாதுகாப்பு இல்லை என்று வலியுறுத்திக் காட்டச் செய்யப்பட்ட பயங்கரவாதச் செயல் ஒன்றாக இருந்தால் அன்றி நிஸாரின் கொலை ஹிஸ்புல் இயக்கத்தால் நடுநிலைவாதிகள் இந்தியாவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதைத் தடைப்படுத்தும் நோக்கத்தோடும், அதனால் பிரிவினை வாதிகளின் இலட்சியத்தை மழுங்கடிப்பதைத் தடுக்க வேண்டும் என்றும் செய்யப்பட்டதென இந்தியத் தரப்புக் கருதுகிறது. ஆனால் நிஸார் இந்த இரண்டு செயல்களில் எதையுமே செய்யவில்லை. இந்தக் கொலை இந்திய அணிகள் எதையும் இதற்குப் பாத்திரவாளிகள் ஆக்க வென்று செய்த ஒன்றாகவும் கருத முடியாது. ஏனெனில் சம்பவம் நிகழ்ந்த இடத்தைச் சுற்றி ஹிஸ்புல் இயக்க விரலடையாளங்கள் காணப்பட்டன. ஹிஷ்புல் இயக்கம் தான் இந்தக் கொலையைச் செய்ததென்று நிரூபிக்கப் படாமல் இருக்கையிலும் இந்தப் போராளிக்குழு நேசிக்கப்படுவதிலும் பார்க்க மிகவாக அஞ்சப்படுகிறது என்பது தெளிவாகிறது.

காஷ்மீரின் ஆனந்தநாக்கில் இருந்து எழுதியவர்:
ஹமீஸ் மெக்டொனல்ட்
(F)வார்ஈஸ்ரேன் எக்கனமிக் றிவியூ,
ஜூலை 1994.

# நேபாள நாட்டில் நெருக்கடி



பதவி விலக கோயிராலா மறுப்பு

பல தசாப்தங்களாக நேபாள காங்கிரஸ் கட்சி ஆட்சி பீடத்தில் இருப்பினும் வலுவான எதிர்க் கட்சிகள் இல்லாக் குறையால், அக் கட்சிக்குள் நிலவும் உட்பூசல்கள் பெரும் பாதிப்பை ஏற்படுத்தத் தவறியுள்ளன. இப்போது மீண்டுமொரு நெருக்கடி நிலை உருவாகியுள்ளது. நெடுங்காலமாகப் பிரதமர் பதவி வகித்துவரும் கோயிராலாவுக் எதிராகக் கட்சிக்குள் இருந்தே எதிர்ப்பு கிளம்பியுள்ளது. அண்மையில் இந்தியப் பொலிசார் நேபாள அரசின் அனுமதியின்றித் தலைநகர் காத்மாண்டுவினுள் புகுந்து தேடுதல் நடத்தியதை, கோயிராலா தடுத்து நிறுத்தத் தவறியதும் ஒரு காரணமாகலாம். பொதுவாக அரசின் வெளிநாட்டு உள்நாட்டுக் கொள்கைகள் திருப்திகரமாக இல்லை என்ற கருத்து நாட்டில் நிலவுகின்றது. இதற்கு கோயிராலா பொறுப்பேற்று பதவி விலக வேண்டுமென்பதே பலரின் விருப்பம். கட்சியில் இளைய தலைமுறையினரின் பலம் வாய்ந்த அணி கோயிராலாவுக்கு எதிராகச் செயற்பட ஆரம்பித்துள்ளதும், இவர்களுடன் மூத்த காங்கிரஸ் தலைவர் கணேஸ்மான் சிங் கூட்டுச் சேர்ந்ததும் நேபாள நாட்டு அரசியல் நீரோட்டத்தின் புதிய திருப்பங்களாகும்.

1996 இல் நாட்டின் புதிய பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெறுமென அறிவித்தல்கள் வெளிவந்துள்ளன. அதே சமயத்தில் கோயிராலா பிரதமர் பதவியில் தொடருவாரானால் எதிர்க் கட்சிகளின் வெற்றி வாய்ப்புக்கள் கூடுதலாக இருக்குமெனக் கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன. இக் கணிப்பைக் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் கணேஸ்மான் சிங் சரியென ஏற்றுள்ளார். கோயிராலாவைப் பதவி இறக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளில், இவர் தனது தள்ளாத வயதையும் பாராது தீவிரமாக இறங்கியுள்ளார். நாடளாவிய கோயிராலா எதிர்ப்புப் பிரச்சாரத்திற்கு மான் சிங் தலைமை தாங்கி வருவது குறிப்பிடத்தக்கது. தனது அறிக்கை ஒன்றில் மான் சிங் பின்வருமாறு கூறியுள்ளார்: ''கோயிராலா தானாகவே பதவி விலகாவிட்டால் அடுத்த மாதம் நடக்கவிருக்கும் வரவு செலவுக்கணக்கு விவாதங்களில் 36 காங்கிரஸ் அங்கத்தவர்கள் அரசுக்கு எதிராக வாக்களிப்பர்.''

இவ்வருடம் நடந்த உப–தேர்தல் ஒன்றில் காங்கிரஸ் அபேட்சகரான கே. பி பட்டராயி என்பவரின் தோல்விக்குப் பிரதமர் கோயிராலாவே காரணம் எனப்படுகின்றது. பட்டராயி வெற்றியீட்டிய பின் அதிருப்தியாளர்களுக்குத் தலைமை தாங்குவாரெனவும், இதன் காரணமாகக் கோயிராலா துரத்தப்படலாமென்று பலரும் நம்பியிருந்தனர். அரசியலில் அசகாய சூரனான கோயிராலா, பட்டராயக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார். இந்த பட்டராயி விவகாரமும் இப்போது அம்பலத்திற்கு வந்துள்ளது. கோயிராலா எதிர்ப்பு மேடைகளில் பட்டராயி கலந்து கொண்டு, கோயிராலாவை அப்புறப்படுத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி வருகின்றார் எனினும் பிரதமர் கோயிராலா பதவி விலகவோ தனது போக்கை மாற்றவோ மறுத்து வருகின்றார். நித்திய கண்டம், பூரண ஆயுசு என்பதே கோயிராலாவின் அரசியல் வாழ்வு. இது இனிவரும் காலத்தில் எப்படி அமையும் என்று இப்போது சொல்ல முடியாது.

(F) ஈஸ்ரன் எக்கனமிக் றிவியூ.
ஜூலை 07, 1994.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலங்கிய நீர்

மொழிபெயர்ப்பு:
— காவல் நகரோன் —

உஷ் – அது ஓர் இரகசியம். மே 08 ஆம் திகதி, மணிலா அரசாங்கம், அமெரிக்க வால்கோ சக்தி நிறுவனத்திற்கும், அதன் பிலிப்பைன்ஸ் உப நிறுவனமான ''அல்கோர்ண் பெற்றோலியமும் தாதுப் பொருள்களும்'' நிறுவனத்திற்கும் எண்ணெய் வள ஆய்வுரிமை வழங்கும் உத்தரவுப் பத்திரம் கையெழுத்திட்ட போது, அது பற்றி எவ்வித அறிவித்தலும் வெளிப்படவில்லை. காரணம் ஆய்வுக் கடற் பிரதேசம் பிரச்சனைக்குரிய ஸ்ப்றாற்லி தீவுகளின் ஒரு பகுதியையும் உள்ளடக்கியது. அப்படிச் சிந்தித்துச் செயலாற்றியது நல்லதே. அது ஓர் ஆறு மாத உத்தரவுப்பத்திரம். ஏலவே அரசாங்கமும் வேறு நிறுவனங்களும் சேகரித்த எண்ணெய் வளம் பற்றிய தரவுகளை ஒன்று சேர்த்துப் பொருத்திப் பார்ப்பதே முக்கிய பணி. அதனால் அது ''மேசை மேல்'' ஆய்வு என எண்ணெய்க் கைத்தொழில் உலகில் பேசப்படுவது. அப்பிரச்சனைப் பிரதேசத்தில் வள ஆய்வு நிறுவனங்கள் கால் வைக்க வேண்டிய தேவை கூட இல்லை.

ஆனால் அல்கோர்ண் நிறுவன அதிபர் எட்வார்டோ ஹேர்மன் டெஸ்க்கு இதை இரகசியமாக வைத்திருக்கும்படி யாருமே சொல்லவில்லைப் போலிருக்கிறது. அவர் நிறுவனத்தின் பங்குதாரர் கூடத்தில் பெருமையுடன் இந்த ஒப்பந்தம் பற்றி அறிவித்தார். ''கேக் சுடுமுன்பே இங்கு நாம் ஆயத்தமாக நிற்க விரும்புகிறோம்'' என்று அவர் சொன்னதாக உள்ளூர்ப் பத்திரிகைகளில் செய்தி வந்தது.




**பிலிப்பைன் கடலடி எண்ணெய்த் தேடல் சீனாவுக்கு கொதிப்பை உண்டாக்குகிறது.**

அடுத்த நாள் சக்தி வளத் துறையில் சிறு அதிகாரி ஒருவர் அப்பிரதேசத்தில் இதுவே முதன் முதலாக வழங்கிய உத்தரவுப் பத்திரம் என்று ஒப்புக் கொண்டார். அப் பிரதேசத்தில் 5 அரசாங்கங்கள் உரிமை பாராட்டுவதால் அது ஓர் ''உணர்ச்சிக்கு' இருப்பிடமான பிரதேசம் என ஏற்றுக் கொண்டார்.

உண்மையில் அது ''உணர்ச்சி'' வசப்படுத்தக் கூடிய பிரதேசமே தான். பெய்ஜிங் அரசாங்க வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் உடனே ஓர் அறிக்கை வெளியிட்டு, பிலிப்பைன்ஸ் தீவுகளின் ஒன்றான பலவானுக்கு மேற்கே 400 கிலோமீற்றர் தொலைவில் உள்ள தென்சீனக் கடற் பிரதேசத்தில் சீனாவுக்கு பூரண மேலாண்மை உண்டு என்று பிரகடனம் செய்தார். (இப் பகுதியே நிறுவனத்துக்கு எண்ணெய் வள ஆய்வு உத்தரவுப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டது. சீன உதவி வெளியுறவு அமைச்சர் வாங் மிங் ஃபான் வருடாந்த இருபக்க ஆலோசனைகளுக்காக) மணிலாவில் நின்றவர், பிலிப்பைன்ஸ் வெளியுறவு அதிகாரிகளிடம் எதிர்ப்புத் தெரிவித்தார். வெளியுறவு உபசெயலாளர் றொடொஃபோ செவெரினோ இந்த உத்தரவுப் பத்திரம் வழங்கியதன் மூலம் ''ஏதாயினும் தீமை அல்லது எதிர்ப்பை கருத்திற் கொள்ளவில்லை'' என்றும் அப் பகுதி பிலிப்பைன்சுடைய பூரண கட்டுப்பாட்டில் உள்ள கடற்பரப்பு எனக் காரணங் காட்டி விளக்கினார். ஆனால் அந்த விளக்கத்தை வாங் ஏற்க மறுத்தாராம்.

மணிலா அரசு வேகமாகப் பின்னடிக்க வேண்டிய தாயிற்று. சீனாவுக்கு உத்தியோக விஜயத்தை மேற்கொண்டு நாடு திரும்பிய பிலிப்பைன் பாராளுமன்றச் சபாநாயகர் ஜோஸேகு வெனிஷியா – ராமோஸின் மிக நெருக்கமான தோழர். ஜூன் 19 இல் வெளியிட்ட ஓர் அறிக்கையின் மூலம் தான் சீனாவினுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டதாயும், ஸ்ப்றாற்லி தீவுகளின் அபிவிருத்தி பொதுவான எண்ணெய்வள ஆராய்ச்சி போன்றவற்றுள் இரு நாடுகளும் இணைந்து செயல்படவும், அதேவேளை மேலாண்மை உரிமை யாருக்கு என்ற பிரச்சனையைப் பின் தள்ளி வைப்பதாகவும், அதனால் தாம் நாட்டுக்காக ஓர் இராஜதந்திர வெற்றி ஈட்டியுள்ளதாயும் செய்தி வெளியிட்டார். அவர் மேலும் விளக்கம் அளிக்கையில், "சீனா மிகச் சமீபத்தில் குறிப்பிட்ட எண்ணெய் உற்பத்திப் பத்திர மறுப்புக்குப் பதிலாகத் தாம் அந்தச் செயல் திட்டத்தில் சீனாவும் ஒரு பங்குதாரராக இருக்கலாம்" என பிரேரித்ததாயும். குறிப்பிட்டார்.

எண்ணெய்க் கைத்தொழில் நிர்வாகிகள் இவ்விடயம், ஒரு சொல் இழுக்கு – புகழ் கொடுக்கும் செயல் என வருணித்தனர். ஓராண்டுக்கு முன் சீனா ஓர் அமெரிக்க நிறுவனத்துக்கு எண்ணெய்வள ஆய்வுக்கு அனுமதி அளித்ததின் மூலம், ஸ்ப்றாற்லி தீவுகள் விவகாரத்தை எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றியதாக்குகின்றனர். வியட்நாமுக்கு அயலிலுள்ள கடலில் தமக்கு உரிமை உண்டு என்று பேசினர். அப்போது பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ஃபிடேல் ராமோஸ் தென் சீனக் கடலில் பிரச்சனைக் குரிய பரப்புக்களில் (சம்பந்தப்பட்ட நாடுகள்) ஒத்து மேவி ஒன்றிணைந்த ஆய்வுகளைச் செய்வதையே, பிலிப்பைன்ஸ் விரும்புகிறது என்று அறிவித்த மொழிகள் பதிவுகளில் உள்ளன அதனைப் பொருட்படுத்தாது ஒரு நாடுமட்டும் சம்பந்தப்படும் எண்ணெய் ஆய்வு முயற்சிக்கு உத்தரவுப் பத்திரம் வழங்கியதன் மூலம் அரசாங்கம் ராமோஸின் கருத்தை விவேகம் அற்றது என புறக்கணித்தது போலப்படுகிறது. ஆனால் இவ்வாறு சுருதி தப்பி அடிவைத்தது அரசாங்க அதிகாரிகளின் அரசியல் விவேகக் குறைவையே காட்டுகிறது. ஒரு நிறுவன நிர்வாகி கூறுகிறார்: "சக்தி வளத்துறை அதிகாரிகளுக்கு, ஸ்ப்றாற்லி தீவுகளுக்கும் பரசெல்ஸ் தீவுகளுக்கும் வித்தியாசம் தெரியும் என்று நான் நினைக்கவில்லை" என அவர் தென் சீனக் கடலில் உரிமைப் பிரச்சனைக்குரிய மற்றொரு தீர்வுக் கூட்டத்தைச் சுட்டிக் காட்டியே இக் குறிப்பைக் கூறினார்.

இவ்வரசியற் புயல் முதலில் கிளம்பியபோது சக்தி வளச் செயலர் டெல்ஃபின் வஸாரோ அந்த உத்தரவுப்பத்திரம் குறித்து ஒரு பிரச்சனையும் கிடையாது. அப்பகுதி பிலிப்பைன்சின் பிரதேச எல்லைக்குட்பட்டது என்றார். அல்கோர்ண் நிறுவன அதிகாரி பொன்சியானோ மத்தாய் தமது நிறுவனப் 1987 ஆம் ஆண்டு அரசியல் யாப்பையும், முன்னாள் ஜனாதிபதி மார்க்கோஸ் வெளியிட்ட பிரகடனத்தையும் கொண்டு பலவான் தீவுக்கு அயலில் உள்ள பகுதிகள் பிலிப்பைன்சுக்குரிய நகரவட்டமே எனத் தாம் கருதியதாகத் தெரிவித்தார்.

உத்தரவுப் பத்திரம் குறிப்பிட்ட பிரதேசம் மணிலா அரசு "றெக்ரோகரை" என அழைக்கும் பகுதி, பதக், லவக், பரோலா தீவுகளை உள்ளடக்கியது. லஸரோ ஒரு பத்திரிகையாளர் மத்தியில் விளக்கம் தெரிவித்தபோது, ஸ்ப்றாற்லித் தீவுகளுக்கு வெகு தொலைவில் உள்ள பிரதேசம் என்றார். அவர் ஸ்ப்றாற்லித் தீவுக் கூட்டத்தின் பிரதான தீர்வைக் கருதினார் போலும். அது பலவானுக்கும், தென் வியட்நாமுக்கும் நடுவில் உள்ள கடலில் இருக்கிறது அதனால் சீனா, வியட்நாம், தாய்வான் ஆகிய மூன்று நாடுகளும் ஸ்ப்றாற்லி, தீவுக்கூட்டம் முழுவதற்கும் உரிமைகோருகின்றன. அது நீண்டுகிடக்கும் தீவுக் கூட்டத் தொடர்; 90 தீவுகளை உள்ளடக்கியது. இடையிடையே ஜீவாதாரமான கப்பற் போக்குவரத்துக் "கால்வாய்" களுடையது எண்ணெய் வளமும் இருக்கக்கூடும். இச் சங்கிலித் தொடர் தீவுகளின் சிற்சில பகுதிகள் மீது பிலிப்பைன்ஸ், கிழக்கு மலேசியா, புறுனி ஆகிய நாடுகளும் உரிமை கோருகின்றன. றெக்ரோகரை என்று பிலிப்பைன்ஸ் அழைக்கும் பரவுக்கடற் பகுதியை சீனா 'நான் ஷான்' என அழைக்கிறது.

வேறு எண்ணெய் ஆய்வு நிறுவனங்களின் நிர்வாகிகள் எம் சஞ்சிகைக்குக் கூறினார்கள்: "வால்கோ, அல்கோர்ண் நிறுவனங்களுக்கு ஆய்வு உரிமை உத்தரவாதப் பத்திரம் வழங்கியது பற்றி நாம் வியப்படைகிறோம்" என. 1992 வரை ஐ. நா. மேற்பார்வையில் அரசாங்கங்களின் எண்ணெய் வள ஆய்வு முகவர்களுக்கிடையில் நிகழ்ந்த பேச்சுவார்த்தைகளின்போது சம்பந்தப்பட்ட அரசாங்கங்களின் சம்மதத்துடனேயே ஸ்ப்றாற்லியில் நிகழும் பிரதேச உரிமைப் பிரச்சனை காரணமாக அங்கு எந்த ஆய்வு வேலைகளும் மேற் கொள்ளப்பட வேண்டும் என்ற ஏகோபித்த முடிவு எடுக்கப்பட்டது.

ஆனால் சக்தி வளச் செயலர் லஸரோ இதற்கு முன் அப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் குறித்து எவ்வித வினாவும் எழுப்பப்படவில்லையே என்பதை வலியுறுத்தினார். அவர் குறிப்பிட்ட ஆய்வுகள் 1970 களின் பிற்பகுதியில் தொடங்கி 1984 வரை நான்கு வெளிநாட்டு ஒப்பந்தக் காரரால் பலவான் தீவுக்கு அயலில் மேற்கொள்ளப்பட்டன.

1980 களின் பிற்பகுதியில் மணிலா பூகர்ப்பவியல் ஆய்வுகள் ஒப்பந்தம் ஒன்றை (GSEC -.63 எனப் படத்தில் குறிப்பிடப்பட்டு உள்ளது.) அமெரிக்க நிறுவனமான "கோர்க்லாந்து ஆய்வு" க்கு வழங்கியது. ஆனால், அந்த நிறுவனம் இதுவரை ஏதாயினும் பூமியைத் துளைக்கும் ஆய்வுகளை மேற்கொண்டிலது.

கைத்தொழிற் செய்தி மூலங்கள் கூற்றுப்படி முன்னைய ஆய்வுகளைப் பிறநாட்டவர் கவனிக்காமல் விட்டதற்குக் காரணம் அப்போது ஸ்ப்றாற்லித் தீவுகள் எண்ணெய் உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்புக்கள் உடையன என்ற குறிகள் கிடைத்த தரவுகளின்படி இருக்கவில்லை என்பதே. பின்னர் ஸ்ப்றாற்லித் தீவுகள் பிரச்சனைக்கு உரிய இடமாகி விட்ட காரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணெய் கிடைக்கும் என்ற நம்பிக்கையே. அதனால், எந்த ஒரு நாடாயினும் தான் நினைத்தபடி ஆய்வுகளை மேற்கொண்டால் அது சிக்கலை உண்டாக்கிவிடுய் என்கிறார்கள் ஒரு விசயமறிந்த வட்டாரத்தவர்கள்.

பிற எண்ணெய் ஆய்வு நிறுவனங்கள் அல்கோர்ண் பெற்ற உத்தரவுப் பத்திரம் எங்கு கொண்டு செல்லும் என்று அதிசயப்படுகின்றன. மற்றொருவர் ஆய்வுக்குத் தடையில்லாத உத்தரவு, அதன்படி அந் நிறுவனம் அரசாங்கத்திற்குத் தனது ஆய்வு முடிவுகளை அறிவிக்கும் என்கிறார். வேறு ஒரு நிறுவன நிர்வாகி, ''அல்கோர்ணின் உதவியுடன் அரசாங்கம் தனக்கு உரிமையுள்ள இடம் எனத் தான் கருதும் அந்தப் பிரதேசத்தில்தான் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பரீட்சிக்கிறது போலும்'' என்று சொன்னார்.

# ஹனோய் பதிலடி தருகிறது

வியட்நாம், இதுமற்றோர் எண்ணெய் வர்த்தக ஆரம்பம் என்கிறது. ஆனால், ஹனோய் அரசாங்கம் மோபைல் எண்ணெய் நிறுவனத்திற்குத் தென் சீனக் கடலில் பிரச்சனைக்குரிய பகுதியில் எண்ணெய் வள ஆய்வு ஒப்பந்தம் வழங்கிய செயல், நெருப்பை நெருப்பால் அணைக்கும் முடிவு என்றே விடயந் தெரிந்தவர்கள் கருதுகிறார்கள். இந்த ஆண்டுத் தொடக்கத்தில் வியட்நாம் எடுத்த இக் கருமம் சீனாவுக்கு ஆத்திரத்தை உண்டாக்கியது சீனா இந்தக் கடற் பிரதேசத்திற்கு அயலில் ஆய்வு வேலைகள் மற்றோர் அமெரிக்க எண்ணெய் நிறுவனத்திற்கு வழங்கி இருக்கிறது.



பெய்ஜிங் வெளியுறவுப் பேச்சாளர் ஜூன் 16 ஆந் தேதி, வாய்ப்போரின் முதற் சூட்டை வெடித்தார். ஹனோய் சீனாவின் இறைமைக்குப் பங்கம் விளைவிக்கும் செயல்களை நிறுத்த வேண்டும் என வலியுறுத்தினார். அவர் சீனா 1992 இல் கிறேஸ்ரோ சக்தி கூட்டுத் தாபனத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை வியட்நாம் முறித்துவிட முயல்கிறது எனக் குற்றஞ் சுமத்தினார் (அதுவும் சுதந்திரமான ஓர் அமெரிக்க நிறுவனமே, அதன் ஆய்வுகளுக்கு ஒதுக்கப்பட்ட கடற் பிரதேசம் ஸ்ப்றாற்லி தீவுகளுக்கு மேற்கே உள்ளது).

வியட்நாம் வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் உடனே சீனாவின் கண்டனத்திற்கு எதிர் உரை பகர்ந்தார். சீனா இப்பிரதேசத்தில் வியட்நாமுக்குரிய ஐயந்திரிபட நிறுவப்பட்ட இறைமைக்கு எதிராகப் பேசவோ, செயலாற்றவோ முயலக் கூடாது என்கிறார். ஹனோய் அரசின் கருத்துப்படி கிறென்ரோ நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட சலுகை சட்டவிரோதமானது, ஏனெனில் வியட்நாமின் ஒரு பகுதியாகிய கடலடித்தளத்தில் கை வைக்கிறது.

ஹனோய், மீண்டும் மீண்டும் சீனா, தென் சீனக் கடலின் பெரும் பகுதிக்கே உரிமையானது எனக் கோருவதைக் கண்டிப்பதற்குக் கடும் எதிர்க்குரல்கள் எழுகின்றன. கிறெஸ்ரோனின் பகுதி வியட்நாம் எண்ணெய் ஆய்வு செய்யும் பரப்புகளுக்குக் கிழக்கே உள்ளது. இப் பரப்புக்களில் ஒன்றுக்கு ''நீலக்க பத்தன்'' என்று பெயர். அதனை மோபைல் நிறுவனத்தின் தலைமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலான ஒரு கூட்டு இணைப்புக் குழு சமீபத்தில் வாங்கியது.

வியட்நாமின் கடல் அடித் தளக் குழுவின் தலைவரான லேமின்ஹங்சியர் சுட்டிக் காட்டுகிறார்: கிறெஸ்ரோனுக்கு வழங்கிய ஆய்வுப்பகுதி தென் வியட்நாமியக் கடற்கரைக்கு 250 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது என்பதாக.

ஆனால், சீனக் கரையில் இருக்கும் ஹைனான் தீவிலிருந்தே 1,300 கிலோ மீற்றருக்கும் அதிக தூரத்தில் உள்ளது (ஹைனான் தீவு தான் சீனாவுக்குரியது என்பதில் வேற்றுமை கிடையாது). பெய்ஜிங் இந்தச் சிக்கலைத் தீர்க்க ஸ்ப்றாலித் தீவுகள் அனைத்தும் தனக்கே தனியுடைமை என உரிமை பாராட்டுகிறது. ஆனால் வியட்நாம் கிறெஸ்ரோன் சலுகைப் பகுதிக்கு மிக அண்மையில் உள்ள பல தீவுகளில் காலூன்றி உள்ளது.

சீனா கடந்த காலத்தில் தனது இராணுவத்தைக் கொண்டு கடலோர எல்லை முரண்பாடுகளைத் தீர்க்க முயன்றது. பரசல் தீவுகளில் இருந்து 1994-ம் ஆண்டும் ஸ்ப்றாற்லித் தீவுகளில் ஒரு சிறு திடலில் இருந்து 1988 இலும் வியட்நாமியரைத் துரத்தியது ஹனோய்-பெய்ஜிங் அரசுகள் தம் வழமையான தொடர்புகளை 1991 இல் ஏற்படுத்தின. சென்ற ஆண்டு வேற்றுமைகளைத் தீர்க்க (இராணுவ) வலுவைப் பிரயோகிக்கக்கூடாது என்று ஒப்பந்தம் எழுதிக் கொண்டன. ஆனால், தமது பிரச்சனைக்குரிய கடல் எல்லைகளையும், நில எல்லைகளையும் தீர்மானிக்கப் பற்பல சுற்று வட்டப் பேச்சுக்கள் நிகழ்ந்தும் முன்னேற்றங் காணவில்லை.

மற்றே ஹேபட் எழுதியது.

(F) வார் ஈஸ்ரேன் எக்கனமிக் ரிவியூ
ஜூன் 30, 1994

★

கம்போடியா

# அரண்மனைத் தகராறு

## "பழைய ராஜா ராணிக் கதைகளில் நடப்பதுபோல இரு ராஜகுமாரர்கள் மோதிக்கொள்கிறார்கள்."

கம்போடியாவில் உள் நாட்டு யுத்தம் நடந்து கொண்டிருக்கும் இவ் வேளையில், அரசர் சிகானூக் அவர்களின் இரு புத்திரர்களும் பதவிப் போரில் இறங்கியுள்ளனர். நொரோதம் சிகானூக்கின் பட்டத்து ராணியின் மகன் இளவரசர் நோரோதம் றணாறீத் தான் கம்போடியாவின் முதலாவது இணைப் பிரதமர். சென்ற வருடம் மே மாதம், ஐ. நா நடாத்தி வைத்த தேர்தலின் காரணமாகப் பதவிக்கு வந்துள்ளார். இவர் தலைமை தாங்கிய புன்சிபெக் (Funcinpec) கட்சி 51 ஆசனங்களை இத் தேர்தலில் கைப்பற்றியுள்ளது. கம்போடிய மக்கள் ஆட்சி எனப்படும் (சிபிபி) (CPP) கட்சியுடன் இணைந்து இளவரசர் றணாறீத் ஆட்சியை அமைத்துள்ளார். சிபிபி கட்சியின் தலைவரான ஹன்சென் இணைப்பிரதமராகப் பதவி வகிக்கிறார்.

அரசர் நொரோதம் சிகானூக் ஈன்ற இரண்டாவது மகன் நொரோதம் சகக்ரப்பொங் அவருடைய இரண்டாவது தாரத்தின் மகன். இரண்டு இளவரசர்களுக்கு மிடையில் பகையும், பொறாமையும் உண்டு. இல்லாவிட்டால் இந்த வரலாற்றின் சுவை கெட்டு விடும். சில வாரங்களுக்கு முன் புற்று நோய்ச் சிகிச்சைக்குச் சீனா சென்று நாடு திரும்பிய சிகானூக் அரசர் மீண்டும் சீனாவுக்குச் சென்றுள்ளார். இவருடைய நலனைக் கவனிக்க இளையராணி சகக்ரப் பொங்கின் தாயார் பதியுடன் கூடச் சென்றுள்ளார். இந்த நிலையில் ஏதோ கசாமுசா நடந்ததிற்கு ஆதாரம் இருந்தாலும், கோவையான செய்திகளோ தெளிவான தகவல்களோ அரிதாக இருக்கின்றன. இளைய இளவரசரும், அவருடைய சகா ஜெனரல் சின் சொங் என்பவரும் பலாத்காரமாக அரசைப்பிடிக்கச் சதி செய்ததாக, மூத்த இளவரசர்



இளவரசர் சகக்ரப் பொங்கும், அவர் விமான நிலையம் செல்லும் காட்சியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையிலான அரசு குற்றஞ் சாட்டியுள்ளது. இது ஜூலை மாத முதல் வாரத்தில் நடைபெற்றதாகவும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நொம்பென் தலைநகரில் வாழும் மேற்குலக இராஜதந்திரிகள், இதுவோர் உப்புக் குறைவான செய்தி எனக் கூறுகின்றனர். முன்னாள் உப பிரதமரான இளவரசர் சகக்ரப்பொங் ஒரு கைப்பொம்மை என்றும், இவர் நாட்டில் சக்திவாய்ந்த ஒருவரின் ஆணைப்படி செயற்படுகிறார் என்றும், இதே இராஜதந்திரிகள் தெரிவிக்கின்றனர். ஆனால் எது எப்படி இருப்பினும் கடந்த சில மாதங்களாக இளைய இளவரசரும், அவருடைய சகா ஜெனரல் சின் சொங்கும், வியட்நாம் போன்ற நாடுகளுக்கு தமது சதி முயற்சிக்கு உதவி கோரிப் பயணம் செய்ததற்கு ஆதாரங் கிடைத்துள்ளது. இதை ஊர்ஜிதப்படுத்தும் விதத்தில் வியட்நாம் அரசு கம்போடிய அரசுக்கு கொடுத்த இரகசியத் தகவல் இருக்கிறது.

முன்னாளில் உப-பிரதமராக இருந்த சகக்ரப் பொங்கும், முன்பு உள்நாட்டு அமைச்சராக இருந்த ஜெனரல் சிங் சொங்கும் இப்போது பதவி அற்றவர்களாகவும், செல்வாக்கு இழந்தவர்களாகவும் இருப்பது உண்மை. இப்போதைய அரசின் மேல் அவர்களுக்கு எரிச்சலும், பொறாமையும் இருப்பதும் உண்மைதான். ஆனால் பலாத்காரமாக ஆட்சியைப் பிடிக்கும் அளவுக்கு அவர்களிடம் வலு இல்லை என்பதே விடயமறிந்தவர்களின் முடிவு. இப்போது போராலும், அரசு மட்டக் கருத்து வேறுபாடுகளாலும் குழம்பிப் போயிருக்கும் கம்போடிய அரசை இன்னும் ஒருபடி கூடுதலாகக் குழப்பம் அடையச் செய்ய யாரோ சதி செய்கிறார்கள் என்பதே சராசரிக் கணிப்பீடு. இந்த யாரோ என்பது யார்? இந்த இருவரையும் இயக்குமளவுக்குச் சக்தி வாய்ந்தவர்கள் அரசுக்குள் இருக்கிறார்கள் என்பதே சரியான பதில்.

கம்போடிய அரசு அடைந்துள்ள குழப்பத்தின் உச்ச நிலையை இந்த நிகழ்ச்சிகள் வெளிப்படுத்துகின்றன. உயர் மட்டத்தில் இருப்பவர்கள் இந்த இருவருக்கும் ஊக்கமும், உற்சாகமும் கொடுத்துவிட்டு இறுதி நிமிடத்தில் பின்வாங்கி விட்டார்கள். அப்படி அவர்கள் செய்யக் காரணம்:-

அரசை மிரட்டினால் போதும் கவிழ்க்க வேண்டிய அவசியம் இல்லை என்பதுதான். அரசியலில் நம்பிக்கைத் துரோகம் சர்வசாதாரணம். இளைய இளவரசரின் உயிர் தப்பியது தொலைபேசியின் கருணையால் தான். சீனாவில் இருக்கும் தனது பெற்றோருடன் இவர் தொலைபேசி மூலம் உரையாடித் தனது உயிரை மீட்டுள்ளார். ராஜாவும் இளைய ராணியும் கம்போடிய உயர்மட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு புத்திரனைக் காப்பாற்றி உள்ளார்கள். இதன் காரணமாக இளவரசர் சகக்ரப் பொங் நாடுகடத்தப் பட்டுள்ளார். விமான நிலையம் வரை இராணுவப் பாதுகாப்புடன் கூட்டிச் செல்லப்பட்டு இவர் வெளியேற்றப்பட்டுள்ளார். ஜெனரல் சின் சொங் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இதுவே இறுதியாகக் கிடைத்த பத்திரிகைச் செய்தி.

(F) பார் ஈஸ்ரன் எக்னோமிக் றிவியூ
ஜூலை 14, 1994.

## ஃபக்ஸ் மூலம் இரகசியப் பரிமாற்றம்

இராஜதந்திரிகள் அநேகமாக செய்திப் பரிமாற்றங்களை இரகசியச் சங்கேதக் குறியீடுகள் மூலமே அனுப்புவர். ஒரு விவாதத்தின் போது மட்டுமே வெளிப்படையாக விடயங்கள் தெரிய வரும். ஆனால் அண்மையில் அமெரிக்கா, வடகொரியா நாடுகள் வடகொரியாவின் அணுவாயுதப் பரிகரணம் நிறைவேற்றப் படுவது புற்றிய செய்திகளைப் பரிமாறிக் கொண்டது இரண்டு ஃபக்ஸ் (FAX) இயந்திரங்கள் மூலமாகும். வோஷிங்ரனுக்கும், பியாங்யாங்கிற்கும் இடையில் இராஜதந்திரத் தொடர்பு இல்லாததால் இந்த இரண்டு அரசுகளும் அவற்றின் நியூயோக்கில் உள்ள ஐ. நா. தூதரகங்கள் மூலம் செய்தி பரிமாறிக் கொண்டன. ஆனால் செய்தி ஏதும் வரும்போது ஒரு நாட்டின் தூதரகம் மற்ற நாட்டுத் தூதரகத்தை அழைத்து ஃபக்ஸ் இயந்திரத்தில் செய்தி வருவதைத் தெரிவித்துவிட்டு செய்தியை அனுப்ப மற்றது பெற்றுக்கொள்ளும். இந்த விடயத்தில் தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதாக ஒரு செய்தி அனுப்பப்பட்ட பின்பு, மீண்டும் அழைத்து அந்தச் செய்தி கிடைத்ததா என்று கேட்டு அறிந்து கொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானில் மீண்டுமொரு புதிய பிரதமர்

''இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து —
அதனை அவன் கண் விடல்'' —குறள்

ஜப்பானிய உயர்மட்ட அரசியல் இன்று நகைப்புக்கிடமாகிவிட்டது. இந்த வருடம் பிரதமர் ருசுற்றோமுஹாற்றா (Tsutomu Hata) அமெரிக்க விஜயம் மேற்கொண்ட போது ஜப்பானிய அரசியல் அவலத்தைக் காட்டும் கேலிச் சித்திரம் ஒன்று அநேக அமெரிக்கப் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளது. விமானத்தில் இருந்து இறங்கும் பிரதமருக்கு அமெரிக்க அதிகாரி செங்கம்பளம் விரித்துச் செல்கிறார். பிரதமருக்குச் சற்றுப் பின்னே வரும் ஒரு ஜப்பானியர் கம்பளத்தையும், பிரதமரையும் ஒன்றாக உருட்டிச் சுற்றிக் கொண்டு வருகிறார். சித்திரம் பேசியது உண்மைதான். சென்ற ஜூன் 29 ஆம் திகதி மேற்கூறிய பிரதமர் ஹற்றாவின் இடத்திற்கு ரோமிச்சி முரோயாமா என்பார் நியமனம் பெற்றுள்ளார், சிறுவர்கள் விளையாடும் இசையும் நாற்காலியும் என்ற விளையாட்டுப் போல ஜப்பானியப் பிரதமர் பதவி மிக வேகமாகக் கைமாறிக் கொண்டு வருகிறது.

உறுதியான கொள்கையோ நன்கு அடையாளம் காணக்கூடிய சித்தாந்தமோ இன்று யாதொரு ஜப்பானிய அரசியற் கட்சியிலும் காணமுடியாது. கட்சியின் பெயர் மாத்திரம் லிபரல், ஜனநாயகம், சோசலிச, சீர்திருத்த, மறுசீரமைப்பு, புத்துயிர் என்ற ரீதியில் இருக்கும். ஆனால் எல்லோரதும் அடிப்படை ஒன்று தான். ஆட்சியைப் பிடிப்பதும்' பதவியைக் கைப்பற்றுவதும், சுயசம்பாத்தியத்தைத் தொடர்வதும் ஆகியவை தான் பொதுவான இலட்சியம். கடந்த பல தசாப்தங்களாகத் தனி மனிதர்களுடைய விருப்பும் வெறுப்பும் தான் கட்சி அரசியலை ஆட்டிப் படைத்துள்ளது. இருபது வருடங்களுக்கு மேலாக எல். டி. பி. கட்சியின் ஆட்சி இந்த அடிப்படையில் தான் நடைபெற்றுள்ளது. இப்போது சிறிய பெரும்பான்மையற்ற கட்சிகளின் கூட்டு அரசு யுகம் ஆரம்பித்து விட்டது. கட்சிக் கொள்கை ஒன்று உண்டு என்ற சிந்தனை இல்லாமல் தனி நபர்கள் உடன்படிக்கையை அடித்தளமாகக் கொண்டு ஆட்சி அமைப்பது நடைமுறையாகி விட்டது. கூட்டு அரசியல் கட்சிக் கொள்கைகளுக்கு இடம் இல்லை என்பது நன்றாகத் தெரிகிறது. ரோமிச்சி முரோயாமா சோசியல் ஜனநாயகக் கட்சியின் தலைவர் வெகு முற்போக்கான கட்சியென்று தன்னை இனம் காட்டிக்கொண்டு வந்த இந்த அமைப்பு இறுதியில் ஆட்சியைக் கைப்பற்றும் நோக்குடன் பழைமை விரும்பி லிபரல் ஜனநாயகக் கட்சியுடன் ஐக்கியமாகி உள்ளது. இந்த ஒவ்வாத இணைப்பை ஆய்வு செய்த மேற்குலக அறிஞர் ஒருவர், ''ஜப்பானிய அரசியலில் கட்சிகளின் கொள்கை என்று ஒன்று இருப்பதாகக் தெரியவில்லை; பேரம் பேசுதலும் விட்டுக் கொடுத்தலும் தான் நடைபெறுகின்றன'' என்று கூறியுள்ளார். முரோயாமா பிரதமராக வருவதற்குவழி செய்த அரசியல் கூட்டு கூறிய ஆய்வாளர் சுட்டிக் காட்டியது போல் இந்த அடிப்படையிலேயே நடந்தேறியுள்ளது.



தூக்கி எறியப்பட்ட பழைய பிரதமர் ஹாற்றாவும், புதியபிரதமர் முரேயாமாவும்.

ஜப்பானை எதிர்நோக்கும் பொதுப் பிரச்சனைகளில் இந்த இரு கட்சிகளுக்கும் ஒரு பொது அபிப்பிராயம் அல்லது கொள்கை இருப்பதாகத் தெரியவில்லை. இவர்களுடைய கருத்துவேறுபாடு அமைச்சரவை அமைப்பில் வெளிவரத் தொடங்கி உள்ளது. எனினும் ஆட்சி அதிகாரத்தைத் தக்க வைத்திருக்க வேண்டும் என்ற காரணத்திற்காக இவர்களுக்கிடையில் பிளவு வராது என்று நாம் நம்பலாம். தீவிர இடதுசாரிக் கொள்கையில் நம்பிக்கை உள்ள ஐந்து முரோயாமா ஆட்சி ஆதரவாளாகளுக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது. எண்ணிக்கையில் கூடிய லிபரல் ஜனநாயகக் கடசிக்கு கூடுதலான மந்திரிப் பதவிகள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தக் கட்சிக் கூட்டில் அங்கத்துவம் வகிக்கும் மிகச் சிறிய சாக்கிக்கேக் கட்சிககு இரண்டு மந்திரிப் பதவிகள் கொடுககப்பட்டுள்ளன. இந்தக் கட்சியின் தலைவர் மசயோசி தாக்கே மூரா அவர்களுக்கு நிதி அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது. சில அரசியல் அவதானிகளின் கணிப்பில் சாக்கிக்கோ கட்சி முற்போக்காளர்களுக்கும் பழைமைவிரும்பிகளுக்கும் இடையில் ஓர் ஒற்றுமை ஏற்படுத்தும் பாலமாக அமையலாம். ஆனால் தாக்கே மூரா ஒரு பிடிவாதக்காரர் என்றும், ஜப்பானுக்கு மிகவும் அத்தியாவசியமாகத் தேவைப்படும் வரிச் சீர்திருத்தலில் தீவிரமான கருத்துக்கள் கொண்ட





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. பாலமாக அமைவதிலும் பார்க்க தாக்கே மூரா இரு சாராருக்கும் முரணான செயற்பாடுகளை நிதி அமைச்சில் இருந்தபடி இயக்கலாம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இன்று பிரதமர் முரோயாவிலும் கூடுதலான கவனம் பெறுபவர் நிதி அமைச்சர் தாக்கே மூரா தான். இவர் நிதி அமைச்சின் மூத்த அதிகாரிகளுடன் புதிய வரித் திட்டத்தில் தொடங்கிய பல தரப்பட்ட நிதித் திட்டங்களில் ஒரு மோதல் நிலையை உருவாக்கி உள்ளார். ஜப்பானில் நிர்வாக அதிகாரிகள் தனிப் பெரும் சக்தியாக இருப்பதை இவர் விரும்பவில்லை. இவர்களுடைய அதிகாரத்தைக் குறைக்க வேண்டும் என வெளிப்படையாகக் கூறத் தொடங்கியுள்ள நிதி அமைச்சர் நிர்வாக அதிகாரிகள் ஆலோசித்திருக்கும் கூடிய நேரடி வரித் திட்டங்களை ஒட்டுமொத்தமாக நிராகரித்து உள்ளார். கூட்டு அரசின் நலனைக் காப்பதிலும் தனது சொந்த விருப்பை நிறைவேற்றுவது தான் இவருடைய கொள்கை போல் தோன்றுகிறது, அடுத்தபடியாக வெளிவிவகார அமைச்சராக நியமனம் பெற்றிருக்கும் யோகாய்

மொழியாக்கம்:

**கலாநிதி க. சோமஸ்கந்தன்**

கோனோ ஐ. நா. வின் அமைதிப் பணிகளில் ஜப்பான் பங்கு ஏற்கக் கூடாது என்ற அபிப்பிராயம் உள்ளவர். ஐ. நாவின் 'பாதுகாப்புச் சபையில் அங்கத்துவம் ஜப்பானுக்கு அவசியமில்லை என்றும் இவர் கூறியுள்ளார்.

இவருடைய இவ்வாறான பேச்சுக்கள் அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் உள்ள நல்லுறவைப் பாதிப்பது திண்ணம். ஐ. நாவின் அமைதிப்பணிகளில் ஜப்பானியப் படைகள் பங்கு ஏற்பதற்கு வகை செய்யும் விதத்தில் அரசியல் யாப்பு மாற்றம் தேவைப்படுகிறது. இந்த நடவடிக்கையின் போது கட்சிகளுக்கிடையில் உள்ள விரோதங்களும், முரண்பாடுகளும் மீண்டும் மேலுக்கு வந்து ஆட்சியைக் கவிழ்க்கலாம்என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர். இந்த விடயத்தைத் தட்டிக் கழிக்க முடியாத நிலை அண்மையில் ஜப்பானில் தோன்றியுள்ளது, அரசியல் யாப்பு திருத்தம் போன்ற மிகப்பாரதூரமான நடவடிக்கைகளைக் கையாளும் திறனும் வலிமையும் சந்தர்ப்பவாதிகள் நினைத்த கூட்டரசுக்கு இருக்குமா என்பது சந்தேகமே!

(F) பார் ஈஸ்ரன் எக்கனமிக் றிவியூ - ஜூலை. 14. 1994.

★ ★ ★

பொஸ்னியா:

## ஆயுதப்போர் தொடங்குகிறது

ஈரான், பொஸ்னியாவுக்கு ஆயுதம் கடத்துகிறது என்பதுவே ஷின்டன் அதிகாரத்திற்கு நன்கு தெரியும். மே மாதத்தில் இருந்து பல தொன் கணக்கான சிறு படைக் கலங்கள் சேர்பியர்களின் தாக்குதலை எதிர்த்துப் பொருதும் முஸ்லிம் ஆயுத பாணிகளுக்குக் கொடுக்க குறோசியா ஊடாக அனுப்பப்படுகிறது. ஆனால் அந்த ஆயுதக் கப்பல் ஏற்றத்தின் அளவு பற்றி அறியக் கிடைத்த பின்பு, அமெரிக்க அரசு நிறுவனங்கள் அந்த ஆயுதக் குவியலைத் தடுப்பதா அல்லது தன்பாட்டில் இருப்பதா என்று தீர்மானம் எடுப்பதில் பிளவு பட்டு நிற்கின்றன. அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் வில்லியம் பெரியும், கூட்டுப் படைத் தலைமை அதிகாரிகளும், அந்த ஆயுதம் கிடைப்பது பொஸ்னியர்களுக்குத் துணிவு ஏற்படுத்திப் போரை நீண்டு கொண்டு போகச் செய்கிறது என்று வாதிக்கையில் சீ. ஐ. ஏ உளவு நிறுவனமும் அதை ஏற்றுக் கொள்கிறது. ஆனால் ஜனாதிபதிச் செயலகம், இராஜாங்க அமைச்சின் ஆதரவும் உடையதாக அந்த ஆயுதக் கடத்தல் தொடரட்டும் என்று கூறுகிறது.

கிளின்ரன் நிர்வாகம் பொஸ்னியாவுக்கு எதிரான ஆயுத விநியோகத் தடையை நீக்க விரும்புகிறது. என்றாலும் அதற்கான ஐரோப்பிய ஆதரவைப் பெறத்தவறி விட்டது. ஆகவே களவாக பொஸ்னியாவுக்கு ஆயுதங்கள் செல்வது பற்றிய எந்த விவாதமும் இப்போது ஊமையாகி விடும். அமெரிக்க உளவு உத்தியோகத்தரின் கணிப்புப்படி ஈரானில் இருந்து ஆயுதங்கள் வருவது பொஸ்னியா முஸ்லிம்களின் போர்த்துணிவை பெருகச் செய்வதாலும் கூட, அந்த ஆயுதங்கள் சேர்பியர்களின் வெற்றியைப் பின்னடையச் செய்வதற்கு போதுமானவை அல்ல என்பதாகும். வெள்ளை மாளிகையின் கணிப்புப்படி அதனை நிறைவேற்ற குறைந்தது ஐந்து அமெரிக்கப் படைப் பிரிவுகள் பலம் தேவைப்படக் கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில முஸ்லிம் நாடுகளும் இஸ்ரேலுடன் நல்லிணக்கம் காண விளைகின்றன

மொழியாக்கம்:
— திரு. அ. கிருபைராஜா —

சமாதானப் பேச்சு வார்த்தைகளும் ஆரம்பமாகி இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்திற்கும் (பி. எல். ஓ) இடையில் பாலஸ்தீனிய சுயாட்சி பற்றிய பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் ஆசியப் பிராந்தியத்தில் உள்ள யூதர்கள் நாட்டை மிக வன்மையாகக் கண்டித்த முஸ்லிம் நாடுகள் பல மிகவும் கவனத்தோடான தும், பெயரளவில் உத்தியோக ரீதியற்றதுமான தொடர்புகளை டெல்அவிவுடன் ஏற்படுத்திக் கொண்டுள்ளன.

அந்த புதிய மனப்பாங்கை சங்கேதப்படுத்தும் விதமாக நீண்ட காலமாகப் பாலஸ்தீனியர்களின் உரிமையை ஆதரித்து வந்த மலேசியாவின் அரசரின் சகோதரரான துங்கு அப்துல்லா அப்துல் ரகுமான் சென்ற ஜூன் மாத நடுப்பகுதியில் இஸ்ரேலுக்கு வருகை தந்தார். மலேவார் கோர்ப்ரேஸன் என்ற வர்த்தக முதலீட்டு நிறுவனத்தின் தலைவரான அப்துல்லா, இஸ்ரேலுக்கு அங்குள்ள வர்த்தகர்களின் அழைப்பின் பேரில் சென்றாலுங் கூட இஸ்ரேலிய முதலமைச்சர் யிற்சாக் ராபின் உடனும் வெளியுறவு அமைச்சர் சிமொன் பெரஸுடனும் சந்திப்புக்கள் நடத்தினார். அந்தச் சந்திப்புக்களை "இளம் கானல்" பேச்சுக்கள் என்று இஸ்ரேலிய அதிகாரி ஒருவர் வர்ணித்தார்.



சிமொன் பெரஸ் சீனாவில்: மலேசியாவில் நாமும் இந்தத் தந்திரோபாயத்தைக் கையாள முயல்வோம்.

அப்துல்லாவின் வருகையுடன் மலேசியப் பிரதமர் மஹதிர் முகமட்டுக்கும், இஸ்ரேலியப் பிரதமர் ராபினுக்கும் இடையில் கடிதப் பரிமாறல்கள் நிகழ்ந்துள்ளன என்ற செய்தி வெளிவந்தது பெரும் கவன ஈர்ப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அதே வேளை இஸ்ரேலிய அதிகாரிகள், கடந்த மாதத்தில் இஸ்ரேலுக்கும், பல முஸ்லிம் பெரும்பான்மையான ஆசியநாடுகளுக்கும்இடையில் நிலவி வந்த இராஜதந்திரத் தடைகள் நீங்கி விட்டதாகக் கூறுகின்றனர்.

சென்ற ஜூன் மாத இறுதி முதல் இந்து சமுத்திரத் தீவுக் கூட்டமான மாலைதீவுகளின் அரசாங்கம் முதலாவது முறையாக இஸ்ரேலிய கடவுச்சீட்டு உள்ளவர்களைத் தனது நாட்டிற்குள் வர அனுமதி கொடுத்துள்ளது. மாலைதீவுகள் சிறிய நாடெனினும் இஸ்லாமிய மகாநாட்டு அமைப்பில் அந்த நாடும் ஓர் அங்கத்துவநாடு என்பதனால் இந்த அனுமதி வழங்கல் முக்கியத்துவம் வாய்ந்தது என்று இஸ்ரேல் கருதுகிறது.

ஜூன் மாத முற்பகுதியில் வங்காளதேசப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவர் இஸ்ரேலுக்கு வந்து வெளியுறவு அமைச்சின் முக்கிய அதிகாரிகளுடன் சந்திப்பு நடத்தினர். வங்காள தேச அரசியல் வாதிகள் இஸ்ரேலுக்கு வருகை தந்தது இதுவே முதல் தடவை ஆகும். டாக்காவில் உள்ள அதிகார வட்டாரங்கள் அந்தப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் வடகரை நகரமான ஜெரிக்கோவுக்குச் செல்லும் வழியில் இஸ்ரேல் ஊடாகச் சென்றனர் என்று இவர்களின் இஸ்ரேலிய வருகையை முக்கியத்துவம் இல்லாததாகக் காட்ட முயன்றனர். பாலஸ்தீனிய சுயாட்சிக்கு உட்பட்ட பிரதேசங்கள் இரண்டில் ஒன்றான ஜெரிக்கோவுக்கு அவர்கள் பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் அழைப்பின் பேரில் சென்றதாகக் கூறப்படுகிறது.

இராஜதந்திர ரீதியாக அங்கீகரிக்கப்படுவதற்கான நீண்டபாதையில் இவர்கள் முதலாவது அடியெடுத்து வைத்தார்கள் என்று இஸ்ரேலியர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். "இது பெரும் எடுப்பாக இல்லாவிட்டாலும் நன்மை பயப்பதாக உள்ளது." நாங்கள் இராஜதந்திர உறவுகளுக்காகக் கவனத்தில் கொள்ளாது உத்தியோக ரீதியற்ற தொடர்புகளுக்கு வழிசெய்கிறோம். அவை தொடர்புகளை அமைப்பு முறையானவையாக்க வழி அமைத்துக் கொண்டுள்ளன. என்று ஜெருசலேத்தில் உள்ள உயர் அதிகாரிகள் கூறுகின்றனர்.

1992 இல் சீனாவும், இஸ்ரேலும் முழு அளவிலான இராஜதந்திர உறவுகளை மேற்கொண்டதற்கு முன்பாக இஸ்ரேல் இந்தத் தந்திரோபாயத்தைக் கைக்கொண்டு முதலில் சீனாவில் கல்வித் தொடர்புத் தூதுக்குழு என்ற தொடர்பகம் ஒன்றைப் பெரும் அளவில் நிறுவியது: யூதர்களின் அரசாங்கம் இதற்கு முன்பு இந்தோனேசியாவிலும், மலேசியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலும் அத்தகைய அமைப்புக்கள் நிறுவும் விருப்பத்தைத் தெரிவித்த தெனினும் அவற்றிற்கு இன்னும் அனுமதி கிடைக்கவில்லை. பாகிஸ்தான் தவிர்ந்த ஆசியாவில் உள்ள ஒவ்வொரு முஸ்லிம் நாட்டுடனும் பல மட்டங்களிலும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளதாக இஸ்ரேல் அதிகாரிகள் கூறுகின்றனர்.

இஸ்லாமிய மகாநாட்டிற்கு அமைப்பின் முன்னணி உறுப்பு நாடொன்றான மலேசியா, ஜெருசலத்தைத் தலைநகராகக் கொண்ட சுதந்திரமான அரேபியப் பாலஸ்தீனிய நாடு ஒன்று அமைக்கப்படுவதற்கு நீண்டகாலமாக ஆதரவு கொடுத்துக் குரலெழுப்பி வந்த ஒரு நாடாகும். மலேசியத் தொலைக்காட்சிச் செய்தியில் ''இஸ்ரேல்'' என்ற சொல் பிரயோகிக்கப்படாமல் ''சியோனிஸ்ட்'' என்றோ அல்லது ''டெல் அவிவில் உள்ள ஆட்சி'' என்றோ தான் கூறப்படுகிறது. துங்கு அப்துல்லாவின் இரகசியமான இஸ்ரேல் வருகை பற்றிய செய்தி மலேசியாவில் வெளிவந்த உடனே மலேசிய எதிர்க்கட்சியின் தலைவரான ஃபட்னில் நூட்முகமட் இஸ்ரேலை அங்கீகரிக்கும் எந்த ஒரு செயலுக்கும் கண்டனம் தெரிவித்ததுடன், அது ''முஸ்லிம்களுக்குத் துரோகம் இழைப்பதாகும்'' என்றும் கூறினார்.

உள்நாட்டில் நிலவும் உணர்வுகள் அப்படி இருக்கக்கூடியதாக மலேசியா சிறிதளவு இஸ்ரேலுடன் உறவு கொள்வதன் பின்னணி என்ன? இஸ்ரேலுடனான உறவை அங்கீகரித்துக் கொண்டுள்ள பல ஆசிய முஸ்லிம் நாடுகளையும், முன்னாள் சோவியத் ஒன்றியத்தில் இருந்து பிரிந்த பல மத்திய ஆசியக் குடியரசுகளையும் அவற்றிற்கும் இஸ்ரேலுக்கும் இடையில் வளர்ந்துவரும் வர்த்தக உறவுகளையும் மலேசியா கவனத்தில் கொண்டுள்ளது என்று இராஜதந்திரிகள் கூறுகின்றனர். அத்தகைய நாடுகளில் முக்கியமாக மலேசியாவின் அண்டை நாடான இந்தோனேசியாவில் சென்ற ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் இஸ்ரேலியப் பிரதமர் ராபின் ஜகார்த்தாவுக்கு வருகை தந்து சென்ற பின்பு ஏற்பட்ட கூடுதலான ஒத்துழைப்பு நோக்கப்படுகிறது.

ஜெருசலத்தின் ஹிபுரு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கிழக்கு ஆசிய விடயங்களில் நிபுணரான யிற்ஸாக் ஸிசோர் என்பவர் மலேசியா இஸ்ரேலுடன் உறவாட முயல்வது முக்கிய பொருளாதார நோக்கங்களால் ஆகும் என்று கூறுகிறார். மலேசியாவின் தொழிற்றுறைக்கு அவசியம் தேவையான உயர் தொழில் நுட்பத்தை இஸ்ரேல் குறைந்த விலையில் தரக்கூடும். இது ஜப்பானையும் மேற்கு உலக நாடுகளையும் அதற்காக நம்பி இருப்பதற்கு, ஒரு மாற்றீடாகும். இஸ்ரேலில் நிறைய அறிவியலாளர்கள் இருப்பதாகவும், அவர்கள் உலகில் முன்னணி வகிக்கும் இலத்திரனியல் தொலைத் தொடர்பு வைத்திய சாதனங்களை உற்பத்தியாக்குவதுடன் இராணுவக் குடியியல் தேவைகளுக்காகப் பல தொழில் நுட்பங்களிலும் திறமை படைத்ததாக இருப்பதாகவும் கூறப்படுகிறது.

1992 இல் மலேசியாவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் மூன்று நாடுகள் ஊடாக நடந்த இருதரப்பு வர்த்தகம் 1 மில்லியன் டொலர் அளவு குறைந்த தொகையானதாகும். அநேகமாக அவை சேதன இரசாயனங்கள் கொள் முதலாகவே இருந்தன. ஆனால் அண்மையில் இஸ்ரேலிய விற்பனைப் பொருள்கள் உற்பத்தியாளர்கள் சங்கம் நடத்திய கணிப்பு ஒன்றின்படி இஸ்ரேல் மலேசியாவிற்கு இலத்திரனியல் உபகரணங்கள் மட்டுமே 4.9 மில்லியன் டொலர் அளவுக்கு ஏற்றுமதி செய்ய வாய்ப்பு உள்ளதாம்.

மலேசியப் பிரதமர் மஹ்தீர், அப்துல்லா இஸ்ரேலுக்கு சென்றது பற்றித் தமக்கு ஒன்றும் தெரியாது என்றும், வர்த்தக விடயமாக அவர் சென்றிருக்கக் கூடும் என்றும் அவர் கூறினார். ஆனால் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மலேசியர் பிரதமரின் அலுவலகத்தில் அனுமதி இல்லாமல் அத்தகைய பயணம் புறப்பட்டிருக்க மாட்டார் என்று இராஜதந்திரிகள் கருதுகின்றனர். ''மஹ்தீரிடம் இருந்து ஒரு செய்தியுடன் வந்திருக்காவிட்டால் அவர் இங்கே ஐந்து நாள்கள் தங்கி இருக்க மாட்டார்'' என்று ஜெருசலத்தில் உள்ள அரசாங்க உயர் அதிகாரி ஒருவர் ஏற்றுக் கொண்டார்.

அப்துல்லாவுக்கு இஸ்ரேலிய வணிகர்கள் கழகம் கொடுத்த தனிப்பட்ட விருந்து ஒன்றின் போது அந்தக் கழகத்தின் தலைவர் டான்னி கிலர்மான், மலேசியாவுக்கும், இஸ்ரேலுக்கும் இடையிலான வர்த்தகத் தொடர்புகள் வளர்ந்து சில ஆண்டுகளில் இராஜதந்திர உறவுகள் ஏற்படும் என்று தாம் நம்புவதாகக் கூறினார். அதற்கு அப்துல்லா பதில் ஏதும் கொடுக்காமல் மிகவும் சாதுரியமாகச் செவிமடுத்துக் கொண்டு இருந்தார்.

காஸா திடலிலும் ஜெரிக்கோவிலும் பாலஸ்தீனிய சுயாட்சி ஏற்படுத்துவதற்கான கைரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்



ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்பு ராபின் மலேசியாவைத் தனது நாட்டுடன் இராஜதந்திர உறவு கொள்ளும்படி மூன்று கடிதங்கள் தனக்கு அனுப்பியதாக மஹ்தீர் வெளிப்படுத்தினார். ஆனால் இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனியர்களுக்கும் இடையில் அனைத்தும் தீர்க்கப்பட்டதாக இன்னும் திருப்திகரமாகத் தாம் நினைக்கக்கூடியதாக இல்லாதிருப்பதால் இரு நாடுகளுக்கும் இடையில் உறவு மேற்கொள்வது பற்றிச் சிந்திக்க இன்னும் காலம் உள்ளது என்று தாம் ராபினுக்குப் பதில் அனுப்பியதாக மஹ்தீர் கூறினார்.

''சில வருடங்களுக்கு முன்பு சீனாவும் இப்படித்தான் எங்களை அங்கீகரிப்பதென்றால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்தும், கிழக்கு ஜெருசலத்தில் இருந்தும் முழுமையாக விட்டகலவேண்டும் என்று கூறியது'' என்று சொன்ன ஹிபுரு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஸிசோர், ''சீனா அந்த நிலைப்பாட்டை விட்டுவிட்டுத் தற்போது நிலவும் சமாதான நடவடிக்கைகளின் அடிப்படையில் உறவு கொண்டது. ஆனால் மலேசியாவும் ஏனைய நாடுகளைப் பின்பற்றி அதையே செய்யும்'' என்று கூறினார்.

ஸிசோருக்கு இந்த விடயத்தில் முதற்றர ஈடுபாடு உள்ளது. அவர் அண்மையில் மலேசியாவின் பினாங் நகரில் நிகழ்ந்த அனைத்துலகப் பிணக்குகள் தீர்த்துக் கொள்ளுதல் பற்றிய மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக அங்கு சென்று வந்தவர் என்பதுடன் இஸ்ரேலியக் கடவுச்சீட்டுடன் அந்த நாட்டிற்குச் சென்ற முதலாவது இஸ்ரேலியரும் அவரே ஆவார்.

*ஜெருசலத்திலிருந்து*
**யாரேஸ்லாவ் றோஃபிமோவ்வும், ஹொங்கொங்கிலிருந்து ஜொனதன் சார்ப்பும்** *எழுதியது.*

*வார் ஈஸ்ரேன் எக்கனமிக் றிவியூ, ஜூலை 7, 1994.*

# வானில் கண் வைக்கும் அமெரிக்கா

குழப்பங்கள் நடக்கும் பொஸ்னியா, வடகொரியா போன்ற இடங்களை அமெரிக்கா நோட்டமிட்டுக் கண்டு கொள்ளவென்று அமெரிக்கப் பாதுகாப்புத் துறை 1 பில்லியன் செலவில் அவசரமாக விமானி இல்லாமல் அதிக உயரம் ஏறி நீண்ட நேரம் பறந்து செய்தி சேகரிக்கக்கூடிய உளவு விமானம் ஒன்றைக் கட்டும் திட்டத்தில் ஈடுபட்டு உள்ளது ''டயர்-திறீ-மைனஸ்' என்று பெயரிடப்பட்டுள்ள விமானி இல்லாமல் இயங்கும் யூ-2 ரக முதலாவது ஆளில்லாத விமானம் வேவு பார்க்கத் தொடங்கி விடும் என்றும் அதற்கு அடுத்ததாக ''டயர்-டு-பிளஸ்'' என்ற அடுத்த யூ-2-ரக வேவு விமானம் முதலாவதானைத் தொடர்ந்து சில மாதங்களின் பின்பு வெளிவரும் என்றும் கூறப்படுகின்றது.

அமெரிக்க அரசின் பாதுகாப்புத்துறை இந்த வானூர்தித் திட்டத்தில் பெரும் இலட்சியம் கொண்டுள்ளது. இந்த யூ-2 விமானம் 7,000 மைல் வரை தூரம் நிற்காமல் 65,000 அடி வான் உயரத்தில் மணிக்கு 400 மைல் வேகத்தில் பறக்கக்கூடியதாக இருக்க வேண்டும். அத்துடன் ஒரு குறித்த இடத்தின் மீது 24 மணி நேரம் நீடித்துப் பறந்து வேவு பார்க்கக் கூடியதாக இருக்க வேண்டும். அப்படி அது பறந்து கொண்டு இருக்கையில் அந்த யூ-2 விமானத்தில் உள்ள உணர்வு கருவிகள் ராடர் கருவி குறைந்த ஒளித் தொலைக்காட்சித் சாதனம் என்பன 53,000 சதுர மைல் பரப்பை நோட்டமிட்டுச் செய்தி தரும். அந்தக் கள்ள விமானம் கடும் வான்வெளி பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்ட இடங்களில் கூட பகைவரின் ராடரில் எவ்விதமும் தென்படாமல் இயங்கும்.

அந்த விமானம் ஒவ்வொன்றும் இவற்றில் உள்ள கணனிகளை முன் கூட்டியே திட்டமிட்டு ( அண்டைவெளி ஆய்வுக் கலன்களைப் போல ) அல்லது புவியில் இருக்கும் கட்டுப்பாட்டாளர்கள் செய்மதி மூலம் சமிக்ஞைகள் அனுப்பிக் கட்டுப்பட்டு இயங்கச் செய்யலாம். இந்த உளவு விமானம் ஏற்கனவே விண்வெளியில் உலா வரும் அமெரிக்க உளவுச் செய்மதிகளின் செயற்பாட்டிற்கு அனுசரணையாக இயங்கும் என்றும், அவற்றைத் தேவையற்றதாக ஆக்காது என்றும் கூறப்படுகிறது. அதனை விரைவாக வெளிக் கொணர்வதற்கும் அதற்கான உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கும் ஆக பாதுகாப்பு அமைச்சின் வழமையான கூறு விலை முறைகளைக் கைவிட்டுவிட்டு நேரடியாகச் செயற்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணத்தளவே ஆகுமாம் எங்கள் போராட்டம்

வளைகுடா யுத்தத்தின் போது 6 இலட்சம் நேச நாட்டுத் துருப்புக்களுக்கு மூன்று நேரம் உணவு அளிக்கும் ஒப்பந்தத்தை வென்றவர் சபீன்-அல்-சமாரி என்ற பாலஸ்தீனில் பிறந்த அமெரிக்கர். இஸ்ரேலிய ஆக்கிரமிப்பின் அழுத்தத்தால் நாட்டை விட்டு வெளியேறியவர் மசாரி. இவருடைய செல்வம் முழுவதும் அமெரிக்காவில் திரட்டியதாகும். இதுபோன்ற இன்னுமொரு பாலஸ்தீனியர் அப்துல் மஜீத் சோமான். அரபு வங்கி என்ற பெயரில் இவருக்கு 61 வங்கிகள் உலகம் பூராவாகச் சொந்தமாக உள்ளன. இவர்களைப் போல் இன்னும் பலர் இருக்கின்றனர். இவர் காசாவும், ஜெரிக்கோவும் தன்னாட்சி பெற்ற பின் நாட்டுப் பற்று என்ற ஈர்ப்பு விசையில் இழுபட்டுச் சோமான் தாய்நாடு திரும்பி உள்ளார். அண்மையில் இவர் ஜெரிக்கோவில் தனது வங்கியின் கிளை ஒன்றைத் திறந்து உள்ளார்.

இன்று காசாவிலும், ஜெரிக்கோவிலும் முதலீட்டாளருக்கு உற்சாகங் கொடுக்கும் சூழல் இல்லை. தொழில் செய்வதற்கேற்ற அடிப்படை வசதிகளும், சட்ட வரம்புகளும் இன்னும் நிறுவப்படவில்லை. இஸ்ரேலியர்கள் வெளியேறிய பின் சட்டமும், ஒழுங்கும் பேணப்பட்டாலும் உயர் வர்த்தகத்துக்கு உரிய சட்டங்கள் இன்னும் இயற்றப்படவில்லை. நிர்வாகத்துறை இன்னும் சீராக இயங்கத் தொடங்கவில்லை. வரிகள் சேகரிக்கப்படாது கிடக்கின்றன. 1994 ஆம் ஆண்டிற்குரிய வசூலிக்கப்பட்ட வரித் தொகை 82 மில்லியன் டொலர் என்று கணக்குகள் தெரிவிக்கின்றன. நூற்றுக்கணக்கான மில்லியன் டொலர் பணம் நிதி உதவியாக வந்துகொண்டிருக்கின்றது. இதைப் பயன்படுத்தும் நிர்வாக இயந்திரம் இன்னும் உருவாக்கப்படவில்லை. இதற்குரிய நிபுணர்கள் குழு அத்தியாவசியமாக்கப்படுகின்றது.

**“பிறநாடுகளில் பெரும் செல்வம் திரட்டிய பாலஸ்தீனியர்கள் தம் தாய்நாட்டை மேம்படுத்தத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.”**

பி. எல். ஓ. இயக்கத்தின் தலைமைப் பீடத்திற்கும் மேற்கூறிய பாலஸ்தீனியச் செல்வந்தர்களுக்கும் இடையில் கருத்து வேற்றுமை நிலவுகிறது. போராட்ட வாழ்வுடன் அரசியலுக்குப் பொறுப்பாக இருந்த பி. எல். ஓ. நிதித்துறையிலும் அக்கறை காட்டத் தொடங்கியுள்ளது. அதே சமயத்தில் பணம் படைத்த பாலஸ்தீனியர்களின் அரசியல் ஆர்வத்தையும் அவதானிக்க முடிகிறது. இதைத் தவிர்க்க முடியாது. நிதிக் கொள்கை அரசியலுக்கு உட்பட்டதாகும். இரு சாராரின் நல்லுறவில் நாட்டின் சுபீட்சம் தங்கி இருக்கிறது.

வளைகுடா யுத்தத்தின் போது மேற்கு நாடுகளுக்கு எதிராக அரபாத், சதாம் குசெயின் பக்கம் சார்ந்துள்ளார். அமெரிக்கா, சவுதி அரேபியா போன்ற நாடுகளிலும், நாடுகளுடனும் வர்த்தகம் செய்யும் பாலஸ்தீனியர்களுக்கு இது தீங்கு விளைவித்துள்ளது. ரியூனிஸ் நகரில் உள்ள பி. எல். ஓ. தலைமைச் செயலகத்திற்குச் சென்று அரபாத்துடன் அவர்கள் வாதிட்டுள்ளனர். ஆனால் கைது உத்தரவை அரபாத் பிறப்பிக்கப் போகிறார் என்ற வதந்தி திடீரெனக் கிளம்பியதால் பேச்சைத் தொடராமல் வெளியேறி உள்ளனர். ஜோர்தான் நாட்டில் வசித்துக் கொண்டு பிரமாண்டமான மருந்துப்பொருள் வர்த்தகம் செய்யும் பாலஸ்தீனியர் நீடால் சுத்தியான் தனது மனக்குமுறலை இவ்வாறு வெளியிட்டுள்ளார்; ''பாலஸ்தீனியர்களின் பொருளாதாரத்தைப் பி. எல். ஓ. வால் கட்டியெழுப்ப முடியாது. அவர்களுக்கு ஜனநாயக வரன் முறைகளைப் பற்றித் தெரியாது. அவர்கள் தான்தோன்றித்தனமாக நடக்கும் வரை எம் போன்றோரின் பணம் பாலஸ்தீனம் வராது''.

வசதி குறைந்த தம் மக்களுக்கு உதவுவதில் அரபுகளுக்கும், யூதர்களுக்கும் உள்ள வித்தியாசத்தை இவ்வாறு கூறலாம். அரபுக்கள் விருந்தோம்பலில் சிறந்தவர்கள். ஈகையில் பின் தங்கியவர்கள். யூதர்கள் விருந்தோம்பலில் குறைந்தவர்கள், ஆனால் தமது நாட்டிற்கும் மக்களுக்கும் அள்ளிக் கொடுப்பதில் மிகவும் உயர்ந்தவர்கள். 1983 ஆம் ஆண்டு மசாரி சோமான், கசிம்சபாக் போன்றோர் ஜெனிவாவில் கூடி 100 மில்லியன் டொலர் நம்பிக்கை நிதியம் நிறுவும் திட்டத்தை அமைத்தனர். அந்தக் குறிக்கோள் வறிய பாலஸ்தீனியர்களுக்கு பண உதவி செய்வதே. இது வரை 30 மில்லியன் டொலர் மாத்திரம் சேர்ந்துள்ளதாகச் சோமான் தெரிவிக்கிறார்.

இப்போதைக்கு வர்த்தகர்கள் தமது வளத்தைப் பெருக்கிக் கொண்டு வரி மூலம் நாட்டிற்கு உதவுவது தான் நல்ல வழி என்கிறார் சோமான். தானும் இன்னும் சிலரும் கூடி 100 மில்லியன் டொலர் முதலீட்டுடன் வர்த்தக நிறுவனம் ஒன்றை ஸ்தாபித்துள்ளதாக அவர் தெரிவிக்கின்றார். அரபாத் பாதுகாப்பு வெளியுறவு ஆகியவற்றைக் கவனித்தால் போதும். பொருளாதார முன்னேற்றத்திற்கு நாம் பொறுப்பு என்கிறார் அப்துல் மஜீத் சோமான்.

*நியூஸ்வீக். ஜூன் 13. 1994*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடகொரியா

# மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி

தொகுப்பு:
கலாநிதி சோமாஸ்கந்தன்

82 வயதினரான கிம் இல் சுங் இவ்வருடம் யூலை மாதம் 8 ஆம் திகதி அதிகாலை மாரடைப்பால் காலமானார். தந்தையின் பதவிக்கெனப் பல காலம் பயிற்றப்பட்ட அவருடைய முதல் மனைவியின் மகன் 52 வயதினரான கிம் ஜொங் இல் வட கொரியத் தலைவராக நியமனம் பெற்றுள்ளார். கடும் போக்கு கம்யூனிச நாடுகள் அருகிவரும் இக்கால கட்டத்தில் சிறிதளவேனும் விட்டுக்கொடுக்காத பொதுவுடைமைக் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கும் மிகக் குறைந்த நாடுகளில் வட கொரியாவும் ஒன்று எனினும் அரச பரம்பரையினருக்குரிய தந்தையைத் தொடர்ந்து தனயன் பதவியேற்கும் நிகழ்வு வட கொரியாவில் மட்டும் நடந்துள்ளது.

இரண்டாம் உலக யுத்தம் முடிந்த பின் உலகிற் றோன்றிய புதிய நாடுகளில் வடகொரியாவும் ஒன்றாகும். ருஷ்யாவின் ஆசியுடன் இவர் கொரியத் தீபகற்பத்தின் வடபுறத்தைத் தன்வசமாக்கி 1948 ஆம் ஆண்டு இந்த நாட்டைத் தோற்றுவித்துள்ளார். 1950 ஆம் ஆண்டு தனது எல்லைப்புற நாடுகளான சீனா, ருஷ்யா ஆகியவற்றைக் கூட்டுச் சேர்த்துக் கொண்டு யாரும் எதிர்பார்க்காத வேளையில் தென்கொரியா மீது தாக்குதல் தொடுத்தார். பிரிந்திருந்த வட-தென்கொரியாக்களை இணைப்பதே இவரின் நோக்கம் குறுகிய காலத்தில் முடியுமென இவர் கணக்கிட்ட யுத்தம் ஐநாவின் தலையீட்டால் மூன்று வருடங்கள் நீடித்துள்ளது. இரு பக்கமும் இறந்த துருப்புக்களும், பொதுமக்களும் மூன்று மில்லியன் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

வடகொரிய ஆட்சிக்குப் பொறுப்பான கொரியன் தொழிலாளர் கட்சி பத்து வருடங்களுக்கு முன்பே தனது வருடாந்தக் கூட்டத்தில் தலைவர் கிம் இல் சுங்கின் வாரிசு அவர் மகன் கிம் ஜொங் இல் என்று பிரகடனப்படுத்தியுள்ளது. இதன் பின் அவருக்குப் படிப்படியாக இந்த அமைப்பின் உப தலைவர் பதவியில் தொடங்கி ஆட்சிபீட அங்கத்துவம் உள்ளீடாக இராணுவத்தின் அதியுயர் கட்டளைத் தளபதி வரையிலான பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. சில அரசியல் அறிஞர்களின் பார்வையில் அவர் தனது தந்தையின் நிறுவனத்தில் பதவி உயர்வு பெற்றதோடு இறுதியில் நிறுவனத்தின் ஏகபோக உரிமைக்காரராகவும் ஏற்றம் பெற்றுள்ளார். இந்த நிறுவனம் 46 வயதுடையதென்றும், அதில் 22 மில்லியன் கூலிகள் கடமையாற்றுகின்றார்கள் என்றும் அதே விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் இந்த நிறுவனம் இப்போது மிகவும் கஷ்ட நிலையில் இருக்கிறது. அதனுடைய வருடாந்த வருமானம் ஒரு நடுத்தர ஜப்பானிய வர்த்தக ஸ்தாபனத்தின் வருவாய்க்குச் சமமானதாகும்.



தந்தைக்கு நிகர்க மகன் வரும் சாத்தியக்கூறு உண்டா?

நிலைமையைச் சரிசெய்யத் தனயன் என்ன செய்ய வேண்டும்? நாட்டை மீட்டெடுக்க அவர் விரும்பின் தந்தை கடைப்பிடித்த அரசியல் மற்றும் பொருளாதாரக் கொள்கைகளை ஓரளவுக்கேனும் மாற்ற வேண்டும். சுதந்திரமான சந்தைப் பொருளாதாரத்தை அவர் ஏற்கவேண்டும். இத்துடன் கிழக்கு மேற்கு என்று பாராது நாடுகளெல்லாவற்றுடனும் வர்த்தகம் செய்தே ஆகவேண்டும். அணு ஆயு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பலம் பொருந்திய வடகொரியாவை கட்டியெழுப்பிய மாபெரும் மனிதர் தான் கிம் இல் சுங். கொமினிசத்தின் மீதுள்ள வெறுப்பால் இவரை ஒரு சர்வாதிகாரியாக மேற்குலகம் காட்ட முற்பட்டது. ஆனால் வடகொரிய மக்களைப் பொறுத்த வரையில் தேசத்தை உருவாக்கிய தேச பிதா. மாத்திரம் அல்லாமல், அவர்களது நேசத்திற்கும், பெருவிருப்பத்திற்கும் உரிய மாபெரும் தலைவராக கிம் இல் சுங் விளங்கினார். அவரது தத்துவங்கள், செயற்பாடுகளையே வடகொரிய மக்கள் பின்பற்றினார்கள்.**

**அவரது மறைவு அந்த நாட்டு மக்களிற்கு ஏற்பட்ட மாபெரும் இழப்பாகும்.**



உற்ற நண்பர் டெங்சியாவோ பிங்குடன் கிம் இல் சுங்

த்தீட்டம் போன்ற மோதல் நிலைக்கு இட்டுச் செல்லும் போக்கினை நிறுத்தி உலக நாடுகளுடன் ஒத்துப்போகக் கற்றுக்கொள்ள வேண்டும். வடகொரியாவுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்த ருஷ்யாவும், சீனாவும் இத்தகைய மாற்றங்களை ஏற்றுக்கொண்ட பின் வடகொரியா முரண்டு பிடிப்பதில் அர்த்தம் இல்லை. மாற்றங்களைச் செயற்படுத்து முன் வடகொரியத் தலைவர் தனது நிலையைப் பலப்படுத்திக்கொள்ளுதல் மிகவும் அவசியம். கிம் இல் சுங் நாட்டின் ஸ்தாபகர் மாத்திரமல்ல வடகொரிய மக்களுக்கு அவர் பல விதத்திலும் முன் மாதிரியான தலைவர். அவர் பிரிவைத் தாங்கொணாது மக்கள் கண்ணீர் வடித்தமை இதற்குச் சான்று பகரும்.

புதிய தலைவரை ஒரு விளையாட்டுப்பிள்ளையென்றும், வெறும் உல்லாசி யென்றும் ஒரு கதை உலாவுகின்றது. இதில் உண்மை எந்தளவு கலந்துள்ளது என்று தெரியவில்லை. ஆனால் தந்தையின் நிழலில் இருந்தவாறே தனது வருங்கால ஆட்சி அதிகாரத்தைப் பலப்படுத்தும் சந்தர்ப்பம் அவருக்கு நிறைய இருந்திருக்கின்றது. ஒரு தசாப்தத்திற்கு மேலாக அவர் இராணுவத்தின் அதி உயர் பதவியை வகிக்கிறார். தனக்கு விசுவாசமானவர்களை முக்கிய இடங்களில் நியமிப்பதால் அவர் தனது பலத்தைக் கூட்டியுள்ளார். அவருக்கு எதிர்ப்பு வருவதாய் இருந்தால் அவருடைய குடும்பத்திற்குள் இருந்து தான் வரவேண்டும். கிம் இல் சுங்கின் இரண்டாவது மனைவி கிம் சொங் அயிஉம், அவருடைய மகன் கிம் பியொங் இல் உம் பதவி ஆசையும், அரசியல் அபிலாசைகளும் கொண்டவர்களெனத் தெரிவிக்கப்படுகின்றது. டிசம்பர் 1992 தொடக்கம் பிரதமர் பதவிவகிக்கும் 63 வயதினரான கிம் யொங் சுன் புதிய தலைவரின் மைத்துனர் ஆவர். 40 வயதினரான அவருடைய தம்பி மேற்கூறிய கிம் பியொங்இல்லிலும் கைதேர்ந்த இராசதந்திரி என்றும், எதிர்காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வட கொரியா | | தென்கொரியா | அமெரிக்கா |
|---|---|---|---|
| 1,127,000 | துருப்புக்கள் | 633,000 | 35,000 |
| 3,700 | பிரதான யுத்தத் தாங்கிகள் | 1,800 | 100 |
| 2,500 | கவச துருப்புக் காவிகள் | 3,550 | 100 |
| 9,080 | பீரங்கிகள் | 4, 40 | 100 |
| 780 | யுத்த விமானங்கள் | 600 | 230 |
| 18,800 | தரையிலிருந்து விண்ணுக்கு ஏவுகணை | 1,450 | 150 |
| 3 | பெரிய யுத்தக் கப்பல்கள் | 38 | — |
| 25 | நீர்மூழ்கிக் கப்பல்கள் | 4 | — |

சகோதரனுக்குப் போட்டியாக வரலாமென்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. மறைந்த தலைவரின் தம்பி 72 வயதினரான கிம் யொங் ஜீ சில காலம் அரசியலில் இருந்து ஒதுங்கிவிட்டு அண்மையில் முன்னணிக்கு வந்துள்ளார். 63 வயதினரான கான் சொங்சான் புதிய தலைவரின் மைத்துனரும், ஆட்சி பீடத்திற்கு மிகவும் நெருக்கமானவருமாவார்.

கிம் யொங் இல் ஒரு பயங்கரவாதி என்றும், சில கொலைச்சம்பவங்களுடன் தொடர்புடையவரென்றும் இன்னுமொரு கதை உலாவுகின்றது. 1983 ஆம் ஆண்டு அப்போதைய தென் கொரிய ஜனாதிபதி சுன் டூ குலான் பர்மாவுக்கு அமைச்சர்களுடன் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டபோது ஒரு கொலை முயற்சி நிகழ்ந்துள்ளது. ஜனாதிபதி உயிர் தப்பினாலும் அவருடைய நான்கு அமைச்சர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதன் பின்னணியில் கிம் யொங்இல் இயங்கியதாகப் பலத்த சந்தேகம் நிலவுகின்றது. 1988 ஆம் ஆண்டு தென்கொரியத் தலைநகர் சோலில் நடக்கவிருந்த ஒலிம்பிக்ஸ் போட்டிகளைக் குழப்பும் நோக்குடன் தென் கொரிய விமானம் ஒன்று நவம்பர் 1987 இல் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது. இதில் 115 பயணிகளும், விமானமோட்டிகளும் கொல்லப்பட்டுள்ளனர். குண்டு வைப்பதற்குப் பொறுப்பான பெண்மணி பிற்பாடு பிடிபட்டுள்ளார். தாம் கிம் யொங் இல்லின் கட்டளைப்படி நடந்ததாக அவர் விசாரணையில் தெரிவித்துள்ளார். எனினும் நாட்டின் தலைவராகிய கிம் இல்சுங் அறியாமல் இவர் இவ்வளவு பாரதூரமான வேலையைச் செய்வது சந்தேகமே!

புதிய தலைவரை எதிர்நோக்கும் மிகப்பெரிய சவால் நொந்த தனது நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதுதான் எரிபொருளுக்கும், மூலப்பொருள்களுக்கும் நாட்டில் பெருந் தட்டுப்பாடு நிலவுகின்றது. தொழிற்சாலைகள் தொடர்ச்சியாக இயங்குவதில்லை. உணவு உற்பத்தி வீழ்ச்சி அடைந்துள்ளது கிராமப்புற மக்கள் நாளொன்றுக்கு ஒரு நேர ஆகாரத்துடன் பொழுதைப் போக்குகின்றனர். மேட்டுக்குடியினருக்கு மாத்திரம் மூன்று நேரம் உண்ணக் கிடைப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. சில கிராமங்களில் மக்கள் தெருக்களில் இறங்கி ஆரவாரம் செய்வதாகவும் செய்திகள் வந்துள்ளன. எதிர்காலத்தில் இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்கள் தொகை கூடும் வாய்ப்பு உண்டு. பதற்றத்தைத் தணிக்கச் சீனா வடகொரியாவுக்குச் சில ஆலோசனைகள் வழங்கியுள்ளது. உலக நாடுகளின் வர்த்தகத் தொடர்பையும், உதவியையும் நாடும்படியும், தன்னைப்போல் பொருளாதாரத்தைச் சீர்செய்யும்படியும் சீனா சிபாரிசு செய்துள்ளது. ஆனால் தனது பேச்சுக்களிலும், அவருடைய ஒப்பம் தாங்கிவரும் எழுத்துக்களிலும் கிம் யொங் இல் சீனப் பொருளாதார மாற்றங்களைக் கண்டித்துள்ளார். "பொருளாதாரச் சீர் திருத்தம் மாத்திரம் செய்யும் போது பொதுவுடைமைப் புரட்சியில் பெற்ற நன்மைகள் அழிந்து போகும்." ஆட்சி அதிகாரம் கை நழுவாமல் பொருளாதாரச் சீர் திருத்தம் இயலுமா என்பதே இந்த வாசகத்தின் உட்பொருள். முதல் ஆட்சியைப் பலப்படுத்திக்கொண்டு பின்பு பொருளாதாரப் பெருக்கத்தைக் கைக்கொள்ளலாம். பாரிய மாற்றங்கள் நிகழும் போது தானும் அடித்துச் சொல்லப்படலாம் என்ற நியாமான பயம் புதிய தலைவருக்கு உண்டு.

ஆனால், கிம் குடும்பத்தின் பெரும்பாலானோரும், வட கொரிய தொழிலதிபர்களும், நிபுணர்களும் வட கொரியா தனது போக்கை மாற்ற வேண்டுமென்பதையே விரும்புகின்றனர். ஓரளவுக்காகவேனும் திறந்த பொருளாதாரக் கொள்கையைத் தொடங்க வேண்டும் என்று இராணுவ அதிகாரிகள் சிலரும் விருப்பந் தெரிவித்துள்ளனர். எனினும் கிம் இல் கிங் இன் கொள்கைகளே தொடரும். "தந்தையின் கொள்கையை மாற்றித்திறந்த பொருளாதாரத்தை உட்புக சிம் ஜொங் இல் விடுவாரென்று நான் நினைக்கவில்லை." இவ்வாறு வட கொரிய நிபுணர் கிம் சாங் சூன் தெரிவித்துள்ளார். பொருளாதாரச் சீர்திருத்தம் அரசியல் மாற்றத்திற்கு வழிவிடும். இதை தந்தையும் மகனும் நன்கு அறிவர். இதனால் தொடர்ந்தும் சர்வதேச மட்டத்தில் வட கொரியா தனிமைப்படுத்தப்படும் வாய்ப்பு உண்டு. அத்துடன் சீரிழந்த பொருளாதாரமும், உணவுப் பற்றாக் குறையும் தொடரத்தான் செய்யும்.

இரண்டாம் உலக யுத்தம் முடிவுக்கு வரமுன்பே ஆரம்பித்த பனிப் போர் கொரிய தீபகற்பத்தைப் பொறுத்தளவில் இன்னும் முடிவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவில்லை. இராணுவ ஆயுத தள பாடங்களுக்கு வடகொரியாவிலும் பார்க்கத் தென் கொரியா ஆறு மடங்கு கூடுதலாகச் செலவு செய்கின்றது. ஆனால் தெற்கின் சனத்தொகை இரண்டு தடவை கூடுதலாகும். அத்துடன் அதன் பொருளாதார வளர்ச்சி வடகொரியாவிலும் மிக உன்னத நிலையில் உள்ளது. எனினும் வட கொரியா அணு ஆயுத வல்லமை உள்ள நாடான படியால் யுத்தம் வரின் இம் முறை சீனாவும், ருஷ்யாவும் உதவிக்கு வராவிட்டாலும் யுத்த முடிவைத் துணிந்து சொல்ல முடியவில்லை இரு ஜேர்மனிகளும் ஒன்று கூடியது போல் இரு கொரியர்களும் ஒரு நாடாகுமா என்ற கேள்வியை அரசியல் அவதானிகள் கேட்கின்றனர். இதற்கு இரண்டு விதமான தடைகளை எடுத்துக் காட்டலாம். ஒன்று வட கொரியாவின் இன்றைய தலைமைப் பீடம். இரண்டாவதாக சீரழிந்த வட கொரியாவைப் பொறுப்பேற்ற தென் கொரியாவின் தயக்கம். உடனடியாக வட கொரியாவை நிலைக்குக் கொண்டு வர 400 மில்லியன் டொலர் தேவையென, தென் கொரிய நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். தென் கொரியர்கள் வட கொரியாவில் முதலீடு செய்ய விரும்புகின்றனர். ஆனால் வட கொரியாவைப் பொறுப்பேற்க அவர்கள் தயாரில்லை. நாட்டு ஒற்றுமை என்ற நெடுநாட் கனவுக்காக மேற்கு ஜேர்மனி கிழக்கிற்கு 100 மில்லியன் டொலர் இது வரை செலவு செய்துள்ளது. என்றாலும் கிழக்கு ஜேர்மனியைக் கட்டியெழுப்புவது இயலாத காரியம் போல் தோன்றுகிறது. தென் கொரியா ஜேர்மன் உதாரணத்தை நன்றாகப் புரிந்து கொள்ளும் என்பது திண்ணம்.

பழைய ஏற்பாட்டின் மூத்த தலைவர்களில் இறுதியானவர் கிம் இல் சுங். இவர் மாவோ, ஸ்ராலின், குருஸ்சேவ் ஆகியோரின் சகபாடி. போராட்டம், அவருடைய வாழ்க்கை முறை, அவருடைய மகன் தலை தூக்கிய உலகம் வேறுபட்டது. இன்றைய உலகை ஆட்டிப் படைக்கும் சக்திகளுக்கு அவரால் ஈடு கொடுக்க முடியுமா? காலம் பதில் சொல்லும். ஒன்று மாத்திரம் நிச்சயம், மாற்றம் மனித நியதி.

★

# பெரு கொகாயின் பானம்

பெரு நாட்டின் தேசிய பானமான மேட்டி கொகாவை அருந்தினால் உற்சாக உணர்வு ஏற்படுகிறதாம். சூடான இனிமையான இந்தப் பானம் கொகாயின் இலைகளில் இருந்து தயாரிக்கப்படுகிறது. அந்த மலைப் பிரதேசம் நாட்டிற்குச் செல்லும் உல்லாசப் பயணிகள் அங்கே சென்றதும் உயர் நிலத்தில் நிற்கும் போது ஏற்படும் காய்ச்சலைப் போக்கக் கூடிய அந்தப் பானத்தைக் குடிக்கும்படி வேண்டப்படுகின்றனராம். ஆனால் அந்தப் பானத்தைப் பருகும் அமெரிக்க உல்லாசப் பயணிகள் மீண்டும் நாடு திரும்பியதும் உலகின் மிகப் பெரிய கொகாயின் போதைப் பொருள் உற்பத்தி நாட்டிற்கு அவர்கள் சென்று வந்தவர்கள் என்பதனால் சில அமெரிக்கத் தொழில் கொள்வோர் அவர்களைப் போதைப் பொருள் பாவனைக்கான குருதிப் பரிசோதனைக்கு உட்படுத்தும் போது வெறும் சொகா பானம் அருந்தியவர்களின் குருதியிலும் கொகாயின் பாவனைக்கான குறிகள் தோன்றப்படுகின்றனவாம், அத்தகையவர்கள் தாம் உண்மையில் கொகாயின் போதைப் பொருள் பாவிக்கவில்லை என்பதை ஒப்புவிக்கப் பெரும் பிரயத்தனம் செய்ய வேண்டி உள்ளதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்று முடியும் இந்த பொஸ்னியா யுத்தம்?

சேர்பியா, குறோசியா, பொஸ்னியா, ஹேர்சிகோவினா சிலோவினியா, மசிடோனியா, மொன்றினெகிரோ என 6 குடியரசுகள் கொண்ட யூகோசிலாவியா என்னும் 'தென்—கிழக்கு ஐரோப்பிய நாடு, 1918 ஆம் ஆண்டில் உதயமாகிக் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் மறைந்துள்ளது. இதில் சேர்பிய குடியரசு சனத்தொகையிலும் நிலப்பரப்பிலும் மிகப் பெரியது. ஆறு குடியரசுகளும் வாழ்வோரில் 99 சத வீதமானோர் கிழக்கு ஐரோப்பிய இனமான சிலாவிக் இனத்தைச் சேர்ந்தவர்கள். மேற்கூறிய பொஸ்னியா – ஹேர்சிகோவினா குடியரசில் முஸ்லிம்கள் காணப்படுகின்றனர். இந்தக் குடியரசின் தலைநகரம் சராஜேவோ இங்கு பெருந்தொகையான முஸ்லிம்கள் காணப்படுகின்றனர். இவர்களுடைய வணக்க ஸ்தலங்களும் பாகிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளில் பெரும் சந்தைகளைப் போன்றவையும் இங்கு காணப்படுகின்றன.

முஸலிமகளான துருக்கியர்கள் 14 தொடக்கம் 19 ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியில் இப்பிரதேசத்தில் ஆதிக்கம் செலுத்தி உள்ளனர். இவர்களுடைய வம்சா வழியினரும் மத மாற்றம் செய்யப்பட்டோரும் பொஸ்னியாவில் காணப்படுகின்றனர். துருக்கியர்களின் ஆட்சிக் காலத்தில், பாதிப்படைந்துள்ள சேபியர்கள் ‘ஓநாயும் ஆடும்’ என்ற கதையில் வருமாப்போல இப்போது முஸ்லிம்கள் மீது வஞ்சம் தீர்க்கத் தலைப்பட்டுள்ளனர். இனச்சுத்திகரிப்பு என்ற பழைய பல்லவிக்கு புதிய உருவங் கொடுத்து சேபியர்கள் இன அழிப்பு பலாத்காரம், நில அபகரிப்பு, மத மாற்றம் போன்றவற்றைச் செய்து வருகின்றனர். பெருந்தொகையான முஸ்லிம்கள் இவ்வாறு கொல்லப்பட்டும், மானபங்கப்படுத்தப்பட்டும் உள்ளனர். எனினும் உலகில் மிகப்பெரிய முஸ்லிம் நாடுகள் வாளாதிருப்பது ஒரு விந்தையே. தனிப்பட்ட முறையில் ஆப்கானிஸ்தான், எகிப்து, பாலஸ்தீன் போன்ற நாட்டுப் போராளிகள் பொஸ்னியாவுக்குச் சென்று முஸ்லிம்களுக்குத் துணையாகப் போராடுகின்றனர். ஐ. நா. வும் தனது வழமையான கையாலாகாத்தனத்தை இங்கும் காட்டிவருகிறது.

> **“அடிவாங்கியது போதுமென்று திருப்பித் தாக்கும் முஸ்லிம்கள்”.**



திருப்பி அடிக்கும் முஸ்லிம்கள்;
இப்போது ஆயுதப்பஞ்சம் குறைந்துவிட்டது.

சோவியத் ருஷ்யாவின் உதிர்வுக்குப் பின் அவலப்படும் நாடுகளில் பொஸ்னியாவைச் சேர்க்கலாம். பொஸ்னியா யுத்தம் என்ற பெயர் வரக்காரணம், இங்கு வாழும் முஸ்லிம்கள் மீது சேபியர்கள் நடத்தும் தாக்குதல் தான். சேர்பியர்கள் ஆரம்பித்த இந்த யுத்தம் இரு வருடங்களுக்கு முன், யூகோசிலாவியா 6 பாகங்களாக உடைந்ததுடன் ஆரம்பித்துள்ளது. இந்த யுத்தத்தில் மசிடோனியாவும், சிலோவினியாவும் பங்குபற்றாது ஒதுங்கிக் கொண்டுள்ளன. சேர்பியர்களின் கையோங்குவதைத் தடுப்பதற்சாகக் குறோசிய குடியரசு பொஸ்னியா முஸ்லிம்களுக்கு உதவுகிறது. அத்துடன் குறோசியஇனத்தவர்கள் சேர்பியர்களிலும் வித்தியாசப்பட்ட இனத்தவர்கள் ஆவர். மேற்கூறிய 6 குடியரசுகளிலும் பேசப்படும் மொழிகள் யாவும் ஒரு பொது சிலாவ் மொழியில் இருந்து பிறந்தவைதான். காதுகொடுத்துக் கேட்குப்போது எல்லா மொழிகளின் ஏற்ற இறக்கங்கள் ஒரே மாதிரியே இருக்கும். சற்றுக் கூடிய மொழி அறிவுள்ளவர்கள் எல்லாவற்றையும் நன்கு விளங்கிக் கொள்வர்.

1992 ஆம் ஆண்டு தொடங்கிய இந்த யுத்தத்தின் உயிரழிவு 2 இலட்சம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அண்மையில் தான் முஸ்லிம் மக்களுக்கு ஓரளவுக்கு ஆயுதப் பஞ்சம் குறைந்துள்ளது. குறோசிய உதவி மட்டுப்படுத்தப்பட்டதாகும். அண்மையில் மனம் மாறிக் கொஞ்சம் தாராளமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி செய்கிறார்கள். இதனால் யுத்தத்தின் போக்கு மாறத் தொடங்கியுள்ளது. இராணுவப் பார்வையாளர்களின் மதிப்பீடுகளின்படி சேர்பியர்கள் மற்றும் முஸ்லிம்களின் குறை நிறையை இவ்வாறு தெரிவிக்கலாம். முஸ்லிம்களின் தரைப்படை பலம் வாய்ந்தது. அண்மைக் காலம் வரை இவர்களிடம் ஆயுதப் பற்றாக்குறை நிறைய உண்டு. சேர்பியர்களின் பீரங்கிப் படையும், அவர்களின் எறிகணை செலுத்தும் அணியும் மிகவும் பலம் வாய்ந்தவை. இதற்குப் பதில் சொல்ல முஸ்லிம்களிடம் வல்லமை குறைவு.

இந்த யுத்தம் ஆரம்பித்த பின் முதன் முறையாக, இப்போது முஸ்லிம்களின் ஆற்றல் வெளிவரத் தொடங்கி உள்ளது. சரஜேவோ நகருக்கு 80 கி. மீ. தொலைவில் நிலை கொண்டுள்ள சேர்பியத் துருப்புக்கள் மீது கடும் தாக்குதல் நடத்தித் துரத்தியுள்ளனர். கிராமம் கிராமமாக விடுவிக்கப்பட்டுள்ளது. சேர்பியப் படைகள் துரித கதியில் பின்வாங்கத் தொடங்கி உள்ளன. பார்வையாளர்களாக மாத்திரம் இங்கு தங்கி இருக்கும் ஐ. நா. படைகள் இச்செய்தியை உறுதிப்படுத்தியுள்ளன. ஐ. நா. படைகளின் தளபதி ஜெனரல் மைக்கேல் றோஸ் பின்வருமாறு தெரிவிக்கின்றார்: '' குறோசிய ஆயுதங்கள் நிலைமையை மாற்றி உள்ளன. பொஸ்னியாவில் வாழும் சேர்பிய இனத்தவர்கள் பாடு இனி மிகவும் கஷ்டம்''.

இப்போது முஸ்லிம் – குறோசிய அணிகளின் கட்டுப்பாட்டில் பொஸ்னிய நிலத்தில் 70 வீதம் வந்துள்ளது. சென்ற வாரம் அமெரிக்க, ருஷ்ய, ஐரோப்பிய நாடுகள் முன்வைத்த அமைதித் திட்டத்தின்படி முஸ்லிம், குறோசிய இனத்தவர்களுக்குப் பொஸ்னியாவில் 51 வீதமும் அங்கு வாழும் சேர்பியர்களுக்கு 49 வீதமும் என்றிருந்தது. முஸ்லிம்கள் முதன் முறையாக வெற்றிகரமாகப் பிடித்ததைத் திருப்பிக் கொடுப்பது சந்தேகமே. ஐ. நா. பார்வையாளர்களின் கணிப்பில் முஸ்லிம் படைகள் இன்னும் கூடுதலாகப் பிடிப்பதில் குறியாக உள்ளனர். இவ்வளவு காலமும் அமைதித் திட்டம் ஏதும் வராதா என்று ஏங்கியவர்கள், இப்போது வெற்றியின் உருசி அறிந்தவுடன் அமைதித் திட்டத்திற்கு என்ன அவசரம் என்று கூறுகின்றனர்.

இந்த யுத்தத்தில் ஒரு பெரிய இழுபறி (51–49) உள்ளது. ஆனால் இப்போதைய வெற்றியை முஸ்லிம் மக்கள் பெரிதாக எண்ணக் கூடாது. சேர்பிய குடியரசின் முழுப் படையும் இன்னும் இந்த யுத்தத்தில் ஈடுபடவில்லை. முஸ்லிம்கள் பெருமளவு முன்னேறத் தொடங்கினால் சேர்பிய குடியரசுப் படைகள் அதிகளவு வருவது நிச்சயம். இந்த உண்மையைப் பொஸ்னிய முஸ்லிம் படைகளின் இரண்டாவது தளபதி ஜெனரல் ஜோவான் டிவஜாக் நன்கு உணர்ந்துள்ளார். '' அவர்கள் தராவிட்டால் நாம் எடுப்போம் என்பதெல்லாம் வெறும் தைரியப் பேச்சு; இந்த யுத்தத்திற்கு அரசியல் தீர்வு தான் ஒரே வழி'' என்று டிவஜாக் அடித்துக் கூறுகின்றார். அதே சமயத்தில் இவர் மனம் திறந்து பேச அஞ்சும் இன்னுமொரு விடயம் உண்டு. குறோசிய இனத்தவர்களும், சேர்பியர்களும் ஓர் உடன் பாட்டிற்கு வந்து விட்டால், முஸ்லிம் மக்கள் பாடு மீண்டும் அதே கதி தான். இந்த முக்கோணச் சிக்கல் விடுபடும் வழியைப் பார்க்கும் சுட்டாயம் முஸ்லிம் மக்களுக்கு உண்டு.

நியூஸ்வீக் ஜூலை. 11. 1994

★

**துருக்கி:**

## நிதி உதவியை ஏற்பதா? விடுவதா

உள் நாட்டில், அவரது நாட்டின் தனித்துவத்தைக் காப்பாற்றும்படி பொதுசன அபிப்பிராயம் அழுத்தம் கொடுப்பதால், துருக்கியப் பிரதம மந்திரி திருமதி டான்சு கில்லர் தமது நாட்டிற்கு இராணுவ உதவியாக அமெரிக்கா வழங்க முன்வந்துள்ளது நிதி 364 மில்லியன் டொலர் சம்பந்தமாக அமெரிக்க அரசுப் பேரவை ஏதும் நிபந்தனைகள் விதித்தால் தாம் அந்த நிதி உதவியை ஏற்க மறுப்பது பற்றிச் சிந்திப்பதாகக் கூறினார். துருக்கியில் பிரச்சனையாக உள்ளது அதன் மனித உரிமை அத்துமீறல்களாகும். துருக்கியின் தென்கிழக்கில் மார்க்ஸிய குர்திஸ் தொழிலாளர் கட்சி என்ற குர்திஸ் பிரிவினைவாதக் குழுவை எதிர்த்து துருக்கியப்படை சண்டை செய்து கொண்டு உள்ளது. அங்கார, அந்த குழுவின் நடவடிக்கையைப் பயங்கரவாதம் என்று கணிக்கிறது. ஆனால் அமெரிக்க செனட் அவை அந்த நிதி உதவி ''உளநாட்டுப் பாதுகாப்பிற்கு''ப் பயன்படுத்தக்கூடாது என்று நிபந்தனையுடன் அதனை அனுமதித்துள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலெக்சாந்தர் சொல்செனிற்சின் (இசயேவிக்)

**1918** இல் பிறந்த இவர் 1962 இல் "ஐவன் டெனிசோவிக்கின் வாழ்வில் ஒரு நாள்" என்ற நாவலுடன் உலகப் பிரசித்திபெற்றார். ஸ்ராலின் யுகத்தில் கடூழிய மறியற்சாலையொன்றின் வாழ்வை வர்ணிக்கும் நூல். பின் மார்கழி 1974 இல் தமது நோபல் பரிசை ஏற்றார். கொஸாக் இனப் புத்திஜீவிகள் குடும்பத்தினரான இவர், பிறக்குமுன் விபத்தில் தந்தையை இழந்து தாயாரால் வளர்க்கப்பட்டார். கணிதத்தில் பல்கலைக்கழகப் பட்டம் பெற்று, இலக்கியத்தைத் தபால் மூலம் கற்றார். 2ஆம் உலகப் போரிற் கலந்து பீரங்கிப் படைக் கப்ரினாக உயர்ந்தார். ஆனால் 1945 இல் சர்வாதிகாரி ஸ்ராலினை விமர்சித்துக் கடிதம் எழுதிய குற்றத்துக்காக 8 ஆண்டுகள் சிறையிலும், மேலும் 3 ஆண்டுகள் தடை முகாமிலும் கழித்தார். 1956 இல் விடுதலைபெற்று மத்திய ருஷ்யாவில் கணித ஆசிரியராகப் பணிபுரிந்துகொண்டு எழுதும் முயற்சியை மேற்கொண்டார். 1962 இல் மேற்படி நாவல் சோவியத் சஞ்சிகையில் வெளிவந்தது. அது அரசியற் பரபரப்பை உலகெங்கும் ஏற்படுத்தியது. பிற ருஷ்ய எழுத்தாளரையும், ஸ்ராலின் யுகத்தைக் குறைசொல்லி எழுதத் தூண்டியது 1963 இல் ஒரு சிறு கதைத் தொகுதியை வெளியிட்ட அவர், அதிகாரிகளின் வெறுப்புக்குள்ளானார். பிரசுரம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. அவரது எழுத்துப் பிரதிகள் பறிமுதலாகின. சோவியத் தேசிய எழுத்தாளர் ஒன்றியம் முன்னரும் எழுத்தாளர்களுக்கு துரோகம் இழைத்ததைச் சுட்டிக்காட்டிக் கடிதம் எழுதினார். "சுய பிரசுரம்" (அரச அங்கீகாரம் இல்லாதபடியால் சட்ட விரோத பிரசுரம்) என வெளியிடப்பட்ட பல நூல்களை அயல் நாடுகள் ஆர்வமுடன் பிரசுரித்திருந்தன: "புற்றுநோய் (வைத்திய) அறை" (1968), "முதல்வட்டம்" (1968). 1970 இல் நோபல் பரிசு பெற்றும் அதைக் கையேற்க விடாமல் தடுக்கப்பட்டார். பின் "ஒகஸ்ட் 1914" என்ற நாவல் 1971 இல் வெளிநாட்டில் பிரசுரமானது. 1973 இல் பேற்குலகப் பத்திரிகையாளர் மத்தியில் அவர் தமது உயிருக்கு அச்சுறுத்தல் உண்டென்றும், அரசாங்கம் தனிமனித உரிமையை மறுப்பதாகவும் குற்றஞ்சாட்டினார். சில நாள்களில் அவரும், பௌதிகவியலரும் ஐதரசன் குண்டுகள் கண்டுபிடித்தவருமான சகறோவும் தேசத் துரோகக் குற்றஞ் சாட்டப்பட்டார்கள். அதே ஆண்டு "குலாக் தொடுவாய் (1918 - 1956)" என்ற பெரு நாவல் பாரிஸில் பிரசுரமாயிற்று. ருஷ்யச் சிறைக் கொடுமைகளை வர்ணிக்கும் நூல் அது. 1974 இல் நாடு கடத்தப்பட்ட அவர் சுவிற்ஸர்லாந்தில் குடியேறி, வேர்மொன்ற் என்னும் இடத்தில் தனிமையிற் காலங்கழித்து ருஷ்யாவின் தனிமனித விடுதலைக் கனவு கண்டு வந்தார்.

*அலெக்சாந்தர் சொல்செனிற்சின்*

**ஒரு புகழ் பெற்ற ருஷ்ய நாவலாசிரியர் ஆவார். இவர் நோபல் பரிசு பெற்றவர். கமியூனிஷ்ற் அரசிற்கு எதிராக எழுதியதால் நாடு கடத்தப்பட்டார். தற்போது இருபது ஆண்டுகளுக்கு பின்பு தனது தாயகம் திரும்பியுள்ளார்.**

— மொழியாக்கம் —

**காவல்நகரோன்**

புதிய ருஷ்யா பற்றிக் கனவு கண்டு, அது எங்ஙனம் அமையுமென அகக் கண்ணால் பார்த்து, இரு தசாப்தங்களைக் கழித்தவர். தம் தாயகத்துக்குத் திரும்பியதும், ஸ்ராலின் 'பேதி' கொடுத்துத் தம் தேசிய இனத்தின் வேண்டாதோரை இலட்சக் கணக்கில் அழித்த கட்டாய வேலைப் பாசறைகளை முதலில் பார்வையிடத் தீர்மானித்தது அதிசயமல்லவே. கபரோவ்ஸ்க் நகரில் தனியார் கவனமாகப் பாவித்த புதை குழிகள் (சமாதிகள்) உள்ள இடத்தைப் பார்வையிட்டார். அதன் வாயிலில் கட்டப்பட்ட சிறு கோவிலில் சற்று நின்றார். 1930 களில் சர்வாதிகார சூறைக் காற்றால் அழிந்தவர்கள் நினைவை உள்ளத்தில் மீட்டார். இரண்டு இளங் குருமார் புராதன ருஷ்ய திருச்சபைக்குரிய பிரார்த்தனை நூலிலிருந்து "அழியா நினைவு"ப் பூசை வாசகங்களை வாசித்தனர். கிரேக்க மகா காவியமான ஒடிசியில் வரும் யூலிஸிஸ் போலத் தாய் நாடு திரும்பும் பயணத்தை மேற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட சொல்செனிற்சின் வாழ்வே ஓர் உருவமாகத் துலங்கியது. தாமே எட்டு ஆண்டு கடுமியச் சிறையில் கழித்து உயிர் தப்பியவர். தம்மைப் போல அதிர்ஷ்டம் பெறாதவர்கள் நினைவை மீட்டல் அதிசயமோ. கோவிலின் புறத்தே ''சட்டத்துக்குப் புறம்பாக, கொடுங்கோலின் சின்னமான வல்லடிக்குப் பலியான, குற்றமற்ற பாத்திரங்களின் நினைவாக'' என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருப்பதை வாசித்து, மனம்நெகிழ்ந்து பலமுறை தம் நெஞ்சில் சிலுவை அடையாளம் இட்டார்.

ருஷ்யருக்கு, சொல்செனிற்சின் வழங்கும் செய்தியின் சுருக்கம் ஒரே சொல்லில் அமையும். ''கழிந்ததற்கு இரங்குங்கள்'' என்பது அவரது அசைக்க முடியாத நம்பிக்கை. ருஷ்யா வருங்காலத்தில் புது வாழ்வு பெறவேண்டுமானால் தனது பழைய பொதுவுடைமையினின்றும் முற்றாக விலக வேண்டும் என்பதே. இந்த நாட்டில் கொலைஞரும், துன்புற்றோரும், கொடூர தண்டம் வழங்குவோரும், (அநியாயமாகத்) தண்டம் பெறுவோரும் இருக்கின்றனர். கொலைஞரும், தண்டனை வழங்கியோரும் தாமாகவே குற்றங்களுக்காகப் பச்சாத்தாபப்பட வேண்டும்; கழிந்ததற்கு இரங்க வேண்டும்; தம்மைத் தாமே சுத்திகரிக்க வேண்டும் என்கிறார். ''ஒரு சிறு கூட்டம் அவரை அணுகி தங்கள் நியாயத்தை உரத்த குரலில் வற்புறுத்தாது விட்டது எமது பிழை. அதற்காக எம்மை மன்னியுங்கள்'' என்று கூறியபோது, அவர் சிரித்துக் கழிந்ததற்கு, இரங்கலுக்கு மிக அற்பமான விடயம் இது. ருஷ்யர் இதனைவிடப் பாரதூரமான நிகழ்வுகளுக்காக மனம் வருந்த வேண்டும் என்கிறார். அவர் எதிர்பார்ப்பது 1946 இல், ஜேர்மனியில், நியூரெம்பேர்க் போர்க் குற்றவாளிகள் விசாரணையில் நிகழ்ந்தது போல ஜேர்மனியர் ஹிட்லரின் அட்டூழியங்களுக்கு எதிர்ப்புத் தெரிவியாத குற்றத்துக்காக இரக்கப்பட்டு, குற்றவாளிகளைத் தண்டித்தது போல, ருஷ்யரும் தேசிய இனமாகவே சங்காரம் (தூய்மை) செய்துகொள்ள வேண்டும் என எதிர்பார்க்கிறார் போலும். ''பழைய சோவியத் ஒன்றியத்திலிருந்த 250 மில்லியன் மக்களும் இதனைச் செய்ய இயலாவிட்டாலும், ஏதோ ஒரு விதமான தொடக்கம் அவசியம். சட்ட ரீதியான நடவடிக்கையோடு, தனி மனித மனமாற்றம் வெளிப்படையாகப் பேசப்படவேண்டும்'' என்பது அவரது புத்திமதி.

★

## கோல்ஃப் விளையாட்டுத் தோழர்கள்

சீனத் தலைநகரில் புதிதாக ஒரு கோல்ஃப் விளையாட்டு வெளி அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதில் விளையாடத் தேர்வு செய்யப்பட்ட வர்த்தகர்களுக்கும், இராஜதந்திரிகளுக்கும் உரிமை கொடுக்கப்பட்டுள்ளது. உலகளாவிய ரீதியான கோல்ஃப் விளையாட்டுத் திட்டங்கள் அமைக்கும் நிறுவனம் ஒன்று பீகிங்கில் சோயஸ் பார்க்கில் அமைத்துக் கொண்டிருக்கும் அந்த விளையாட்டு வெளியில் சீனாவின் துணைப் பிரதமர் சுஹ ரொன்ஜிக்கும், கம்யூனிஸ்ட்கட்சி மத்திய குழு உறுப்பினர்கள் ஹு ஜினட்டேவுக்கும், லீருயிஹுவானுக்கும், சீன தேசிய மக்கள் பேரவைத் தலைவர் குயாவோ ஸ்ஹிக்கும் இலவச உறுப்புரிமை கொடுக்கப்பட்டுள்ளது. அத்தகைய உயர் அதிகாரத்தினருடன் அந்த விளையாட்டு வெளியில் விளையாட உறுப்புரிமை பெற விழைவோர் அமெரிக்க டொலர் 200,000 செலுத்த வேண்டும் என்பதுடன் அவர்களின் வாழ்வுப் பின்னணி பற்றிய ஆய்விலும் தேற வேண்டும். இந்த உறுப்புரிமை பெறுவதற்குச் சில சீனத் தலைவர்கள் ஆச்சரியப் படக்கூடிய விதமாகத் தேர்ந்தெடுக்கப்படாமல் விடப்பட்டுள்ளனர். பிரதமர் லீ பெங்கும், ஜனாதிபதி ஜியாஸ் செமினும் உறுப்பினர்களாகச் சேர அழைக்கப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத் ருஷ்யா: பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?

மொழிபெயர்ப்பு:

கலாநிதி க. சோமஸ்கந்தன்

முன்னாள் சோவியத் ருஷ்யா 15 குடியரசுகளைக் கொண்டதாகும். ஒவ்வொரு குடியரசிலும் பெரும்பான்மை மக்கள் பேசும் மொழியை வைத்தே குடியரசு ஒவ்வொன்றுக்கும் பெயரிடப்பட்டுள்ளது. உதாரணமாக, தஜிக்மொழி, தஜிகிஸ்தான் குடியரசு இந்த மொழிகளில் சில சோவியத் ருஷ்யாவின் எல்லைக்கு அப்பாலும் பேசப்படுகின்றன. உதாரணமாக, தஜிக்மொழி ஆப்கானிஸ்தானிலும் பேசப்படுகின்றது. இப்போதைய ருஷ்யாவில் பேசப்படும் ருஷ்யமொழி உக்கிரேனியின் ( Ukraine ) பெலாருஸ் ( Belarus) ஆகிய குடியரசுகளில் பேசப்படும் மொழிகளுக்கு நெருக்கமானதாகும். ஆகவே, இந்த மூன்று குடியரசுகளிலும் பேசப்படும் மொழிகளை அறிஞர்கள் கூட்டாக கிழக்கு சிலாவிக் மொழிகளென்பர். சோவியத் ருஷ்யா காலத்திலும் இந்த இரண்டு குடியரசுகளும் ஒருவித தனித்துவத்துடனும் இயங்கி வந்துள்ளன. இரண்டிற்கும் ஐ. நாவில் தனியான வாக்குரிமைகள் முன்பே இருந்துள்ளன. சோவியத் ருஷ்ய காலத்தில் ஐ. நாவின் வாக்களிப்பின் போது சோவியத் ருஷ்யாவுக்கு எப்போதும் சாதகமாக மூன்று வாக்குகள் கைவசம் இருந்தன. சோவியத் ருஷ்யாவின் முழுச் சனத்தொகையில் 77 சத வீதமானோர் கிழக்கு சிலாவிக் மொழிபேசும் மக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கோகாசுஸ் (Caucasus) மலைப் பிரதேசத்தில் ஜோர்ஜியா,(Georgia) ஆர்மீனியா ( Armenia ), அஸர்பைஜான் ( Azerbaijan ) குடியரசுகள் காணப்படுகின்றன. இந்த மூன்றில்

> **"பிரிந்துசென்ற 15 குடியரசுகளும் ருஷ்யாவை நினைத்து உருகுகின்றன".**

முதல் இரண்டும் 150 வருடங்களுக்கு மேலாகப் பக்கம் பக்கமாக இருந்தாலும் அங்கு பேசப்படும் மொழிகள் கலவாமல் தனித்தனியாக இருக்கின்றன. மத்திய ஆசியக் குடியரசுகளான துர்க்மென், உஸ்பெக், கிர்கிஸ், கஸாக்ஸ் ஆகியவற்றில் பேசப்படும் மொழிகள் யாவும் துருக்கிய மொழியில் இருந்து பிறந்தவையாகும். ஆனால் தஜிக் குடியரசுமொழி மாத்திரம் பேர்சியன் மொழிகளுக்குத் தொடர்புடையதாகும். மூன்று பால்ரிக் குடியரசுகளிலும் நிலைமை வித்தியாசப்பட்டதாகும். லாட்வியா, லிதுவேனியா ஆகிய இரண்டிலும் பால்ரிக் மொழிகளே பேசப்படுகின்றன. எனினும் எஸ்தோனியாவில் பின்லாந்தின் மொழி போன்றதென்றே வழங்குகின்றது. 15 குடியரசுகளின் 15 பிரதான மொழிகளைவிட சோவியத் ருஷ்யாவில் 60-க்கும் மேற்பட்ட பிராந்திய மொழிகள் பேசப்பட்டு வந்துள்ளன. எதிர்காலத்தில் எழுந்த உள்நாட்டுப் பிரச்சனைகளுக்கு இதுவும் உதவியுள்ளது. சோவியத் ருஷ்ய காலத்தில் ருஷ்யமொழி எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் கட்டாய மொழியாகப் போதிக்கப்பட்டும், படிப்பிக்கப்பட்டும் வந்தபடியால் இன்று இது ஒரு தொடர்பு மொழியாக இடம் வகிக்கிறது.

1991 ஆம் ஆண்டு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சோவியத் ருஷ்யாவின் சீர்குலைவு நிகழ்ந்துள்ளது. பிரிந்து சென்ற 15 குடியரசுகளும் தாம் பெற்ற விடுதலையைச் சிறிது காலம் தான் அனுபவிக்க வாய்ப்புக் கிடைத்துள்ளது. ஒவ்வொரு நாட்டிலும் தனித்தனிப் பிரச்சனைகள் தலை தூக்கியபோது குடியரசுகள் யாவற்றிற்கும் ருஷ்யாவின் உதவி அத்தியாவசியமாக்கப்பட்டுள்ளது. விடுதலை பெற்ற காலத்தில் அவர்கள் பெரிதும் எதிர்பார்த்த மேற்கு நாடுகளின் நிதி உதவிகள் மிகச் சிறிதளவே கிடைத்தபடியால் நிலைமை மோசமடைய ஆரம்பித்துள்ளது. ஒவ்வொரு குடியரசிலும் மக்கள் இரண்டு விடயங்களை வேண்டி நின்றனர். உள்நாட்டு அமைதியும், பொருளாதார மேம்பாடும். ஆனால் இரண்டுமே அவர்களுக்குக் கிடைக்கவில்லை. விடுதலை தன்னாட்சி போன்றனவற்றில் உயர்வைத் தேசியத் தலைவர்கள் எவ்வளவு புகழ்ந்து பேசினாலும் மக்கள் வேறுவிதமாகச் சிந்திக்க ஆரம்பித்துள்ளனர். அண்மையில் அக்கம் பக்க நாடுகளான உக்ரேயின், பெலாருஸ் ஆகியவற்றில் நடந்த தேர்தல்கள் இதை நன்றாகக் காட்டுகின்றன.

பெலாருஸ் குடியரசில் முதன் முறையாக நடந்த சுதந்திரமான வாக்களிப்பில் ருஷ்ய சார்பு வேட்பாளர்கள் பெலிஸ்கஸ் லுக்காசென்கோ 80 சத வீத வாக்குகளைப் பெற்று அந்த நாட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. எஸ்தோனியா (Estonia)
2. லத்வியா (Latvia)
3. லிதுவேனியா (Lithuania)
4. மொல்டோவா (Moldova)




5. பெலாருஸ் (Belarus)
6. ஜோர்ஜியா (Georgia)
7. ஆ(ர்)மீனியா (Armenia)
8. அஸர்பைஜான் (Azerbajian)
9. கிர்கிஸ்தான் (Kyrgyzstan)
10. உஸ்பெகிஸ்தான் Uzbekistan
11. தஜிகிஸ்தான் (Tajikistan)
12. உக்ரேயின் (Ukraine)
13. கசக்கஸ்தான் (Kazakhstan)
14. துர்க்மெனிஸ்தான் (Turkmenistan)

ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதே மாதிரி உக்கிரேயின் தேர்தலிலும் குஸ்மா என்ற முன்னாள் சோவியத் ருஷ்யாவின் தொழிற்சாலை முகாமையாளர் நாட்டின் அதி உயர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டார். இவரும் தமது தேர்தற் பிரச்சாரத்தில் மக்கள் முன்வைத்த செய்தி பின்வருமாறு: "எமது நாட்டின் பொருளாதாரச் சீரழிவில் இருந்து மீள வேண்டுமாயின் ருஷ்ய உதவி எமக்குக் கட்டாயந்தேவை. ருஷ்யாவுக்கும், எமக்கும் இடையில் சிதைந்த பொருளாதாரத் தொடர்புகள் மறுசீரமைக்கப்படல் வேண்டும். எரிபொருள் தட்டுப்பாட்டை நீக்குவதற்கும், எமது தயாரிப்புக்களைச் சந்தைப்படுத்துவதற்கும் ருஷ்யாவின் ஆதரவும், நல்லெண்ணமும் எமக்கு அத்தியாவசியம். ருஷ்யாவை நெருங்கினால் சுதந்திரம் பறிபோய் விடும் என்றெல்லாம் எதிரணிகள் கூறினாலும் மக்கள் ருஷ்யத் தொடர்பையே விரும்பினர்.'' அதே சமயத்தில் ருஷ்யத் தேசியவாதி விளாடிமீர் சிறினோவிஸ்கி என்ன சொல்கிறார் என்றால்: '' இனிமேல் ருஷ்ய எல்லைக்குள் உக்ரேயின், பெலாருஸ் ஆகிய குடியரசுகள் விரைவில் வந்துவிடும். '' அதாவது, அவர் பார்வையில் இவை இரண்டும் மீண்டும் ருஷ்யாவுடன் ஐக்கியமாகிவிடும் என்பதே கருத்து.

மிகுதியான குடியரசுகளிலும் ருஷ்யத் தலையீடும், உதவியும் எவ்வாறு தேவைப்பட்டுள்ளது என்பதைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

## ஆர்மீனியா:

இங்கு உள்நாட்டுப்போரென்று சில வருடங்களாக நடைபெறுகின்றது. ருவாண்டாப் படுகொலைகளுக்கு நிகரான நிகழ்ச்சிகள் இந்தக் குடியரசுக்குட்பட்ட நாகோர்னோ – கரபாக்கில் நடந்துள்ளன. பொருளாதாரம் சீரழிந்ததுடன் பெரும் உணவுத் தட்டுப்பாடும் நிலவுகின்றது. இதன் காரணமாக இக்குடியரசு ருஷ்ய உதவியை நாடியுள்ளது. ருஷ்யத் துருப்புக்கள் இங்கு வந்து நிலை கொள்வதற்கும் குடியரசு இடங் கொடுத்துள்ளது.

## ஜோர்ஜியா:

நெடுங்காலமாகச் சோவியத் ருஷ்யாவின் பிடியில் இருந்து விலகப் போராடிய இக் குடியரசு இப்போது ருஷ்ய உதவியைக் கோரியுள்ளது. அப்காசிய இனத்தவரின் பிரிவினைப் போரை அடக்கவும், அமைதி காக்கும் பணிக்குமான ருஷ்யத் துருப்புக்கள் ஜோர்ஜியா வந்துள்ளன.

## அஸர்பைஜான்:

இங்கு நெடியதோர் மிகக் கொடிய உள்நாட்டுப்போர் நடந்து ஓய்ந்துள்ளது. இவர்களிடம் பெரும் எண்ணெய் வளம் உண்டு.

இதை வெளிக்கொணர்வதற்கும், சந்தைப்படுத்துவதற்கும் ருஷ்ய உதவிதேவைப்படுகிறது. ஆனால், ருஷ்யத் துருப்புக்களை நாட்டிற்குள் பிரவேசிக்கவிட அவர்களுக்குச் சம்மதமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மத்திய ஆசியக் குடியரசுகள்:

தஜிக்கிஸ்தானிலும் பிரிவினை வாதிகளுக்கும், அரசுக்கும் நடந்த பெரும் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவர ருஷ்யத் துருப்புக்கள் வரவழைக்கப்பட்டுள்ளன. இங்கு 25,000 ருஷ்யத் துருப்புக்கள் நிலை கொண்டுள்ளன. கஸகிஸ்தானில். ருஷ்யச் சிறுபான்மையினர் தங்கள் உரிமைக் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். இதனால் குழப்பம் வர வாய்ப்பு உண்டு. கிட்டத்தட்ட எல்லா மத்திய ஆசிய குடியரசுகளும் மிகவும் நெருக்கமான பொருளாதாரத் தொடர்புகளை ருஷ்யாவுடன் பேணுகின்றது.

### பால்ரிக் குடியரசுகள்:

இந்த மூன்று குடியரசுகளும் 1918 ஆம் ஆண்டு சோவியத் ருஷ்யாவின் பிடியில் இருந்து தம்மை விடுவித்துள்ளனர். பின்பு 1940ஆம் ஆண்டு சர்வாதிகாரி ஸ்ராலின் இவற்றை மீண்டும் கைப்பற்றி உள்ளார். 1991 ஆம் ஆண்டுக்கு முன்பே இவை தம்மைத் தன்னாட்சி நாடுகளாகப் பிரகடனப்படுத்தினாலும் அவை இன்றுவரை பொருளாதாரத் தொடர்புகளை வெட்டிக் கொள்ளத் தயாராக இல்லை. பரஸ்பர குடியுரிமைப் பிரச்சனைகளும், ருஷ்யத்துருப்புக்கள் இன்னும் முற்றாக வெளியேறாததால் வந்த கொந்தளிப்பும் தீராமல் இருக்கின்றன.

✶

## நேர்காணல்:

## ஜோர்ஜியத் தலைவர் எடுவாட் ஷெவர்நாட்ஸே

( EDUARD SHEVARDNADZE )

**"இது 19-ம் நூற்றாண்டு அல்ல மீண்டும் சோவியத் ருஷ்யாவை நிறுவ இயலாது"**

✶ சோவியத் ருஷ்யப் பாணி ஆதிக்கக் கனவுகள் பலிக்குமா?

பதில்: நாடுகள் யாவும் இன்று ஒன்றில் ஒன்று தங்கியும், ஒன்று கூடியும், வாழ்கின்றன. எனினும் அவர்கள் தமது தனித்துவத்தை இழக்கத் தயாராயில்லை. நாம் பின் நோக்கிச் செல்ல மாட்டோம். அது வரலாற்று ரீதியில் இயலாத காரியம். பொருளாதார உறவுகளும், வேறு உதவிகளும் காணப்பட்டும் செயல்பட்டும் இருந்தாலும் ஜோர்ஜியா தனது இப்போதைய நிலையை மாற்றத் தயாராயில்லை.

✶ ருஷ்யாவில் ஜனநாயகம் தளைக்குமா?

பதில்: ஜனநாயகம் குறைந்த காலப்பயிர் அல்ல; ருஷ்யா சரியான பாதையில் சென்று கொண்டிருக்கிறது. அங்கு ஜனநாயகம் வளர நல்ல வாய்ப்பு உண்டு.

✶ விளாடிமிர் சிறினோஸ்வியைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

பதில்: ஒரு பரந்த நாட்டில் இவரைப் போன்றவர்கள் வரத்தான் செய்வார்கள். ஆனால் ருஷ்ய சமுதாயமும் அவரை ஏற்கப் போவதில்லை. ருஷ்ய சிந்தனையாளர்கள் அவரை மதிப்பதேயில்லை.

✶ உங்கள் நாட்டில் பிரச்சனைகள் எவ்வாறு இருக்கின்றன?

பதில்: எமது நாட்டில் உணவுத் தட்டுப்பாடு முதற் கொண்டு பல அத்தியாவசியத் தேவைகள் உண்டு. அப்கானியன் பிரிவினைவாதிகளுடன் இன்னும் சமரசம் ஏற்படவில்லை. எல்லாம் எளிதாக முடியும் என்று நாம் நம்பவில்லை. என்றாலும் நான் நம்பிக்கை இழக்க வில்லை.

## உஸ்பெக்கிஸ்தான் ஜனாதிபதி இஸ்லாம் கரிமோவ்

( ISLAM KARIMOV )

✶ அரசியல் விடுதலையின் பின் எழுந்தவற்றைப் பற்றிக் கூற முடியுமா?

பதில்: 1991 ஆம் ஆண்டு விடுதலை பெற்ற பின் ருஷ்யா உட்பட யாபேரும் பெருமகிழ்ச்சியும் எதிர்பார்ப்புக்களும் கொண்டிருந்தனர். பின்பு உள் நாட்டுப் பிரச்சனைகளும் பொருளாதார நெருக்கடிகளும் தோற்றிய போது ஒரு வித சோர்வு ஏற்பட்டுள்ளது. பொருளாதார மேம்பாடு தான் மிகவும் முக்கியம் என்பதை இப்போது உணருகிறோம்.

✶ மனித உரிமைகளைப் பற்றி என்ன கூறுகிறீர்கள்?

பதில்: காலங் காலமாகக் கொமியூனிஸ்ற் கட்சி ஒன்று தான் இயங்க முடியும் என்ற சூழலில் வாழ்ந்த நாம் திடீரென இரண்டு வருடத்தில் பல கட்சி முறைக்கு மாறுவது எளிதல்ல. ஜனநாயகத்தைக் கட்டியெழுப்ப எம்மால் முடியும்; ஆனால் அவகாசம் தேவை. எமது நாட்டிலும், மத்திய ஆசியாவிலும் அமெரிக்கர்களின் வருகை அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் தொடர்பு எமக்கு வழிகாட்டியாக அமையும்.

★ பழைய ருஷ்ய சாம்ராஜ்யக் கனவுகள் பற்றிக் கூறுங்கள்.

பதில்: ருஷ்யா, பெலாருஸ், உக்கிரேயின் குடியரசுகளின் நெருக்கடிகளும், கஷ்டங்களும் தோன்றும் போது பழைய ஏற்பாட்டின் எண்ணங்கள் தோன்றுவது இயற்கையே. கொமியூனிஸ்ற் கட்சி முற்றாக அழியவில்லை. அவர்கள் இன்னும் மக்களைக் கவரும் நிலையில் உள்ளனர். எமது நாட்டிலும் இது உண்மையான நிலைப்பாடு ஆகும். ருஷ்யாவுடன் நெருங்கிய உறவுகளைப் பேண விரும்பினாலும் கிழக்குச் சிலாவிச் நாடுகள் தமது அரசியல் தன்னாதிக்கத்தைத் துறக்கத் துணிய மாட்டார்கள் என நம்புகிறோம்.

★ சிறினோவிஸ்கியைப் பற்றி என்ன கூறுகிறீர்கள்?

பதில்: என்னுடைய கவலையெல்சின் தொடக்கம் யாதொரு ருஷ்ய அரசியல் வாதிகளும் இவருக்குக் பகிரங்கமாக எதிர்ப்புக் காட்டவில்லை என்பது தான், ருஷ்யர்கள் மனதில் எப்போதும் சாம்ராஜ்யக் கனவுகள் நிரந்தரமாக உண்டு. சிறினோவிஸ்கி இதன் வெளிப்பாடு தான்.

★ இஸ்லாமிய அடிப்படைவாதம் பற்றி என்ன கூறுகிறீர்கள்?

பதில்: அல்ஜீரியா, லிபியா ஈரான், ஆகிய நாடுகளில் இது நன்றாக வளர்ச்சி பெற்றுள்ளது. அடிப்படை வாதத்தை ஏற்றுமதி செய்து தமது ஆதிக்கத்தைப் பரப்ப இந்த நாடுகள் விரும்புகின்றன. எமது நாட்டில் அது துளிர் விட்ட போது கடும் நடவடிக்கை எடுத்து அதை அகற்ற வேண்டி உள்ளது. தஜிக்கிஸ்தானில் 50,000 மக்கள் அடிப்படை வாதிகள் தொடங்கிய போரில் இறந்துள்ளனர். அடிப்படை வாதத்தின் தாக்கத்தை எமது மக்கள் உணர்ந்துள்ளனர். இப்படியான பிரச்சனைகளை எதிர் கொள்வதற்காகவே ஒரு கட்சி அடக்குமுறை ஆட்சி முறையை எமது நாட்டில் நிறுவியுள்ளோம்.

ஆதாரம்:
ரைம், ஜூலை 25, 1994.

★

---

இத்தாலி

## எத்தர்கள் தொகை அதிகரிப்பு

இத்தாலி தனது நாட்டில் அதிகரித்துள்ள வலது குறைந்தவர்கள் மோசடியைக் கட்டுப் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. சென்ற ஆண்டில் பொய்யான முறையில் வலது குறைந்தோராக நடித்து தாபரிப்பு உதவி பெற்றவர்களால் 16 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி வீணடிக்கப்பட்டது. இத்தாலியில் அரசாங்கத்திடம் இருந்து முழுமையாகவோ அரைவாசியாகவோ தாபரிப்பு உதவி பெறும் 7 மில்லியன் இத்தாலியர்களில் 40 சத வீதமானோர் அவர்கள் கோரியது போலவோ அல்லது அவர்களுடைய வைத்தியர்கள் அத்தாட்சிப்படுத்தியது போலவோ உடல் ஊனமுற்றவர்களோ வலது குறைந்தவர்களோ அல்ல என்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. ஆனால் இத்தாலியர்களுக்கு இது ஒன்றும் ஆச்சரியமானதல்ல. நான்கு ஆண்டுகளுக்கு முன்பு அங்கு அரசியல் ஊழல்களுக்கு எதிராக நீதித்துறை கடும் நடவடிக்கை எடுத்த வேளையில், அரசியல்வாதிகள் தங்கள் பக்கம் வாக்காளர்களின் அனுதாபத்தை இரக்கத் தமது ஆதரவாளர்கள் பெருந் தொகையானவர்களுக்கு ''உடல் ஊனமுற்றோர்'' அந்தஸ்து வழங்கினர் என்பது தான் உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமைகள் நிறுவிய குடியரசின் அவலங்கள்

மொழி பெயர்ப்பு:
கலாநிதி க. சோமஸ்கந்தன்

மேற்கு இந்தியத் தீவு ஹிஸ்பனியோலாவின் (Hispaniola) மேற்குப் புற மூன்றிலொரு பாகத்தில் அமைந்த நாடு ஹெயிற்றி (Haiti) எனப்படும். மிகுதி கிழக்குப்புற நிலப்பரப்பில் பண்பாடு, வரலாறு ஆகியவற்றால் வேறுபட்ட டொமினிக்கன் குடியரசு (Dominican Repubilc) காணப்படுகின்றது. ஹிஸ்பனியோலா கரிபியன் கடலின் இரண்டாவது மிகப் பெரிய தீவு. இது அமெரிக்காவின் புளோரிடாவிலிருந்து (Florida) 600 மைலுக் கப்பால் கியூபா, பியூர்ரோ, ரிக்கோ (Puerto Rico) தீவுகளுக்கிடையில் அமைந்துள்ளது. 1492 ஆம் ஆண்டு இப்பகுதிக்கு வந்த கொலம்பஸ் (Columbus) இத்தீவு முழுவதையும் அப்போதைய ஸ்பெயின் (Spain) அரசின் உடைமை ஆக்கியுள்ளார்.

பலாத்காரம் நிறைந்த தற்கால ஹெயிற்றியின் வரலாறு கொலம்பசைத் தொடர்ந்து இங்கு வந்து குடியேறிய ஸ்பெயின் நாட்டவர்கள் இத்தீவின் பழங்குடியினரை இன அழிப்புச் செய்ததோடு ஆரம்பிக்கின்றது. ஸ்பெயின் நாட்டவர்கள் இங்கு நிறுவிய பெருந்தோட்டங்களில் வேலை செய்வதற்காகக் கொண்டு வரப்பட்ட மேற்கு ஆபிரிக்க அடிமைகள் இன்றைய ஹெயிற்றியின் 95 சதவீதக்குடிமக்களின் மூதாதையர்கள் ஆவார்கள். 17 ஆம் நூற்றாண்டில் ஸ்பெயின் நாட்டவரிடமிருந்து பிரெஞ்சுக்காரர் ஹெயிற்றியைக் கைப்பற்றியுள்ளனர். இவர்கள் ஆட்சிக்கெதிராக ஒரு நூற்றாண்டு காலமாகப் போராடிய ஹெயிற்றியின் அடிமைகள் 1804 ஆம் ஆண்டு விடுதலை பெற்றுத் தனிநாடு அமைத்துள்ளனர்.



**"குறிஞ்சி என்ற அர்த்தத்தில் ஹெயிற்றி எனப் பெயரிட்ட இத்தீவின் செவ்விந்தியப் பழங்குடியினர் ஐரோப்பியர்களால் முற்றாக அழிக்கப் பட்டுள்ளனர்."**

அடிமைகள் போராடிப் பெற்ற உலகின் முதலாவது நாடு ஹெயிற்றி. அத்துடன் மனிதர்களை வர்த்தகப் பொருளாக்கும் அடிமை முறையைச் சட்டபூர்வமாக ஒழித்த உலகின் முதலாவது நாடும் ஹெயிற்றி தான். இந்தளவு பெருமை வாய்ந்த ஹெயிற்றியில் பதவிக் கவிழ்ப்பும், அராஜகமும், நிதி மோசடிகளும் மலிந்துள்ளன. தனக்குச் சேரவேண்டிய பணத்தை வசூல் பண்ணுவதற்காக அமெரிக்கா 1915 தொடக்கம் 1934 வரை தனது படைகளை இங்கு நிறுத்தியுள்ளது. அமெரிக்கா வெளியேறிய பின் இங்கு பதவிக்கு வந்த ஹெயிற்றி அரசியல் தலைவர்கள் தம்மைத் தாமே சீவிய கால அதிபர்களாக நியமித்துள்ளனர். பெருகி வரும் சனத்தொகையும், நிதி வரட்சியும், உணவுப் பற்றாக்குறையும், அரசியற் குழப்பங்களும் ஹெயிற்றியின் நித்திய பிரச்சனைகளாகும்.

இராணுவ உயர் அதிகாரிகளும், மேட்டுக் குடியினரும் கூட்டாக நாட்டைச் சுரண்டுவதும் ஊழல் தர்பார் நடத்துவதும் இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்கும், கரிபியன் தீவுகளுக்கும் பொதுவான அம்சமாகும். ஹெயிற்றி இதற்கோர் உதாரணமாகும். இப்போது சற்று அமைதியாக இருக்கும் டொமினிக்கன் குடியரசும் இதற்கு விதிவிலக்கல்ல. அண்டை வல்லரசான அமெரிக்காவுக்கு இந்த நாடுகளிலெல்லாம் வரிசைக் கிரமமாக நடைபெறும் பெருங் குழப்பங்கள் பெருந் தலையிடியாக மாறி உள்ளன. அமெரிக்கா இந்த நாடுகளில் நடப்பவற்றைப் பாராமுகமாக இருந்தால் என்ன என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி எழுகின்றது. இருக்கலாம் ஆனால் குழப்பம் நடக்கும் நாடுகளின் பாதிக்கப்பட்டோர் பெருந்தொகையாக விளக்கைத் தேடும் விட்டில் பூச்சிகள் போல் அகதிகளாக வருகின்றனர். அமெரிக்கா இவர்களைத் திருப்பி அனுப்பத் தொடங்க அந்த மக்களின் அரசுகள் கடுஞ் சினங் கொள்கின்றது. புளோரிடா மாகாணம் ஒரு மாபெரும் அகதிமுகாமாக மாறி வருவது கண்கூடு. ஆகவே ஹெயிற்றி போன்ற நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட வேண்டிய கட்டாயம் அமெரிக்காவுக்கு உண்டு.

70, 80 களில் பெருங்கொடுங்கோல் அரசு நடாத்திய டுவாலியர் (Duvalier) குடும்பத்தினர் அமெரிக்கா கொடுத்த அழுத்தங்களினாலும், மக்களின் எதிர்ப்பினாலும் நாட்டை விட்டு 1986 ஆம் ஆண்டு துரத்தப்பட்டுள்ளனர். மக்கள் மகிழ்ச்சி அடைந்தாலும் மக்கள் ஆட்சி திரும்பவே இல்லை. பெருங் குழப்பங்களும், டுவாலியர் குடும்பத்தினரில் எஞ்சியோரின் ஆட்சியும் ஹெயிற்றியில் தொடர்ந்தன. இந்த இலட்சணத்தில் முதன் முறையாகத் தேர்தலில் வாக்களிப்பு மூலம் ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மக்கள் பெரும்பான்மை வாக்குகளால் புரட்சிப் போர்வை போர்த்த கிறிஸ்தவ மதகுரு ஜீன் பேட்ரான்ட் அரிஸ்டீட் (Jean Bertrand Aristide) என்பாரைத் தெரிவு செய்துள்ளனர். ஆனால் ஆண்டனுபவித்து உருசி கண்ட மேட்டுக் குடியினரில் ஒருவராகிய ஹெயிற்றிய இராணுவத் தளபதி ராவுல் செட்ராஸ் (Raoul Cedras) இவரை ஆட்சி செய்ய விடாது தடுத்து நாட்டை விட்டு அமெரிக்காவுக்குத் துரத்திவிட்டார். தட்டித் தடுமாறுவதே தனது வெளிநாட்டுக் கொள்கையாகக் கொண்ட அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன்தான்ஹெயிற்றிக்கு ஜனநாயகத்தைத் திரும்பச் செய்யப் போவதாகவும் அரிஸ்டீட்டைப் பதவியில் இருத்தப் போவதாகவும் குரல் கொடுத்து வருகின்றார்.



ஹெயிற்றியை முற்றுகையிட்டுள்ள அமெரிக்கக் கப்பற் படை

1996 ஆம் ஆண்டுடன் அரிஸ்டீட்டின் பதவிக் காலம் முடிவுக்கு வரவிருக்கின்றது. பதவி நீக்கப்பட்டு நாட்டை விட்டுத் துரத்தப்பட்ட சில நாள்களின் பின் இவர் ஐநா முன் தோன்றித் தன் நிலையை விளக்கிய போது எழுந்த வரவேற்பு உடனடியாக நல்ல பலன் கிடைக்குமென நம்ப வைத்துள்ளது. ஆனால் இறுதியில் ஒன்றுமே நடக்கவில்லை. ஐநா கொண்டுவந்த ஹெயிற்றி மீதான பொருளாதாரத் தடை எதிர் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

இராணுவத்தையும், அதன் சகாக்களையும், உலுக்குவதற்குப் பதிலாக ஐ. நா. வின் இந்த நடவடிக்கை இவர்களுக்கு கடத்தல், மற்றும் கறுப்புச் சந்தை மூலம் பெரும் பொருள் திரட்டும் வாய்ப்பை அளித்துள்ளது. நாட்டில் நோயும், பசிப்பிணியும் அசுர வேகத்தில் பரவ ஆரம்பித்தது. இதன் காரணமாக மக்கள் பெருந்தொகையாக அமெரிக்கா நோக்கி அகதிகளாகப் படையெடுக்க ஆரம்பித்துள்ளனர். மிதக்கும் சவப்பெட்டி என வர்ணிக்கப்பட்ட பிரயாணத்திற்குதவாத படகுகளிலெல்லாம் ஹெயிற்றி மக்கள் கடலில் மிதக்கின்றனர். அகதிகள் வருவதைச் சில காலம் தடுத்து வந்த கிளின்ரன் அரசு வேறு வழியின்றித் தடைகளை நீக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

ஹெயிற்றி சம்பந்தமான கிளின்ரன் நிர்வாகத்தின் வெளி நாட்டுக் கொள்கை ஒருவித மந்த நிலைக்கு வந்துள்ளது. அமெரிக்க இராணுவத்தை ஐ. நா. வின் ஆசியுடன் ஹெயிற்றிக்கு அனுப்புவது பற்றியும், பேச்சுக்கள் அடிபடுகின்றன. இதற்கு வேண்டிய ஆயத்தங்களும் மும்முரமாகச் செய்யப்படுகின்றன. ஆனால் ஜெனரல் செட்ராஸ் அடிபணியும் காட்சியை இன்னும் காணோம். சோமாலியா அனுபவம் கிளின்ரனை மிரட்டும் இவ் வேளை ஒரு சில கனரக வாகனங்களும் 7,000 துருப்புக்களும் மாத்திரம் கொண்ட இராணுவத்தின் தலைவன் செட்ராஸ், அரிஸ்டீட்டின் இடத்திற்கு உச்ச நீதிமன்ற நீதிமன்ற நீதிபதி ஒருவரை நியமித்துள்ளார். இது கிளின்ரன் கொள்கைக்கு வீழ்ந்த பலத்த அடி எனலாம். காலம் மாறி விட்டது. சிறிய வறிய நாடு, வல்லரசுக்கு வாலாட்டத் தொடங்கி விட்டது. ''இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும்'' என்று கிளின்ரன் உரக்கக் கூவினாலும் தள நிலமை மோசமாக இருக்கின்றது. ஹெயிற்றிக்குள் உட்புகுவதும், செட்ராசைத் துரத்துவதும், அரிஸ்டீட்டை நாற்காலியில் இருத்துவதும் சுலபம், ஆனால் ஆளும் வர்க்கத்தின் குண்டர் படைகளைச் சமாளிப்பதும் நிவாரண உதவிகளைச் செய்வதும் சர்வதேச அரங்கில் அமெரிக்கா தன்னை நியாயப் படுத்துவதும், எளிதல்ல.

அமெரிக்க புத்தி ஜீவிகளும், சட்ட வல்லுநர்களும் படையெடுப்பால் வரும் நன்மை தீமைகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி வாதப் பிரதி வாதங்களில் ஈடுபடும் இவ் வேளையில் செட்ராஸ் வெகு நிதானமாகக் காரியங்களைச் செய்து வருகின்றார். பார்வையாளர்களாக ஹெயிற்றியில் தங்கியிருந்த மனித உரிமைக் குழுக்களை அவர் முதற்கண் வெளியேற்றியுள்ளார். இரண்டாவதாக அரிஸ்டீட்டின் ஆதரவாளர்களைத் தீர்த்துக் கட்டத் தொடங்கியுள்ளார். அத்துடன் ஒரு வித அமெரிக்க எதிர்ப்புத் தேசிய உணர்ச்சியைத் தட்டியெழுப்பும் விதத்தில் பேசியும் நடந்தும் வருகிறார். தனது படைகள் உட்புகும் அமெரிக்க இராணுவத்தினருடன் போராடத் தயாரென்று பகிரங்கப் பிரகடனம் செய்து உலகின் கவனத்தைத் தன்பால் இழுத்துள்ளார். ஒரு வேளை பொஸ்னியாவில் சேர்பியத் தளபதி ஒருவர் கிளின்ரனைப் பற்றி நீட்டுவார் சுடமாட்டார் என்று சொல்லியதைக் கேள்விப்பட்டுள்ளாரோ தெரியவில்லை. வீரம் பேசினால் அதன்படி செய்ய வேண்டும். பாவம் கிளின்ரன் அடிப்பேன் என்று சொல்லி விட்டார். இனி அடித்துக் காட்டத்தான் வேண்டும். ஜனாதிபதி வில்சன் 1915 இல் அமெரிக்கப் படைகளை ஹெயிற்றிக்கு அனுப்பி இருபது வருடம் தங்க வைத்தார். இன்று முடியுமா?

ஜனநாயகமென்றாலே என்னவென்று அறியாத படிப்பறிவற்ற ஹெயிற்றி மக்களிடையே இதன் சிறப்பை அமெரிக்கப் படைகள் எவ்வாறு உணர்த்தப் போகின்றன? அறியாமையும், மந்திர தந்திரத்தில் நம்பிக்கையும் உள்ள வறிய நாட்டில் நன்றாக வேர் ஊன்றியுள்ள ஆளும் வர்க்கத்தை எப்படி அகற்றுவது? ஒரு செட்ராஸ் போனால் இன்னுமொருவர்! அத்துடன் ஹெயிற்றி மீது ஐ. நா. படையெடுப்பு என்றால் அது அமெரிக்கப் படையெடுப்புத் தான்; வேறு நாடுகள் தமது அணிகளை அனுப்பத் தயக்கங் காட்டுகின்றன. அமெரிக்க மேலாதிக்கத்திற்குத் தாம் துணை போகக் கூடாது என்பதே அவர்கள் நிலைப்பாடு. இன்று ஹெயிற்றி மக்கள் படுந் துயரம் அவர்களை ஏன் அரிஸ்டீட்டிற்கு வாக்களித்தோம் என்று எண்ண வைத்துள்ளது. அதே சமயத்தில் அரிஸ்டீட்டும் மனநிலை சரியில்லா நிலையில் அமெரிக்காவைக் கண்டிக்கத் தொடங்கியுள்ளார். அமெரிக்க புலனாய்வுத் துறையினர் இவர் ஒரு நெடுங்கால மன நோயாளி எனத் தெரிவிக்கின்றனர். ஆகவே சில கற்றறிந்த அமெரிக்கர்கள் கேட்கும் கேள்வியை நாமும் கேட்கத் தோன்றுகிறது. படையெடுப்பு எதற்காக?

ரைம், ஜூலை, 25, 1994.
நியூஸ் வீக், ஜூலை 18, 25. 1994.

### தலைமைத் தேர்தல் ஆணையாளர் வெற்றியீட்டினார்

பிரதமர் பீ. வீ. நரசிம்மராவின் அரசுக்கு, தலைமைத் தேர்தல் ஆணையாளர் டீ. என். சேசனைக் கட்டுப்படுத்த முடியாமல் போய் விட்டது. சர்ச்சைக்குரிய விதமாகத் தேர்தல்களில் ஊழல்கள் நிகழ்வதையும், வாக்காளர்கள் அச்சுறுத்தப் படுவதையும், உத்தியோக அதிகாரங்கள் தவறான வழிகளில் பயன்படுவதையும், தடுத்த சேசனின் தனி அதிகாரத்தில் பிரிவு உண்டாக்கவென்று மேலும் இரண்டு புதிய தேர்தல் ஆணையாளர்கள் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டபோது, அவர்களை ஏற்க மறுத்த சேசனுக்கு எதிராகப் பாராளுமன்றத்தில் அரசாங்கம் கொண்டு வந்த பிரேரணைக்கு ஆதரவாக மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குப்பலம் திரட்ட முடியாமல் போனதால் அரசாங்கம் அந்தப் பிரேரணையைத் திரும்ப வாபஸ் பெற்றுக் கொண்டது.

### தேர்தலுக்கான திட்டம் ஒன்று

வங்காளதேசப் பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சியான அவாமிலிக்கின் தலைவி சீக்கா ஹசீனா வாஜிட்டின் கணவர் எம். ஏ. வாஜிட் அடுத்த பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான திட்டம் ஒன்றைச் சமர்ப்பித்து, அங்கே தேர்தல் இடைக்காலத்தில், இடைக்கால அரசு ஒன்று நிறுவ வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் விடுத்த கோரிக்கையால் எழுந்த சர்ச்சையை முடிவுக்குக் கொண்டுவர முயன்றுள்ளார். அவருடைய யோசனைப்படி 100 உறுப்பினர்கள் கொண்ட ஆலோசனைச் சபை அல்லது மேற்சபை நிறுவ வேண்டும் என்றும், தேர்தல் வரும்போது ஜனாதிபதி அந்தச் சபையில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களைக்கொண்டு இடைக்கால அரசு நிறுவலாம் என்றும் கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் இங்கு என்னதான் செய்கிறேன்?



இன்றும் என்றும் நாம் யூதர்களே!

சுக்கு நூறாக்கப்பட்ட நிலையில் தோற்றமளிக்கும் யூதர் சமூகக் கட்டடம்

மொழிபெயர்ப்பு:
— திரு. அ. கிருபைராஜா —

அம்புலன்ஸ் வண்டிகளின் அலறலுக்கும், அவலக் குரல்களுக்கும் மத்தியிலும் இரண்டு கட்டடத் தொகுதிகளுக்கு அப்பால் நின்று டிஸ்வி குறுண் வாஸ்ட் மேலே உள்ளது போல் கத்தியது, அவருடைய மனக் கிளர்ச்சியையும், கவலையையும் தன்னை மறந்து வெளிப்படுத்தியதாகும். அப்போது தான் ஆர்ஜன்டீனாத் தலைநகரில் உள்ள யூதர் சமூகத்தின் தலைமைக்காரியாலயம் குண்டு வெடிப்பால் தூளாக்கப்பட்டு 12 ஆர்ஜன்டீனியரைக் கொன்று 200 பேரைக் கடும் காயத்திற்கு உள்ளாக்கியது. ''நான் ஆர்ஜன்டீனாவில் பிறந்து வளர்ந்தவன். ஒருபோதும் இவ்விடம் பாதுகாப்பு அற்றது என்று முன்பு எண்ணியதே கிடையாது. ஆனால் இனிமேல் எல்லாம் மாற்றம் அடையும்.'' என்று தப்பிய ஒருவர் கவலைப்பட்டுக் கூறினார்.

இரண்டு ஆண்டுகளுக்குக் குறைவான காலத்திற்குள் இரண்டாவது முறையாக இலத்தீன் அமெரிக்காவில் மிகப் பெரிய யூதர் சமூகமான 300,000 பேரும் தாக்குதலுக்கான ஓர் இலக்காகப் பட்டுள்ளனர். அந்தக் குண்டால் யூத ஆர்ஜன்டீனிய அன்னியோன்னிய சங்கத்தின் ஏழுமாடிக் கட்டடம் தகர்க்கப்பட்டுள்ளது. அந்தக் கட்டடம் தான் போனஸ் அயர்ஸ் நகரில் யூதர் சமூகத்தின் கல்வி கலாசார மையமாகவும், வரலாற்று ஆவணக் காப்பகமாகவும் இருந்தது. முன்பு போல் தீவிர அடிப்படைவாத இஸ்லாமியர்கள் தான் இதனைச் செய்திருக்க வேண்டும் என்று அரசு குற்றஞ் சாட்டுகிறது. ஆனால் 1992 மார்ச்சில் இஸ்ரேலியத் தூதரகத்தை தரைமட்டமாக்கிய கார்க்குண்டு நடவடிக்கையைப் போல இதனையும் அரசியல் பயங்கரவாதம் என்று கூறமுடியாமல் உள்ளது. இம் முறை இந்தக் குண்டு வெடிப்பு யூதர் சமூகத்தின் குடியியல் மத வாழ்வைத் தாக்கியதுடன், அந்தச் சமூகத்திற்கு அந்த நாட்டில் இருந்த பாதுகாப்பு உணர்வையும் சிதறடிக்கச் செய்துள்ளது.

## ஆர்ஜன்டீனா: யூதர்களின் பாதுகாப்பு உணர்வை அழிக்கிறது.

சிலர் தங்களுடைய பிள்ளைகளை அந்த நகரில் உள்ள பல யூதர் பாடசாலைகளிலும், சந்திப்புச் சங்கங்களில் இருந்தும் விலக்கிக் கொள்ளப் போவதாகவும், சிலர் இஸ்ரேலில் குடிபுகப் போவதாகவும் கூடச் சொன்னார்கள். ஏற்கனவே 76,000 ஆர்ஜன்டீனிய யூதர்கள் இஸ்ரேலுக்குச் சென்று குடியேறியுள்ளனர். ''எனது பிள்ளைகளை இந்த ஆபத்துக்கு ஆளாக்குவதாயின் நான் அதனை அதற்கான கருத்துள்ள ஓர் இடத்தில் செய்யலாம். இங்கு ஏன் அப்படிச் செய்ய வேண்டும்?'' என்று றொக்ஸானா கர்சோவினிக் என்ற 33 வயதான தாய் ஒருவர் கவலைப்பட்டார்.

ஒரு நூற்றாண்டுக்கு மேலான காலமாக அங்குள்ள யூதர்கள் வசதியாக வாழ்ந்து கொண்டும் கூட இந்த நாட்டில் யூதர்கள் வாழ்வு பற்றி நிலவிய மன உளைச்சலினூடாகச் செய்ததைத் தான் அந்தத் தாயும் செய்கிறார். ஆர்ஜன்டீனாவில் யூதர்களுடன் சமாதானச் சக வாழ்வு வாழ்ந்து கொண்டு, அதே நேரத்தில் வெளிப்படையாக யூதவிரோத உணர்வைத் தொடர்வது ஒரு வழக்கமாக இருந்தது. அதற்கிடையில் உலகிலே மிகவும் உயிர்த்துடிப்புள்ள யூத சமுதாய வாழ்வும் அங்கு தான் நிலவியது. அங்கே அநேகமாக இன ஒதுக்கல் மறைத்து வைக்கப்பட்டுக் கொண்டு சில தனிப்பட்ட உரையாடல்களின் போது வெளியே இழுக்கப்படும்.

நீண்டகாலத்திற்கு முன்பு 1800 களில் பெருந் தொகையான ஐரோப்பிய யூதர்கள் வந்து எல்லிஸ் தீவு நோக்கிச் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேறிய பொழுது அவர்களை வரவேற்ற அதே வேளையில் ஆர்ஜன்டீனிய சமுதாயம் அவர்கள் மீது மெதுவான வெறுப்பும் கொண்டு இருந்தது. கிட்டத்தட்ட பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது யூதவெறுப்பு வெடித்து இரைகொண்டுள்ளது. அத்துடன் ஆர்ஜன்டீனா அருவருப்பான அனைத்துலகப் பாத்திரம் வகித்து இரண்டாம் உலகப் போர்க்கால மூத்தஜேர்மன் நாசிகளுக்குப் புகலிடமாகி எடொல்ப் ஈச்மன், ஜோஸப் மஞ்சீலி ஆகியோர் அங்கு பதுங்கி வாழ இடம் கொடுத்துள்ளது.ஒரு யூத இனத்தவரான சமூகவியலாளர் லியொன் றொஸிற்சினர்: "இங்கே மக்கள் யூத இன வெறுப்பு உள்ளவர்கள் என்று நாம் கூற முடியாது. ஆனால் யூதர் வெறுப்பு பல பலப்பிரிவுகளிலும் இராணுவம், அரசியல்வாதிகள், கத்தோலிக்கத் திருச்சபை போன்றவை களிலும் இருந்து எப்போதும் வந்து கொண்டு இருக்கிறது" என்கிறார்.

### வெளிப்படையான அடையாளங்கள்:-

தனது நாட்டின் நிலையை அறிந்தவராக ஜனாதிபதி கார்லோஸ்மெனைம் ஆர்ஜன்டீனாவில் யூதர்கள்பால் நட்புக்காட்ட எத்தனம் செய்துள்ளார். சிரியாவில் இருந்து வந்து குடியயேறியவர்களின் வழித்தோன்றலான அவர் தான் இஸ்ரேலுக்கு முதன் முதலில் வருகை தந்த ஆர்ஜன்டீனிய அரசுத்தலைவர் என்பதுடன் அவர் பல யூதர்களை முக்கிய அரசாங்கப் பதவிகளிலும் வைத்துள்ளார். ஆனால் அவருடைய அரசாங்கத்தால் இஸ்ரேலியத் தூதரகத்தை குண்டு வைத்துத் தகர்த்தவர்களைக் கண்டுபிடிக்க முடியாத நிலையால் யூதர்களின் கவலை மேலும் தூண்டப்பட்டுள்ளது. வேறு வெளிப்படையான அறிகுறிகளாக ஆர்ஜன்டீன ஆட்சி மன்றத் தலைவரும் ஜனாதிபதி மெனைமைப்போல் முன்பு அந்த நாட்டை ஆண்ட சர்வாதிகாரி பெரோனின் கொள்கைகளை ஆதரிப்பவருமான அல்பர்ட்டோ பியாரி இந்த ஆண்டின் முற்பகுதியில் ஒரு செய்தியாளரைப் பகிரங்கமாக "ஒட்டுண்ணி யூதன்" என்று ஏசி விட்டார். இப்படியாக யூத வெறுப்புக்கான உதாரணங்கள் பல உள்ளன. யூதர்களின் கவலைகள் தாக்கப்படுவது, சுவர்களின் ஸ்வாஸ்திகா சின்னம் பொறிக்கப்படுவது, அந்த நாட்டின் யூத மதத் தலைவர் றப்பி கடந்த ஜனவரி மாதத்தில் ஒரு நாள் தெருவில் வைத்துத் தாக்கப்பட்டது என்பவற்றைக் காட்டலாம். யூதர் சமூகக் கட்டடத்திற்குக் குண்டு வைத்துத் தகர்த்தவர்களைக் கண்டுபிடிக்க ஜனாதிபதி நியமித்த இஸ்ரேலிய விசாரணையாளர்கள் உள்நாட்டுச் சக்திகளுக்கு அதில் பங்கில்லை என்று திட்டவட்டமாகக் கூற முடியாமல் இருப்பதாகச் சொன்னார்கள். "இது யூத இன விரோதிகளால் அல்லது புதிய நாசிக் குழுக்களாலும் கூடச் செய்யப்பட்டிருக்கலாம்" என்று ஓர் இஸ்ரோலிய அதிகாரி கூறினார். சிலர் நன்கு ஆயுதந்தரித்து நின்றது காணக்கூடியதாக இருந்தது.

தாக்குதலுக்கு உள்ளான சமூகத்திற்கு அனுதாபம் காட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தியவர்கள் நாங்கள் எல்லோரும் இன்று யூதர்களே என்ற பதாதையை போனஸ் அயர்ஸ் வீதிகளில் ஏந்திச் சென்றனர். மெனைம் கூட அந்தக் குண்டு வைப்பின் பின் அதேவிதச் சிந்தனையான அனுதாபம் வெளியிட்டார். ஆர்ஜன்டீனாவின் யூதர்கள் சம்பவத்தில் இறந்தவர்களுக்கு இரங்கற் கூட்டம் நடத்தியபோது அந்தக் குண்டு வைப்பின் பின்பு கட்டடத்தில் தப்பியிருந்த ஒரு பகுதியில் நம்பிக்கை ஊட்டும் அடையாளம் ஒன்று தெரிந்தது. அங்கே இரண்டு கொடிகள் பறந்து கொண்டு இருந்தன. ஒன்று ஆர்ஜன்டீனாவினதும், மற்றது இஸ்ரேலினதும் தேசியக் கொடிகளாகும். அங்கே இரத்தம் தோய்ந்த கட்டடச் சிதறல்களுக்கு மாறுபட்டதாக அந்தக் கொடிகளில் நீல, வெள்ளை நிறங்கள் காற்றில் பறந்து மிளிர்ந்தன.

நியூஸ்வீக் ஒகஸ்ட் 1, 1994.

## பிலிப்பைன்ஸ்

### கம்யூனிஸவாதி ஒருவர் விடுதலை செய்யப்பட்டார்.

மணிலாவில் உள்ள கம்யூனிஸ்ற் நகர்ப்புறக் கெரில்லா அமைப்பின் அலெக்ஸ் பொன்காயோ அணியின் தலைவர் என்று கூறப்படும் பைலிமொன் லக்மான், சென்ற ஜூன் 19 ஆந் தேதி இராணுவ அதிகாரிகளால் பிணையில் விடுவிக்கப்பட்டார். ஒரு நீதிமன்றக் கட்டளையின்படி அப்படிச் செய்யப்பட்டது. அவர் சென்ற மே 26 ஆம் தேதி கைதி செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ருவாண்டா:

# பனையால் வீழ்ந்தவனை மாடு ஏறி மிதித்த கதை

### "உதவி என்ற பெயரால் ஆக்கிரமிப்பு. றுவாண்டாவில் பிரான்ஸ். ஸ்ரீலங்காவில் இந்தியா, உதாரணங்கள்."

1. இன அழிப்பு GENOCIDE
2. ஆர். பி எப். (R. P. F) எனப் படும் தேசபப்றறாளர் முன்னணியின் வெற்றியும், அவர்களின் வியத்தகு நடத்தையும்.
3. பிரெஞ்சுப்படையின் வருகையும், வெளியேற்றமும்.

## இன அழிப்பு :

நான்கு திட்டமிட்டு புவியில் ஓர் இனத்தை இல்லா தொழிக்க இன்னுமொரு சாரார் நிகழ்த்தும் படுகொலைகள் இன அழிப்பு எனப்படும். இந்த நூற்றாண்டின் முதற் பகுதியில் ஜேர்மன் சர்வாதிகாரி அடொல்ப் ஹிற்லர் ( Adolf Hitler ) ஜேர்மனியிலும், ஜேர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பிய நாடுகளிலும், வாழ்ந்த 6 மில்லியன் யூத இன மக்களை அழித்துள்ளான். இந்த நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் நடந்த மிகக் கொடூரமான இனப் படுகொலை 1994 ஆம் ஆண்டு ஏப்பிரல் – மே மாதங்களில் றுவாண்டா நாட்டில் நடந்துள்ளது.

ஹூட்டு இன றுவாண்டா ஜனாதிபதி ஜூவனால் ஹபியரிமானா ( Juvenal Habyarimana ) வும் வேறு ஹூட்டு இனத் தலைவர்களும் ஆலோசகர்களும், பிரயாணம் செய்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டு அனைவரும் கொல்லப்பட்டதே ருட்சி இனத்தவர் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறையின் காரணம் என்று இது வரை நம்பப்பட்டுள்ளது. இது தவறென்பதை நிரூபிக்கப் புதிய தகவல்கள் வரத் தொடங்கியுள்ளன. ஒரு நூற்றாண்டு வரையிலான இந்த இரு இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளுக்கு



பிரெஞ்சுப் படை வெளியேறிய பின் மீண்டும் ஓடும் ஹூட்டு அகதிகள்

ஓர் 'இறுதித் தீர்வு' ஹூட்டு இனப் பேரினவாதிகளால் பல வருடங்களுக்கு முன்பே வகுக்கப்பட்டுள்ளது. இறந்த ஜனாதிபதியின் உறவினர்கள் நாட்டின் வட மேற்குப் புறத்தில் வாழ்கின்றனர். இவர்கள் அக்காசு (Akazu) என அழைக்கப்படுவர். இவர்கள் இனப் படுகொலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் முக்கிய பங்கு எடுத்ததாக இப்போது தெரிய வருகின்றது. 1990 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்கூறிய ஜனாதிபதி றுவாண்டாவில் நடத்தி வந்த ஒற்றை ஆட்சிச் சர்வாதிகாரத்திற்கு இரண்டு விதத்தில் ஆபத்து வரத் தொடங்கி உள்ளது.

ஒன்று ருட்சி இனத்தவர்களின் தேசப்பற்றாளர் முன்னணியின் அமோக வளர்ச்சி. இரண்டு ருவாண்டாவுக்கு நிதி உதவி செய்து வந்த மேற்கு ஜேர்மனி, பெல்ஜியம், பிரான்ஸ் ஆகிய நாடுகள் பல கட்சி ஆட்சி முறையை கொண்டு வரும்படி நிர்ப்பந்தம் செய்யத் தொடங்கியுள்ளமை. இதன் பின் தன்சானியாவில் அந்த நாட்டு ஜனாதிபதியின் தலைமையில் இரு இனங்களுக்கிடையிலான அமைதிப் பேச்சுக்கள் நடைபெற்றன. ஆட்சிப் பரவலாக்கல் அக்காசு குழுவின் பலத்தைக் குறைத்து விடும். இதை அவர்கள் விரும்பவில்லை. ருட்சி இனத்தவர்களையும், ஹூட்டு இன மிதவாதிகளையும் ஒரே மூச்சில் கொலை செய்யும் சந்தர்ப்பமாகவே ஜனாதிபதியின் மரணம் பயன்பட்டுள்ளது.

1991 ஆம் ஆண்டு தொடக்கம் ஹூட்டு இனத் தீவிர வாதிகளும் அக்காசு குழுவினரும், கூட்டாகத் திட்டமிட்ட இன அழிப்பு விபரங்கள் இப்போது கிடைத்துள்ளன.

— தொகுப்பு —
கலாநிதி க. சோமஸ்கந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்



ருட்சி இனத்தில் பிரபலமான எல்லோருடைய பெயரும், இருக்குமிடமும் மத்திய ஹூட்டு செயலகத்தில் பதியப்பட்டுள்ளன. இவ்வாறே ஹூட்டு இன மித வாத அரசியல் வாதிகளின் விபரங்களும் சேகரிக்கப்பட்டுள்ளன. கிராமம் கிராமமாக குண்டர் படைகள் திரட்டப்பட்டு அவர்களுக்கு ஆயுதமும், செயற்றிட்டமும் வழங்கப்பட்டுள்ளன. அறிவித்தல் கிடைத்தவுடன் ருட்சிகளைத் தமது இடங்களை விட்டு வெளியேறவிடாமல் வீதித் தடை போடும் பயிற்சியும் கொடுக்கப்பட்டுள்ளது. ஹூட்டு இன மக்களை ஆவேச முறச் செய்வதற்கு ஹூட்டு வானொலி மூலம் நச்சுப் பிரச்சாரம் பலகாலமாக மேற்கொண்டு வரப்பட்டுள்ளது.

ஒரே மாதத்தில் 5 இலட்சம் ருட்சி மக்களைக் கொல்லுமளவுக்கு ஹூட்டு இனத்தவர்களின் குரோதத்திற்கு மூன்று ஒன்றோடொன்று தொடர்புடைய காரணங்கள் உள்ளன. ஒன்று ஹூட்டு இனத்தவர் குழுவொன்று தமது கையில் சகல ஆட்சி அதிகாரத்தையும் வைத்திருப்பதில் தீவிரம்; இதற்காக இனப் படுகொலையை அவர்கள் ஒரு கருவி ஆக்கிக் கொண்டனர். இரண்டு ருவாண்டாவில் நிலத்தட்டுப்பாடு. ருட்சிகளை அழித்து விட்டால், அவர்களுடைய நிலத்தையும், அவர்களுக்குச் சொந்தமான வீடு, கால் நடைகள், பாவனைப் பொருள்கள் யாவற்றையும் தமதாக்கலாம் என ஹூட்டு இனத்தவர் நம்பினர். மூன்று காலங் காலமாக ருட்சி இனத்தவர்களை அழிக்க வேண்டும் என்ற அடிப்படை எண்ணம் பெரும் பான்மை இனத்திடம் இருந்துள்ளது.

ஒரு நூற்றாண்டுக்கு முன் பெல்ஜியம் நாட்டவர் ருவாண்டா புருண்டி உள்ளடக்கிய கொங்கோப் பிரதேசத்திற்கு வந்த போது ருட்சி-ஹூட்டு இனங்களுக் கிடையிலான நெருக்கமான சமுதாய அமைப்பைக் கண்டனர். ருட்சிகள் பண்ணையார்களாகவும், அதிகார முள்ளவர்களாகவும் காணப்பட்டனர். ஹூட்டு இனத்தவர்கள் பெரும் பாலும் இவர்களுக்கு ஏவலாளர்களாக இருந்தனர்; ஆனால் அடிமைகளாகவல்ல. அத்துடன் ருட்சிகளின் உடலமைப்பையும் அவர்கள் கவனித்துள்ளனர்.

ருட்சிகள் உருவத்தில் உயரமானவர்கள், நிறத்தில் கருமை குறைந்தவர்கள். வியப்படைந்த பெல்ஜியர்கள், இவர்கள் ஆதியில் எதியோப்பியா போன்ற பிறிதோர் நாட்டிலிருந்து வந்தவர்களென்று முடிவு கட்டியுள்ளனர். நுனிப்புல் மேயும் ஜேர்மன் சமுதாய வியலாளர்களோ இவர்கள் ஆரியரென முடிவெடுத்துள்ளனர். இங்கே ஒரு விஷ வித்து ஊன்றப்பட்டுள்ளது. அத்துடன் அந்நியர் வருகையால் நன்றோ, தீதோ ஒரு சமுதாயஅமைப்புச் சீர் குலைக்கப்பட்டுள்ளது.

ருவாண்டாவில் படுகொலைகள் நின்றுள்ளன. ஆனால் மரணம் தொடருகின்றது. வெற்றியின் காரணமாக ஆட்சியைப் பிடித்துள்ள ருட்சியர்களுக்குப் பயந்து பெருந் தொகையான ஹூட்டு இனத்தவர்கள் சயர் நாட்டின் கோமா (Goma) பிரதேசத்தில் அடைக்கலம் புகுந்துள்ளனர். பத்து இலட்சத்திற்கு மேலான ஹூட்டு இனத்தவர்கள் குடிநீர்த் தட்டுப்பாடு, அடிப்படைச் சுகாதார இன்மை, சன நெருக்கடி போன்ற காரணிகளால் வாந்தி பேதி நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேற்குலகம் உதவிகளைக் குவித்தாலும் நோயின் தாக்கம் பரவிக்கொண்டே போகின்றது. உயிரிழப்புக்களும் முடிவிலாது தொடர்கின்றன.

## ஆர். பி. எவ் R. P. F எனப்படும் தேசப் பற்றாளர் முன்னணியின் வெற்றியும், அவர்களின் வியத்தகு நடத்தையும்.

கடந்த அரை நூற்றாண்டிற்கு மேலாக ஹூட்டு இனத்தவர்கள் செய்த கொடுமைகளுக்கு அஞ்சி அண்டை நாடுகளில் தஞ்சம் புகுந்த ருட்சிகளின் பிள்ளைகளே இன்று ருவாண்டா தேசப் பற்றாளர் முன்னணியில் அங்கம் வகிக்கின்றனர். இந்த அமைப்பின் கட்டுப்பாடும், ஒழுக்கமும் காட்டுமிராண்டி ஆபிரிக்காவுக்கு ஒரு முன்மாதிரியாக உள்ளது. அண்மைக்காலப் படுகொலைகளைக் கண்டு அவர்கள் உணர்ச்சி வசப்படவில்லை. மாறாகக் கட்டுக் கோப்புடன் கருமமே கண்ணாக இயங்கி வந்துள்ளனர். நிராயுத பாணிகளைக் கொலை செய்வதற்கே பயிற்றப்பட்ட ஹூட்டு இன அரசு படைகள் இவர்களுடன் சமர் புரிய இயலாது ஓடித் தப்பியுள்ளனர். வெகு நிதானமாக முன் கூட்டியே எடுக்கப்பட்ட யுத்த ஒழுங்குகளின்படி இவர்கள் ருவாண்டாத் தலைநகர் கிகாலியை (Kigali) நோக்கி முன்னேறி உள்ளனர். தொடக்கத்தில் அகப்பட்ட அரச படையினரைக் கொன்றாலும் ஆர். பி. எப் தளபதி போல் ககாமே (Paul Kagame) கொடுத்த கடும் உத்தரவின் பின் இதை நிறுத்தி உள்ளனர். இன்று அகப்படும் துருப்புக்கள் சிறையில் அடைக்கப்படுகின்றனர். "இவர்கள் மீது விசாரணைகள் நடத்தப்பட்டுக் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர். பலருடைய கைகளில் இரத்தக் கறை படிந்துள்ளது" என்கிறார் ஜெனரல் ககாமே.

ஹூட்டு இனத்தவர்களின் கொட்டம் அடக்கப்பட்டு விட்டது. ஆர். பி. எவ் இயக்கத்தினர் கிகாலியில் ஒரு தேசிய அரசை நிறுவியுள்ளனர். மிதவாத ஹூட்டு இனத் தலைவர்கள் ஜனாதிபதியாகவும், பிரதமராகவும் பதவி ஏற்றப்பட்டுள்ளனர். அத்துடன் ஆர். பி. எவ் வினரும் பகிரங்க உத்தர வாதத்தை உலக மக்கள் தொடர்புச் சாதனங்கள் மூலம் வெளியிட்டுள்ளனர். "அயல் நாடுகளிற் தஞ்சம் புகுந்துள்ள ஹூட்டு இனத்தவர்களே நாடு திரும்புங்கள். நாங்கள் பழிவாங்கல் நடவடிக்கை ஒன்றும் எடுக்க மாட்டோம்" என. இதற்குப் பதில் போல அயல் நாட்டிலுள்ள ஹூட்டு இனத் தலைவர் சொல்கிறார்: "ஒருவரும் திரும்பாவிட்டால் அவர்கள் வெறும் மண்ணையா ஆளப்போகிறார்கள்" என. எனினும் மக்கள் திரும்பத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகிறார்கள். ஆர். பி. எவ் அணியினருடைய மதி நுட்பமும், இராஜதந்திரமும் இந்த அவலங்கள் மத்தியில் ஒரு விடிவெள்ளி போல் பிரகாசிக்கின்றது. இந்தக் கொள்கையால் கவரப்பட்ட ஐநாவின் அமைதிப்படை எல்லைப்புறம் சென்று ஹூட்டு மக்களை நாடு திரும்பும்படி வற்புறுத்தத் தொடங்கியுள்ளது. ருவாண்டா ஒரு பல்லின நாடு. இதை உணர்ந்து ருட்சிகள் யதார்த்த ரீதியில் செயலாற்றுகிறார்கள். அத்துடன் ஒரு நாட்டைச் சிறுபான்மையினர் நெடுங்காலம் ஆள முடியாது என்ற உண்மையும் அவர்களுக்குத் தெளிவாகத் தெரிகின்றது. இதற்காகவே அவர்கள் ஹூட்டு மிதவாதிகளைக் கூட்டுச் சேர்த்துள்ளனர்.

## பிரான்சுப் படையின் வருகையும், வெளியேற்றமும்.

மேற்கு ஐரோப்பாவின் மிகப் பெரிய நிலப்பரப்பைக் கொண்ட நாடு பிரான்ஸ் ( France ). மேற்குலகின் மிகப் பழைமை வாய்ந்ததும், பல்வேறு கலைகளின் ஊற்றுமாகிய இந்த நாடு அண்மைக் காலத்தில் ஆபிரிக்க விவகாரங்களில் தலையிடும் விதம் வேதனை தருவதாகும். ஒரு காலத்தில் ஆபிரிக்காவின் மேற்கு, வடக்கு, கிழக்குப்புறத்தில் பெரும் பிரதேசங்களைத் தனது ஆட்சியின் கீழ் வைத்திருந்த பிரான்ஸ் யாவற்றிற்கும் விடுதலை கொடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. பிரான்ஸ் மொழியும், கலாசாரமும் பெருமளவில் ஆபிரிக்காவில் பரவியுள்ளதைக் காரணங் காட்டி ஆபிரிக்க நாடுகளின் உள்விவகாரங்களில் பிரான்ஸ் அக்கறை காட்டுவது கண்டனத்திற்குரியதாகும்.

றுவாண்டா பிரான்சின் ஆதிக்கத்தில் கிடந்த நாடல்ல. அது பெல்ஜியம் நாடால் பரிபாலிக்கப்பட்டு 1962 ஆம் ஆண்டு விடுதலை ஆயிற்று. றுவாண்டாவுடன் பிரான்ஸ் கொண்ட தொடர்பு இராணுவத் தொடர்பாகும். ஆயுத விற்பனையும், ஹூட்டு இனத்தவர்களின் இராணுவத்திற்குப் பயிற்சி வழங்குவதும், பிரான்ஸ் படையின் பொறுப்பாயிற்று: இத்



கத்தியைக் கைவிடாத ஹூட்டு, இளம் வயதினன்.

தொடர்பைக் கொண்டு ஹூட்டு இராணுவம் திட்டமிட்ட ருட்சி இன அழிப்பு பிரான்சுக்காரர்களுக்கு முன்கூட்டியே அறிந்த விஷயமென்று கூறப்படுகின்றது. இது நிரூபிக்கப்படுமாயின் இன அழிப்புக் குற்றத்தில் பிரான்சுக்குப் பங்கு உண்டு.

1960 ஆம் ஆண்டின் பின் பிரான்ஸ் ஒன்பது தடவைகள் ஆபிரிக்க நாடுகளின் விவகாரங்களில் நேரடியாகத் தலையிட்டுள்ளது றுவாண்டாவில் தமது வாடிக்கையாளர்களாகிய ஹூட்டு இராணுவம் தோல்வியைத் தழுவி ஓடுவதைப் பொறுக்காத பிரான்ஸ் 2,500 படையினரை மனிதாபிமானப் பணி என்ற போர்வையில் ஐ. நா. அனுமதி இன்றியே றுவாண்டாவுக்குள் இறக்கியுள்ளது. தமக்கு உதவ வந்துள்ளதாகத் தோல்விகண்ட ஹூட்டுக்களும் பிரானசுப் படையை வரவேற்றுள்ளன. பின்பு பிரான்ஸ் மேற்கு றுவாண்டாப் பகுதியில் ஒரு பாதுகாப்பு வலயத்தை ஏற்படுத்தி ஹூட்டுக்களுக்கு உதவக் கிளம்பியபோது புதய அரசு பிரான்சின் நடவடிக்கையை அப்பட்டமான ஆக்கிரமிப்பு எனக் கண்டித்துள்ளது. அத்துடன் நில்லாது, " இது எமது நாடு, நாம் எங்கும் போவோம் " என்ற பிரகடனத்துடன் ருட்சிப் படைகள் மேற்கு றுவாண்டாவை நோக்கி நகர ஆரம்பித்தன. ஒரு நேரடி மோதலைத் தவிர்க்கும் நோக்கில் பிரான்சுப் படை வெளியேறத் தொடங்கியுள்ளது. இவ்விடத்தில் புதிய அரசு இத்தகையதோர் நெருக்கடி நிலையை வெகு நிதானமாகக் கையாண்டவிதம் பல வருட அனுபவம் பெற்ற அரசுகளும் வியக்கும் வண்ணம் இருக்கின்றது.

இன்று உலகில் எஞ்சியிருக்கும் ஒரே வல்லரசு அமெரிக்கா தான். ஐ. நா. வின் நிதிக்கு மிகக் கூடுதலான தொகையைக் கொடுக்கும் நாடும் அமெரிக்கா தான். ஆனால் இப்போதைய நிர்வாகம் அமெரிக்கப் படைகளை அமைதிகாக்கும் பணிகளுக்கு அனுப்புவதில் தயக்கம் காட்டத் தொடங்கியுள்ளது. அமைதி திரும்பியபின் அமெரிக்கப் படைகளைப் பொஸ்னியாவுக்கு அனுப்பலாம் என்று கிளின்ரன் கூறியுள்ளார். இது கொலையைத் தடுக்காமல் மரண விசாரணைக்குப் போகும் பொலிஸ் படையின் செயலுக்கு ஒப்பானது. உலக அரங்கில் றுவாண்டா போன்ற பேரழிவைத் தடுக்கும் ஆற்றல் ஐ. நா. ஒன்றுக்குத்தான் உண்டு. ஆனால் நன்றாகப் பயிற்றப்பட்ட நிரந்தர அமைதிப்படை ஒன்று இன்றி ஐ. நா. வால் ஒன்றுமே செய்ய முடியாது. பிரான்ஸ் போன்ற சந்தர்ப்பவாதிகள் நிலைமையை மோசமாக்க வழி பிறந்து விடும்.

அமெரிக்கா ( U. S. A ) என்ற நாடு பிறந்த நாள்தொட்டு அதன் வெளிநாட்டுக் கொள்கை காலத்திற்குக் காலம் ஒருவித சுழற்சி முறையில் மாறிக் கொண்டே போகின்றது. ஒருகால் உலகெலாம் பரவி எங்கும் தன்னைப் புகுத்திக் கொள்ளும் செயற்பாடு இன்னொரு கால் ஆமையைப் போல் உள்ளுக்கு இழுத்துச் சுருக்கிக் கொள்ளும் ஒடுக்கம். இதை அரசியல் விஞ்ஞானிகள் நன்றாகக் கவனித்துள்ளனர். " கிளின்ரன் ஒரு விபத்து அல்ல; அவர் இந்தச் சுழற்சியின் வெளிப்பாடு " என்கிறார் பேராசிரியர் கிசிங்கர் (Henry Kissinger ).

நியூஸ்வீக், ஜூலை 18, 25
ஆகஸ்ட் 1, 1994
ரைம், ஜூலை 25, 1994



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பலுக்கு ஏற்ற ஆட்டம்

மொழிபெயர்ப்பு:
— காவல் நகரோன் —

## சட்ட வல்லுநர்கள் ஓ. ஜே. மீது அனுதாபம் பிறக்கவும், அதை அழிக்கவும் போராடுகிறார்கள்.

அமெரிக்காவின் புகழ் பெற்ற காற்பந்து விளையாட்டு வீரர் ஓ. ஜே. சிம்சன். இவருக்கு அமெரிக்கா முழுவதும் ஏராளமான இரசிகர்கள் உள்ளனர். இவர் ஒரு கறுப்பின இளைஞர். சிம்சன் வெள்ளைக்காரப் பெண்ணொருத்தியைத் திருமணம் செய்து இரு பிள்ளைகள் பெற்றார். இதற்கு பின்பு இவரது மனைவி, இவரை விலகிச் சென்று வேறொருவருடன் தொடர்பு வைத்துக் கொண்டார், இதனால் ஆத்திரமடைந்த ஓ. ஜே. சிம்சன் அண்மையில் இவர்கள் இருவரையும் கார் ஒன்றிற்குள் வைத்துக் கொலைசெய்து விட்டார் எனப்பலமாக நம்பப்படுகிறது. இதனைத் தொடர்ந்து அமெரிக்க வீதியில் பொலிசாருக்கும், சிம்சனுக்கும் இடையில் காரோட்டம் நிகழ்ந்தது. இறுதியில் இவ்வழக்கு நீதிமன்றத்தை வந்தடைந்தது.

பொதுசன அபிப்பிராயம் என்ற நீதி மன்றம் என்பது அமெரிக்காவில் மிகவும் பழிச் சொல்லுக்கு இடமாகிவிட்ட அமையம் எனலாம். ஆயினும் பிரச்சனையான எந்த வழக்கிலும் எல்லோரும் அதனிடமே இறுதியில் விண்ணப்பிக்கப்போவது வழக்கம் ஓ. ஜே சிம்சன் என்ற நல்ல மனிதன் இருவரைக்கொலை செய்த விடயத்தில் அவனுக்கு ஆதரவாளரும், எதிர்ப்பாளரும் இந்த விளையாட்டைச் செய்தனர். அதனால் நீதி மன்றம் காட்டக்கூடிய அனுதாபத்தையும் இழந்தனர் ஓ. ஜே ஆதரவாளர் அவன் உலகிலேயே மிக நல்ல மனிதன், அவனுக்கு எதிராகச் சாட்சியமளித்தோர் உண்மை போலக் கூறுவது, உண்மையில் வேறாகலாம் எனப் பிரச்சாரம் செய்தனர். எதிர்ப்பாளரோ அவன் நல்லவனாகக்காட்டிக் கொண்ட புறத்தோற்றம் உண்மையன்று என வாதாடினர்.

வழக்கை நடத்தியோர் நல்ல பாடம் படித்தனர். பொதுசன அபிப்பிராயம் என்ற நீதி மன்றத்தின் ஆதரவு நாடும் முயற்சி எல்லை மீறிப் போனதால் சட்டத்தை நிலை நாட்டும் சாதாரண நீதிமன்றத்தில்



தோல்வியுற்றனர். லொஸ்ஏஞ்சலிஸ் மாவட்ட சட்டத்தரணியின் பிரச்சாரப் போக்கு நீதிபதியை 23 பேர் கொண்ட நடுவர் அவையைக் கலைக்கக் கட்டளையிடச் செய்தது. சிம்சனைக் கொலைக் குற்றத்திற்காக உயர்நீதி மன்றத்துக்குப் பாரப்படுத்தலாமா என்பதைத் தீர்மானிக்க வேண்டிய அப்பேரவை, குற்றவாளி பக்க சட்டத்தரணியின் விண்ணப்பத்தின் மீது, கலைக்கப்பட்டது. நீதிபதி அவர்களுள் சிலரேனும் வழக்குக் கிடைத்த பெரும் பிரச்சாரத்தினால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்ற முடிவுக்கு வந்தார்.

இது அரசாங்க சட்டத்தரணிக்குப் பின்னடைவாயிற்று. ஜூன் 30 அன்று ஆரம்பவிசாரணை முடிவில் நடுவர் அவை, எதிரி மீது கொலைக் குற்றம் சுமத்தும் மேல்நீதி மன்றத்துக்கு வழக்கைப் பாரப்படுத்தலாம் என்று நம்பியிருந்தது. மேல் நீதி மன்றத்தில் முன்வைக்க இருக்கும் சாட்சிகளைப் பற்றிய விபரங்கள் வெளியாகும். எதிரி சிம்சன் எந்த எந்த விவாதங்களை உடைக்க வேண்டும் என்று முன்கூட்டியே தெரியவரும். அவற்றுள் சிலவற்றையேனும், நீதிபதி அனுமதிக்க மறுக்கச் செய்யலாம் என நம்பியிருந்தார். நடுவர் குற்றவாளி எனக் கண்டால் மேல்விசாரணையை நிறுத்தி வழக்கு நேரே உயர் நீதி மன்றம் செல்லும் எதிரிக்கும் மாறான சாட்சியங்கள் பற்றி ஏதும் அறிய வழி இல்லாமற் போய்விடும்.

சிம்சனின் புகழ்மட்டும் காரணமன்று. அவரது வழக்கு இடையீடின்றித் தொடர்புச் சாதனங்கள் அனைத்திலும் செய்தியாக வழங்கப்பட்டமைக்கு, ஓ. ஜே. க்குப் பொதுசன அனுதாபம் உண்டு என்பதைப் பயன்படுத்தி நகர அதிகாரிகளும், காவல் துறையினரும் குற்றம் பற்றிய விபரங்களை ஒவ்வொரு கட்டத்திலும் பிரச்சாரம் செய்ய அனும



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தித்தனர். காவல்துறையினரிடமிருந்து சில சமயம் பொருத்தமற்ற செய்திகளும் நிருபர்களால் திருட்டுத்தனமாகப் பெறப்படும். இரத்தம் தோய்ந்த கையுறைகள்; பனிச்சறுக்கு விளையாட்டில் பயன்படுத்தும் முகமூடி போன்ற செய்திகள் பிரச்சாரத்துக்கு விடப்பட்டன. (தொலைக் காட்சியில்) பொது விவகாரங்கள் பற்றிய காட்சிகளில் மாவட்ட சட்டத்தரணி தோன்றியதும் எதிர்ப் பலனைத் தந்தது. அவர் லொஸ்ஏஞ்சலிஸ் நகர சட்டத்தரணி, தொடர்புச் சாதன வேண்டுகோளுக்கு இணங்கி (கொல்லப்பட்ட) பெண் நிக்கோல் சிம்சன். சென்ற ஆண்டு ஓ. ஜே. அவளுடைய வீட்டுக்குள் பலாத்காரமாக நுழைந்து கொதிப்புடன் நடந்து கொண்டபின், தொலைபேசியில் சொன்னவற்றைப் பதிவு செய்த நாடாவை வெளியிட அனுமதித்தமைக்கு மறுப்புத் தெரிவித்தார் என்பது உண்மையே. அதனை மீண்டும் மீண்டும் தொலைக்காட்சியில் போட்டு இதற்கு அதிக பிரச்சாரம் கொடுத்தமைக்கு, அவர் அதிகம் துக்கப்பட்டிருக்கமாட்டார்.

சிம்சனின் சட்டத்தரணியும் தமது கட்சிக்காரர் மீது பொதுமக்கள் எவ்வளவு பிரியம் வைத்திருக்கிறார்கள் என்பது நினைவுறுத்தும் பிரச்சாரத்தில் சற்றும் குறைந்தவர் அல்லர். ஒரு கட்டத்தில் சிம்சன் தமது பிள்ளைகளைக் காணமுடியவில்லையே என்று கவலைப்படுவதைப் பற்றி விபரித்தார். சிம்சன் தம்மீது சுமத்தப்பட்ட கொலைக் குற்றத்திற்குத் தாம் சுற்றவாளி எனப் பதில்கொடுத்த கடடத்தில், அவர் தமது கையை தம் கட்சிக்காரர் தோளில் வைத்திருந்தார். சென்ற ஆண்டு எரிக்மெனென்டெஸ் என்பவன் தனது பெற்றோரைக் கொன்ற குற்றம் சுமத்தப் பட்டபோது, அவனது சட்டத்தரணியும் அவனுக்கு மன ஆறுதல் அளிக்கும் தோற்றம் உண்டாக்கத் தனது கைகளை அவனது தோளைச் சுற்றி அணைத்ததை நினைவூட்டியது.

அடுத்தநாள் சாட்சி கண் தொடர்பான விடயங்கள் நீதிபதி விசாரணையில் முன் வைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில், எதிரியின் சட்டத்தரணி எதிரி சிம்சன் பற்றிய பத்திரிகைகள் எல்லை கடந்த அநுதாபப் பிரச்சாரம் செய்துவிட்டன அல்லவா என்ற பிரச்சனையைக் கிளப்பினார். அவர் வழக்கு நடத்தும் (அரசாங்கத்) தரப்பினரை, சிம்சன் வீட்டில் கண்டதாகச் செய்தியில் பிரச்சாரம் பெற்ற இரத்தம் தோய்ந்த (பனிச்சறுக்கு) முகமூடியை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி கேட்டபோது, அப்படி ஒரு சாட்சியப் பொருள் கிடையாது என்ற பதில் பிரதம வழக்கு நடத்துனரிடமிருந்து கிடைத்தது.

இல்லாத சாட்சிப் பொருள் பற்றிய செய்தி இப்படி மறையும் தறுவாயில் லொஸ்ஏஞ்சலிஸ் நகர திடீர்மரண விசாரணை அதிகாரி கொல்லப்பட்ட இருவரது உடல் நிலை பற்றிய மருத்துவ அறிக்கையை தொடர்புச் சாதனங்களுக்கு யாரோ ‘திருட்டுத்தனமாக’ வழங்கிவிட்டனர். இறைச்சி அடிக்கும் இடத்து நிகழ்ச்சியின் சுருக்கம் அவ்வறிக்கை. பல்வேறு கத்திவெட்டுக்கள், கழுத்து அறுவைகள் பற்றிய விபரங்கள் நிறைந்தது. பிறகு சிம்சன் நிக்கோலியுடன், கொண்ட ‘சண்டைபிடிக்கும்’ தொடர்பு பற்றிய சான்றுகள் பிரபலப்படுத்தப்பட்டன.

லொஸ்ஏஞ்சலிஸ் நகர தொலைக்காட்சி நிலையம் ஒன்று கலிபோர்ணிய பொது ஆவணச் சட்டத்தைப் பயன்படுத்தி, சென்ற ஐப்பசி 25 ஆந் தேதி, நிக்கோலி சிம்சன் 911-/க்கு அனுப்பிய தொலைபேசிச் செய்தி நாடாவைப் பெற்றுப் பிரச்சாரம் செய்தது. அன்று மாலை சிம்சன் அவளுடைய வீட்டு முன் கதவை உடைத்துக் கொண்டு உட்புகுந்தான், கோபத்துக்குக் காரணம் முன்னர் அவளுடைய புகைப் படப் புத்தகத்தில் (அல்பம்) அவளுடைய முன்னைநாள் காதலனின் படம் இருந்தது என்பதாம். நடுங்கும் குரலில் நிக்கோலி தன் வீட்டினுள் அடாத்தாகப் புகுந்தவன் யார் என்பதைக் கூறியது நாடாவில் தெளிவாகக் கேட்டது. தொலைபேசிச் செய்திப் பரிவர்த்தனை உத்தியோகத்தரிடம், ‘‘அவன் ஓ. ஜே. தான், உங்களுக்கு அவனுடைய பழைய விபரங்கள் நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன். யாரையாவது இங்கு அனுப்புங்கள்’’ என்று வேண்டிக் கொண்டாள். ஓ. ஜே. ஒரு பரமசாது என்ற கற்பனைச் சித்திரத்துக்கு மாறாக அதில் கேட்டகுரலில் அவன் குளறி, சத்தியம் பண்ணுவதைக் கேட்கக் கூடியதாயிற்று. விரைவில் மற்றொரு தொலைபேசிச் செய்தி நாடா வெளியாயிற்று. அது 1985 இல் ஓ. ஜே. யும் நிக்கோலியும் வாக்குவாதம் செய்தபின், காவல்துறைக்குக் கிடைத்த அழைப்பு ஒலி. அப்போது, அவன்காரின் முன் கண்ணாடியை ‘பேஸ்போல்’ பந்து அடிக்கும் மட்டையால் உடைத்து நொறுக்கினான்.

இதுவரை கொலைசெய்ய உபயோகித்த கருவியைக் கண்டுபிடிக்கவில்லை. வழக்கு நடாத்துவோர் அது அவசியம் இல்லை என்கின்றனர். வழக்கு உயர்நீதிமன்ற இறுதி விசாரணைக்குப் போகுமுன், கொலை நடந்த இடத்தில் கண்ட இரத்த பரிசீலனையின் டீ. என். ஏ. விபரம் வெளியாகும். அதன் மூலம் சிம்சன் அவ்விடத்தில் நின்றான் என்பது நிச்சயிக்கப்படும். அது நிகழ்ந்தால் சிம்சன் வழக்கமாக எதிரி தப்பப்பயன் படுத்தும் சாட்டுகளை நிரூபித்துப் பைத்தியம் கடும் உணர்ச்சிவசப்பட்டதால் நிகழ்ந்த கைமோசக் கொலை என்று எதிர் வழக்காடி விடுதலை பெறமுயலக் கூடும்.

இங்ஙனம் இருக்க லொஸ் ஏஞ்சலிஸ் வீதிகள் எங்கும் ஒரு விளம்பரம் காட்சியளிக்கிறது. ஓ. ஜேக்காகப் பிரார்த்தனை செய்யுங்கள். அவர் குற்றமற்றவர் எனில் அது அவருக்கு அவசியம்; அவர் குற்றவாளியெனில் அவ்வுதவி இன்னும் அதிகம் தேவை.

லொஸ்ஏஞ்சலிஸிலிருந்து
ஜோர்தன் பொன்ஃபயரே
பற்றிக் ‘ஈ’’ போல
ஆகியோர் எழுதியது.

(மேற்குலகில் நீதியும், தொடர்புச் சாதனங்களும், பொதுசன அபிப்பிராயமும் எங்கு செல்கின்றன என்பதற்கு நல்ல உதாரணம் இவ் வழக்கு.)

ரைம், ஜூலை 4, 1994



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மக்' தாக்குதல்

மொழியாக்கம்:
— திரு. மணிவண்ணன் —

தனியார் பாவனைக் குரிய கணனிச் சந்தையில் பல மாற்றங்களின் முடிவில் ஒரு வெளி நாட்டு நிறுவனம் அதிசயிக்கத்தக்க வெற்றியீட்டியது. நீண்ட அனுபவம் உள்ளவர்கள் உருக்குலைந்து நுகர்வோருக்குத் தமது பணத்திற்குக் கூடிய பெறுமதி வழங்கினர்.

அமெரிக்க, திடீரென முன்னிற்கு வந்த கொம்பாக் (Compaq) இந்த சௌகரியமற்ற கூட்டு நிறுவனங்களின் நிலையை 18 மாதங்களின் பின் உடைத்து, வளர்ந்து வரும் தனியார் பாவனைக் குரிய கணனி ( Personal Computer ) கிராக்கியை மிகவும் கூட்டியது. ஆனால் எதிர்பார்த்த சந்தைப் பங்கு மாற்றம் இத்தொழில் வல்லுனர்களில் ஏற்பட்டு இதனால் கொம்பாக்கு டெல்லும் (Dell) அதிக பயன் அடைய முடியவில்லை. ஜப்பானின் போட்டி மிக்க புதிய தனியார் பாவனைக் குரிய கணனிச் சந்தையில் ஐக்கிய அரசாங்கத்தின் அப்பிள் கணனி ( Apple Computer ) யாரே ஆரம்பத்தில் அதிசயிக்கத்தக்க வெற்றியாளர். 1942 இல் அப்பிள தனது சந்தைப்பங்கான 5.6 வீதத்தை, 13.9 வீதமாகக் கூட்டியது. பூஜிட்சு ( Fujitsu ) ஐ ஜப்பானில் 2- வது பெரிய த. பா. க விற்பனையாளர்களாக்கியது. இவர்களது வெற்றிக்கு இவர்கள் பொறுமையாகப் 10 ஆண்டுகளாக இட்ட அடித்தள விலைகள் கொம்பாக்கை ஒத்திருந்தமை காரணமாகும்.

1992 இல் அது ஜப்பானியரை வியப்பில் ஆழ்த்தியது. 'அது ஜப்பானிய இராட்சத என். ஈ. சி. ( N. E. C. ) இன் திறமையான வீற்பனையிலுள்ள த. பா. க. போல், ஒரு கணனியின் விலையிலும் அதன் அரைவாசி விலைக்கு புதிய கணனியை அறிமுகப்படுத்தியது. ஆனாலும் அப்பிளின் நிலை பாதுகாக்கப்படவில்லை. ஏனெனில் அதன் வெற்றி ஜப்பானியர்களுக்கு எளிதில் புரியக் கூடிய ஐ. கோன் (I. Con Based System) அடிப்படையாகக் கொண்ட முறையில் இருந்தது. இது ஜப்பானியருக்கு இலகுவில் புரியவும், பாவிக்கவும் கூடியதாகவும் இருந்தாலும் கடந்த மேயில் மைக்றோ சொவ்ற் ( Micro Soft ) அமெரிக்கன் மென்பொருள் ( Soft Ware ) முன்னணியாளர் ஜப்பானிய பாணியில் வின்டோ 3.1 (Windows 3.1) ஐப் புகுத்தினார்கள்.

( Window ) வின்டோ 3.1 அப்பிள் போன்று வரை படமும் ( Graphics ), புள்ளியும் ( Point ) கிளிக் (Click) என்ற சத்தமும் உள்ள முறை. மேலும் இது மற்றும் (N. E. C.) என் ஏ. சீ. யுடனும், ஐ. பீ. எம் ( I. B. M. ) உட



**ஜப்பானின் தனியார் பாவனைக்குரிய கணனிச் சந்தைப் போட்டியில் அப்பிள் (Apple) இதுவரையில் பெரிய வெற்றியாளர்கள், ஆனாலும் ஜப்பானிய கணனித் தயாரிப்பாளர்கள் புதிய தயாரிப்பாளர்களுடன் போட்டியிடுகிறார்கள். இதனால் பயன்பெறுபவர்கள் நுகர்வோர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் ஒத்தது. ஆனாலும் 90 வீத மென்பொருள்கள் வின்டோ 3.1 இற்கு கொண்டு வரப்படவில்லை. ஆதலால் இன்னும் அப்பிள் ஸ்திர மாக உள்ளது. ஐக்கிய அமெரிக்காவில் மக்கின்டோஸ் என்ன செய்ததோ, அதே போல ஓர் ஆட்டத்தை ஜப்பானியரும் நிகழ்த்து வார்கள் என (Jardine Fleming) என்ற டோக்கியோ கம்பனியிலுள்ள Steve Myers என்ற பகுப்பாய்வாளர் எதிர்பார்க்கின்றார்.

ஜப்பானியர்கள் தான் இதில் பெரிய இழப்பாளர்கள். பூஜீட்சு (Fujitsu), ஹிட்டாச்சி (Hitachi), டோசிபா (Toshiba) போன்ற நிறுவனங்கள் தங்கள் சொந்த மாதிரி உருவாக்கங்களிலேயே 10 ஆண்டு கட்கு மேலாக திளைத்திருந்தனர். ஆனால் உலகமோ இரு வகை மென்பொருள்களையும் (Soft Ware), கடினப் பொருள்களையும் (Hard Ware) ஒருங்கிணைத்து அப்பிளின் மக்கின்டோஸ் முறையையும், (Macintosh System) ஐ.பி.எம் (I. B. M.) மும் மைக்ரோ சொவ்டின் (Micro Soft) எம். எஸ். டொஸ் (எம். எஸ். dos) இயக்கு முறையையும் சேர்த்துத் தொகுத்துள்ளது. ஆனாலும் ஜப்பானின் சந்தையோ உள் நாட்டு நிறுவனங்களையும் வலுக்கட்டாயமாகச் சேர்த்துள்ளது. சொத்துரிமை வியாபார முறை வீழ்ச்சியடைந்தது. 1993 இல் 34.5 வீதம் மேலும் இவ் வருடம் 50 வீதமாகலாம்.

உள்நாட்டு நிறுவனங்கள் ஐ. பி. எம் (I. B. M. Standard System) முறையை ஏற்றுமதிக்கு அல்லாமல் உள்நாட்டிலேயே விற்பனைக்கு இணங்கியுள்ளார்கள். அவர்கள் விருப்பமின்றித் தங்கள் சொந்த நடைமுறைக்கு இணங்க, இம்மாதிரிகட்கு என். ஈ. சி (N. E. C) பெரிய விதிவிலக்கு. அவர்களிடமும் எம். எஸ். டொஸ் (M. S. Dos) பாட பேத சொத்துரிமை உண்டு. ஆனாலும் அதைத் தொடர்ந்தும் இந்நிறுவனங்கள் வைத்திருக்கும் என அதன் தலைவர் ரடாகிறேசிக்கிமோட்டோ (Tadahiro Sekimoto) கூறுகின்றார். "எல்லோரும் நாங்கள் பங்கில் 50 வீதத்தை இழப்போம் என்கிறார்கள். அப்படி நாங்கள் இழக்கவில்லை. அப்பிள் தனது நிலையை விருத்திசெய்துள்ளது. ஆனாலும் எமது பி. சீ 9,800 சீர்வரிசை தொடர்ந்தும் பிழைத்திருக்கும்" என அவர் கூறுகின்றார். அவரின் நம்பிக்கைக்கும் சில காரணங்கள் உண்டு என தொழில் வள அவதானிகள் கூறுகிறார்கள். என். ஈ. சி யிடம் பெரிய விநியோக வன்மை உண்டு. இவர்களிடம் 7,000 மட்டில் மம் அன்ட்பொப் (Mom And Pop Electronics) இலத்திரனியல் களஞ்சியங்கள் மட்டும் அல்லாது மிகவும் பிரபல்யம் அடைந்துவரும் கழிவுத்தரகர் பென்சியும் (Denki) ஜோன்எருடன்கியும் (Jonan Denki) உண்டு. "நாங்கள் வின்டோஸ் உடன் போட்டியிட வேண்டும். அதையே நாம் செய்கின்றோம். ஜப்பானிய பாணியில் வின்டோஸை எங்கள் தனி ஆள்பாவனைக்குரிய கணனியில் சேர்த்துள்ளோம். அது எல்லோருக்கும் நல்லது." என்கிறார் சிக்கிமோட்டோ. இவ்வருடம் த. க. (பி. சி) உள்நாட்டுச்சந்தையில் பலமான வளர்ச்சியை எதிர் பார்க்கின்றார் சிக்கிமோட்டோ. ஜப்பானின் வின்டோஸ் 3.1 இற்கு அடைத்து நிரப்பப்பட்ட மென்பொருள்கள் கிடைப்பதனால், ஐ. பி. எம் (I. B. M) இன் நிறைவேற்று அதிகாரி மக் ஜெப்பிரி (Mac Jeffery) அதே கருததைக் கொண்டுள்ளார். மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் முன்பு இருந்த சூழலில் இணக்கமற்ற 8 விளையாட்டாளர்கள் வெளிநாட்டு நிறுவனங்கள் இன்று இல்லை. இப்புழுதி அடைந்தவுடன் எங்களுடையதும் என். ஈ. சி அப்பிள் உடையதும் தான். ஜப்பானிய உற்பத்தியாளர் 60 – 70 வீத சந்தைப் பங்கையும், அந்நியர் மிகுதியையும் வைத்திருப்பார்கள் எனக் கூறுகின்றார்.

கணனி நிறுவன விநியோகஸ்தர்கள், சிறுவியாபாரிகட்கும் இலாபம் குன்றுகின்றது. தனிப் பாவனைக் கணனி (பி. சி) வீழ்ச்சியடைந்தாலும், சில்லறை விலை Y. 266. 30 ($ 2600) போனவருடம் 1992 இல் விலை Y. 248. 30 மேசைக்கணனி மெமரி (Memory) அதிகரித்த ஞாபக ஒழுங்குகளைச் செய்தன. சி. ஓ (Romdrives) விற்பனைக்கு வந்தன. விற்பனை 3 இலட்சம் ஆனது. இவைகள் த. க. வி. சி (தனிப்பாவனைக்குரிய கணனிகள்) உடன் சேர்த்து விற்கப்பட்டது. விற்பனை வளர்கின்றது.

டோசிபா த. க (பிசி) பகுதி சிரேஷ்ட முகாமையாளர் மசோ சுகா (Masao Suga) ஆருடம் கூறுகின்றார்: "நாங்கள் மலிவு விலையில் கூடிய கணனிகளை விற்க வேண்டிய காலத்திற்கு வருகின்றோம். புள்ளிவிபரங்கள் இதனைக் காட்டுகின்றது. த. க. (பி. சி) ஏற்றுமதி 2.5 பில்லியனிலிருந்து (billion) கடந்தவருடம் 10.6 அதிசம் ஆகியது. ஆனால் வருமானம் 8.9 வீதம் தான் உயர்ந்தது. இவ்வருடம் 11 வீதம் அதிகம் ஆகும். ஆனால் அதன்பிரதிபலன் எவ்வளவு என்பது நிச்சயமற்றதுஎன." ஜப்பானிய கணனிநிறுவனங்கள் உள்நாட்டுச் சந்தையில் பெரும் இலாபத்தை நம்பியிருந்தவர்கள் வெளிநாட்டில் போட்டிச் சந்தையில் ஈடுபட இந்நிலை உந்தியது. இவர்கட்கு இது கூடுதல் சக்தி மேலும் 'யென்' இன் வீக்கம் உள்நாட்டு விலை அமுக்கமும் இவர்களை வெளிநாடுகளில் முதலீடு செய்யவும் வெளிநாடுகளில் கணனி இணைப்புச் செய்யவும் தூண்டுகின்றது. ஐ. பி. எம் இன் ஜெவ்ரி கூறுகின்றார்: "இனி நீங்கள் US $/ 5,000 எனக் கூற முடியாது. ஜப்பானிய பாவனையாளர் என்ன விலையும் கொடுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்கள் என்ற எண்ணம் பறந்து விட்டது'' என. அதிகமான ஆராய்ச்சியாளர்கள் வெளிக்கொண்டுவர எதிர்பார்க்கவில்லை. ஆனால் ஜப்பானிய நுகர்வோர் த. க (பி. சி) இற்கு குறைந்த விலை கொடுக்க விரும்புகிறார்கள். அதனால் குறுகிய விற்பனை நிலையங்களை நம்பினார்கள். டெல் கணனியாளர் (Dell Computer) கணனியாளர் சந்தையில் பெரிய விளம்பரம் செய்தும், ஒரு சிறிதளவு ஜப்பானிய நுகர்வோரே இதனை விளங்கிக் கொண்டார்கள். டெல் இன் தபாற்கட்டளை முறையை கணனிசட்கு டெல்அன்ட் கொம்பாக் (Dell And Compag) குறைந்த விலைக்கு உயர்ந்த பொருளை வாங்க விரும்புபவர்கள் ஜப்பானிய கூட்டுநிறுவனத்திற்குத் துணை அணியாமையும் சேர்த்துக் கொடுக்கிறார்கள் (Dataquest Company). இன் சிகா என்பவர் கூறுகின்றார்: "குறைந்த விலையில் உயர்தரபொருளைக் கொள்வது ஜப்பானிய பழக்கம், ஆனால் விற்பனை விலையை விட தேவைக் கட்டணம் என்று மேலதிக கட்டணம் அறவிடும் அமெரிக்க நிறுவனங்களின் பழக்கம் பயன் தருவதாக இல்லை. சந்தையில் 1. 4 வீதத்தை அனுபவிக்கும் (Compag Company) இதை ஏற்றுக் கொள்கின்றது. இவர்களது டோக்கியோ சந்தைப்படுத்தல் பணிப்பாளர் (Yoshi Suke Ishiuchi) கூறுகிறார்: '' நுகர்வோர் மட்டத்தில் இவைகளை குறைக்க தொடர்ந்தும் தடவடிக்கை எடுப்போம் வர்த்தக மட்டத்தில் விட்டுக்கொடோம்'' என்பதாக.

★

# எதிர்ப்புக்களுக்கு முகங் கொடுத்து வெற்றி காண்பதெவ்வாறு?

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

கலாநிதி ஜெரோல்ட் எம் ஜெலிசன்

## அடம்பிடிக்கும் ஊழியர்களை மாற்றமுறச் செய்யும் ஆறு வழிகள்.

ஒவ்வொரு திருப்பங்களிலும் மக்கள் மாற்றங்களுக்கு அஞ்சி அவற்றை எதிர்க்கிறார்கள். யாரையாவது ஏதாவதொன்றை வித்தியாசமாக, முன்னேற்றமாகப் புதிய அணுகுமுறையோடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். அவர்கள் அதற்கு ஏதாவது சமாதானம், விவாதம், கண்ணீர், அச்சந் தரும் பார்வை, அல்லது மௌனம் என்பனவற்றால் பதில் தருவார்கள். நமக்கு ஆத்திரம் மேலிடும். உணர்ச்சிவசப்பட்டுச் சத்தமிடுவோம். இந்தப் பரிமாற்றங்கள் ஒரு தக்க தீர்வு காணும் வரை தொடரும்.

இவ்வாறான ஏமாற்றங்கள் உச்சக் கட்டத்திற்கு வரும்போது சிக்கலுக்குரிய நபரை வேறு முகாமையாளரிடம் மாற்றிவிட முயலுகிறோம். அப்படி மாற்ற முடியாது என்கின்றபோது அவரது வயிற்றிலடிப்பது பற்றி எண்ணுவோமல்லவா? நாம் விரும்பும் மாற்றத்தை அதுவும் தர மறுத்தால் பயங்கரமான நடைமுறைகளுக்கு ஆயத்தமாவோம். எல்லாவற்றுக்கும் மேலாக நாமே நமது அந்தஸ்துக்கேற்றவாறு பின்வாங்கி இந்த மனிதப் பிணக்குக்கு வழிகாணும் விதத்தில் முயலுவோம்.

மாற்றத்தை எதிர்க்கும் மனிதர்கள் வேறுவிதமாக நடந்துகொள்ளாமைக்குக் கடந்த காலத்தைக் காரணமாக முன்வைப்பார்கள், தமது சுயநலன்களுக்காக மாற்றத்தை ஏற்றுக் கொள்ளாமைக்குத் தங்கள் கடந்தகால சுய மரபு அனுபவங்களைக் கூறி உங்களை ஒரு நீண்ட உரையாடலுக்கு ஆளாக்குவார்கள். வேலைத்தலத்தில் வேலை கொள்ள வேண்டியவரிடமிருந்து பயனைச் சரிவரப் பெற்றுக்கொள்ள இன்னொருவருடைய கடந்தகால அனுபவங்களை அறிந்து கொள்ள வேண்டிய சிரமம் உங்களுக்குரியதல்ல. நிகழ்கால, எதிர்காலச் சூழ்நிலைக்கேற்ப விளைவுகளை மாற்றியமைக்கும் உங்கள் திறமையிலேயே மாற்றங்கள் தங்கியிருக்கும்.

வேலைத்தலத்தில் தோன்றும் எதிர்ப்புக்களை நிர்வகிக்க மிகவும் இலகுவானதும், வேகம் நிறைந்ததுமான ஆறு படிமுறை வழிகள் இவையாகும்.

### 1. அமைப்பைத் தோற்றுவித்தல்

எதிர்ப்பவர்களுடனான எமது மோதல்கள் சிலவேளைகளில் சந்திப்புக்கு முன்னரே தோற்றுவிடுகின்றன. உங்கள் நிர்வாக உதவியாளரான கந்தசாமி என்பவருக்கு நீங்கள் ஒரு விடயம் பற்றிக் கூறும்போதே மனதுக்கியைவில்லாத ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவகாரத்தை நீங்கள் மீண்டும் எதிர்கொள்வதோடு அவருக்கு அந்த விடயத்திலுள்ள அதீத அக்கறையைப் புரிந்துகொள்ளும் வாய்ப்பைப் பெறுவீர்கள்.

வார்த்தைகளல்லாத அவரது நடத்தைகள்-வாயைச் சுழிப்பதில், தேவையில்லாத இருமலில், தலையைச் சொறிவதில்-அதாவது மண்டைக்குள் ஏற்படும் மாற்றங்களைக் காட்டும். இந்தச் சந்திப்பால் ஏற்படப்போகும் மகிழ்ச்சயற்ற விளைவுகளை எதிர்நோக்கும் அவரது அச்சமயத்தின் அடித்தளமே அவரது நடத்தைக்குக் காரணமாகும்.

அவரோடு கடுமையாக நடந்து கொள்ளாமல் ஆக்கபூர்வமாகவும், அன்பாகவும் நடந்துகொள்ளுங்கள். அவரது பணிகளை மனந்திறந்து புகழுங்கள். அவரிடமிருந்து புகழுரைகளை நீங்கள் எதிர்பார்க்க வேண்டியதில்லை. அவருடைய முழு அளவிலான செயற்பாட்டிற்காகவல்லாமல் அவரது குறிப்பிட்ட பணிகளுக்காக அவரைப் போற்றுங்கள். உங்கள் உங்களது உண்மையான போற்றுதல் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும் என்ற உள்ளெச்சரிக்கையினின்றும் எதிர்பார்ப்பாளரை வெளிக்கொணரும்.

அவரது பதவி பறிபோய் விடும் என்றோ, அல்லது பொறுப்புக்கள் குறைக்கப்பட்டுவிடும் என்றோ நினைககின்ற அவரது அச்சம் மறைந்து விடக்கூடிய அளவிற்கு உங்கள் உறவுப் பிணைப்பை மீள உறுதி செய்து கொள்ளவேண்டும. கந்தசாமிககு உங்களோடும், உங்கள் நிறுவனத்தோடும் நல்லதோர் எதிர்காலம் காத்திருப்பதற்கான செய்தியாகவே அவை அமைய வேண்டும். புதிய கருத்திட்டங்களில் கந்தசாமியையும் இணைத்துக் கொள்வதான உங்கள் உரையாடல் அவரை ஆறுதலமையச் செய்வதோடு எதிர்ப்புணாவைத் தேவையற்றதாக்கி விடும்.

உங்கள் கோரிக்கைகள் சிறிதாக வேண்டும். நீங்கள் கொண்டு வரப்போகும் மாற்றங்கள் படிப்படியாகச் சிறிய அளவினதாக இருக்கும்போது எதிர்ப்பு ஆகக் குறைந்த அளவிலேயே அமையும். ஒரு சிறிய மாற்றத்திற்கான கோரிக்கை பொருள் பதிந்த ஒரு வசனத்தில் இருந்தால் அடுத்த நபர் அதனை ஏற்றுக்கொள்ளும் நம்பிக்கையை ஏற்படுத்துவதாக இருக்கும்.



## 2. கோரிக்கையை முன் வையுங்கள்

உலகின் மிகச் சிறந்த தூண்டுதல் தொடர்பை நீங்கள் உபயோகிக்கும் போதே இது சாத்தியமாகிறது. மாற்றம் உருவாகுவதற்கான பரிமாற்ற வடிவத்தைச் சில வினாடிகளுக்குள் புகுத்திவிட முடியும்.

''பாபு வெள்ளிக்கிழமை நண்பகல் வரையில் இதுவரை முடிக்கப்படாத கோப்புகள் தயாராகி விட்டால் வெள்ளி பிற்பகல் 3 30 மணிக்கே வேலை முடிந்து நீர் போகலாம் சரியோ.''

அதுதான் வழி மாற்றத் தேவையை ஒரு புன்னகையோடு வெளிப்படுத்துங்கள். ''சரியல்லவோ?'' ''சம்மதம் தானே?'' ''நம்மிடையே ஏதாவது பேதமுண்டா''? இதைவிட வேறெதுவும் சொல்லாதீர்கள். மிக நியாயமான திட்டத்தை முன்வைத்து விட்டீர்கள். அடுத்தவரும் இணங்கி வரும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்குங்கள். புன்னகையோடு மௌனத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் உடன்பாட்டிற்குக் காத்திருந்தால் தொடர்ந்து பேசும் ஒரு பாரிய தவறு தவிர்க்கப்படும்.

எந்த விளக்கமும் தேவையற்றது. எம்முடைய நியாயங்கள் எதிர்ப்பாளரிடம் நம்பிக்கையை ஏற்படுத்தி நாம் நினைப்பது நடக்கும் என நினைப்பது எம்மையே ஏமாற்றிக் கொள்ளுவதாகும். அவ்வாறு நடப்பதில்லை. இந்த முறையில் எதிர்ப்பாளர் மாறாது விட்டால் இன்னொரு விளக்கம் தந்திரமாகி விட முடியாது.

ஏன் என்று கேட்காதீர்கள். உங்கள் கோரிக்கைகளை ஒருவர் தொடர்ந்து எதிர்க்கும் போது ஏன் என்று கேட்கத் தூண்டும். ஏன் என்று கேட்பதன் வாயிலாக முடிவில்லாத உரையாடலுக்கு நீங்கள் வழி திறந்து விடுவதோடு உங்கள் கோரிக்கையை அவர் ஏற்காமல் விடவும் இலகுவான வழி செய்து விடுகிறீர்கள்.

## 3. பதிலை மதிப்பீடு செய்யுங்கள்

உங்கள் கோரிக்கைக்கு ஆம் என்று சொல்லாமல் வேறு ஏதாவது சொன்னால் அவருடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிலை மிகவும் அவதானமாக ஆராயுங்கள். அவர் வழங்கும் கருத்து நியாயமானதா, அல்லது எதிர்ப்பா என்பதை மதிப்பீடு செய்யுங்கள். எதிர்ப்பாளரின் எதிர்த்தாக்கு உங்கள் பூரண கவனத்தை ஈர்க்கட்டும். முன்கூட்டியே ஒரு முடிவுக்கு வருவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். ஒரு பாரமான பொருளைத் தள்ளி வைக்குமாறு ஒருவரிடம் நீங்கள் சொல்லுகிறீர்கள். அவர் தன் கையில் நோ ஏற்பட்டுள்ளது என்கிறார். அதனை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். வேலையைத் தவிர்ப்பதற்கான ஒரு சாட்டாக நீங்கள் அதனை எடுத்துக்கொண்டால் உடற் பலவீனத்துக்கான நட்ட ஈட்டுக் கோரிக்கைக்கும், சட்ட நடவடிக்கைக்கும் நீங்கள் முகங் கொடுக்க வேண்டும்.

தர்க்கங்களும் நன்கு பகுப்பாய்வு செய்யப்படல் வேண்டும். உங்கள் கோரிக்கையை ஒருவர் பகிரங்கமாக விமர்சிக்கும்போது அல்லது ஏற்காமல் விடும்போது அது ஓர் எதிர்ப்பு என்று மட்டும் நீங்கள் நிராகரிக்கத் தூண்டப்படலாம். அது தவறு. கவனமாகக் கேட்டு அவரது கருத்தில் நியாயமுண்டா என்று பார்க்க வேண்டும்.

அவர் கூறுங் காரணங்கள் நியாயமானவையாக அமைந்திருந்தால் உங்கள் கோரிக்கையை வலியுறுத்தக் கூடாது. ஈடாக அவருடைய காரணத்தை ஏற்று அதற்காக அவருக்கு நன்றியுங் கூறி, உள்ளக் கருத்தைத் திரும்பப் பெறவேண்டும் அல்லது அதில் மாற்றங் கொண்டு வரவேண்டும்.

## 4. எதிர்ப்பைச் சாதுரியமாக வெல்லுதல்:

எதிர்ப்பைத் தவிர்த்துக் கொள்ளும் சாதனையை ''மூங்கில் நுட்பம்'' என்று அழைப்பர். உலர் வலயத்தைப் பெரும்புயல் தாக்கும்போது மூங்கில் எவ்விதப் பாதிப்புமில்லாமல் தப்பிக்கொள்கிறது. வளைந்து கொடுப்பது மட்டுமே அது செய்யும் வேலை. புயல் தணியும் போது மூங்கில் மீண்டும் பழைய நிலைக்கு வந்து விடும்.

எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டி வரும்போது அதனைச் சமாளிக்க மூங்கில் நல்ல மாதிரியாகும். மாற்றத்திற்கான உங்கள் கோரிக்கைக்கு அடுத்தவரின் எதிர்ப்பு வரும்போது அதை ஏற்று வளைந்து கொடுங்கள். பின்னர் மீண்டும் உங்கள் கோரிக்கையை வலியுறுத்தி வெற்றி கொள்ளுங்கள்.

இந்த இருபடி நுட்பம் தெளிவான பயனளிக்க வல்லதாகும். எதிர்ப்பு இதனால் தளர்ச்சியுறும். உங்கள் மாற்றக் கோரிக்கை மாறாமல் அத் தன்மையிலேயே நின்று பிடிக்கும். இந்த மூங்கில் எவ்வாறு எதிர்ப்புக்களையெல்லாம் புறந்தள்ளி மாற்றத்திற்குதவுகிறது என்று கவனியுங்கள்.

— மொழியாக்கம் —
திரு. செல்வநாயகம்

நீங்கள் கொண்டுவந்த மாற்றத் திட்டத்திற்குப் பதிலாக நளினி தனது உணர்வுகளுக்கு மதிப்பளிக்கப்படுவதில்லை என்று குறைப்பட்டுக் கொள்ளுகிறாள். நீங்கள் உங்கள் கருத்தைவலியுறுத்தவும் கூடாது; உரையாடலை நீட்டிப்பதும் தவறாகும். நீங்கள் வளைந்து கொடுங்கள்.

'' என்னால் உணரமுடிகிறது. சிறிது புரிந்துணர்வில்லாமல் நடந்துள்ளேன் நளினி. மறுநாட் காலை காலக்கெடுவுக்குள் இந்தக் கருத்திட்டம் முடிவானால் நான் மகிழ்ச்சியடைவதோடு அதற்கான ஒரு மணித்தியாலத்தை ஒதுக்கிச் செவ்வாயன்று உமது திட்டத்தை 'மீளாய்வு செய்யத் தயாராகவுள்ளேன்.''

'' நான் எப்போதும் ஒரேவித உணர்வோடிருப்பதில்லைத்தான். மதியவேளை கருத்திட்டம் முடியுமானால் நிச்சயம் மகிழ்வேன்.''

'' சிற்சில வேளைகளில் நான் சிறிது அவசரக்காரன் தான். நான் கூறும் திட்டம் இதுதான். இது..... பின்னர் . . . . .

'' அநேகமாய் '', '' அப்படியும் இருக்கலாம் '', '' சில வேளைகளில் '' என்ற மதப் பிரயோகங்கள் பூரணமாக ஏற்றுக் கொள்ளா விதத்தில் எதிர்ப்பாளரின் கருத்துக்களை அங்கீகரிப்பது போலமையும். '' அப்போது '', '' அவ்வாறானால் '' என்ற சொற்களைச் சேர்க்கும்போது மாற்றக் கோரிக்கை மொட்டையாக இருக்காது. மாற்றத்தில் மற்றவரின் பங்கைக் குறிப்பிடும்போது '' அப்போது '' என்ற பதத்திற்குரிய பகுதியையும் சேர்த்துக் கொள்வது பயனளிக்கும்.

சாக்குப் போக்கு எதிர்ப்பாளர்களைச் சமாளிப்பதற்கும் மூங்கில் நுட்பம் பயன்தரும் பழைய உபகரணங்களைக் காரணமாக வைத்தே எதிர்ப்புக் காட்டப்படுகிறது எனக் கொள்வோம். கீழ்க்காணும் விதத்தில் வளைந்து கொடுத்துத் திருப்பியடிக்கலாம்

'' இதற்குத் தேவையான சரியான உபகரணங்கள் இருந்தால் பணி இலகுவாக அமையும் என்பதை ஏற்றுக் கொள்கிறேன். நீங்கள் இந்தக் கருத் திட்டத்தை முடித்ததும் நான் . . . . முயலுவேன்.''

வேகமாகப் பணி செய்ய முடியாமல் ஒரு தொழிலாளியின் தனிப்பட்ட சிக்கல்கள் குறுக்கே நிற்கின்றன. '' இப்போது இதனைச் செய்து முடிப்பது கடினம் என்பது தெரிகிறது. வியாழன் மதியம் கணக்காய்வை முடித்துவிடுவீரென்றால் 2 மணித்தியாலங்கள் நேரத்தோடேயே அன்று மாலையில் நீர் வீடு செல்லலாம்.''

பல சந்தர்ப்பங்களில் மூங்கில் நுட்பம் மிக்க பயனளிக்கிறது விரைவான பயனும் கிட்டுகிறது. எதிர்த்துக் கொண்டேயிருக்கும் ஓர் உதவியாளரில் ஆரம்பியுங்கள், முன் கூட்டியே திட்டமிடுங்கள், அவருடைய தனித்துவமான எதிர்ப்புத் தந்திரோபாயத்தை அடையாளங் கண்டு உங்கள் மூங்கில் நுட்பத்தை அதற்கேற்பப் பிரயோகியுங்கள். சந்தர்ப்பம் ஏற்படும்போது அவரோடு சேர்ந்து வளைந்து கொடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. எதிர்ப்புணர்வின் நிச்சயமின்மையை உறுதிப்படுத்தல்:

ஒன்றின்பின் ஒன்றாக எதிர்ப்புத் தந்திரோபாயங்களைக் கொண்டு வருவதன் மூலம் ஒரு தனி நபர் மாற்றத்தைத் தவிர்ப்பதோடு மட்டுமல்லாமல் உங்களையும் களைப்புறச் செய்கிறார். அவர் வெற்றி காண்பதற்கு முன் நீங்கள் செயற்படல் வேண்டும். எதிர்ப்புக் காட்டி பேச்சுவார்த்தைகளை இல்லாமற் செய்யும் அவரது முனைப்பைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

"பாலன், அடுத்த 30 வினாடிகளுக்குள் எமக்கு இணக்கம் காண முடியாது போனால் . . . எனக்கு வேறு வழியில்லை." "முடியாது போனால்" என்பதில் அரை அழுத்தமும் "அப்போது" என்பதில் பாதகமான விளைவின் தன்மை பற்றிய முழு அழுத்தமும் பளிச்சிட வேண்டும்.

எதிர்ப்பாளரைத் தண்டிப்பது உங்கள் இலக்காக இருக்கக் கூடாது. அவரை உடன்பாட்டிற்குக் கொண்டுவருவதே நோக்கமாய மைய வேண்டும். இதை அமைதியாகவும், மரியாதையாகவும் செய்யுங்கள். கடுமையான வார்த்தைப் பிரயோகமுங் கூடாது. உணர்ச்சி வசப்படுதலும் நல்லதல்ல.

நல்ல பதவி வகிப்பவர்கள் அளவோடேயே பேசவேண்டும். அடுத்தவருக்குள்ள வளங்களைக் கட்டுப்படுத்தும் தகைமை அவர்களுக்கிருப்பதால் அமைதியான முறையில் எச்சரிக்கை செய்யலாம். எதிர்ப்பாளரை அச்சுறுத்தாமலே உங்கள் அணுகுமுறையின் உள்ளடக்கம் செயற்படவேண்டும்.

## 6 விடயத்தை முடியுங்கள்:

அந்த நபர் உடன்பாட்டிற்கு வந்தவுடன் முழுவிடயத்திலும் முடிவுக்கு வாருங்கள் மாற்றுத் திட்டத்தின் முழு விபரத்தையும் எடுத்துக் கூறி அவரது உடன்பாட்டைக் கோருங்கள். அது ஒப்பந்தத்தை எழுத்துருவாக்க உதவும். இருவரும் அதில் கையெழுத்திடவும் முடியும்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஏற்படும் சாதக நிலை, எதிர்ப்பாளர்கள் இனிமேல் உங்களோடு எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கும் வழி துலக்கும். அவரது தொடர்பு முறைகளைப் புகழ்ந்துரைப்பதனால் எதிர்காலத்தில் நீங்கள் அவரிடமிருந்து எதனை எதிர்பார்க்கிறீர்கள் என்பதை அவர் அறிவதற்கும் சந்தர்ப்பம் ஏற்படும்.

உங்கள் மாற்றுத் திட்டத்தில் காட்டப்பட்ட பலாபலன்கள் கட்டாயம் வழங்கப்பட வேண்டும் எதிர்ப்பாளர் உங்கள் வழிக்குவந்து விட்டபின் அதற்கு மாற்றாக நீங்கள் உங்கள் உறுதிமொழியை நிறைவேற்றியேயாகவேண்டும். அப்படிச் செய்யத் தவறினால் உங்களிருவருக்குமிடையில் உள்ள உறவு பட்ச பாதமுள்ளதாக முடியும்.

World Executive's Digest,
மார்ச், 1994.

# இராஜதந்திரியை மாற்றக் கோருகின்றனர்

தைபியின் வோஷிங்ரனுக்கான உத்தியோக ரீதியற்ற தூதுவர் டிங்போவ் சிஹியை மாற்றும்படி தைபியில் அழுத்தங் கொடுக்கப்படுகிறது. முன்னாள் வெளியுறவு அமைச்சர்களின் ஒருவரான அவர், வட அமெரிக்க விடயங்கள் பற்றிய ஒன்றிணைப்புச் சபையின் அமெரிக்காவில் உள்ள அலுவலகத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகத் தலைமைப் பதவியை வகித்து வருகிறார். அவர் தான் தாய்வானிய ஜனாதிபதி லியன்சான் லத்தீன் அமெரிக்காவுக்கு அண்மையில் பயணம் சென்றபோது வோஷிங்ரனில் தரித்துச் சென்ற வேளையில் அமெரிக்க அரசு ஏனோ தானோ என்ற விதமாக மரியாதை கொடுக்கக் காரணமானவர் என்று அவரை விமர்சிப்பவர்கள் கூறுகின்றனர். அந்த மாற்ற நிகழ்ச்சி சிறிது நாள்கள் செல்லும் என்று உத்தியோக வட்டாரங்கள் கூறுகின்றன: வெளிநாட்டு சீன ஆணைக்குழுவின் தலைவரான ஜோன்சாங்கும், சீனாவின் டிரஸ்ட் கொமர்சியல் வங்கியின் தலைவரான ஜொப்பிரிகூவும் அந்தப் பதவிக்குத் தெரிவு செய்யப்படக் கூடியவர்களில் அடங்குவர் என்று கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றோமன் கத்தோலிக்க சமய வளர்ச்சிக்கு உகந்த வளமான நிலை

எழுதியவர்:
— றிச்சாட் என். ஒஸ்ற்லிங் —

**ஒரு மாதமாக நிகழ்ந்த தேவாலயத்தலைமை மதகுருமாரின் உத்தியோகபூர்வ ஒன்றுகூடலில் கத்தோலிக்க திருச்சபை முகங் கொடுக்கும் அசாதாரண கஷ்டங்கள் பற்றியும், வாய்ப்புகள் குறித்தும் விவாதிக்கப்பட்டன.**

றோமன் கத்தோலிக்க மரபுவாதிகளின் அதியுன்னத மத பீடமான புனித பீற்றர் மகா தேவாலயத்தில், கடந்த மாதம் தலைமை மதகுருமார்களின் திருப் பூசையின் போது அங்கு மிக அருமையாகவே எழக்கூடியதான புதியதொரு சந்த இன்னோசையானது எழுந்தது. நூற்றுக்கணக்கான ஆபிரிக்கர்கள் மரபுவழிப் பாடல்களைப் பாடினார்கள், ஆடினார்கள், பேரிகை கொட்டினார்கள். கோட் என்னும் பழத்தோல் திணித்த போத்தல்களை அசைத்துப் பேரோசை எழுப்பினார்கள். சுவாஹிலி மொழியில் 'குளோரியா' என்னும் தோத்திரம் ஓதப்பட்டது. பழைய ஏற்பாட்டின் சங்கீதம் எதியோப்பிய கீஸ் மொழியில் பாடப்பட்டது. இவையாவிலும் மேலாக, சமயஞ்சார் சிறுகைநூல்களிலே ஆபிரிக்கப் பாணி சித்திரங்களில், இயேசுக்கிறிஸ்துவும், சீடர்களும் கருமை நிறம் பொருந்தியவர்களாகக் காட்சி தந்தார்கள். பாப்பாண்டவர் தமது ஆசி வழங்குதலின் போது, "புனித பீற்றர் தேவாலயத்தில் இன்று ஆபிரிக்கர் அனைவருமே சமுகமாயுள்ளனர்" என்று குறிப்பிட்டார்.

இவ்வாறு ஒருமாதம் வரை நீடித்த தலைமை மதகுருமார்களின் ஒன்றுகூடலிலே முன்னூறு ஆபிரிக்க தேவாலயங்களின் தலைவர்களும் வேறிடங்களைச் சேர்ந்த சிலரும் திரண்டு ஆபிரிக்காவில் கத்தோலிக்க மதத்திற்கான திட்டத்தை வகுப்பதில் ஈடுபட்டனர். இன்று ஆபிரிக்காவில் கத்தோலிக்க சமயம் மிகப் பாரிய வளர்ச்சியைக் கண்டு வருகிறது. ஒன்றுகூடலின் நோக்கம் வைபவ ரீதியான வழிபாடாய் இருந்திருப்பின், ஆபிரிக்காவும் அதன் சமய வழிமுறைகளும் சர்வதேச ரீதியாக, முழுமையாக ஏற்கப்படுகின்றன என்று பாப்பாண்டவர் கூறியிருந்திருப்பார். ஆனால் ஒன்றுகூடலின் நோக்கம் அதுவல்ல. ஆபிரிக்கர்கள் உட்பட எல்லோரும் அங்கு ஏற்பட்டுள்ள அதிருப்தியான நிலை பற்றிச் சந்தித்து விவாதிக்கவே அந்த ஒன்றுகூடல் ஒழுங்கு செய்யப்பட்டது. மதகுருமார் சிலரும், வழிபடுவோர் சிலரும் இத்தகைய ஒன்றுகூடல் உரோமாபுரியிலன்றி ஆபிரிக்காவிலேயே நிகழல் வேண்டும் என்று ஆலோசனை கூறினார்கள். வத்திக்கானுடைய முறைசார் நிகழ்ச்சி நிரலிலே, சனத்தொகைப் பெருக்கம், பலதாரமணம் முதலான அழுத்தமான பிரச்சனைகளை ஆராய்வதற்குப் போதிய நேர அவகாசம் வழங்கப்படவில்லை என்று குறைகூறப்பட்டது.

இந்த ஒன்றுகூடலானது, தேவாலயத்திற்கு ஆபிரிக்காவில் அசாதாரணமான மேலதிக வாய்ப்பு



வத்திக்கான்'ல் நடந்த ஆபிரிக்கத் தலைமை மதகுருமாரின் ஒன்றுகூடலின் போது திருச்சபையின் நலன்சகுதி பாப்பாண்டவருடன் எல்லோரும் சேர்ந்து செபிக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு என்னும் உண்மையைப் பிரதிபலித்தது. இன்று அக்கண்டத்தில் 92 மில்லியன் வரையிலான கத்தோலிக்கர் உள்ளனர் என்று கணிக்கப்பட்டுள்ளது. 1980 இல் தமது பத்து விஜயங்களில் ஒன்றாக அன்றைய பாப்பாண்டவர் ஜோன் போல், ஆபிரிக்காவிற்கு விஜயம் மேற்கொண்ட பொழுது 52 மில்லியன் கத்தோலிக்கரே இருந்தனர் என்பது ஒப்பிட்டு நோக்கத்தக்க ஒன்றாகும். குருமாருக்கான பயிற்சி நிலையங்கள் படிப்படியாகத் தொகையில் அதிகரிக்கின்றன (52, 000). ஆபிரிக்க கண்டத்திலே 20, 700 மதகுருமாரும், 42, 000 குருத்தினிகளும் அவர்களுடைய சமய நாளந்த பூசைக்கிரியைகளுக்கு உதவிபுரியும் 264, 000 பரிசாரகர்களும் உள்ளனர்.

குலக்குழுக்களிடையிலும், உள்நாட்டிலும் இடம்பெறும் போர்கள், சர்வாதிகாரம், பஞ்சம், எயிட்ஸ் நோய் என்று பரந்த அளவில் பிரச்சனைகள் நிலவிவரும் ஆபிரிக்காவிற்கு, ஆன்மிக போதனையும், ஆலோசனையும் வழங்க மதத்தலைவர்களின் பெரியதொரு படையே தேவைப்படுகிறது. சமயரீதியாகவும் பாரதூரமான கஷ்டங்கள் நிலவுகின்றன. முஸ்லிம் பிரதேசங்களிலே கத்தோலிக்கர் பெருங்கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். பெந்தக்கோஸ்தே பிரிவினரும், ''சுதந்திரமான தேவாலயங்களும்'' கத்தோலிக்கரோடு போட்டியிடுவதால் அந்தப் போட்டிகளுக்கும் முகங்கொடுக்கவேண்டியுள்ளது. கத்தோலிக்கராய் மதம் மாறியவர்களிற் பலர் தாம் முற்றாகக் கைவிடாத குலக்குழுக்களின் சமயங்களுக்குத் திரும்பிச் செல்ல முயல்வதும் பாரிய பிரச்சினையாயுள்ளது.

இவ்வாறெல்லாமிருந்தும் கத்தோலிக்கம் தனது சக்திகளைப் பெருக்கிச் சமூக அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தே வருகிறது. சிறப்பாக ஆதிக்கக் கொடுமை நிலவும் பகுதிகளிலே தான் இந்தக் குரல் ஓங்கி ஒலிக்கிறது. இதற்குக் கென்யா, மலாவி என்பன முதன்மையான எடுத்துக்காட்டுக்கள். தென்னாபிரிக்க குருத்துவ தலைமைப்பீடங்கள் இன ஒதுக்கலை, ''உள்ளார்ந்த தீமை'' என்று 1980 இன் ஆரம்பத்திலிருந்தே கண்டித்து வருகின்றன. அரசுக் கொள்கையை, அண்மையிலே அரசோடு இணைக்கப்பட்ட பாடசாலைகள் பகிரங்கமாக எதிர்க்கின்றன.

ஆபிரிக்காவைப் பொறுத்தவரையில் வத்திக்கான் குறிப்பிடத்தக்க வகையில் தனது விதிகளிலிருந்து தாழ்ந்து கொடுக்கத் தயாராகவே உள்ளது. பிரச்சினைகள் நிறைந்துள்ள நாட்டிலே மனிதவளம் அதிகம் அதிகமாகத் தேவைப்படுகையில் மதகுருமாரும் அரசியலில் ஈடுபட நேர்வதைத் தவிர்க்க முடியாதென்ற அடிப்படையில் ஆபிரிக்க மதகுருமாருக்கு அரசியலில் பங்குகொள்ள அநுமதி வழங்கப்படுகிறது. இது கத்தோலிகக தலைமைப் பீடத்தால் அருமையாகவே வழங்கப்படும் அநுமதியாகும். பெனின் நாட்டின் அதிமேற்றிராணியார் இசடோர் டி சௌசாவை எடுத்துக் கொண்டால் 1990 இல் அந்நாட்டின் தலைவரான ஜெனரல் மத்தியூ கெறக்கோ ஆட்சியிலிருந்து நீக்கப்பட்டு, புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கென்று தேசம் அளாவிய அவசரகால மாநாடு கூட்டப்பட்ட வேளையில், டி சௌசா வத்திக்கானின் அநுமதி பெறாமலே அந்த மாநாட்டிற் கலந்துகொண்டார். இதனை வத்திக்கான் எதிர்க்கவில்லை. காரணம் அவரின் நிலைப்பாட்டின் உண்மைத் தன்மையை அது உணர்ந்து கொண்டமையே. பிரிவினை வேண்டாத தேசியத் தலைவர்களின் பதவிகளிலே மேற்றிராணிமார்களான கொங்கோ, கபொன், டோகோ, சயர் ஆகியோர் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட பொழுதும் நெருக்கடியின் தன்மையையுணர்ந்து அவர்களின் முடிவுக்கு எதிர்ப்புக் கிளம்பவில்லை.

மரபு ரீதியான ஆபிரிக்கக் கலாசாரத்திற்குப் பெரும் பிரச்சினையாயுள்ள மதகுருமாரின் சடங்காசார பழக்க வழக்கங்களிலும் வத்திக்கான் நெகிழ்ச்சி காட்டியே வருகின்றது. ஆபிரிக்க குருமார்களில் முக்கால் வாசியினர் விவாகம் செய்து பிள்ளைகளையும் பெற்றுள்ளமை நிபுணத்துவ ஆய்வின் மூலம் வெளியாகியுள்ளது. ''உரோமாபுரிக்கு இது ஒன்றும் இரகசியமாயில்லை. இது ஏற்றுக் கொள்ளப்பட்டேயுள்ளது. எனவே இதனை எதிர்த்தால் நாம் குருத்துவத்தினரை இழக்க நேரும்'' என்று அநுபவசாலியும், நிபுணருமான வத்திக்கான் குரு ஒருவர் கூறினார்.

ஆபிரிக்க மேற்றிராணிமார், மிகவும் உணர்ச்சி பூர்வமான (கத்தோலிக்கரின் அகில ரீதியான பண்பாட்டிலிருந்து வேறான தொரு பண்பாடு) பண்பாட்டு மீளலைப் பிரேரித்த போது அதற்குச் சிறியதொரு முணுமுணுப்புக் கூட எதிர்ப்பாய்க்கிளம்பவில்லை. ''புதிய பண்பாட்டு நிலத்தில் நம்பிக்கையொன்று வித்திடப்படுவது விவாதத்திற்கு உட்பட வேண்டிய ஒன்றல்ல. கிறிஸ்தவ எதிர்ப்பாளர்களின் மரபாசாரங்கள் சிலவும் முன்பே எமது மத பீடத்தால் தழுவிக் கொள்ளப்பட்டன'' என்று வத்திக்கான் அலுவலர் ஒருவர் இது பற்றிக் கருத்துத் தெரிவித்தார்.

பண்பாட்டு மீறல் என்பது உரோமாபுரியால் விருப்பத்தோடு ஏற்க முடியாத தொன்றுதான். கருத்தடைக் கட்டுப்பாட்டினை ஆபிரிக்கரில் ஒரு சிலரே எதிர்த்தனரென்றால் அது பற்றிய எதிர்ப்பும் மீறலும் மேற்கு நாடுகளில் தான் பரவலாக உள்ளன. பல தாரமணம் மற்றுமொரு பிரச்சினை. இயேசு சபையைச் சேர்ந்த புனித பிதா றொட்றிக்கோ மெஜியா, பலதாரமணம் பற்றித் தீர்க்கமான முடிவு ஒன்று கூடலின் போது எடுக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தியமை எதார்த்தமற்ற ஒன்றே. ''ஆபிரிக்கரை ஏற்க வைப்பதற்கு எமக்குச் சரி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான வழி காட்டல் வேண்டும்" என்றார் அவர். சில பகுதிகளிலே கத்தோலிக்க சபையில் சேர்ந்து கொள்ளப் பலதார மணஞ் செய்தோருக்கு அனுமதி வழங்க முடியாதுள்ளது. இதனால் கத்தோலிக்கராய் மதம் மாற முன் பலதார மணஞ் செய்து கொண்டிருந்தால் அத்தகையவரைக் கத்தோலிக்கராய் ஏற்கலாமென்றும் தொடர்ந்தும் அவர்கள் மனைவியரை (முன்பு மணந்தவரை) வைத்திருக்கலா மென்றும் விதி மாற்றம் செய்யலாம் என்ற கருத்தும் எழுந்தது. ஆனால் ஆபிரிக்க உயர் குருவானவர் வத்திக்கானில் வதியும், கருதினால் அறின்சே (நைஜீரியா) "இந்த அளவிற்குத் திருச்சபை இறங்கிவரக் கூடாது" என்று கருத்துத் தெரிவித்தார்.

பாரம்பரிய குலக்குழுச் சமயக் கடைப்பிடிப்புக்களையும் ஆபிரிக்க கத்தோலிக்கர் கடைப்பிடிக்கலாம் என்ற நிலையும் முற்றாகத் தவிர்க்கப்படவில்லை. உகண்டாவைச் சேர்ந்த புனித பிதா மேரி வலிகோ என்பவர், சஞ்சிகை ஒன்றின் சிறப்பு மலருக்கு எழுதிய கட்டுரையில், "எங்களின் மரபாசாரம், பண்பாடு சிதைந்து போகுமென்று அஞ்ச வேண்டியதில்லை; எங்கள் செயற்பாடுகளிலெல்லாம் ஆவிகளே செல்வாக்குப் பெற்று எமக்கு வழி காட்டப்படும் அதே வேளை கிறிஸ்துவின் வழியை நாம் தொடர்வோம்" என்று எழுதியுள்ளார். ஆனால் செகைல் நாட்டின் கருதினால் திருச்சபைக்கும், விவிலியத்திற்கும் உண்மையாயிருக்குமாறு வித்தியாசமான முறையில் வலியுறுத்துகின்றார்.

நோய்களைப் பரிகரித்தலில் குலக்குழுக்களின் பாரம்பரிய முறையைக் கையாள்வதா, நவீன வைத்திய முறைக்கு உட்படுவதா என்பதும் மற்றொரு பிரச்சினை. "மக்கள் இரு முறைகளையும் கையாள்கிறார்கள்" என்கிறார் ஒரு புனித பிதா.

பாப்பாண்டவருக்கு இந்த முரண்பாடுகள் அவரைப் பிரதேச அரசியல் தந்திரியாகச் செயற்பட வைக்கின்றன. "ஆபிரிக்கரில் அவர் காட்டும் கருணையானது ஐரோப்பியருக்கோ, வட அமெரிக்கருக்கோ அவர் காட்டாத ஒன்றாயுள்ளது" என்பது திருச்சபையினர் ஒருவரின் கருத்து. இதன் வெளிப்பாடாகவே அவரின் சகிப்புத்தன்மை தோன்றுகின்றது. இப்போதைய இந்த ஒன்றுகூடல் அவரைப் பொறுத்தவரையிலும், ஆபிரிக்கக் கத்தோலிக்கரைப் பொறுத்தவரையிலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றேயாகும்.

*ரைம், ஏப்பிரல் 25, 1994*

## இழந்த பரம்பரை ஒன்று

*முன்னாள் ஜப்பானியப் பிரதமர் குச்சிமியாசாவா எதிரணியான சுதந்திர ஜனநாயகக் கட்சியின் சமாதான விரும்பிகள் அணியைச் சார்ந்தவர் என்று கருதப்படுகின்றது. அந்த மியாசாவா சார்ந்த அணியின் உறுப்பினர் ஒருவர், ஜப்பானில் இறந்தவர்கள் நினைவாக உள்ள யசுகூனி ஆலயத்துக்கு, அவர் பிரதமராக இருந்தபோது, 1991 இல் இரகசியமாகச் சென்று வந்தார் என்று கூறியுள்ளார். ஒரு மில்லியன் குடும்பங்களுக்கு மேலாகத் தொகையினரைப் பிரதிநிதிப்படுத்தும் ஜப்பானில், போரில் இறந்தவர்களுக்காகத் துக்கப்படும் சங்கத்தினரது தூண்டுதலின் பேரிலேயே, அவர் அப்படிச் சென்றதாகக் கூறினார். மியாசாவோ அப்படி இரகசியமாகச் சென்று வந்தது, அந்தச் சங்கத்தின் நலனில் அவருக்கு அக்கறை உள்ளதனால் தான் என்றும், அவர் அந்த இரகசியப் பயணத்தை மேற்கொள்வதற்கு, ஜப்பானியச் சக்கரவர்த்தி அகிஹிடோ சீனாவுக்கு 1991 இல் சென்ற தருணம் வரை காத்திருந்தார் என்றும் கூறப்படுகிறது.*

## அடுத்த பரம்பரை

*ஜப்பான் இரண்டாவது உலகப் போரின் போது. சரணாகதி அடைந்த 50 ஆண்டுகள் நினைவு நாள் அடுத்த வருடம் வரவிருக்கிறது. வெளியுறவு அமைச்சு அதிகாரிகள், வெளி உலகத்திற்கு, ஜப்பானியப் பிள்ளைகள் போர் பற்றிச் சரியான முறையில் கல்வியூட்டப்படுகிறார்கள் என்பதைக் காட்ட முயல்கின்றனர். இப்போது பாவனையில் உள்ள பாடசாலைப் புத்தகங்களில் யுத்தம் பற்றிய விபரங்களைத் திருத்துவதிலும் பார்க்க மாணவர்களுக்கு யுத்தம் பற்றிய புதிதாக எழுதிய ஆவணங்கள் கொடுக்கப்படல் வேண்டும் என்று கூறுகின்றனர். ஒரு காலத்திற்கு யுத்தம் பற்றிய செய்திகளைத் தணிவாக உட்புகுத்தும்படி பாடப் புத்தக ஆசிரியர்களைக் கேட்டுக் கொண்ட அந்த நாட்டுக் கல்வி அமைச்சு, வெளியுறவு அமைச்சின் யோசனைக்கு இன்னும் இணக்கந் தெரிவிக்கவில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சையைத் தேடும் கால்நடைகள்

"எங்கும் பாரடா இப்புவி மக்களை
பாரடா உனது மானுடப் பரப்பை
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்."

— பாரதிதாசன்

அகதியைக் கதியற்றவன் என்றும், இடம்பெயர்ந்தோரைச் சொந்த வசிப்பிடத்தில் இருந்து அகன்றவர்களென்றும் அகராதி விளக்கந் தருகின்றது. தமது சுயவிருப்பில் இடம் பெயர்ந்தோரும் நிறைய உண்டு. இடம பெயர்வு மனித வரலாற்றுடன் நன்றாகக் கலந்துள்ளது. ஆபிரிக்காவில் அவதரித்த மனிதன் இடம் பெயர்வின் காரணமாக உலகெலாம் செறிந்துள்ளான். ஆகவே, மனித இயல்பில் தூரச்சென்று குடியேறுங் குணம் பண்டைய காலந் தொட்டு இருந்து வருகின்றது. நில நடுக்கம், எரிமலை, கடல்மூடுதல், நதி பெருக்கெடுத்தல் போன்ற இயற்கை உற்பாதங்களும், போர், அரசபயம், இன அழிப்பு, வன்முறைகளும் இடம் பெயர்வுக்குச் சில காரணங்களாக அமைகின்றன.

அறிவியல் நோக்கில் இடம் பெயர்வை, ஆய்வு செய்வதற்கு யூத இனத்தவர்களின் கடந்த இரண்டாயிரம் வருட வரலாறு உதவுகின்றது. மனிதன் தனது இனத்திற்குச் செய்யுங் கொடுமைகள் மானுட நாகரிகம் வெறும் வெளிப்பூச்சு, சித்தாந்தங்கள் வெறும் வாய்ப்பேச்சு என்பதையே காட்டுகின்றன. எங்கள் ஆய்வுக்கு கி. பி. 70 உகந்த தொடக்கமாய் இருக்கின்றது. இதற்கு முன்பும் இவர்கள் தங்கள் விருப்பின்றிக் குடியிருப்புக்களை மாற்ற நேர்ந்தாலும், கி. பி. 70 இல் வீழ்ந்த அடி நெடுங்காலத் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. இந்த வருடத்துடன் யூதர்களின் நாடு உரோமர்களினால் முற்றாக அழிக்கப்பட்டு விட்டது. கானான் எனப்படும் அவர்களுடைய நாடு (இப்போது இஸ்ரேலில்) உரோம சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டுள்ளது. யூதர்கள் வணங்கும் இடங்கள் நிர்மூலமாக்கப்பட்டதுடன் அவர்களுடைய இனத்தவர்கள், மத குருமார்கள் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். பெருந் தொகையானோர் அடிமைகளாகப் பிடித்துச் செல்லப்பட்டுள்ளனர். எஞ்சியோர் ஐரோப்பாவின் ஒரு நாட்டையாவது விட்டு வைக்காது அங்கெல்லாம் தஞ்சம் புகுந்துள்ளனர்.



படகுகளிற் கிளம்பும் வியற்நாமிய மக்கள்

சென்ற இடமெல்லாம் வர்த்தகர்களாகவும், கல்விமான்களாகவும், விஞ்ஞானிகளாகவும், கலைஞர்களாகவும் யூதர்கள் ஏற்றம் பெற்றாலும் அவர்களுக்குச் சம அந்தஸ்துக் கொடுக்கப்படவில்லை என்பதே வரலாறு. வசதியற்ற யூதர்கள் நகரங்களின் குறிப்பிட்ட பகுதிக்குள் வசிக்கும்படி கட்டளையிடப்பட்டுள்ளனர். இன ஒதுக்கலுக்கும், பாகுபாட்டிற்கும் அவர்கள் நிரந்தரமாக ஆளாகியுள்ளனர். உரோமர்கள் 70 இல் தொடங்கியதை ஹிற்லர் இந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் முற்றாகச் செய்ய முடியா விட்டாலும், 6 மில்லியன் யூதமக்களை ஒழித்துள்ளான். இதன் பின் எதுவிதப்பட்டும் தமக்கென ஒரு தாயகத்தைத் தமது பழைய பூமியிலேயே நிறுவ வேண்டும் என்ற வேகம் யூதர்கள் மத்தியில் உருவாகியுள்ளது. அரபு நாடுகளின் எண்ணெய்க்காகப் பிரிட்டிஷ் அரசு கடும் எதிர்ப்புக் காட்டினாலும், 1948 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆந் தேதி இஸ்ரேல் என்ற யூதநாடு பிரகடனஞ் செய்யப்பட்டுள்ளது. பெரும்பாலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

# மனிதவியல் வரலாறு

யூத மக்கள் தமது நெடிய இடம் பெயர்வில் தமது மதத்தையும், பண்பாட்டையும், இனக் குறியீடுகளையும், தாய் நாட்டையும் மறக்கவில்லை என்பது வரலாற்று உண்மை.

யூதர்கள் போராடிப் பெற்ற நாடு இஸ்ரேல் என்பது ஒருபுறமிருக்க, தமது நாடுகளில் நடக்கும் உள்நாட்டுப்போரைக் காரணங் காட்டி வசதியுள்ள மேற்குலக நாடுகளில் தஞ்சம் கோரும் ஆசிய, ஆபிரிக்க மக்களைக் கடந்த இரு தசாப்தங்களாக நாம் கவனிக்கிறோம். பெரும்பாலான தஞ்சம் கோரும் மக்கள் விமானம் மூலமாகவும், வேறு உயிராபத்து அ.ற தரைப் பாதையாலும் தமது விருப்பு நாடுகளுக்குச் செல்கின்றனர். ஆனால், வியற்நாமியர் விதிவிலக்காக அமைகின்றனர். அலைகளற்ற நதியில் செல்வதற்கே உதவாத படகுகளில், இவர்கள் 70 களில் தமது நாட்டை விட்டு ஆபத்தான கடற்பிரயாணத்தை ஆரம்பித்துள்ளனர். உண்மையில் அங்கு நடந்த யுத்தம் அத்தனை கொடியது. பலர் கடலில் மடிந்துள்ளனர். ஒரு சிலர் சர்வதேசக் கப்பல் ஓட்டிகளால் காப்பாற்றப்பட்டனர். அக்காலச் செய்திகளில் நாம் இப்போது நினைவு கூரவேண்டியது மலேசியா போன்ற நாடுகளின் நடவடிக்கையைத்தான். இவ்வரசின் பணிப்பின்படி மலேசியக் கடற்படை இந்தப் படகுகளை இழுத்துக் கொண்டு போய் நடுக்கடலில் மீண்டும் விட்டுத்திரும்பியுள்ளது. ஆனால், இவ்விடயத்தில் இந்தோனேசியா தாராள சிந்தையுடன் நடந்துள்ளது.

1970 ஆம் ஆண்டு தொடக்கம் தமது நாட்டை விட்டு வெளியேறிய வியற்நாமியர்களில் 145,000 மக்கள் இந்தோனேசியத் தீவுகளில் கரைசேர்ந்துள்ளனர். இவர்களுக்கு வேண்டிய உதவிகளை இந்தோனேசிய அரசும், ஐ.நா. வின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயமும் செய்துள்ளன. இன்று வரை 132,000 வியற்நாமியர்களுக்கு மேற்கு ஜேர்மன், பிரான்ஸ், நெதர்லாந்து, இங்கிலாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளும், அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா ஆகியவையும் குடியுரிமை கொடுத்துள்ளன. இவை எல்லாவற்றிலும் அமெரிக்காதான் கூடுதலான தொகையினரை ஏற்றுள்ளது. மிகுதியான 13,000 மக்களில் 4,500 பேர் சுயவிருப்பில் வியற்நாம் திரும்பியுள்ளனர். எஞ்சியிருக்கும் 8,500 வியற்நாமியரும் கலான்ங் எனப்படும் தீவில் வைத்துப் பராமரிக்கப்படுகின்றனர். இவர்கள் யாவரும் மேற்கூறிய நாடுகளில் குடியேறுவதையே குறியாகக்கொண்டுள்ளனர். ஆனால், இந்த நாடுகள் இவர்களுடைய யோக்கியாம்சங்களை நேரிடையாகப் பரீட்சித்த பின், இவர்களில் சிறுதொகையினரையாவது ஏற்க மறுத்துள்ளன. ஆனால், வியற்நாம் இவர்களை எந்நேரமும் ஏற்கத் தயாராக உள்ளதென்பது வெளிப்படை.

— தொகுப்பு —
கலாநிதி சோமஸ்கந்தன்

எஞ்சிய வியற்நாமியர்கள் மத்தியில் ஒரு கொந்தளிப்பு நிலை உருவாகி வருகின்றது. தங்களுக்கு மேற்குலக வாழ்வு கிடைக்கப்போவதில்லை என்ற சினம் ஒருபுறமிருக்க இரண்டு மேலதிக காரணிகளையும் குறிப்பிடல் வேண்டும். சிங்கப்பூருக்குத் தெற்கே இருக்கும் 16 சதுர கி.மீ. நிலப்பரப்புக்கொண்ட கலான்ங் தீவை ஒரு கைத்தொழிற் பேட்டையாக மாற்றும் தனது நோக்கத்தை இந்தோனேசிய அரசு அண்மையில் பகிரங்கப்படுத்தியுள்ளது. பொருளாதார உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட வியற்நாம் பிரதமர் வான் கீத் அண்மையில் இந்தோனேசியாவுக்கு வருகை தந்துள்ளார். இந்த இரண்டு நிகழ்ச்சிகளையும் ஒன்று சேர்த்துக் கலான்ங் தீவு அகதிகள் தம்மை வியற்நாமுக்குத் திருப்பி அனுப்பும் சதி ஒன்று உருவாகி வருவதாகச் சந்தேகிக்கின்றனர். உலக நாடுகளின் இரக்கத்தைச் சம்பாதிப்பதற்காக இவர்களில் இருவர் தீக்குளித்தும் உள்ளனர். எது விதப்பட்டும் மேற்கு நாடுகளைச் சென்றடைய வேண்டுமென்பதே இவர்களின் அவா. வியற்நாம் முன்புபோல் இல்லை. அமைதியும், ஸ்திரமான வாழ்வும் மக்களுக்குக் கிடைக்கின்றன. பெரும் பொருளாதார முன்னேற்றங் காணப்படுகின்றது. இவற்றையெல்லாம் கலான்ங் தீவு வாசிகள் கண்டு கொள்ளத் தயாராக இல்லை.

பிறந்த நாட்டில் ஒருபுறமிருந்து இன்னுமொரு பகுதிக்கு இடம்மாறுவதும் இடம் பெயர்வு தான். மேலும் இயற்கையின் சீற்றம் மனிதனின் கொடுமை போன்ற முன்கூறிய காரணங்களுடன் மேற்குலக உல்லாச வாழ்வு என்ற கானல் நீரையும் மூன்றாவதாகச் சேர்க்கவேண்டியுள்ளது. எகிப்தில் அடிமைகளாக வாழ்ந்த யூதர்கள் 3,000 ஆண்டுகளுக்குமுன் மோசேஸ் தலைமையில் தமக்கென ஒரு நாட்டைத்தேடிப் புறப்பட்டதை அறிஞர்கள் எக்ஸோடஸ் ( Exodus ) எனக்குறிப்பிடுவர். விடுதலை வேண்டிப் புதுநாடு தேடிப் போவதை இப்பெயரில் குறிப்பிடுவது இன்றைய வழமை. ஆனால், விடுதலை பிறந்த நாட்டில்தான் உண்டு. அதை அவ்விடத்தில் நிலை நாட்டுவதுதான் சிறப்பு. இதையே யூதர்களின் கடந்த 2,000 வருடச் சரித்திரம் எமக்கு உணர்த்துகின்றது.

ஆதாரம்:
(F) பார் ஈஸ்ரன் எக்கனமிக் றிவியூ, ஜூலை 14, 1994.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுருளுக் கிருமி - ஏ அச்சம்




நுண்ணுயிரும் அதனால் பாதிப்புற்றோரும்.

வலது புறம்: ஸ்ரீவ் ஹில்மன் தனது கிருமி பாதித்த பரப்பளவைக் கையால் காட்டுகிறான்.

( இடது ) வின்ஸ் கிப்பியும் தாயாரும்.

பத்தி கீழ்:

பிரித்தானிய சிறு பத்திரிகையின் முதற் பக்கம்.

ஸ்ரீவ் ஹில்மன் தனது பிட்டத்தில் ஒரு சிவப்புப் புள்ளிப் பருவை அவதானித்தான். அவன் மனைவி நாள் முழுவதும் நடமாடும் வியாபார 'ட்றக்' வண்டி ஓட்டுந் தொழிலில் உள்ள அவனுக்கு லதன்புளொடாவின் வெப்பத்தில் இப்படி ஒரு பரு வருவது நூதனமல்ல என்றிருந்தாள் ஒரு நாளுக்குள் அவனுக்குக் காய்ச்சல், தலைவலி தோன்றியது. அடுத்த நாள் தாங்கமுடியாத நோவினால் துடித்தான். பரு பெரும் 'கட்டு' (இரணம்) ஆயிற்று. சிலந்தி கடித்திருக்கலாம் என்று கருதிய மனைவி அவனை மருத்துவ நிலையத்திற்கு இட்டுச் சென்றாள். இரணத்தில் 'கத்தி வைத்து'ச் சீழை அகற்றிக் கணவனை வீட்டுக்கு அனுப்புவார்கள் என்று எதிர்பார்த்துச் சென்றவள் ஏக்கமுறும் செய்தி கேட்டாள்.

அவசர சிகிச்சைப் பிரிவிலிருந்த மருத்துவரின் கவனம் ஸ்ரீவினின் உயிர் பிழைக்கச் செய்தது. ஏதாயினும் கிருமி தாக்கியதோ என ஐயுற்ற அவர் தொற்று நோய் நிபுணரை உடனே அழைத்தார். சங்கிலி, நுண்மம் (சுருள் உருக்கிருமி) கடுந் தாக்கமாயிருக்கலாம் என்று ஐயுற்ற நிபுணர் சொல்கிறார்: ''கட்டு கருமையும், ஊதாவும் கலந்திருந்தது. நான் தொட நோயாளி கட்டிலிலிருந்து துள்ளிப் பாய்ந்து விழப்பாரத்தான். நச்சு அதிர்ச்சிக்குறி (ரொக்ஸிக் ஷொக் சின்டறோம்) அறிவு கெடும் நிலைக்கு ஆளைத் தள்ளிவிட்டது. சுருள் உருக்கிருமி-ஏ இப்படிச் செய்யும் என்று எனக்குத் தெரியும். சத்திர சிகிச்சை நிபுணரை உடனே அழை என்று தாதிக்குக் கட்டளையிட்டேன்'' என்பதாக.

மொழியாக்கம்:
— காவல்நகரோன் —

சத்திர சிகிச்சை வைத்தியர் சொன்னார்; ''நிஜமாகவே அவன் கடும் நோயாளிதான்: சிறுநீரகங்கள், கல்லீரல், மூச்சுப்பை அனைத்துமே செயலிழக்கத் தொடங்கி விட்டன. செயற்கை மூச்சுப் பொறியிலிட்ட நோயாளிக்கு நான்கு மணி நேரம் குருதியின் நிணநீர் (பிளாஸ்மா) பெருமளவு நுண் உயிர் எதிரி மருந்துகள் ஏற்றப்பட்டன. 37 வயதினன் பரு தோன்றி 36 மணி நேரத்தில் நஞ்சு அதிர்ச்சிக்குள்ளாகி இன்னும் ஓரிரு மணிக்குள் இறந்திருப்பான். இவன் அதிர்ஷ்டசாலி, இன்னும் ஆறு மணி நேரம் தாமதித்து வந்தால் தப்பியிருக்க மாட்டான்'' என்று.

ஒரு மாதத்தில் மூன்று அறுவைச் சிகிச்சை செய்து இப்போது வீட்டில் ஓய்வு எடுக்கிறான் நஞ்சு அதிர்ச்சிக் குறி கண்டதும் உடல் க்ஷீணித்து (இறப்பு நிலை போல் கலங்கள்) அழ்ந்து விடும். 'அழிக்கும் கிருமி' (நெச்றோற் றைசிங்:.:மஸியற்றிஸ்) என்ற பெயருள்ள சங்கிலி நுண்மம்-ஏ இந்தக் கொடுமையை விரைவில் செய்ய வல்லது. ஸ்ரீவ் நோயாளியின் வலது பிட்டத்தில் ஒரு கையளவு தசையை அறுத்து அகற்றிய பின்னரே அவன் குணமாகும் வாய்ப்புப் பெற்றான். அறுத்த தசை சப்பாத்துத் தோல் போல் கறுத்தும் இருந்தது. அறுவை செய்தவரின் மனைவி கூறினாளாம், ''பேய் ஓட்டி என்ற படத்தில் வருகிற பாத்திரம் போலக் காணப்படுகிறார்'' என்று. நோயாளி ''பொல்லாத கனவு நிலையில் நரகம் போய் வந்தேன்'' என்கிறான்.

இலண்டன் சாதாரண மக்கள் படிக்கும் சிறு பத்திரிகைகளில் எட்டு நோயாளிகள் இந்தக் கொடிய வியாதியால் கிளாஸ்ரர் மாவட்டத்தில் பீடிக்கப்பட்ட செய்தி, ''என் முகத்தைத் தின்ற கொலைப்பூச்சி'' என்ற தலைப்பில் வெளிவந்து நாடு முழுவதையும் பயத்தால் நடுங்கச் செய்தது. சுருளுக்கிருமி-ஏ அச்சம் அமெரிக்கப் பத்திரிகைகளாலும் பரப்பப்பட்டது. மினசோற்றா பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரி நிபுணர் கூற்றுப்படி 1950 களில் ஒரு முறை இந்நோய் பற்றிய பயம் ஏற்பட்டது. பலர் அந்நோய் எதிர்ப் பாற்றலைப் பெற்றமையாற் போலும் அது பரவுவது குறைந்தது. ஆனால் மீண்டும் அலைபோலப் பரவும் ஆபத்து எழுந்துள்ளது. ஆண்டு தோறும் 10 முதல் 15 ஆயிரம் பேர் இந்நோய்க்கு ஆளாகக் கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

260 மில்லியன் சனத்தொகையில் இது ஒரு சிறு தொகை மட்டுமே. எங்கும் பரவும் தொற்று நோய் போன்ற நிலை அமெரிக்காவில் இல்லை. எனினும் சுருளுரு-ஏ ஆபத்தை உண்டுபண்ணலாம் என்பதை யாரும் மறக்கவில்லை. இந்நோய் வேகமாகப் பரவக்கூடியது. உடலில் அழுகலையேனும், நச்சு அதிர்ச்சிக் குறியையேனும் இரண்டையும் கூட ஏற்படுத்த வல்லது. ஆளின் அசைவைப் பாதிக்கும் இறப்பையும் ஏற்படுத்தும். அலஸ்காவில் ஒரு 23 வயதுப் பெண் 1992 இல் இந்நோய் உற்றாள். இரு காலிலும் கைவிரல்களிலும் சில பகுதிகளை இழந்தாள். வோசிங்ரனில் 09 வயதுப் பிள்ளைக்கு வைத்தியர்கள் ஒரு காலில் பெரும் அளவு தசையை வெட்டி அகற்றினார்கள். நடக்குமுன் பல மாதங்கள் சிகிச்சை பெறவேண்டும். அழிக்கும் நோய் பிடித்தால் 20 முதல் 30 வீதமானோர் இறப்பர்; 50 வீதத்திற்கும் இறப்பு விகிதம் உயரலாம் என்பது நிபுணர்கள்

**சங்கிலி நுண்மம்-ஏ என்னும் தசையை உண்ணும் மிகப் பயங்கர நோயிலிருந்து நான் புத்துயிர் பெற்றது, கனவு நிலையில் நகரம் போய் வந்ததைப் போன்றது.**

## சிறிய பிராணி பெரிய பலி

சுருளுருக் கிருமியின் ஏ குழுவில் சுமார் 75 வகைகள் உள்ளன. சில எமது தசை இழையங்களில் குடியிருந்தாலும் தீமை செய்பா. சில தொண்டை வலி, செம்புள்ளி, நச்சுக் காய்ச்சல் போன்ற நோய்களை உண்டாக்கலாம். இந்தக் குழுவில் கடும் தீங்கு செய்யும் ஒருவகையான கலங்களை அழிக்கும் மரத்துப் போகச் செய்யும் கிருமிகள், பத்திரிகைகள் பய அலைகளைக்கிளப்பக் காரணமாயின. முழுவதும் பரவி உயிர் ஆபத்தை விளைவிக்கும் கிருமி வகைகள் மிகக் குறைவு. நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்த பலவீனர்களிடையிலும் இவை அதிக தீமையைச் செய்யா. ஆனால் எவரும் இதனால் பாதிப்புறலாம். மருந்துகள் இவற்றை அழிக்கும் எனினும் 10 முதல் 20 வீத நோயாளர் இறப்பர். நோய்நாடி, நோயின் முதல் நாடி சரியான மருந்தை முதலிலேயே கொடுத்து விட்டால் ஆள் தப்பிவிடும். ஆனால் வைத்தியர் சரியான முடிவை வேகமாக எடுப்பதில்லையே என்கிறார் நியூயோர்க் பெத் இஸ்ரேல் மருத்துவ நிலையத்தில் தொற்றுநோயியல் நிபுணரான டாக்டர் ஸ்ரான்லி யங்கோவிற்ஸ்.

ஏ குழு வகைக் கிருமிகள் உணவு, அறுவை மருத்துவ ஆயுதங்கள் மூலமும், இருமும் போதும், கைகுலுக்கும் போதும் கூடத் தொற்றலாம். இவை தடிமன், ஃபுளுக்காய்ச்சல் கிருமிகள் போல வேகமாகத் தொற்றா, ஆதலால் நோயாளிக்கு அயலில் உள்ளவர்களுக்கு அதிக ஆபத்தில்லை. உணவை மூடி வைப்பது, கையைக் கழுவுவது, இரணங்களைக் கழுவிச் சுத்தமாக வைத்திருப்பது போன்ற சாதாரண விதிகளைக் கைக்கொண்டு நோய் பரவாமல் தடுக்கலாம்.

உயிர் ஆபத்தான நோய் தொற்றுவதனால் இக்கிருமிகள் மென் சவ்வுகள் அல்லது தோலில் வெட்டுக்காயம், கொப்புளிப்பான் காயத்தின் வழியே உட்சென்று ஓரிடத்தில் நிலைகொள்ளும். அங்கு பல்கிப் பெருகி நஞ்சைப் பாய்ச்சும். மூன்று நாள்களுக்கு நெறி போட்டிருக்கும், காய்ச்சல் வரும். கிருமி குடியிருக்கும் இடத்தில் தாங்க முடியாத வலி இருக்கும். இக் கட்டத்தில் பென்சிலின் கிருமியை அழிக்க முடியும். ஆனால் நாலாம் நாளிலிருந்து கிருமி தாக்கிய கலங்கள் (திசுக்கள்) அழியத் தொடங்கும். கிருமி குருதி ஓட்டத்தில் நிறைந்து விடும். தசை நார்கள், உள்உறுப்புக்கள் அனைத்தையும் அழித்துவிடும். உடல் முழுவதும் நச்சுத் தாக்கம் ஏற்பட்டுச் சில மணி நேரத்தில் சாவு நிகழும்.

தொடக்கத்தில் குளிர் சுரம் (ஃபுளு) போலிருந்தாலும். சுருளுருக் கிருமித் தாக்கம் மிகக் கடும் வேதனையைத் தரும். தலைவலி, தொண்டை வலி வந்தால் பயப்படத் தேவையில்லை என்றாலும் புண் ஏதாயினும் கிருமி தாக்கிய கோலம் கொள்ளுமென்றால் உடனே கவனித்து வைத்தியம் செய்ய வேண்டும் என்கின்றனர் நிபுணர்கள். 102 பாகைக்கு மேல் காய்ச்சல் கூடுமென்றால் விரைவில் மருத்துவரைக் காண்பது அவசியம். இந்நோய் அரிதில் வராது, வந்தால் மன்னிப்பில்லாமல் முடித்து விடும்.

—ஜோஃப்றே கௌலி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து. நுண் உயிர்கொல்லி மருந்துகளுக்கு அடங்கும் சுருளுக் கிருமி எனினும் ஆரம்பத்தில் சிகிச்சை செய்யாவிட்டால் உயிருக்கு ஆபத்து உண்டு.

இக்காரணங்களாலும் எந்த உள்ளூர்ப் பகுதியில் பரவுகிறது என்ற புள்ளி விபரம் தெரியாத படியாலும் இங்கிலாந்தில் சிறு பத்திரிகைகள் பரப்பிய அச்சம் போலவே அமெரிக்காவிலும் சில பிரதேசங்களில் பயம் பரவியுள்ளது. ஜூன் மாதம் டென்வர், டெற்றோய்ற், மியாமி மாநிலங்களில் இந்தப் பயம் பரவியது. லொஸ் ஏஜ்ஞ்சலிஸ் ஒறேஞ்ஜ் மாவட்டம் (கலிபோர்னியா) இரண்டிலும் 23 பாடசாலைப் பிள்ளைகளுக்கு ஆண்டு தோறும் பரவும் கொப்புளிப்பான் நோயைத் தொடர்ந்து இந்நோய் கண்டது. அவர்களில் 4 பேர் இறந்தனர். டென்வர் சுகாதாரப் பகுதி அதிகாரிகள் ஒரு 51 வயதுப் பெண் மரணப் போராட்டத்தில் மருத்துவ நிலையத்தில் இருந்தபோது பத்திரிகையாளர் மகாநாட்டைக் கூட்டி அச்சத்துக்கு இடமில்லை என்று விளக்கினர். டெற்றோய்ற் மாநிலத்தில் இரண்டு நோயாளர் பாதிப்பைப் பெரிது படுத்திய. பத்திரிகைகளுக்கு மருத்துவர் கூறிய விளக்கம்: ''இந்நோய் எங்களுக்குப் புதிதல்ல பரவாமல் தடுக்க முடியும். பத்திரிகைகள் செய்தி தொற்று நோய்க்கு ஆளாகின்றது; அவ்வளவு தான்.''

மறுமொழி ஆம்-இல்லை இரண்டும்தான். நோய் பழையது எனினும் இப்போது பாதிக்கப்படுவோர் வீதம் சற்று அதிகம் தான் என்கின்றனர் விசேட நிபுணர்கள். ஒருவன் நோய்க்கு ஆளாவது இடி மின்னலால் தாக்குவது போல அருமையாகவே நிகழக்கூடும். ஆனால் பொது மக்கள் நோயின் குணங்களை நன்கு அறிந்து குறிதோன்றியதும் உடனே வைத்திய உதவியை நாடுவது அவசியம் என்கின்றனர்.

செய்தியாளர்:-

1. மியாமியிலிருந்துஸ்பென்ஸர் றீஸ்
2. நியூயோர்க்கிலிருந்து நீனா ஆச்சா பீடிஸ்.

# கைதவறவிட்ட அணுப் பேரம் ஒன்று

வடகொரியாவிடம் ஓர் அணுக்குண்டைச் செய்வதற்கு வேண்டிய அளவு புளுட்டோனியம் இருக்கிறது என்று நினைத்தாலே போதும், அமெரிக்க அரசுக்கு தலைமயிரெல்லாய் குத்தென்று நிற்கத் தொடங்கி விடும். ஆனால் தென் ஆபிரிக்கா ஆறுகுண்டுகள் செய்வதற்குப் போதுமான ஆயுதம் செய்வதற்கு ஏற்ற தரத்தில் வடித்தெடுத்த யுரேனியத்தை, இரகசியமாக அமெரிக்காவுக்கு விற்க இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு முயன்றது பற்றிய தகவல் ஒன்று நியூஸ்வீக் சஞ்சிகைக்குக் கிடைத்துள்ளது. அப்பொழுது வாஷிங்ரன் அந்தப் பேரத்தை வெறுமனே கைவிட்டு விட்டது. அண்மையில் கிளின்ரன் நிர்வாகம் மீண்டும் அந்த விடயத்தில் கவனம் எடுத்தது. ஆனால் இப்பொழுது அது பற்றிய அறிவுசார் வட்டாரங்களின் கூற்றுப்படி, தென் ஆபிரிக்கா தனது மனதை மாற்றிக் கொண்டுவிட்டது. அது அந்த யுரேனியத்தைத் தன்னிடமே வைத்துக் கொள்ள விரும்புகிறது.

1992 ஒக்ரோபரில் சனாதிபதி எஃப் டப்ள்யூ கிளார்க் அந்த நாட்டின் அணு ஆயுதத் திட்டத்தைக் கைவிட்டபோது, தென் ஆபிரிக்கா வாஷிங்ரனுடன் தொடர்பு கொண்டது. அப்பொழுது சனாதிபதி புஷ்சின் நிர்வாகம் நவம்பர் மாதத்தில் தேர்தல்கள் நடக்கும்வரை அந்த விடயத்தைப் பின்போடும்படி வேண்டியதாகத் தென் ஆபிரிக்க உயர் அலுவலர் ஒருவர் கூறுகிறார். அதன்பின்பு புஷ் தோற்றதால் புதிதாக ஆட்சிக்கு வந்த கிளின்ரன் நிர்வாகம் அந்த விடயத்தில் அக்கறை கொண்டு தொடரவில்லை என்று வோசிங்ரனில் உள்ள முக்கிய அலுவலர் ஒருவர் கூறுகிறார். அவ்விதமாகத் தாமதித்து, 1993 இன் நடுப்பகுதியில் அமெரிக்கா அதுபற்றிச் சிரத்தை எடுத்த வேளையில் ஏற்கனவே தென்னாபிரிக்கா அந்த யுரேனிய எரிபொருளைத் தனது வர்த்தக ரீதியான அணு உலையின் பாவனைக்கு எடுக்கத் தீர்மானித்து விட்டது.

தற்பொழுது தென் ஆபிரிக்கா தனது நாடடு அணுக்குண்டுத் திட்டத்தில் வேலை செய்தவர்களைத் தொடர்ந்து தென் ஆபிரிக்காவிலேயே இருந்து தொழில் செய்ய வைக்க அமெரிக்காவின் உதவியை நாடுகிறது. அவர்களைத் தங்கள் அணுக்குண்டுத் திட்டங்களுக்கு ஈர்த்து எடுக்க வெளிநாட்டு முகவர்கள் வாய்ப்புக்கள் கூறித் திரிகின்றனர். அதனால் அவர்கள் மூலம் எங்காவது அணுக்குண்டு உண்டாக்கப்படும் ஆபத்து உள்ளது என்று வோஷிங்ரனில் உள்ள அணு நிபுணர் டேவிட் அல்பிறைட் கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒபன்ஹைமர் உண்மையில் மொஸ்கோவுக்கு உதவினாரா?

மொழியாக்கம் :
— திரு. இருபைராஜா —

**முன்னாள் சோவியத் உளவாளி ஒருவனின் கூற்று, பல விமர்சகர்களை மனம் குமுறச் செய்து, அதனை அப்பட்டமான பொய்யென விவாதிக்கச் செய்துள்ளது.**

உவன் தனது கரங்களாலேயே ஒரு கொலையைச் செய்துள்ளதுடன் பல கொலைகள் நடந்தேறத் திட்டம் தீட்டியும் உள்ளான். அவன் அந்தப் படுகொலைகளைப் பற்றி எவ்விதத் தயக்கமும் இன்றிக் கூறினான். அவனுடைய பழைய தலைவனான பேரியாவுக்கும், பேரியாவின் பெருந் தலைவனான சோவியத்தின் முன்னாள் சர்வாதிகாரி ஸ்ராலினுக்கும்,அந்த உலவாளியின் உள்ளத்தில் இன்னும் அபிமானம் உள்ளது. அவர்களுடைய படுபாதகக் குற்றச் செயல்களைப் பற்றி அவன் ஒழிவு மறைவு இன்றிக் கூறுகிறான் என்றாலும் அவன் அவர்களைப் போற்றுபவனாகவே உள்ளான். ஸ்ராலின் இரகசியப் பொலிஸ் படையின் தலைவனாக (1938–53) இல் இருந்த பேரியாவின் தேர்ந்தெடுக்கப்பட்ட உளவாளிகளில் ஒருவனாக பாவெல் சுடொபுலடோவ் திகழ்ந்தான். ஸ்ராலினின் சர்வாதிகாரம் சோவியத்தில் நிகழ்த்திய கொடூரங்களைப் பற்றி அவனுக்கு நன்கு தெரியும்.

அவன் வெளிப்படுத்தியுள்ள மிகவும் திடுக்கிட வைக்கும் செய்தியாக உள்ளது, உலகப் புகழ் பெற்ற பௌதிகவியலாளர்களான ஒபன்ஹைமர், என்றிகோ:பர்மி, நீல்ஸ்போஹர், லியோசிஸ்லார்ட் முதலியோர் இரண்டாவது உலகப் போரின் போது அமெரிக்க அணு குண்டு இரகசியங்களை மொஸ்கோவிற்குப் பரிமாற்றினர் என்பதாகும். அந்தச் செய்தியை அமெரிக்காவிலும், ருஷ்யாவிலும் உள்ள வலது, இடது இரு பக்கமும் சார்ந்த விமர்சகர்களும், அறிஞர்களும், வரலாற்றாளர்களும் வன்மையாகக் கண்டித்ததுடன் அந்தக் கூற்றில் நிறையப் பிழைகளும், உறுதியான சீர் இன்மைகளும், நம்பத்தகாமைகளும் உள்ளதாகக் கூறுகிறார்கள்.



''எவருக்கும் தேவைப்படாத ஒரு சாட்சிக்காரரான பழைய சோவியத் உளவாளியின் நினைவுக் குறிப்புக்கள் அடங்கிய 'சிறப்புப் பணிகள்' என்ற நூலின் ஓர் அத்தியாயத்தைச் சுருக்கிச் சென்ற ஏப்ரல் 25 ஆந் தேதிய ரைம் சஞ்சிகை அதன் அமெரிக்கப் பதிப்பில் வெளியிட்டது. உடனே அந்த விடயம் வெகுவாகப் பலரது கவனத்தைக் கவர்ந்தது. சுடொபுலடோவும், அவனுடைய மகன் அனடோலியும் அந்த நூலின் ஆசிரியர்கள் என்று குறிப்பிட்டிருந்தாலும் அந்த நூலை உண்மையில் வடிவமைத்தவர்கள் முன்பு ரைம் சஞ்சிகையின் மொஸ்கோ அலுவலகத்திற்குப் பொறுப்பாளராக இருந்த அமெரிக்கரான எழுத்தாளர் ஜெரால்ட் சீக்டரும், அவருடைய மனைவி லியோனாவும் ஆவர். அவர்கள் சுடொபொலடோவுடன் நடத்திய 20 மணி நேர உரையாடலின் ஒலிப்பதிவில் இருந்தும் அவனுடைய மகனால் சோவியத் உளவு நிறுவனமான கே. ஜீ. பி யிடம் இருந்து சேர்த்தெடுக்கப்பட்ட அலுவலக ஆவணங்களில் இருந்தும் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு அந்த நூலை வடிவமைத்துள்ளனர். தற்போது 86 வயதான அந்தப் பெயர் பெற்ற உளவாளியான சுடொபுலடோவ் பிரச்சனைக்குரிய அந்த அத்தியாயத்தின் ருஷிய மொழியாக்கத்தை வாசித்து விட்டு அதில் கையொப்பமிட்டுள்ளார். அதில் அவன் ஒபன்ஹைமரும் இன்னும் சில பௌதிகவியலாளர்களும் அந்த நாள்களில் அமெரிக்காவுடன் சார்ந்த நேச நாடான சோவியத் ருஷ்யாவுக்கு ஹிட்லரைத் தோற்கடிக்க உதவுவதற்காக அவர்கள் அந்த நாட்டின் உளவாளிகள் என்று அறிந்திருந்தும் கூட அணு இரகசியங்களை அவர்கள் பெற வழி செய்தனர் என்று கூறப்பட்டுள்ளது. அத்துடன் அந்த அறிஞர்கள் அணு குண்டு செய்தல் பற்றிய இரகசியங்கள் பரந்து போனால் அதன்

மூலம் உலக அமைதிக்கு அனுகூலம் ஏற்படும் என்று நம்பினார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. ஒபன்ஹைமர், ஃபர்மிசிஸ்லார்ட்ஆகியோர் அணுகுண்டு செய்வதில் ஆய்வு நடத்திய லொஸ் அலமோஸ் நிவ்யூ மெக்சிக்கோ உட்படப் பல ஆய்வு கூடங்களில் உளவாளிகள் அவற்றைக் கண்டெடுத்துப் பிரதி பண்ணிக் கொள்வார்கள் என்று தெரிந்திருந்தும் கூட இரகசியமான ஆவணங்களைப் பாதுகாப்பின்றி வெளியே விட்டுச் சென்றனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

லொஸ் அலமோசில் உள்ள ஆய்வு கூடத்திற்குள் ஊடுருவிய சோவியத் உளவாளிகள் பெறுமதிமிக்க பல இரகசியங்களை அறிந்து கொண்டு சென்று தங்கள் நாட்டில் அணுகுண்டு செய்வதை விரைவு படுத்தினர் என்பதை மறக்க முடியாததென்று சுடொபுலடொவ் கூறினார். அறிவியல் உலகில் இன்னும் தேவைகளாகப் போற்றப்படும் அந்தப் பௌதிகவியலாளர்கள் சோவியத்தின் உளவறியும் செயற்பாடுகளுக்கு உண்மையாகவே ஒத்துழைப்பு நல்கினரா? அணுகுண்டு செய்தல் பற்றிய நூல் ஒன்றை எழுதியமைக்காக 1986 இல் புலிட்சர் பரிசு பெற்ற றிட்சர்ட் றோட்சும், ஐதரசன் குண்டின் தந்தையான எட்வர்ட் டெல்லரும் கடுமையான கம்யூனிஸ் எதிர்ப்பாளர்களாக இருந்ததுடன் அவர்களுள் ஸ்ராலினின் பயங்கரவாத ஆட்சியை வெளிப்படையாகவே எதிர்த்த ஃபர்மி ஒரு பொழுதுமே சோவியத்துடன் ஒத்துழைத்து இருக்க மாட்டார் என்று விமர்சகர்கள் ஆணித்தரமாகச் சாதிக்கின்றனர்.

மொஸ்கோவின் முன்பு பேரியா தலைமை தாங்கியதும் சுடொபுலடோவ் பணியாற்றியதுமான உளவு நிறுவனத்தில் வழிவந்த தற்போதைய ருஷ்ய வெளிநாட்டுப் புலனாய்வுச் சேவை நிறுவனமும் மிக அரிதான ஒரு செயலாக மறுப்புரை வெளியிட்டுள்ளது. என்றிகோ.ஃபர்மி, லியோசிஸ்லார்ட், ஒபன் ஹைமர் என்பவர்களைத் தொடர்பு படுத்தி சுடொபுலடோவ் கூறியிருப்பவை ''உண்மைக்குப் புறம்பானவை'' என்று அந்தப் புலனாய்வுப் பணியகத்தின் அணு விடயங்களைப் பற்றிய உளவு நிபுணரான ஒலிகா தசரொவ் என்பவர் கூறுவதுடன் 1945 இல் எங்கள் வட்டாரத்தைச் சேர்ந்த ஒருவர் ஒபன் ஹைமருக்குத் தெரிந்த ஒருவருடன் உரையாடல் ஒன்று நடத்தினார் என்றும் கூறியுள்ளார். ஆனால் அந்த உரையாடல் பற்றிய கதை மூன்றாம் தரப்பில் இருந்து தெளிவற்ற ஒன்றாகவும் இருப்பதுடன் அதிலிருந்து எதையும் ஊகித்துக் கொள்ள முடியாமல் உள்ளது.

முன்னாள் சோவியத் உளவாளியின் நினைவுக் குறிப்புகளுக்கு நூலுருக் கொடுத்த சீக்டர் தம்பதியர் தாங்கள் வெறுமனே சுடொபுலடோவின் கூற்றை நூலாக்கியது அல்லாமல் அதனை நிரூபிக்க வென எதுவும் செய்யவில்லை என்று கூறுகின்றனர். ''அது அவனுடைய கூற்று என்பதனால் தாங்கள் அதனைத் தன்மை நிலை உரையாடலிலேயே வெளிவரச் செய்தோம்'' என மேலும் அவர்கள் கூறுகின்றனர். சோவியத்தில் நிகிடா குருசேவ் ஆட்சிக்கு வந்த பின்பு சுடொபுலடோவின் நாயகனான பேரியா விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு 1653 இல் சுட்டுக் கொல்லப்பட்டான். சுடொபுலடோவுக்கு 15 ஆண்டுகள் சிறை விதிக்கப்பட்டது. பின்பு 1982 இல் அவன் கம்யூனிஸ்ற் கட்சியின் மத்திய செயல் குழுவுக்கு மன்றாட்ட மனு அனுப்பி அதில் ஒபன்ஹைமர், ஃபர்மிபோஹர் என்பவர்களிடமும், ஏனையோரிடமும் இருந்துதான் அணு இரகசியங்களைத் திரட்டிக் கொடுத்த சாதனையை எடுத்துக் காட்டி விடுதலை பெற்றான். அந்த மத்திய சீக்டர் தம்பதியர்களின் அந்த நூலின் ஒவ்வொரு சொல்லையும் இலகுவாகக் கவனத்தில் எடுத்துப் பார்த்திருக்கலாமே என்று கூறுகின்றது.

ஆனால் உளவாளியின் மகனான அனடோலி தனது தந்தையின் கூற்றை நிரூபிக்கக்கூடிய பல ஆவணங்களும், அணு உளவு வேலைகள் பற்றிய பெரும் பதிவு என்று அழைக்கப்பட்ட கோவையும் காணாமல் போயோ, அல்லது மாறாட்டம் செய்யப்பட்டோ, அல்லது அழிக்கப்பட்டோ உள்ளதாகக் கூறித் தனது தந்தையினதும், அவருடன்வேலை செய்த வேறு உளவாளிகளினதும் வாய் மூலமான சான்றுகளில் இருந்தும் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு நினைவுக் குறிப்புக்களில் இருந்தும் ஆக்கப்பட்டதாகக் கூறுகிறான்.

இருந்தாலும் சுடொபுலடோவில் 50 ஆண்டு கால நினைவுக் குறிப்புக்களில் பல பிழைகளும் மாறாட்டங்களும் உள்ளன.

✶ 1944 இல் லொஸ் அலமொஸில் வைத்துத் தான் கிஸ்லார்ட்டிடமிருந்து இரகசியங்களைப் பெற்றுக் கொண்டதாக அவன் ஒலிப்பதிவில் கூறியிருந்தாலும் அந்த ஆண்டில் அவன் அங்கு வேலை செய்திருக்கவில்லை.

✶ 1943 ஜனவரி மாத இறுதிக் காலத்தில் சோவியத் அதற்கு முந்திய மாதத்தில் ஃபர்மி சிகாகோவில் முதன் முதலாகச் சங்கிலித் தொடராக அதனாக்கத்தே விளையும் அணு மாற்ற விளைவுகள் பற்றி நடாத்திய இரகசியப் பரிசோதனைகள் பற்றிய முழு அறிக்கையொன்றையும் பெற்றுக் கொண்டதாகச் சுடொபுலடோவ் கூறியுள்ளான். ஆனாலும் பௌதிகவியலாளர்கள ஐகோர் கர்சட்டரேவ் ஒரு புத்தகத்தின் அனுபந்தத்தின் மறு பதிப்பில் 1943 ஜூலை 3 ஆந் தேதியிட்டு வெளியிட்ட குறிப்பொன்றில் அத்தகைய வெற்றிகரமான பரிசோதனை ஒன்றை அமெரிக்கர்கள் ''அண்மை எதிர்காலத்தில்'' நடத்தக் கூடுமெனக் கூறியுள்ளனர். அதிலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்



ருந்து அவருக்கு ஏற்கனவே 6 மாதங்களுக்கு முன்பு அது நடத்தப்பட்ட செய்தி தெரியாமல் இருந்துள்ளதைக் காண முடிகிறது. அத்தகைய முக்கிய தகவல் கிடைத்திருந்தால் கர்ச்சட்டோவுக்கு அது முதலில் தெரிவிக்கப்பட்டிருக்கும். அவர் தான் அணு குண்டு செய்ததில் ஈடுபட்டிருந்த சோவிய அறிவியலாளர் குழுவொன்றின் தலைவராக இருந்தார்.

* சோவியத் புலனாய்வு முகவரும், பௌதிகவியலாளருமான யாகோவ் டர்லட்ஸ்கிக்கும், போஹருக்கும் இடையில் 1945 இல் டென்மார்க்கில் ஓர் உரையாடல் நடந்ததாக சுடொபுலடோவ் கூறுகிறான். அந்த உரையாடலின் போது டர்லட்ஸ்கி சோவியத்தில் கட்டப்பட்ட அணு உலை இயங்கவில்லை என்று கூறியதும் போஹர் அவருக்கு அதில் என்ன பிழை ஏற்பட்டது என்பதைச் சரியாகக்கூறி அதனைச் சரிப்படுத்தும் விதத்தையும் சொன்னார் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் போஹரின் மகன் ஆகே என்பவர் அப்படிச் சந்திப்பு நடந்த போது தானும் கூட அங்கே இருந்ததாகவும், தனது தந்தை எவ்விதமான தொழில் நுட்ப இரகசியங்களையும் வெளிப்படுத்தவில்லை என்றும் வலுவாகக் கூறினார். முன்பு சோவியத் பௌதிகவியலாளராக இருந்து தற்போது அமெரிக்காவில் மெரிலண்ட் பல்கலைக்கழகத்தில் பௌதிகம் கற்பிக்கும் றொஆள்டு சக்டீவ் என்பவர் கூற்றுப்படி டர்லட்ஸ்கி கூட இதனை உறுதிப்படுத்துவதாக உள்ளது. ஏனெனில் டர்லட்ஸ்கி இறப்பதற்கு முன்பு எழுதிய 30 பக்க அறிக்கை ஒன்றில் அந்தச் சந்திப்பு தோல்வியில் முடிந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளாராம்.

* அணு குண்டு ஒன்றைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்த ஒபன்ஹைமர் தலைமையிலான அமெரிக்க விஞ்ஞானிகள் குழுவுடன் இணைந்து செயற்பட ஒரு பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் குழு அனுப்பப்பட்ட போது அதில் கிளாவுஸ் ஃபுக்ஸ் என்பவரையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று ஒபன்ஹைமர் ஆலோசனை கூறியதாக சுடொபுலடோவ் கூறுகிறார். இந்த விடயம் அலெக்சான்டர் ஃபெக்னிசோவ் என்ற சோவியத் உளவாளியின் அறிக்கை ஒன்றை ஆதாரமாக வைத்துக் கூறப்பட்டுள்ளது. ஆனால் ஆவணப் பதிவுகள் அந்தக் குழுவிற்கான உறுப்பினர்களைப் பிரிட்டிஷ் அதிகாரிகளே தேர்ந்து எடுத்ததாகக் காட்டுகின்றன. இன்னும் ஒரு முக்கிய விடயம் ஃபுக்ஸ் பின்பு அமெரிக்க அணு குண்டின் உண்மையான வரைவுகளைச் சோவியத்திற்குக் கொடுத்ததாகும்.

என்றாவது அது அப்படி நடந்து ருஷ்யாவினதும், அமெரிக்காவினதும் இரகசிய ஆவணக் காப்பகங்கள் அனைத்தும் திறந்து தேடப்பட்டாலுங் கூட சுடொபுலடோவின் குற்றச் சாட்டை முழுமையாக நிரூபிக்கவோ நிரூபிக்க விட முடியாமல் விடவோ நேரலாம். ஏனெனில் அவை ஸ்ராலினின் காலத்துத் தந்திரோபாயங்களும், சூழ்ச்சிகளும் கொண்டு ஆனவையாகும். றொபர்ட் கொண்கஸ்ட் என்ற பிரபல வரலாற்று அறிஞர் சுடொபுலடோவின் நூலுக்குத் தந்துள்ள அறிமுக உரையில், ''தனிப்பட்ட நபர்களின் நினைவுக் குறிப்புக்கள் விமர்சனக் கண்ணோட்டத்தில் நோக்கப்பட வேண்டும் என்பதுடன், எல்லா ஆவணங்களும் அப்படியே நோக்கப்பட வேண்டும். அவை இரண்டும் வெறும் வரலாற்றுச் சான்றுகளேயன்றி முழு நிறைவானவை அல்ல'' என்று குறிப்பிட்டுள்ளார். ருஷ்யாவில் இருந்து பல ஆவணங்கள் வெளிவரத் தொடங்கியுள்ள போதிலும் சுடொபுலடோவின் சான்றுகள் முக்கியமான ஆனால் இது வரை ஆவணப்படுத்தப்படாத விடயங்கள் தொடர்பாகத் தகவல்கள் சொல்வனவாக உள்ளன. அமெரிக்காவின் ஆரம்ப கால அணுகுண்டுத் தயாரிப்பாளர்களின் கௌரவத்தைத் தாக்கும் அளவுக்கு அவை தகவல் தருகின்றன.

ரைம் மே 23, 1994.

★★

## மலேசியா விரும்பாத விருந்தாளி

கம்போடியாவில் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் ஒரு தோல்வியில் முடிந்த அரசியல் சதிப் புரட்சியில் பங்கு கொண்டதாகக் கூறப்படும் இளவரசர் நொறடோம் சக்கர பொங்கை மலேசியாவிற்கு கம்போடியப் பிரதமர்களான இளவரசர் நொடோம் றணறித்தும், ஹூன் சென்னும் வருகை தருவதற்கு முன்பு நாட்டை விட்டு வெளியேறும்படி கூறப்பட்டிருப்பதாக மலேசிய வெளியுறவு அமைச்சர் அகமட்படாவி கூறினார். சென்ற ஜூலை 3ஆந் தேதி அந்தச் சாடப்பட்ட சதிப்புரட்சி முறியடிக்கப்பட்ட நாள் முதல் சக்கர பொங் மலேசியாவில் தங்கியுள்ளார். கம்போடியத் தலைவர்கள் மலேசியாவிற்கு வரும் தேதி இன்னும் குறிப்பிடப்படவில்லை.

★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓட்டங்களை எடுத்துக் குவிக்கும் இயந்திரம், அதிசய கிறிக்கற் பிரையன் லாறா.

கிறிக்கற் என்ற விளையாட்டுக்கு 'லாறாவித்தை' என்று ஒரு மறு பெயர் சூட்டலாம் போல் உள்ளது. சென்ற யூன் 6 ஆந் தேதி இங்கிலாந்தில் வோர்விக் செயாரை எதிர்த்து டறஹம் அணி ஆடிய ஆட்டத்தில் வோர்விக் செயாருக்காக மிகத் திறமையாக 501 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழக்காமல் சாதனை படைத்தார் பிரையன் லாறா. உலகில் எங்குமே ஆகக் கூடிய ஓட்டங்கள் எடுத்தமை இதுவேயாகும். இதற்கு முந்திய அதி உயர் சாதனையான 499 ஓட்டங்கள் பாகிஸ்தானின் ஆரம்பத் துடுப்பாட்டக்காரர் ஹனிப் மொகமடால் பெறப்பட்டு இதுவரை 35 ஆண்டுகளாக நிலைத்திருந்தது.

இதற்கு 7 வாரங்களுக்கு முன்புதான் இங்கிலாந்து அணியுடன் மேற்கு இந்திய அணியை எதிர்த்து ஆடிய இறுதி ஆட்டத்தில் ரெஸ்ட் போட்டியொன்றில் ஆகக் கூடிய சாதனையாக 375 ஓட்டங்களை ஈட்டிய, அதன் மூலம் 1957 – 58 இல் கிங்ஸ்டன் அணியில் பாகிஸ்தானை எதிர்த்து ஆடிய விளையாட்டில் சேர் கார்பீல்ட் சோர்பார்ஸ் படைத்த சாதனையான 365 ஓட்டங்களைத் தட்டிப் பணித்தார். லாறாவின் இந்த அடுத்தடுத்த சாதனைகள் கிறிக்கற் பிரியர்களையும், விமர்சகர்களையும் அதிசயத்தில் ஆழ்த்தியுள்ளது.



மொழியாக்கம்:
— திரு. கிருபைராஜா —

மேற்கு இந்தியர்கள் குதூகலக் களிப்பால் பொங்கிக் கத்திக் கொண்டு இருக்கையில் சேர் சோர்பார்ஸ் விளையாட்டு மைதானத்துக்குள் சென்று லாறாவுடன் கை குலுக்கித் தனது வாழ்த்தைத் தெரிவித்தார். "எனது சாதனையை முறியடிக்க இவரிலும் சிறந்தவர் இல்லை" என்று மகிழ்ச்சி தெரிவித்த சோர்பாஸ், "என்னைப் பொறுத்தவரையில் இன்றுள்ள விளையாட்டாளர்களில் இவர் மட்டும் தான் இந்த விளையாட்டை விளையாடவேண்டிய விதமாக விளையாடுகிறார்" என்று புகழாரம் சூட்டினார். "இவர் தனது காற்கவசத்தைக் கொண்டு விளையாடாமல் துடுப்பைக்கொண்டு விளையாடுகிறார்" என்றும் போற்றினார். கிறிக்கற் விளையாட்டில் எல்லாத்துறைகளிலும் கைதேர்ந்த அந்தப் பழம்பெரும் வீரர் சோர்பார்ஸ் கூறியதில் அர்த்தம் பொதிந்திருக்கத்தானே வேண்டும். ஏனெனில் அவரைப்போல் இந்த விளையாட்டில் திளைத்து ஆடியவர்கள் மிகச் சிலரே.

*கிறிக்கற் உலகில் இன்று தனக்கென நிரந்தர இடமொன்றை பிரையன் லாறா பிடித்துள்ளார். அவர் அண்மையில் இங்கிலாந்துக்கெதிராக 375 ஓட்டங்களைப் பெற்று ரெஸ்ட் விளையாட்டில் அதிகூடிய ஓட்டங்களை எடுத்த பெருமையைத் தட்டிக்கொண்டார். மேலும் இங்கிலாந்தில் நடைபெறும் "கவுண்டி" போட்டிகளில் முதற்றர கிறிக்கற் போட்டியில் ஆட்டமிழக்காமல் 501 ஓட்டங்களைப் பெற்றுப் புதிய சாதனையொன்றைப் படைத்தார். அத்துடன் ஒரு பருவகாலத்தில் ஆகக் கூடிய செஞ்சரிகளை போட்ட ஆல்ஷின் காலிச்சரனின் 9 செஞ்சரிகளையும் லாறா சமப்படுத்தியுள்ளார். கிறிக்கற் உலகில் இது ஒரு மாபெரும் சாதனையாகும்.*

ரெஸ்ட் போட்டி விளையாட்டில் சாதனை படைத்த உடனே வோர்விக்செயார் அணியில் விளையாட லாறா ஒப்பந்தம் செய்து கொண்டார். அந்த அணியின் பல்துறைத் திறமையாளரான இந்தியர், மனோஜ் பிரபாகருக்கு குதிக்கால் சில்லில் காயம் ஏற்பட்டு விளையாட முடியாமல் இருந்ததால் அந்த இடத்திற்கு லாறா வந்தார். அந்த மாவட்ட விளையாட்டுப்போட்டியில் வெகு விரைவாக ஒன்றையடுத்து ஒன்றாக நூறு நூறு என்று ஓட்டங்கள் குவித்த லாறா உச்சச் சாதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்தார். அவர் வோர்விக் செயார் அணியில் இணைந்த பின்பு மென்மேலும் உறுப்பினர்கள் அந்த அணியில் சேர்ந்து கொள்ளத் தொடங்கியதுடன் நுழைவாயில் கட்டணம் புதுமையான முறையில் வந்து குவிந்தது.

மாவட்டப்போட்டிகளில் இது வரை லாறாவின் செயல்திறன் இதோ:

☘ கிளமோர்கனை எதிர்த்து:
147 ஓட்டங்கள்- 160 பந்துவீச்சில் 25 முறை 4 கள், 2 முறை 6 கள், 165 நிமிடத்தில் பெறப்பட்டன.

☘ லிசெஸ்டர்சயரை எதிர்த்து:
160 ஓட்டங்கள் 136 பந்துவீச்சில் 18 முறை 4 கள், 176 நிமிடத்தில் பெறப்பட்டன.

☘ லிசெஸ்டர்சயரை எதிர்த்து:
120 ஓட்டங்கள் ஆட்டம் இழக்காமல்- 168 பந்து வீச்சில், 22 முறை 4 கள், 172 நிமிடத்தில் பெறப்பட்டன.

☘ சோமர்செட்டை எதிர்த்து!
136 ஓட்டங்கள்– 94 பந்து வீச்சில், 14 முறை 4 கள், 2 முறை 6 கள், 125 நிமிடத்தில் பெறப்பட்டன.

☘ மிடில்செக்ஸை எதிர்த்து:
26 ஓட்டங்கள்- 49 பந்து வீச்சில், 3 முறை 4 கள், 72 நிமிடத்தில் பெறப்பட்டன.

☘ மிடில்செக்ஸை எதிர்த்து;
140 ஓட்டங்கள் – 147 பந்து வீச்சில் 22 முறை 4 கள், 1 முறை 6 கள், 192 நிமிடத்தில் பெறப்பட்டன.

☘ டறஹம்மை எதிர்த்து:
501 ஓட்டங்கள் ஆட்டம் இழக்காமல், 427 பந்துவீச்சில், 62 முறை 4 கள், 10 முறை 6 கள், 474 நிமிடத்தில் பெறப்பட்டன.

வோர்விக் செயருக்காக விளையாடும்பொழுது இனிங்ஸ் முடிவுற்றது. லாறா அதில் 501 ஓட்டங்கள் பெற்றார். (முதற்றரக் கிறிக்கற் போட்டியில் 5 அணிகளுக்கு இடையில் நடந்த விளையாட்டில் 1943 – 44 இல் ஹிந்து அணியைச் சேர்ந்த விஜய் ஹசார் ஏனைய அனைவரும் பெற்ற 387 இல் 309 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழக்காமல் சாதனை படைத்தார்.) லாறா 5 போட்டிகளில் 7 இனிங்ஸில் 1000 ஓட்டங்களைப் பெற்றது தான் இங்கிலாந்தில் நடந்த போட்டிகளில் ஆகவும் விரைவாகத் தொகையான ஓட்டங்கள் எடுத்துக் குவித்த சாதனையாகும். அவருடைய அந்த அதிசயத்துக்கு உரிய சராசரி 235 ஓட்டங்கள் ஆகும்.

லாறாவுக்கு வாழ்த்துச்சொல்ல முந்திக்கொண்டு வந்த ஹனிப் முகமட் ''நான் அவர் விளையாடுவதை மூன்று ஆண்டு காலமாகப் பார்த்து வருகிறேன். அவர் ஓர் அதிசயமான கிறிக்கற் ஆட்ட வீரர். அவர் முழு நம்பிக்கையுடன் மட்டை பிடித்து அடிக்கிறார். அவர் ரெஸ்ட் கிறிக்கற் போட்டியில் உலக சாதனையை முறியடித்த பொழுதே எனக்குத் தெரியும். அவர், நான் பெற்ற அளவு ஓட்டங்கள் எடுக்கும் திறமை உடையவர்'' என்று புகழ்ந்துரைத்தார். அந்தச் சிறிய உருவமான பாகிஸ்தானிய துடுப்பு ஆட்ட வீரர் லாறாவின் வெற்றிக்கு ஒரு காரணம் அவருடைய அளவான உயரந்தான் என்றும் கூறினார். '' அவர் மிகவுங் கட்டையானவர் என்பதுடன் நானும், என்னைப்போன்ற ஏனையவர்களான சர்டொனால்ட் பிறட்மன், சர் லென் ஹட்டன் போன்றவர்களும் நிறைய ஓட்டங்கள் எடுத்துள்ளோம்'' என்று அவர் சொன்னார்.

மென்மையான பழக்க வழக்கங்கள் உள்ள தன்மையான அமைதியான பேச்சுள்ள 5' 8'' உயரமான இந்தத் றினிடாட் நாட்டுக்காரர் மேற்கு இந்தியத் தரத்தில் ஒப்பிடுகையில் ஒரு பெரிய உடலமைப்புக் கொண்டவர் அல்ல: ஆனால், அவர் துடுப்பேந்தி விளாசித்தள்ளும் அடிகளோ பயங்கரமானவை. அளவான நேரமெடுத்து, எளிதாக இயங்கி, கட்டுப்படாத விதமான பின்னடி எடுத்து வைத்தல் நுட்பத்துடன் ஒருவகைத் தாளநடையுடன், செயற்படும் அவரை அவருடைய மணிக்கட்டுகள் தனித்தன்மையோடு அசைவுற வைக்கின்றன.

இந்தச் சிறிய உடலுருக் கொண்ட இடதுகை வழக்கமான விளையாட்டாளரின் 50 நாள் அகோரத் துடுப்பாட்டத்தைப் பார்க்கும் பொழுது காலஞ்சென்ற வோல்டர் றொபின்ஸ் கூறியது நினைவில் வருகிறது. 1934 ஆம் ஆண்டில், அந்த வரலாறு படைத்த அவுஸ்திரேலியரான டொனால்ட் பிரட்மன் 242 பந்து வீச்சுகளுக்கு 200 ஓட்டங்கள் (போட்டியொன்றின் மிகவும் கூடிய வேகம்) எடுத்தபோது றொபின்ஸ் அதனை நயம்பட மொழிந்து, '' பிராட்மன் தான் முகங் கொடுத்த ஒவ்வொரு பந்து வீச்சிற்கும் இருமுறை துடுப்பு விசிறினார்'' என்று கூறினார். ஆனால், அந்த அளவுக்குப் பார்வையாளர்களை மயக்கிக் கிறங்க வைத்த பிராட்மன் கூடச் சாதனைப் புத்தகங்களில் அவ்வளவு இடத்தை நிரப்பவில்லை.

1969 இல், சாந்த குரூஸில் 11 பிள்ளைகள் கொண்ட குடும்பத்தில் 7 சகோதரர்களில் கடைக்குட்டியாக லாறா பிறந்தார். 1984 இல் அவர் 19 வயதுக்குக் குறைந்தவர்கள் அணியொன்றில் விளையாடிய போது அவருடைய வயது 15 தான். அவர் தனது முதலாவது பெரும்போட்டிப் பிரவேசத்தை 1987 இல் நடத்தியதுடன், பாகிஸ்தானுக்கு எதிராக விளையாடிய மேற்கு இந்தியத் தீவுகளின் 23 வயதுக்குக் குறைந்த அணிக்குத் தலைமை தாங்கினார். அவர் 1993 இல் சிட்னி நகரில் அவுஸ்திரேலியாவை எதிர்த்து நடந்த போட்டியில் அதிசயிக்கத் தக்க விதமாக 273 ஓட்டங்கள் ஈட்டிய பொழுது கிறிக்கற் நிபுணர்கள் யாவரும் ஒரு புதிய கிறிக்கற் தாரகை உதித்ததென்று வாழ்த்தினர். அவர் அங்கிருந்து திரும்பித் தமது தாய் நாட்டுக்குச் சென்றபோது அவரைப் பேணி வளர்த்து வழிகாட்ட சோர்பார்ஸ் காத்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் உற்சாகத்திற்குரிய விடயமாக இந்த இளம் ரினிடாட் நாட்டுக்காரரின் திறமை ஆங்கிலேயப் பந்து வீச்சுக் காரர்களை எதிர் கொண்டபோதே வெளிப்படுத்தப் பட்டுள்ளது. லாறாவின் வல்லமையும், மகோன்னத சாதனையும் எவ் விதமும் குறைத்துக் கூறுவதாக இல்லாமல் ஆங்கிலேயப் பந்து வீச்சுக்காரர்களின் திறன் குறைந்து உள்ளது என்று எண்ணும் ஒரு சாராரும் உள்ளனர். முன்னைய சாதனையாளர்கள் விரிப்பு இல்லாத கிறிக்கற் திடல்களில் மிகவுந் தரம் உயர்ந்த பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க வேண்டியிருந்தது.

எதையும் வெளிப்படையாக நறுக்கெனச் சொல்பவரும், இங்கிலாந்தின் அதிவேகப் பந்து வீச்சாளருமான ஃபிரடி ரூமன் லாறாவின் சாதனையைப் புகழ்ந்து பேசிக் கொண்ட அதே வேளையில், இங்கிலாந்தில் கிறிக்கற் விளையாட்டின் தரம் குன்றிவிட்டதாக விமர்சித்துத் தாம் கிறிக்கற் விளையாட்டை விட்டுவிட்டு ஓய்வெடுக்கப் போவதாகக் கூட அச்சுறுத்தினார்.

ஆனால், இங்கிலாந்தின் விளையாட்டுத் தரம் லாறாவுக்கு ஒரு பிரச்சனையல்ல. விளையாட்டையும், அதன் பிரியர்களையும் பொறுத்தவரையில் பிரையன் லாறா இந்த ஆண்டைப் புகழ் பூத்ததாகச் செய்து விட்டார்.

புரண்லைன், ஜூலை, 1994.

✶



# யாருடையது உண்மை?

மொழியாக்கம் :
— திரு. கிருபைராஜா —

கறுப்பு வெள்ளை திரைப்படமாகிக் கூட அதில் வரும் உருவங்கள் பார்ப்பவரின் தலையை விறைக்க வைக்குமாப் போல் பாத்திர அமைப்புக் கொண்டுள்ளன. விருப்பப்படியெல்லாம் முதியோரான ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எல்லாம் சுட்டுக் கொல்லப்படுகின்றனர். அவர்களுடைய இரத்தம் பீறிட்டுப்பாய்ந்து வீழ்ந்து உறைபனியின் மேலும், கற்களின் மேலும், தெருத்திண்ணைகளிலும் பரவி வடிகிறது. ஸ்ரீவன் ஸ்பில்பர்கின் தயாரிப்பான, ஒஸ்கார் பரிசு பெற்ற திரைப்படமான சின்ட்லர்ஸ் லிஸ்ட், ஐரோப்பாவில் யூதர்களும், நாடோடிகளான ஜிப்ஸிகளும், தன்னினச் சேர்க்கையாளர்களும் மேலும் பல விரும்பத்தகாதோர் என்று எண்ணப்பட்டோரும் ஜேர்மனியின் மூன்றாம் சாம்ராச்சியமான நாசிகள் ஆட்சியால் வெறுக்கப்பட்ட எவரும் அவர்களுடைய உரிமைகள், உடைமைகள், உடைகள் என்பவை அனைத்தும் பறிக்கப்பட்டபின்பு திட்டமிட்ட முறைகளில் படுகொலை செய்யப்பட மந்தைகள் போல் அனுப்பப் பட்டனர். ஐரோப்பாவில் இருந்த 8.3 மில்லியன் யூதர்களில் 70 சதவீத மேலானோர் நாசிகளால் அழித்து ஒழிக்கப்பட்டனர். திரு. ஸ்பில்பர்க், அந்தக் கொடூரத்தைப் புரிந்து கொள்ளக் கூடிய விதமாக, அந்த வரலாற்றின் பாத்திரங்களைக் கதாபாத்திரங்களாக வைத்து அந்தப் படத்தைத் தயாரித்துள்ளார். அவருடைய திறமையான கைவண்ணத்தால் உருவான அந்தத் திரைப் படத்தின் சக்தியை மிகச்சிலர் தான் குறைத்துக் கூறமுடியும்.



## ஒவ்வொரு சமுதாயமும், தான் தனக்கு விரும்பியதையே ஏற்றுக்கொள்ளும்.

இருந்தும் கலை என்பது அவரவரின் இரசனையைப் பொறுத்தது தானே? அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் பெரும் புகழ் ஈட்டிக் கொண்டுள்ள சின்ட்லர்ஸ் லிஸ்ட், ஆசியாவில் உள்ள பண்புகளைப் பொறுத்த வரையில் நற்பண்புகளை விஞ்சிச் செல்வதாகக் கருதப்படுகிறது. ஒஸ்கர் சின்ட்லர்ஸ் என்ற பெயருள்ள போர்க் காலத்தின் போது பெரும் இலாபம் ஈட்டிக் கொண்ட ஜேர்மனியன் எப்படி தனது வைப்பாட்டியுடன் பாலியல் ரீதியாக நடந்து கொண்டான் என்ற நடத்தையே படத்தின் மையக் கருவாக உள்ளது, அந்தப்படக் கதையின் தேவை ஒன்றை நிறைவேற்றுவதற்காகச் சின்ட்லர்ஸ் யூதர்கள் படும்பாட்டைப் பற்றித் தான் கவலை ஏதும் படாதவனாகத் தனது மகிழ்ச்சியை மட்டுமே கருதிச் சிற்றின்பத்தில் ஈடுபடுகின்றான் என்று சித்திரிக்கப்பட்டுள்ளது. ஆனால் பிலிப்பைன்சிலும், மலேசியாவிலும் உள்ள தணிக்கையாளர்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை ஒழுக்கத்திற்கு இழுக்கானது என்று ஆட்சேபிக்கின்றனர். பிலிப்பைன்ஸ் நாட்டுத்திரைப்படத் தணிக்கையாளர்கள் சிற்றின்பக் காட்சிகளைக் காட்டும் படங்களுக்குக் கொடுப்பது போல் " ஆ " தர அனுமதியே அதற்கு வழங்கியுள்ளனர். அதனால் அது காட்டப்படுவதற்கு அனுமதி பெற வேண்டுமெனில் பல காட்சிகள் அதில் இருந்து நீக்கப்படவேண்டும். அதே போல் பியானோ என்ற தலைப்பிலான இன்னும் ஒரு திரைப்படம் " எக்ஸ் " எனத் தரப்படுத்தப்பட்டுப் பொதுமக்களுக்கு காட்டத் தகுதியற்றதாக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையால் தணிக்கையின் தீமைகளையும், கலைப்படைப்புச் சுதந்திரம் ஒடுக்கப்படுவதையும் பற்றிய பல எதிர்ப்புக் குரல்கள் எழும்பின. அவற்றில் அநேகமானவை ஆசியாவுக்கு வெளியே இருந்து வந்துள்ளன. அந்த இரண்டு திரைப்படங்களின் இயக்குனர்களும், தங்களுக்குக் கிடைத்த புகழால் வலுவுற்றவர்களாக ஏதாவது காட்சியை எவராவது நீககுமபடி கோரினால் அந்தப் படத்தை அவாகளுக்கு விநியோகிகக மறுத்து எவவித வெட்டுக் கொத்துககும இடம் தர மாட்டோம் என்று ஒரேயடியாகக் கூறுகின்றனர். மலேசியாவின் தணிகககையாளர்கள் சின்ட்லர்ஸ் லிஸ்டில் உடலுறவு, நிாவாணத் தோற்றம், வனமுறை ஆகியவை அடங்கிய 7 காட்சிப்பகுதி ஆட்சேபனைக்கு உரியவை என்று சாத்க்கின்றனர். ஆனால் ஸ்பீல்பர்க் தனது திரைப்படம் ஒரு வரலாற்றுப் பதிவு என்று கூறி அதனை அங்கு திரையிடாமல் மீளப்பெற்றுக் கொண்டார்.

யூதர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் வரலாறுதான்; அதில் ஒரு பகுதியை சின்ட்லர்ஸ் லிஸ்ட் உருவேற்றுகிறது. சில குடும்பங்கள் தப்பிப்பிழைத்து அவர்களது கெட்டித்தனத்தாலோ அல்லது சிலரது கருணையாலோ, அல்லது வெறுமனே சந்தர்ப்ப வசத்தாலோ ஆகும். ஆனால் இந்தப் படத்தின் கதை ஒரு குறிப்பிட்ட கருத்துக் கோணத்திலிருந்து ஆக்கப்பட்டுள்ளது. அது யூதர்கள் பட்ட பாட்டை வெளிப்படுத்தினாலும் ஹிட்லரின் கொடுமைகளுக்குப் பலியான ஏனையவர்களைப் பற்றிக் கூறுவதாக இல்லை. அந்தக் கொடூரச் செயல்களை இழைத்தவர்கள் எல்லோரும் யூதர் அல்லாதவர்களே. அந்தப்படத்தை வெகுவாக ஆதரிப்பவர்கள், சின்ட்லர்ஸ் லிஸ்ட் அப்பட்டமான கட்டாயமான கொடூரமான ஆனால் பலவற்றுள் ஒன்றான உண்மையைப் படம் பிடித்துக் காட்டுகிறது என்று கூறுகின்றனர். பல உண்மைகளுக்கு இடையில் இருக்கும் ஓர் உண்மை மிகவாகத் தனித்த ஒரு விடயமாகும்.

அமெரிக்கப்படத் தயாரிப்பு உலகமான ஹொலிவூட் மாயைகளைப் படைப்பதில் நிபுணத்துவம் உள்ளது என்பதை நினைவில் கொள்வது தகும். படத்தயாரிப்பில் உள்ள ஏய்ப்பும் மறைப்புகளும் பலப்பலவாகும். முகப்பு உள்ள ஆனால் உள்ளிடம் அற்ற கட்டடங்கள் தத்ரூபமாகக் காட்சி அளிக்கும் வரை பல முறை படமெடுத்தல் கதையின் தொடரை இணைக்க ஏற்ற விதத்தில் உருவகங்களைப் பிணைத்தல் என்பன போன்ற பலவும் சேர்ந்து தான் இறுதிப் பிரதியை ஆக்குகின்றன. திரைப் படங்கள் வெற்றி பெற இத்தகைய எண்ணற்ற பொய்களில் தங்கியிருக்க வேண்டியுள்ளது. ஆனால் ஒரு திரைப்படத் தயாரிப்பாளர் ஆயிரம் பொய்கள் ஒரு தனி உண்மையை ஒரு கலைப்படைப்பு மூலம் வெளிப்படுத்தலாம் என்று முந்திக் கொண்டு சொல்லலாம். திரு. ஸ்பீல்பர்கின் கலைச் சாதனை என்று மட்டும் அல்லாமல் மட்டுப் படுத்தப்பட்ட அளவிலான ஒரு நன்னெறியான சாதனை என்றும் கூறத்தக்க செயல் பாராட்டுக்கு உரியது. ஆனால் பல்லின பன்மத நாடுகளான மலேசியா, பிலிப்பைன்ஸ் போன்றவற்றில் வாழ்வோர் எல்லோரும் ஹொலிவூட்டின் அல்லது மேற்கின் நற்பண்பு அழகியல் இரசனைத் தரங்களுடன் ஒத்துப்போக விரும்பமாட்டார்கள். அதனை அவர்கள் மீது திணிக்கவும் கூடாது.

சின்ட்லர்ஸ் லிஸ்ட் பற்றி எழுந்த வாதத்தில் குறியிட்டுக் காட்டப்படுவது ஒரு நாடு சினிமாத் திரையில் எதைப் பார்க்க விருமபுகிறது, எதைப் பார்க்க விரும்பவில்லை என்பதைப் பற்றிய தர நிர்ணயங்கள் செய்ய எவர்க்கும் உரிமையுள்ளதா என்ற கேள்வியாகும். பாலியல் வன்முறை நற்பண்பு விடயங்கள் என்பவற்றைக் காட்டும் படங்கள் பற்றி ஒவ்வொரு நாடும் தனது சொந்த நியாயத்தைப் பிரயோகிக்கலாமா? அல்லது அந்நியரின் மதிப்பீட்டில் அனுமதிக்கத் தக்கதான கலாசாரத் தரத்தை ஏற்பதா? ஸ்பில்பர்க் தனது படத்தை ஆணித்தரமானதாக்கவெனப் பயன்படுத்தியுள்ள நிர்வாணக் காட்சிகளும், சித்திரவதைக் காட்சிகளும் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவில் கூட அனுமதிக்கப்பட்டிருக்க மாட்டாதவையாகும். இன்று கூட அத்தகைய காட்சிகள் அங்கு தொலைக் காட்சியில் காட்டப்படுவதற்குத் தகுதியற்றவையாகக் கருதப்படுகின்றன. ஆகவே தணிக்கை பற்றிய சர்ச்சை நமக்கு அறிவுறுத்துவது யாதெனில், வேறு கலாசாரம் ஒன்றுக்கு எந்தப் பண்புகள் உகந்தவை என்று கருத முயல்வது ஓர் ஆபத்தான பொருத்தமற்ற விடயமாகும் என்பதாகும்.

ஏசியாவீக், மே 11, 1994.

★





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வாய்க் கிரகத்தில்

## மனிதனை இறக்கும்



## தொழில் திறன் அமெரிக்காவிடம் உண்டு. துணிந்து செயற்பட்டால் அது சாத்தியப்படும்.

வியாழனுடன் ஒப்பிடும் போது செவ்வாய் உருவத்தில் சிறியதென்றாலும், அதன் ஒளி மிகப் பெரியதாகும். பூமியில் இருந்து வெறுங் கண்ணால் பார்க்கக் கூடியதாகவும் இருக்கிறது. வேறு கிரகங்களைப்போல் செவ்வாயின் ஒளியும் சூரியனிடம இருந்து பெறப்பட்டதாகும். பண்டைய உரோமர்கள் இதற்கு மார்ஸ் என்று பெயர்சூட்டி (Mars) தமது போர்த் தெய்வமாகக் கொண்டாடினர். அதைச் சுற்றும் இரண்டு துணைக் கிரகங்களையும் தமது கடவுளின் சேவகர்களாகவும் நியமித் துள்ளனர். இரண்டிற்கும் அச்சம் (Phobos), பயங்கரம் (Deimos) என்று உரோமர்கள் வைத்த பெயரே இன்றுவரை நிலைத்துள்ளது.

சூரியனில் இருந்து நாலாவது கோள் செவ்வாய் என்றபடியால், பூமியிலும் குறைந்த சூரியஒளியே அதன் மேல் படுகிறது. சூரியனைச் சுற்ற அது 687 நாள்கள் எடுக்கிறது. ஆனால் செவ்வாயில் இரவும், பகலும் பூமியைப்போன்றே இருக்கிறது. அதன் ஒரு நாள்; 24 மணி 37 நிமிடங் கொண்டதாகும். செவ்வாயின் சுற்றுவேகம் நொடிக்கு 15 மைல் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட இரண்டு பூமி வருடங்கள் ஒரு செவ்வாய் வருடமாகும். 2½ வருடங்களுக்கு ஒரு முறை பூமியும், செவ்வாயும் ஒன்றை ஒன்று நெருங்கி வருகின்றன. இந்தச் சந்தர்ப்பங்களில் விஞ்ஞானிகள் செவ்வாயை முனைப்பாக அவதானிப்பர்.

பூமியினுடைய சுற்றும் அச்சு 23½ பாகை சரிந்திருக்கிறது. இதனால் பருவகாலங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. செவ்வாயிலும் இச் சரிவு உண்டு. அது 25 பாகையாகும். ஆகையால், செவ்வாயிலும் பருவ காலங்கள் இருக்கின்றன. அதன் சுற்றுவேகம் குறைவானபடியால் பருவகாலங்கள் நெடியதாக இருக்கின்றன. செவ்வாயின் விட்டம் 4,200 மைல். பூமியினுடைய விட்டத்தில் சரிபாதியிலும் சற்றே கூடியதாகும். செவ்வாயினுடைய பொருள் (Matter) மிகக் குறைவு. பூமியிலும் பத்தில் ஒன்றுதான் அங்கு இருக்கிறது. அதன் கற்பாறைகள் பூமியில் இருப்பதை விட வித்தியாசப்பட்டவை. அதன் அடர்த்தி (Density) மிகக் குறைவு.

பூமியைப் போன்றதோர் காந்த ஈர்ப்புப் புலம் (Magnetic field) செவ்வாயில் உண்டா? இல்லையா? என்பதை விஞ்ஞானிகள் 1965 ஆம் ஆண்டின் பின்தான் அறிந்துள்ளனர். ஜூலை 65 இல் அமெரிக்கர்கள் ஏவிய மரினர் -4 என்ற கலம் செவ்வாய்க்கு மேலாகப் பறக்கும் போது மிகக் குறைந்ததோர் காந்தப் புலத்தைப் பதிவு செய்துள்ளனர். இதைப் பூமியின் காந்தப் புலத்துடன் ஒப்பிடும் போது இல்லை என்று சொல்லுமளவுக்கு மிகக் குறைவாக இருக்கிறது. பூமியின் நடுவில் இரும்பும், வேறு உலோகங்களும் திரவ உருவத்தில் இருப்பது போல் செவ்வாயில் இருக்கவில்லை என்பதையே இது காட்டுகிறது. ஆனால், சில விஞ்ஞானிகள் இந்த முடிவை ஏற்க மறுத்துள்ளனர்.

அளவில் சிறியதாக இருப்பதாலும், அடர்த்தி குறைந்து காணப்படுவதாலும் செவ்வாயின் நிறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்



ஈர்ப்பு விசை பலங் குன்றிய தாக இருக்கிறது. பூமியில் காணப்படும் 100 கிலோ, செவ்வாயின் 38 கிலோ எடையாகத் தோன்றும் பூமியில் இருந்து ஏவப்படும் ஏவுகணை புவிஈர்ப்பு விசையிலிருந்து தப்ப வேண்டுமாயின் நொடிக்கு 7 மைல் வேகத்தில் பறக்க வேண்டும். இதைப் புவிஈர்ப்பு விசையிலிருந்து தப்பும் வேகம் என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். சந்திரனில் வேகம் நொடிக்கு 1.5 மைல் செவ்வாயில் இருந்து இரண்டு கணிப்புக்களுக்கும் இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும். நொடிக்கு 3,2 மைல் என்பதே இப்போதைய கணக்கு.

செவ்வாயில் ஒரு காற்றுப் படலம் அல்லது வளிமண்டலம் இருக்கிறது என்ற நம்பிக்கை விஞ்ஞானிகளுக்கு உண்டு. மண்ணை அள்ளி வீசும் புயல் அங்கு அடிக்கடி வீசுகின்றது. காற்று இல்லாமல் புயல் இருக்க முடியாது. அத்துடன் பிரத்தியேகக் கருவிகள் மூலமாகவும் அங்கு காற்று இருப்பதாக நிரூபிக்கப்பட்டுவிட்டது. ஆனால், அத்தகைய காற்றில் என்னென்ன பொருள்கள், வாயுக்கள் இருக்கின்றன என்றெல்லாம் இதுவரையும் ஆய்வு செய்யப்படவில்லை. 1965 இல் இதன் மேல் பறந்த மரினர்- 4 செய்மதி இது சம்பந்தமாகச் சில செய்திகளைத் தந்துள்ளது. அவை விஞ்ஞானிகளுக்கிடையில் முரண்பாடுகளைக் கூட்டியுள்ளது. முற்றும் காபனீர்ஒட்சைட் என்றும், சிறிதளவேனும் பிராணவாயு கிடையாது என்றும் தெரிவிக்கப்படுகிறது. பூமியில் காற்றின் அழுத்தம் ஒரு சதுர அங்குலத்திற்கு 14.7 இறாத்தல் என்பதே கணக்கு. ஆனால், செவ்வாயில் இருந்த அழுத்தம் மிகக் குறைவு. மரினர் -4 தந்த சகல விபரங்களையும் ஒன்று கூட்டிப் பார்க்கும் போது உயிரினங்கள் அங்கு வாழ்வது சாத்தியப்படாது என்ற முடிவுக்குப் பெரும்பாலான விஞ்ஞானிகள் வந்துள்ளனர்.

பூமியில் இருந்து அவதானிப்பதற்கு அண்மையாகவும், வியாழனைப்போல் பெரும் வாயுப் படலத்தால் மூடப்படாமலும் இருக்கும் கோள் செவ்வாய் ஒன்றுதான். இதுவும் செவ்வாய்மீது மனிதர்கள் ஆரம்பகாலந்தொட்டு ஆர்வங் காட்டுவதற்குப் பிரதான காரணமாக அமையலாம். அதனுடைய தரைப் பகுதி சிவப்பு, மஞ்சள் வர்ணங்கள் கலந்தவையாகத் தென்படுகின்றன. இவை பாலைவனங்களாக இருக்கலாம். இந்த நிறங்கள் பல நூற்றாண்டுகளாக மாறாமல் இருக்கின்றன. மரினர் -4 அனுப்பிய படங்களில் சந்திரனின் தரைப்பகுதியில் உள்ள ''அம்மை வடு'' போன்ற கிடங்குகள் செவ்வாயில் இருப்பதை நாம் காணலாம். செவ்வாயின் தென்துருவ, வடதுருவப் பகுதிகளில் வெள்ளை நிறத்தில் உறைபனி உண்டு. பருவகால மாற்றங்களுக்கு ஏற்ப இந்தப் பனிப்படலம் கூடியும், குறைந்துங் காணப்படுகின்றன. கார்காலத்தில் இவை அதிகரிக்கின்றன.

தென் துருவப் பனிக்கட்டிகள் இக்காலத்தில் செவ்வாயின் மத்திய ரேகைவரை படருகின்றன. குளிர் காலம் வரும் போது இவை மீண்டும் துருவப் பகுதிக்குச் செல்கின்றன. இதை எல்லாம் நெருக்கமாக ஆராய விஞ்ஞானிகள் காத்திருக்கின்றனர். பனிப்படலத்தின் விரிவும் சுருக்கமும் தட்பவெப்ப மாற்றங்களையே காட்டுகிறது. இது அங்கு மரஞ் செடிகளும், அடிப்படை உயிரினங்களும் வாழலாம் என்ற ஊகத்திற்கு வழிவிடுகின்றன. பேர்சிவல் லொவெல் என்ற பெருமதிப்புக்குரிய அமெரிக்க வானியலாளர் செவ்வாயில் உயிரினம் உண்டு என்று அடித்துக் கூறுவதை இவ்விடத்தில் நாம் நினைவு கூரலாம்.

புவியில் நடமாடிய மனிதர்கள் சந்திரனில் காலடி பதித்த பின் 25 ஆண்டுகள் சென்று விட்டன. மனிதன் சந்திரனுக்குச் சென்ற நிகழ்வு மனித குலத்தின் மிகப் பெரிய சாதனை என்று வர்ணிக்கப்பட்டுள்ளது. இந்த அமெரிக்க சாதனைக்கு நிகராக ருஷ்யர்களும் விண்வெளியில் நெடுநாட் தங்கி ஆய்வுகள் செய்தல், இரு விண்கலங்களை விண்ணில் ஒன்றிணைத்தல் போன்ற வரலாற்று நிகழ்ச்சிகளுடன் விண்வெளிப்பயணிகள் ஒரு கலத்தில் இருந்து இன்னுமொன்றிற்கு இடம் மாறுகையும் செய்து காட்டியுள்ளனர். இன்று இந்த நாடுகளுக்கிடையிலான போட்டிகள் தணிந்து விண்வெளிச் செயற்றிட்டங்களைப் பொறுத்தளவில் பெரும் ஒற்றுமையும், புரிந்துணர்வும் காணப்படு

## செவ்வாய்

*செவ்வாயில் பூமியைப் போன்ற பருவ காலம் உண்டு. 24 மணி 37 நிமிடம் கொண்ட ஒவ்வொரு நாளிலும் இரவும், பகலும் காணப்படுகின்றன. நிறை ஈர்ப்பு விசை செவ்வாயில் உண்டு. ஒலிம்பிக் மொன்ஸ் சூரிய குடும்பத்தில் காணப்படும் மிகப் பெரிய எரிமலையாகும். இதன் உயரம் 17 மைல். செவ்வாய் கோளின் வட புறத்தில் வைக்கிங் இறங்கியுள்ளது. இப் பிரதேசத்தில் சமவெளியும் துருவத்தில் உறையும். காற்றில் கரியமில வாயுவும் காணப்படுகின்றது தெற்குப் பகுதியில் கிடங்கும் குழியும், வெடிப்களும் காணப்படுகின்றன. செவ்வாயின் மத்தியில் மிகவும் நீண்டதோர் வெடிப்புக் காணப்படுகிறது. இதன் நீளம் அமெரிக்காவின் குறுக்களவு*

*இந்த வெடிப்பின் பெயர்: வாலிஸ் மரினேஸ்.*

*மொழியாக்கம் :*

— கலாநிதி சோமஸ்கந்தன் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. செவ்வாயும் பூமியும் நெருங்கிவரும் சமயம் பார்த்து ஆறு விண்வெளி வீரர்களை ஏற்றிக் கொண்டு வீண் கலம் கிளம்புகிறது.
2. பூமியின் நிறை ஈர்ப்பு விசையிலிருந்து விடுபடுதல்.
3. விண்வெளி ஆறுமாதம் ஒரு மைல் நீளமான கம்பிக் கயிற்றால் பிரயாணிகள் இருக்கும் பகுதியும் மிகுதிப் பகுதியும் தொடுக்கப்பட்டிருக்கும். இரண்டும் ஒன்றையொன்று சுற்றும்போது போலிநிறை ஈர்ப்புவிசை உண்டாகும். இதனால் பிரயாணிகளுக்கு ஏற்படும் நோய் ஆபத்து தவிர்க்கப்படும்.
4. செவ்வாயின் நிறை ஈர்ப்புவிசையின் படியில் விண்கலம் வந்துவிடும்.
5. செவ்வாயில் வைத்தே எரிபொருள் தயாரிப்பு அங்கு காணப்படும் கரியமிலவாயு எடுத்துச் செல்லப்படும் நைதரசனும் ஒன்று சேர்க்கப்படும்.
மெதேன் வாயுவும் குடிநீரும் தயாரிக்கப்படும்.

6, 7, 8. செவ்வாயின் தரை இறங்குதல் ஆய்வுகளை முடித்துக் கொண்டு செவ்வாயை விட்டுக் கிளம்புதல். வீடு (அமெரிக்கா) திரும்புதல்.




## செவ்வாய் - பூமி விலகல் நெருங்குதல்

780 நாள்களில் (2 வருடம் 2 மாதத்திற்குச் சிறிது குறைவு) சூரியன், பூமி, செவ்வாய் மூன்றும் நெருங்கி ஒரு கோட்டில் வருகின்றன. (2 ½ ஆண்டுகள்) விண்கலம் இறங்குவதற்கு இதுவே தக்க சமயம்.

இறது. நெடுநாட் தொலை தூர விண் வெளியில் பயணம் எவ்வாறு மனித உடலைப் பாதிக்கும் என்று அமெரிக்கர்கள் அஞ்ச வேண்டிய அவசியமில்லை. இந்த விடயத்தில் ருஷ்யர்கள் பல சாதனைகளைப் புரிந்துள்ளனர். இந்த அனுபவத்தை அவர்கள் அமெரிக்கர்களுடன் பங்கு போடத் தயாராய் உள்ளனர்.

செவ்வாய் அவதானியைச் சென்ற வருடம் தொலைத்தாலும் விண்வெளித் தொலை நோக்கித் திருத்த வேலைக்குப் பின் நாசா செவ்வாய்ப் பயணத்திற்குத் தயார் செய்யத் தொடங்கி உள்ளது. இப் பயணத்திற்குத் தேவையான அடிப்படைத் தொழில் நுட்பங்கள் எம்மிடம் உண்டு என்று பிரதம பொறியியலாளர் மார்ட்டின் சுப்பிரின் கூறுகிறார். 26 மாதங்களுக்கு ஒரு முறை இரண்டு கோள்களும் நெருங்குகின்றன. பூமியில் இருந்து ஏவப்படும் விண்வெளிக் கப்பல் செவ்வாயை நெருங்கும் போது இரண்டும் நெருங்கிவரும் நேரமாக இருத்தல் அவசியம், ஆகவே பயணத்திற்கு ஆரம்பம். வேகம் முதற் கொண்டு இறங்கும் நேரம் வரை யாவும் வெகு துல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லியமாகக் கணிக்கப்பட வேண்டும். மனிதர்கள் அடங்கிய கப்பல் புறப்படுமுன் விண்வெளி வீரர்களுக்கும் அவர்கள் செய்ய விருக்கும் ஆய்வுகளுக்கும் தேவையான உணவு வகைகள் உபகரணங்கள், ஆய்வு கூடக் கருவிகள் ஆகியவற்றைச் சுமந்தபடி ஒரு பொதி சுமக்கும் விண்கலம் முன் கூட்டியே செவ்வாயில் இறங்க வேண்டும். இதன் பின்பே மனிதர்கள் அடங்கிய விண்கலம் புறப்படும்.

இந்தப் பொதி சுமக்கும் விண்கலம் பூமியில் இருந்து செவ்வாய்க்குச் செல்ல 330 நாள்கள் எடுக்கும். அது கடக்க வேண்டிய தூரம் 250 மில்லியன் மைல். அது எடுத்துச் செல்லும் பொருள்களில் 130 குதிரைச் சக்தி கொண்ட அணு உலையும் அடங்கும். பொதிகளுடன் இந்த விண்கலம் இறங்கியவுடன் நாசா கொடுக்கும் கட்டளைக்கு அமைய மேற்கூறிய அணு உலை வெளியே வந்து சற்றுத் தூரம் சென்று தனது செயற்பாட்டை ஆரம்பிக்கும். செவ்வாயின் காற்றில் நிறைய, கரியமில வாயு இருக்கிறது. இந்த விண்கலப் பொதிகளில் ஆறு தொன் நைதரசன் வாயுவும் காணப்படுகின்றது. கரியமில வாயுவை நைதரசனையும் ஒன்று கூட்டிப் பிணைத்து இந்த அணு உலை மெதேன் வாயுவையும், நீரையும் தயாரிக்கும். மெதேன் வாயு எரிபொருள் செவ்வாயிலிருந்து பூமிக்குத் திரும்புவதற்கும் வேறு தேவைகளுக்கும் இது உதவும். மனிதர்கள் வந்து இறங்கு முன் இந்த அணு உலை 108 தொன் மெதேன் எரிபொருளைத் தயாரிக்கும் எனத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆகவே செவ்வாய் நோக்கி விண்வெளி வீரர்கள் செல்லும் கலம் திரும்பி வருவதற்குத் தேவையான எரிபொருளைக் கொண்டு செல்ல வேண்டிய அவசியம் இல்லை. இந்த அணு உலையை ஓர் எரிபொருள் தொழிற்சாலை எனச் சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

''விண்வீரர்கள் பயணிக்காத விண்கலத்தை விண்ணில் வழிநடத்தும் தொழில் நுட்பம் நிறைய உண்டு'' என்கிறார் பேராசிரியர் தோமாஸ் மேயர். இத்துறையில் நாம் முதன்மையானவர் என்கிறார் மேயர். செவ்வாய்க் கிரகத்திற்கு அப்பால் உள்ள வியாழன், சனி, யுரேனஸ், நெப்ரியூன் ஆகியவற்றை இந்த முறையில் அவதானித்துள்ளதை மேயர் அவர்கள் பெருமிதமாகக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் மனிதர்கள் ஏறிச் செல்லும் பயணத்தில் வித்தியாசப்பட்ட பிரச்சனைகள் உண்டு. பிரபஞ்சத்தில் நிறைய நச்சுக்கதிர் அபாயம் உண்டு. சூரியனின் கதிர்களும் பெரும் அபாயத்தைத்தோற்றுவிக்கின்றன. இவை யாவற்றுக்கும் விடை காணப்பட வேண்டியது மிகவும் அவசியம்.

### பூமி - செவ்வாய் ஒப்புநோக்கு

| | பூமி | செவ்வாய் |
|---|---|---|
| மத்தியில் விட்டம் | 7,926 | 4,217 |
| நிறை ஈர்ப்பு விசை | 100 வீதம் | 38 வீதம் |
| சராசரி தரை வெப்பம் | 59 பாகை பரன்கைற் | 67 பாகை மைன்ஸ் பரன்கைற் |

விண் வீரர்கள் அடங்கிய விண்கலம் செவ்வாய்க்குச் செல்ல 180 நாள்கள் எடுக்கும். பிரயாணத்தின் போது தரையில் இறங்கிய பின்பும் இந்த விண்கலம் அமெரிக்கக் கட்டளை நிலையத்துடன் தொடர்ச்சியாகத் தொடர்பு வைத்திருக்கும். செவ்வாயில் இருந்து பேசும் விண்வெளி வீரர்களின் குரல் பூமிக்கு வர 20 நிமிடங்கள் எடுக்கும். இங்கிருந்து செவ்வாய்த் தொடர்பு அதே நேரம் எடுக்கும் செவ்வாய்க் கிரகத்தைப் பார்வையிட இருவர் பயணஞ் செய்யும் வாகனம் ஒன்று எடுத்துச் செல்லப்படுகிறது. இதன் எரிபொருள் மெதேன் செவ்வாயில் அலுமினியம், மக்னீசியம், இரும்பு போன்ற உலோகங்களும் குடி நீரும் உண்டா என்று இவர்கள் தேடி ஆய்வு செய்வார்கள். இவர்கள் தங்கள் மரக்கறித் தேவைக்கு மண்ணை உபயோகிக்காமல் நீரில் மாத்திரம் வளரும் தாவரங்களை எடுத்துச் செல்கின்றனர். இப்படிச் செல்கின்றது செவ்வாய்க் கிரகப் பயணங்கள்.

மேற் கூறிய யாவும் எளிதில் முற்றுப் பெற 50 மில்லியன் டொலர் தேவைப்படுகிறது. இங்குதான் தாண்ட வேண்டிய பெரும் தடை இருக்கிறது. அரசு இப்பணத்தைக் கையளிக்குமா என்பதே கேள்வி. ஒரு ருஷ்ய விண்வெளி விஞ்ஞானி சொல்கிறார்:'' எம்மிடம் இத்தகைய பணம் இருக்குமாயின் நாம் செவ்வாயை அடைந்து விடுவோம்'' என்று. இன்று ஐரோப்பிய நாடுகள் ஒரு முன் மாதிரியான நடவடிக்கை எடுக்கின்றன. அவர்கள் ஒன்று கூடிச் செயலாற்ற ஆரம்பித்துள்ளார்கள். இதனால் அவர்கள் பணச் சுமை இல்லாமல் பாரிய கருமங்களைச் செய்துள்ளனர். உலகின் மிகப் பெரிய றொக்கற் ருஷ்யர்கள் வசம் இருக்கின்றது. இதன் பெயர் எனோஜியா (Energia). இதன் மேலதிக விபரங்கள் உலக உலா டிசெம்பர் 1993 இல் உள்ளது. ருஷ்யர்களைக் கூட்டாகச் சேர்த்தால் பல அனுகூலங்கள் கிடைக்கும். விண் வெளியில் சோசியம் பயன்படா, பூமியில் இருந்து புறப்பட்டுச் செல்லும் மனிதன் இன்னுமொரு கிரகத்தின் புத்தி ஜீவியைச் சந்திக்கும் போது தன்னைப் பூமியில் இருந்து வருபவன் என்றுதான் அறிமுகம் செய்ய முடியும்.

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலிவுற்ற நாசா சென்ற வருடம் சந்தித்த ஒரு பெரு வெற்றியும்

# இன்னுமொரு தோல்வியும்

விண்வெளி ஆய்வுக்குத் தேவையான மிகமுக்கியமான கருவி தொலைநோக்கி ஆகும். ஆங்கிலத்தில் ரெலஸ்கோப் (Telescope) எனப்படும் இக்கருவி ''தூரமும்'' ''பார்வையும்'' என்ற இரு கிரேக்க மொழிச் சொற்களை ஒன்றுகூட்டி உருவாக்கப்பட்டுள்ளது. தொலைநோக்கி மூலம் வானத்தை அவதானித்துப் பல அரிய கண்டுபிடிப்புக்களைச் செய்த முதலாவது மனிதன் கலிலியோ என்பது மேற்குலகவானியல் வரலாறு. ஒல்லாந்து நாட்டவர் ஒருவர் தொலைநோக்கி ஒன்றைச் செய்துவிட்டார் என்று கேள்வியுற்ற கலிலியோ, அதைக் கண்ணால் பாராமலே தனக்கென ஒரு தொலைநோக்கியை வடிவமைத்துள்ளார். இதன் முன் கண்ணாடியின் குறுக்களவு இரண்டு அங்குலம் மாத்திரமே, என்றாலும் சந்திரனின் தரையையும், சூரியனின் புள்ளிகளையும், வியாழனின் நான்கு துணைக் கோள்களையும் கலிலியோ பதிவு செய்துள்ளார். இன்று உலகின் மிகப்பெரிய விண்வெளித் தொலைநோக்கி கலிபோர்னியாவில் பலோமார் குன்றில் அமைந்துள்ளது. இதன் கண்ணாடியின் குறுக்களவும், நிறையும் முறையே 200 அங்குலம், 18 தொன் ஆகும். 55 அடி நீளமுள்ள குழாயில் இந்தக் கண்ணாடி பொருத்தப்பட்டுள்ளது.



நிரந்தர நிலையத்தில் தொலைநோக்கியை நிறுவுவதற்கு உயர் பூமியும் வெளித்த வானமும், குறைந்த முகிற்கூட்டம் உள்ள இடமும் தேவைப்படுகின்றன. பலோமார் குன்றின் தெரிவுக்கு இதுவே காரணம். கடந்த இருபது வருடகாலமாக வானத்தில் சுற்றும் செய்மதிபோன்று தொலைநோக்கி ஒன்றை ஏவி அண்ட பகிரண்டத்தை அவதானிக்கும் திட்டம் விஞ்ஞானிகளிடம் உண்டு. மனிதன் செல்ல முடியாத செல்லத்தேவையற்ற பல்லாயிரம் மில்லியன் ஒளி வருடங்களுக்கப்பால் உள்ளவற்றை, இத்தொலைநோக்கி தனது கண்ணாடி மூலம் புவிக்கு அனுப்பும் என்பதே இதன் அடிப்படை. தொழில்நுட்ப முன்னேற்றத்தால் இன்று மனிதன் தொலைநோக்கியின் பின் கண்ணாடியில் தனது கண்ணைப் பதித்து வானை நோக்கவேண்டிய அவசியம் இல்லை. தொலைநோக்கி கிரகிக்கும் செய்திகள் யாவும் உடனுக்குடனே படங்களாகி விஞ்ஞானிகளின் பார்வைக்குத் தரப்படுகின்றன. இதுவே இன்றைய ஒழுங்கு ஆகும்.

எச். எஸ். ரி. (H. S. T) என்ற குறியீட்டால் அடையாளங் காணப்படும் ஹபிள் விண்வெளித் தூர நோக்கி (Hubble Space Telesope), 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் தேதி விண்வெளிக்கு அனுப்பப்பட்டுள்ளது. அமெரிக்காவின் பிரபல விஞ்ஞானி எட்வின் பி. ஹபிள் (Edwin P.Hubble) அவர்களின் ஞாபகார்த்தமாக இதற்கு இந்தப்பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. இதை உருவாக்கிய விஞ்ஞானிகள் அது 15 வருடங்கள் சஞ்சாரம் செய்து செயற்படுமென எதிர்பார்க்கின்றனர். இதன் வடிவமைப்புச் செலவு 1.6 பில்லியன் டொலர் என்று கணக்கிடப்பட்டுள்ளது. தனது வாழ்நாளில் ஹபிள் பின்வருவனவற்றிற்கு விடைதரும் என்று நம்பப்படுகின்றது. கொஸ்மோலொஜி (Cosmology) எனப்படும் பிரபஞ்சவியலில் 5 மாபெரும் கேள்விகளுக்கு இதுவரையில் பதில் கிடைக்கவில்லை. அவையாவன:-

01. யாவும் எப்போது, எவ்வாறு ஆரம்பித்துள்ளன? பிரபஞ்சத்தின் வயதும், அளவும், பரிமாண வளர்ச்சியும் எத்தகையது?

02. பிரபஞ்சத்தின் அளவுகோல் என்ன?

03. கலக்சி (Galaxy) எனப்படும் அண்டங்கள் எவ்வாறு தோன்றி வளர்கின்றன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. நட்சத்திரங்களின் வாழ்க்கைச் சுற்று என்ன?

05. எமது சூரிய குடும்பம் போன்ற கோள அமைப்புக்கள் உண்டா?

இவற்றில் சிலவற்றிற்காவது ஹபிள் பதில் தரும் அல்லது பதிலுக்கு வழிகாட்டும் என்று நம்புவதில் தவறில்லை.

டிசெம்பர் 1993 ஆம் ஆண்டு வரை ஹபிள் அனுப்பிய படங்கள் யாவும் திருப்தியாக அமையவில்லை. எடிற்றிங் ( Editing ) எனப்படும் திருத்தவேலை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்ட போது விஞ்ஞானிகள் தயங்கினர். ஆய்வுகூடத்தில் திருத்தத்திற்கு உட்படுத்தப்பட்ட படங்கள் விஞ்ஞானக் கோட்பாடுகளுக்கு முரணானவையாகும். ஹபிள் தொலைநோக்கியின் ''கண்களில்'' பார்வைக் கோளாறு உண்டு. அதுவே திருத்தப்படவேண்டும் என்றமுடிவுக்கு நாசா விஞ்ஞானிகள் நாளடைவில் வந்துள்ளனர். ஏற்கனவே அமெரிக்க அரசின் கணக்கியலாளர்கள் நாசா மீது கணக்கு வழக்கின்றிச் (Reckless Spending ) செலவுசெய்தல் என்ற குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளனர். அத்துடன் இக்காலகட்டத்தில் நாசாவின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கும் பல அடுக்கான சம்பவங்கள் நடந்துள்ளன. டிஸ்கவரி என்ற விண்வெளி ஓடம் அழிந்ததும் இன்னும் பல ஓடங்கள் அனுப்பப்படாமல் தடைப்பட்டதும, கலிலியோ செய்மதியில் அன்ரெனாச் சாதனங்களில் சங்கிலித் தொடர் போன்ற தவறுகளும், இறுதியாக 1993 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ஆம் தேதி செவ்வாய்க் கிரகத்தை அவதானிக்கச் சென்ற மார்ஸ் ஒப்சேவர் ( Mars Observer ) என்ற செய்மதி தொலைந்ததும் நாசாவின் கரிகாலம் என்று குறிப்பிடலாம். அமெரிக்க நிர்வாகமும் பொதுமக்களும் நாசா இருப்பதில் பயனுண்டா என்று கேட்கத் தொடங்கிய கால கட்டத்தில், செய் அல்லது செத்துமடி என்ற தீவிரத்துடன் நாசா ஹபிள் தொலைநோக்கிக்கு விண்வெளி வீரர்களை அனுப்பி அங்குவைத்தே திருத்த வேலை செய்யும் பணியை மேற்கொண்டது. இன்றைய விஞ்ஞான வரலாற்றில் முக்கிய நிகழ்ச்சியாகும்.

1993 ஆம் ஆண்டு டிசம்பர் 02 ஆம் தேதி, என்டவர் ஓடம் விண்வெளி வீரர்களை ஏற்றிக் கொண்டு ஹபிளைச் சந்திக்கக் கிளம்பியுள்ளது. பயணிகளில் 'கண் சிகிச்சைக்கென' புவிவாழ்வில் வைத்தியரும், சத்திரசிகிச்சை நிபுணருமான ஸ்ரோறி மஸ்கிறேவ் அடங்குவார். பூமிக்கு 360 மைல் தொலைவில் வைத்து என்டவர் ஓடம் மணிக்கு 17, 000 மைல் வேகத்தில் சென்றுகொண்டிருக்கும் போது, திருத்தவேலைகள் ஆரம்பமாகின. 11 நாள்கள் எடுத்த



தொலைந்த செவ்வாய்
அவதானி பிடித்த ஒரே ஒரு படம்

இப்பணி ஒவ்வொருமுறையும் 6 மணி எடுத்த. 5 தடவைகளில் நிறைவேற்றப்பட்டுள்ளது. எதற்காக ஏற்றப்பட்டதோ அக்கருமத்தைச் 'சிறப்பாகச் செய்யவைப்பதே இதன் நோக்கம். தொலைநோக்கியின் கண்ணுக்குப் புதுக் கண்ணாடிகள் பொருத்துவதோடு பின்வரும் மேலதிக மாற்றங்களும் செய்யப்பட்டுள்ளன. முன்பு பொருத்தப்பட்ட சூரிய சக்தியைக் கிரகிக்கும் தட்டுக்கள் வெளிச்சத்தையும், இருளையும் மாறி மாறிச் சந்திக்கும் போது நடுங்கும் ( Jitters ) தன்மைவாய்ந்தன. இவை மாற்றப்பட்டன. துல்லியமாகச் செயற்படுவதற்காக கைரஸ்கோப் மக்னற்றோமீற்றர் ( Gyroscope Magnetometer ) ஆகியவை மாற்றப்பட்டுள்ளன. இதன் கணனிப் பொறியில் செய்திகளைக் களஞ்சியப் படுத்தும் ஞாபகப்பகுதி ( Memory ) விரிவாக்கப்பட்டுள்ளது. இதில் முன்பு வைக்கப்பட்டிருந்த படப்பிடிப்புக் கருவிகள் எழுபதுகளுக்குரிய தொழில் நுட்பத்தைச் சேர்ந்தவை. இப்போது மிகவும் முற்போக்கான படக்கருவிகள் அங்கு பொருத்தப் பட்டுள்ளன. ஹபிள் திட்டத்திற்குப் பொறுப்பான எட்வேட் வைலர் என்ற விஞ்ஞானி, '' நாம் எதிர்பார்த்ததிலும் பன்மடங்கு திறமையாக இப்போது ஹபிள் தகவல் தருகின்றது '' என்று கூறியுள்ளார். 8, 500 மைல்களுக்கு அப்பால் புகைபிடிப்பவன் ஒருவனின் வாயிலிருக்கும் நெருப்பைப் படம்பிடிக்கும் திறன் இந்த தொலைநோக்கிக்கு இப்போது உண்டு என்கிறார் இன்னுமொரு விஞ்ஞானி.

ஒரு நாலு மாடிக்கட்டடத்தின் உயரமும், பருமனும் உள்ள ஹபிள் தொலைநோக்கி மனிதனால் விண்வெளிக்குச் செலுத்தப்பட்ட மிகப் பெரிய வானியல் கருவி என்று விபரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இதில் அடங்கும் மிகச்சிறப்பான தொழில்நுட்ப வெளிப்பாடுகள் முன்னொருபோதும் விண்ணுக்குச் செல்லவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. திருத்த வேலைகள் முடிந்த இருவாரங்களுக்குள், 1993 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் தேதி, ஹபிளை அனுப்பிய படங்கள் தரைக்கு வந்துள்ளன. இவை ஜனவரி 94 இல் பத்திரிகையாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் காண்பிக்கப்பட்டுள்ளன. இப்படங்களில் ஒன்று 50 மில்லியன் ஒளி வருடத்தொலைவிலுள்ள அண்டமூலத்தின் படமாகும். நாசாவுக்குப் புத்துயிர் அளித்த இச்சாத

— மொழியாக்கம் —
கலாநிதி க. சோமஸ்கந்தன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னையை நினைவு கூரும் இச்சந்தர்ப்பத்தில், 93 இல் இந்த விண்வெளி நிறுவனம் அடைந்த படுதோல்வி ஒன்றையும் விபரிக்க வேண்டியுள்ளது.

பூமிக்கு அடுத்தபடியாக மனிதனைக் கவர்ந்த கிரகம் செவ்வாய்க் கோளமே. பண்டைய காலம் தொட்டுச் சோதிடத்திலும், புனைகதைகளிலும் இதற்கு முக்கிய இடமுண்டு. இது ஒருவகைச் சிவப்பு நிறத்தில் மினுங்குவதால் இதை சிவப்புக் கோளம் என்றும் அழைப்பர். இங்கு உயிரினம் இருப்பதற்கு ஆதாரம் இல்லாவிட்டாலும், இந்த நம்பிக்கை பலர் மத்தியில் இன்னும் உண்டு. பூமி சூரியனைச் செவ்வாயிலும் பார்க்கக் கூடிய வேகத்தில் சுற்றுவதால் 2½ வருடங்களுக்கு ஒருமுறை இரண்டு கோளங்களும் அண்மிக்கின்றன. அச்சந்தர்ப்பத்தில், வானியலாளர்கள் தங்கள் தொலைநோக்கி மூலம் மார்ஸ் எனப்படும் செவ்வாயை அவதானிப்பது எளிதாகின்றது. 15—17 வருடங்களுக்கு ஒரு முறை இரண்டு கோளங்களும் இன்னும் கூடுதலாக நெருங்கிவருகின்றன என்பது வானியல் முடிவு. சில வானியல் அறிஞர்கள் செவ்வாயில் ஒருவகை உயிரினங்கள் இருக்கலாம் என்று நம்புகின்றனர் ஜுலை 1965 ஆம் ஆண்டு, மரினர் என்ற செய்மதியும், பின்பு வைக்கிங் என்று இன்னுமொரு செய்மதியும் செவ்வாயைப் படம்பிடித்துள்ளன. செவ்வாயைச் சுற்றியபடியே இருக்கும் வகையில் ஓர் ஆய்வு கூடம் பொருத்தப்பட்ட செய்மதியை அனுப்பவேண்டுமென்பது நாசாவின் நெடுங்காலத்திட்டமாகும்.

இதற்கமைவாகப் பலகாலமாக முயன்று 'செவ்வாய் அவதானி' (Mars Observer) என்ற செய்மதி ஆய்வுகூடம், செவ்வாயை நோக்கி 1992 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் விண்வெளிக்கு அனுப்பப்பட்டுள்ளது. விண்வெளியைச் சேர்ந்த பதினொராம் மாதம், 200 மில்லியன் மைல் பூமிக்கு அப்பால், செவ்வாயை அடைய மூன்று நாள்கள் இருக்கையில் மார்ஸ் ஒப்சேவர் காணமற் போய்விட்டது. அதாவது பூமிக்கும், அதற்கும் தொடர்பு அற்றுப் போயுள்ளது. அதற்கு என்ன நடந்ததென்று இதுவரையும் ஒருவராலும் ஒன்றும் கூறமுடியவில்லை. ஆனால் சில புத்திசாலித்தனமான யோசனைகள் செய்ய முடிகிறது. இந்தச்செய்மதி முன்பு அனுப்பப்பட்ட மரினர், வைக்கிங் போன்றவற்றிலிருந்து பின்வருமாறு வித்தியாசப்பட்டது. மார்ஸ் ஒப்சேவர் செவ்வாயைச் சுற்றுவதற்கென்றே வடிவமைக்கப்பட்டது. முன்பு அனுப்பப்பட்டவை சுற்றாமல் பார்த்துக்கொண்டு போகும் முறையில் செய்யப்பட்டவை ஆகும்.

மார்ஸ் ஒப்சேவரின் அழிவுக்குக் காரணம் அமெரிக்க நிர்வாகத்தின் அழுத்தங் காரணமாக நாசா கடைப்பிடித்த சிக்கனக் கொள்கை தான் பிரதான காரணியென ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இதன் வடிவமைப்பில் வேறு விண்கலங்களுக்குத் தயாரிக்கப்பட்ட உதிரிப்பாகங்கள் புகுத்தப்பட்டுள்ளன. அதனால் வடிவாக்கத்தில் முறையான பரிணாம வளர்ச்சி இல்லாமை நேர்ந்துள்ளது, அத்துடன் தூரம்செல்லும் கலங்களில் சில நடைமுறை விஞ்ஞானப் பிரச்சனைகள் உண்டு. இலக்கை அடையும் வரை தூக்க நிலையில் இருக்கும் அமிலங்கள், வேதியல் பொருள்கள் உசுப்பும் போது என்ன நிலையில் இருக்குமென வேண்டிய ஆராய்ச்சிகள் செய்யப்படவில்லை. சில ஆய்வாளர்கள் இதில் அமைக்கப்பட்ட கணனிப் பொறிகள் தவறு இழைத்திருக்கலாம் எனவும் தெரிவிக்கின்றனர்.

மார்ஸ் ஒப்சேவர் எனப்படும் செவ்வாய் அவதானியுடன் நாசா முற்றாகத் தொடர்பு இழப்பதற்கு உடனடிக் காரணம் என்ன? சிக்கனம் தான் காரணம். டிரான்ஸ்மிற்றர் (Transmitter) என்னும் தொடர்புச் சாதனத்தை காலத்திற்குக் காலம் தரைக்கட்டுப்பாட்டு நிலையம் நிறுத்தி வைத்திருப்பது நடைமுறை. அதாவது மார்ஸ் ஒப்சேவருக்குக் கொடுக்கப்பட்ட கட்டளை என்னவென்றால் தரைத் தொடர்பை நிறுத்திக் கொள்ளலாம். இதனால் பாதகமில்லை. நிர்வாகத்திற்கு நிதிச் சேமிப்பு ஏற்படும். இந்த நிலையை அனுமதித்தால் செவ்வாய் அவதானிக்கு என்ன நடந்தது என்று சந்தேகமறத் தெரியவில்லை. 1993 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ஆம் தேதி 14 நிமிடங்கள் தொடர்பற்ற நிலை சம்பவித்தபோது அவதானி சிதறித் துாளாகி இருக்க வேண்டும் அல்லது உருவம் கெடாமல் தொலைந்து போயிருத்தல் வேண்டும். இவை வானியல் வரலாற்றில் மறக்க முடியாத 14 நிமிடங்கள். இந்த நிறுத்தி வைப்பால் சேமிக்கப்பட்ட நிதித்தொகை எவ்வளவு என்றால் 375,000 டொலர். ஏச். எஸ். ரி எனப்படும் ஹபிள் தொலை நோக்கி நாசாவுக்குப் பெரு வெற்றியையும், வானியல் ஆய்வுக்கு பின் வரும் மூன்று பெறு பேறுகளையும் தந்துள்ளது.

1. பாரிய தொலை நோக்கி ஒன்றை விண்வெளிக்கு அனுப்பி அதில் வரும் பிழைகளையும் அங்கு வைத்துத் திருத்த முடியும்.

2. விண்வெளி ஆய்வு கூடம் ஒன்றை நிறுவுவது அடுத்த கட்ட நடவடிக்கை.

3. பிரபஞ்ச விளக்கமாக ஜன்ஸ்ரைன் உரைத்த சார்புக் கொள்கையின் அங்கமாக விளங்கும் பிரமாண்டமான கறுப்புக் குழிகள (Black Holes), உண்மையில் விண்வெளியில் உள்ளன என நிருபிக்கப்பட்டுள்ளது

பொப்பியுலர் சயன்ஸ்,
ஏப்ரல், 1994.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மாக்களை அழித்தல்

— மொழியாக்கம் —
திரு. சொக்கலிங்கம்

பொஸ்னியாவின் இரண்டாவது நகரமான மோஸ்ரர் நகரத்தின் உருளைக்கல் பரவிய தெருவில் நின்ற வண்ணம், 77 வயதான முஸ்லிம் ஒருவர் நெரத்வா ஆற்றின் அப்பால் பரந்து கிடக்கும் நிலப்பகுதியை விழித்து நோக்குகின்றார். அவரது வாழ் நாள் காலத்தில் கடந்த நவம்பரை (ஏவுகணைகளைப் பொஸ்னியாவின் குறோட் இனத்தவர் தமது டாங்கிகள் மூலம் வெடிக்கச் செய்வதற்கு முன்பு வரை) அந்த நகரமும் சூழலும் அவரின் உள்ளத்தில் பற்றுறுதிப் பொருளாகவே இருந்து வந்தன. குறோட்டியரின் தாக்குதலால் சுல்தான் சுலைமான் ஆட்சிக் காலத்திலே கட்டப்பட்டதும், வனப்பு வாய்ந்ததும், வில்லைகளைத் தாங்கிக் கொண்டதுமான ஸ்டாரி மோஸ்ற் முற்றாக நாசமானது. அதன் இடத்திலே சிறிய தொரு மரப்பாலம் அந்தரத்தில் தொங்கிய வண்ணம் இருக்கிறது. இந்தக் காட்சியால் அந்த முதிய மனிதர் ஏக்கத்திற் குள்ளாகிறார். "இந்த நாள்களில் மனிதர்கள் கட்டுப்பாடற்ற நாய்கள் போல ஆகிவிட்டார்கள். எந்த வழியில் செல்வது என்று அவர்களுக்குத் தெரியவில்லை. நீரினுள் மூழ்கடிக்கப்பட்டவர்கள் போல நாங்கள் இருக்கிறோம்" என்கிறார் அவர். திட்டமிடப்பட்ட அழிவின் தாக்கமானது அத்தகைய உணர்வை வெளிப்படுத்துவது இயல்பே. "குறோட்டியர் இந்த நகரத்தின் ஆன்மாவையே அழித்துவிட விரும்புகிறார்கள்" என்பது பல மாதங்களாக மோஸ்றர் நகர முஸ்லிம்களுக்குச் சிகிச்சை அளித்து வரும் ஒரே ஒரு சத்திர சிகிச்சை நிபுணரான ஹஃபிட் கொன்யோட்சிக்கின் கூற்று.

முன்னைய யூகோசிலாவியாவின் போராளிக் குழுக்கள் ஒன்றின் கலாசாரத்தினை மற்றது அழிப்பதிலேயே ஈடுபட்டு வருகின்றன. வேண்டுமென்றே திட்டமிட்டுத் தேவாலயங்கள், பள்ளிவாசல்கள், அடக்கத் தலங்கள், நூலகங்கள், தொல் பொருள் காட்சியகங்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியவற்றை முற்றாக அழிக்கும் இந்தக் கொடுஞ் செயற்பாடுகளுக்கு "கலாசாரத் தூய்மையாக்கம்" என்ற சொற்றொடரை ஐரோப்பிய சபை உருவாக்கி வழங்கி வருகின்றது. சேர்பியர், குறோட்டியர், முஸ்லிம்கள் ஆகியோர் மக்களை அவர்களின் சொந்த இடத்திலிருந்து கிளப்பி விடுவதற்கான அவர்களின் மனங்களைப் பாதிப்பிற்கும், விரக்திக்கும் உள்ளாக்கக் கையாளும் பல்வேறு தந்திரங்களில் இது முதன்மையானதாகும். "மக்கள் எக்காலத்திலும் திரும்பி, வராதிருக்கச் செய்வதே இந்த அழிவுகளின் அடிப்படை நோக்கமாகும். பயங்கரமான பரிமாணத்தில் ஐரோப்பியக் கலாசாரத்திற்கு இழைக்கப்படும் பேரழிவே இது" என்று கனடாவைச் சேர்ந்த வரலாற்றறிஞரும் ஐரோப்பிய சபையின் ஆலோசகருமான கொலின் கெய்சர் கருத்துத் தெரிவிக்கிறார்.

1954 இல் ஹேக் நகரில் நடைபெற்ற கூட்டத்திலே "ஒரு கலாசாரத்தை அழிப்பது மானிடருக்கே எதிராக இழைக்கப்படும் குற்றமாகும்" என்று மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தினை 1955 இன் பின்பு ஏற்றுக் கொண்ட நாடுகளில் யூகோசிலாவியாவும் ஒன்று. இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் போர்க்காலக் குற்றங்களை விசாரிக்கவென மூவர் கொண்டமைந்த விசாரணைக் குழு ஹேகில்

++++++++++++++++++++++++++++++++++++++++

**முன்னைய யூகோசிலாவியாவின் போராளிக் குழுக்களின் ஒன்றினது வரலாற்றை மற்றது அழித்துத் துடைத்துவிட முனைகிறது. "கலாசாரத் தூய்மையாக்கம்" என்ற பெயரால் குற்றம் இழைப்போர் என்றைக்காவது குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப் படுவார்களா?**

++++++++++++++++++++++++++++++++++++++++



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது விசாரணையைத் தொடங்கிய போது ஐ. நா. குழுவைச் சேர்ந்த நிபுணர்கள் முன்னைய யூகோசிலாவியாவின் இடம்பெற்ற குற்றங்களைத் தொகுத்து வழங்கினார்கள். "ஹேத் விசாரணைக் குழு கட்டடங்கள் அழிக்கப்பட்ட சரியான நாள்களைத் தெரிவிக்குமாறு எங்களைக் கேட்டுக் கொண்டது" என்று நெதர்லாந்து தூதுக் குழுவின் தலைவரான யன் பொவியல்ஸ் விளக்கம் தருகிறார். (இந்தக் குழு செற்றப் நகரத்தில் இயங்கியது) "அந்த நாளில் கடமையில் ஈடுபட்டிருந்த படைப் பிரிவும் அவற்றின் தலைவர்களுமே இவ் வழிக்குப் பெறுப்பேற்க வேண்டும்" என்பது விசாரணைக் குழுவின் முடிவாகும்.

1991 இல் போர் ஆரம்பமான போது சேர்பியப் படைகள் நீலமும், வெள்ளையும் ஆகிய நிறங்கள் கொண்ட நாடாக்களை அடையாளச் சின்னமாகப் பறக்க விட்டுள்ள கட்டடங்களைத் தாக்கக்கூடாது என்று ஹேக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முற்றாக அலட்சியம் செய்து, அவற்றின் மீது பாரிய ஏவுகணைகளைச் செலுத்தி நிர்மூலமாக்கின. 18 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வுக்கோவர் கட்டடமும், டுபறோனிவின் மத்திய காலக் கட்டடமும், இலக்குகளாகக் கொள்ளப்பட்டுத் தாக்குதலுக்கு உள்ளாயின. எவற்றை மதிக்க வேண்டும் என்று போர் வீரர்கள் கற்பிக்கப்பட்டிருந்தார்களோ அவற்றின் மீதே அவர்கள் பெருந் தாக்குதல்களை முடுக்கி விட்டனர். ஹேக் தீர்மானத்தின் படி போர் தவிர்ப்புப் பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகளிலே குறோட்டியரும் அழிவு வேலைகளை மேற்கொள்ளத் தவறவில்லை. அதே வேளை சேர்பியப் படைகளின் குண்டு வீச்சுக்கள் சேர்பியரின் கலாசாரச் சின்னங்களை அழிவுக்குள்ளாக்கியன.

குறோட்டியர், சேர்பியர், முஸ்லிம்கள் என்னும் மூன்று பிரிவினரும் வெளியிட்டுள்ள அழிவு எண்ணிக்கைகள் ஒரு தலைச் சார்பானதும் அவற்றின் மூலம் அழிவுகளின் பாரிய தன்மை நன்கு வெளிப்படுத்துவதாயுமுள்ளது. இவர்களின் தகவல்களின் படி 243 வைத்தியச் சார்பான தேவாலயங்களும், 510 றோமன்கத்தோலிக்கத் தேவாலயங்களும் சேதப்பட்டோ, அழிக்கப்பட்டோ விட்டன. குறோட்டியரின் சண்டை மிகப் பயங்கரமாக இடம் பெற்ற பகுதிகளில் 1,450 பள்ளிவாசல்கள் (பொஸ்னியாவில்) உருக்குலைவுக்குள்ளாகின இடசின் கணக்கில் தொல்பொருட் காட்சியசங்களும் பிற கட்டடங்களும் நிர்மூலமாக்கப்பட்டன.



நானூறு, ஆண்டுகளாய் துருக்கியரின் ஒட்டமன் சக்கராதிபத்தியம நிலவியதன் பயனாக உருவான பாரம்பரியச் செல்வங்களே பெருமளவு பாதிப்புக்குள்ளாகின என்பது நிபுணர்களின் கணக்கீடு. 16 ஆம் நூற்றாண்டிற்குரிய சுல்தானியக் கட்டளைப் பத்திரங்கள், அறிக்கைகள், ஆவணங்கள் என்பன சரஜீவோவிலுள்ள கீழ்த்திசை ஆய்வு நிறுவனம் ஏவுகணைகளால் தாக்கப்பட்டபோது இழப்புக்குள்ளாகின. இராணுவ அவதானிகளின் முடிவின்படி மேற்குறித்த நிறுவனத்தினதும், 3 மில்லியன் நூல்களைக் கொண்ட தேசிய நிறுவனத்தினதும் அழிப்பு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதாகும் பொஸ்னிய அரசாங்கம் இவ்வழிகளோடு தொடர்புடைய குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க விரும்பியபோதிலும் கூடுதலாக மிக மோசமான குற்றங்களான கற்பழிப்புக்கள், படுகொலைகள் பற்றிய விசாரணைகள் முதன்மையிடம் வகிப்பதைக்காணக் கூடியதாக இருக்கிறது. இருந்தபோதிலும் கலாசார அழிப்புச் சம்பந்தமான குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் கொலின் கெய்சர் இன்னும் நம்பிக்கை கொண்டவராகவே இருக்கிறார். "போர்க் காலக் குற்றங்கள் இத்தனை தாம் என்று வரையறை செய்யும் சட்டம் எதுவும் இல்லை. உங்கள் முயற்சிகள் பயனற்றவைஎன்று மக்கள் சொல்லும் பொழுதெல்லாம் நாங்கள் காத்திருப்போம். 40 அல்லது 50 ஆண்களின் அந்தக் குற்றங்களை எவ்விதமாவது பிடித்தே தருவோம் என்று தான் சொல்கிறேன்" என்கிறார்.

பால்கன் பிரச்சனையைப் பொறுத்தவரையில் உலகம் மிகவும் அசமந்தமாகவே செயற்படுகிறது. கலாசார பாரம்பரியச் செல்வங்களின் அழிவு குறித்து ஆராய்வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றித் தீவிரமாகச் சிந்திக்கச் சர்வ தேசக் குழுக்களுக்கு இரண்டாண்டே எடுத்தன. ஐ. நாடுகள் தாபனத்திற்கும், பிற உலக நிறுவனங்களுக்கும் பொஸ்னியாவின் கலாசாரப் பாரம்பரியக் காப்புத் திணைக்களப்பணிப்பாளர் அனுப்பிய கோரிக்கைகளுக்கு பதில் பெற, அவர் 14 மாதங்கள் காத்திருக்க நேர்ந்தது. ஸ்டாரி மோஸ்ற் பாலம் உடைக்கப்படப் போகிறது என்பது பற்றித் தெளிவாகவும் மீண்டும் மீண்டும் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டபோதிலும் – இந்த அழிப்பு குறோட்டியர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையே போர் நடைபெறுவதால் ஏற்படக்கூடிய விளைவு என அறிவிக்கப்பட்ட போதிலும் அவையாவும் புறக்கணிப்புக்கு உள்ளாகின.

டுப்றோவ்ணிக்கையும், ஸ்டாரி மோஸ்ரையும் புனர்நிர்மாணம் செய்யும் வேலைகள் தொடங்கப்பட்ட பின்னரும், நூல் நிலையத்தில் அழிக்கப்பட்டவற்றை மீளப்பெறும் முயற்சி மேற்கொள்ளப்பட்டதன் பின்புங்கூட கலாசாரத் தூய்மையாக்கம் தொடர்ந்து. 1993 இல் கிறிஸ்மஸ் தினத்தன்று கர்ளவொக்சிலுள்ள சேர்பியரின் சமயத்தலம் குறோட்டியராலே வெடிவைத்து தகர்க்கப்பட்டது நிச்சயமான உண்மையாகும். சிலமாதங்களின் பின்னர் ஐ. நா சபையின் இடைத்தரப் பேச்சினால் முஸ்லிம், குறோட்டிய சமஷ்டியமைப்பு உருவான வேலையிலும் மூன்று பள்ளிவாசல்களை குறோட்டியப்படை தாக்கி அழித்தது. சேர்பியர் ஆக்கிரமித்துள்ள பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் குறோட்டியர் சேர்பியச் சூறையாடிகளால் தகர்க்கப்பட்டு, அங்கும் இங்கும் சிதறுண்டு கிடக்கும் சிலைகளை, புனிதப் பொருள்களைத் தொகுத்தெடுப்பதற்கும் அச்சங் கொண்டவர்களாகவே இருக்கின்றார்கள்.

''கலாசார தூய்மையாக்கத்தின் ஒரு பகுதி நடவடிக்கையாகக் கொள்ளையடித்தலும் இடம்பெற்றது. உதாரணமாகச் சரித்திரத்திற்கு முற்பட்டகாலத்தில் டான்யூப் நதிப்படுக்கையில் நிலவிய கலாசாரச் சின்னங்கள் தொகுத்து வைக்கப்பட்டிருந்தன. தொல்பொருள்காட்சியகத்தில் இருந்து அவை கொள்ளையடிக்கப்பட்டன. 19 ஆம் 20 ஆம் நூற்றாண்டுகளில் வரையப்பட்டனவும் மிகவும் அரியனவுமான உருவப்படங்களும் இவற்றினுள் அடங்கும். பாரிசில் பெல்கிறேட் அரசினால் இக்கொள்ளைப் பொருள்களில் சில கண்காட்சிக்கு வைக்கப்பட்டன. கலாசாரப் பொருள்களைப் பேணிப்பாதுகாக்கும் செக்றோப் நிறுவனப் பணிப்பாளர் பேடினன்ட் மெடர் தமது பங்குக்கு சேர்பியரின் வைதிக தேவாலயங்களில் 3,000 சிலை விக்கிரகங்களை வைத்துப் ''பாதுகாப்பு''ச் செய்வதாக அறிவித்துள்ளார்.

சேர்பியரின் கட்டுப்பாட்டிலுள்ள குரோஷியாவின் ஒரு பகுதியான சிறஜிஙாவில் மெடரின் எதிரிணையாளரால புரோமிர் மிலோஜ்கோ தம்மிடமுள்ள கலைப் பொருள்களைப் பற்றி வெளியிட்டுள்ளார். மூன்று வருடங்களுக்கு முன்பு குறோஷியாவின் டிறினிஸ் தொல்பொருள்காட்சியகத்தில் எஞ்சியிருந்த பொருள்கள் அவரின் கைவசப்பட்டன, அவை இன்டர்போவ் புலனாய்வு நிறுவனததினதும், லண்டனின் கலைப் பொருள் இழப்புப் பதிவேட்டினதும் உதவியுடன் சர்வதேசச் சோதனைக்கு உள்ளாயின. மிகுலாஜ்கோவின் களஞ்சிய அறைகளில காணப்படும் தொல்பொருள்களில் ஒரு மீற்றர் உயரமான குறோஷிய நாட்டார் நடனச் சித்திரம் ஒன்றும், 25 இடுப்பளவில் சில உருவங்களும் குறிப்பிடத்தக்கவை. இவை ஒழுங்கற்ற வகையில் மேசைகளிலும், உலோக அலுமாரிகளிலும் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சித்திரங்களும், சிற்பங்களும் குறோஷியாவின் புகழ்வாய்ந்த 20 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒகஸ்ட் றொடின் என்ற கலைஞரால் உருவாக்கப்பட்டவை. மேலும் ஆறு குறிப்பிடத்தக்க ஓவியங்கள் சண்டையின் பொழுது காணாமல் போய்விட்டன என்று கூறும் மிலோஸ்கோ, அவற்றில் சில பெல்கிறேட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் அவை ஐரோப்பாவில் ஏலத்துக்கு விடப்பட்டன என்றும் குறிப்பிடுகிறார். ''நாங்கள் அவை அனைத்தையும் இங்கு வரவழைத்துக் காப்பாற்றுவோம். உலகம் சேர்பியரின் கிறிஜானா அரசை அங்கீகரிக்கையில் அவற்றைத் திருப்பி அளிப்போம்'' என்று அவர் கூறுகிறார்.

அரசியல் தீர்வு ஒன்றின் பயனாக முன்பு கொள்ளையிடப்பட்ட கலைப்பொருளகள் திருபபக் கிடைக்கையில் ''கலாசாரத் தூய்மையாக்கம்'' அடிபட்டுப் போகும் என்பது நிச்சயம். கலாசாரச் சின்னங்கள் ஆற்றல்வாய்ந்த உணர்ச்சிகளைக் கிளப்பிவிட வல்லவை என்பதால் அவற்றின் அழிப்புக்களும் காணாமற் போனதால் எதிர்காலத்தில் வெறுப்புணர்வு ஆழமாக வேரூன்றிவிடும்.

ரைம், ஒகஸ்ட் 8, 1994

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைந்துவிட்ட உலகின் ஆதிகாலத்து மிருகங்கள்

*மொழிபெயர்ப்பு:*
**டாக்டர் எஸ். பி. ஆர். சீர்மாறன்**
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

வியற்நாமையும், லாவோஸையும் பிரிக்கின்ற மலைத் தொடரில் வன விலங்குகளுக்கென ஒதுக்குப் புறமான இடமொன்று இருக்கின்றது. வூகுவாங் ( Vu Quang ) என்கின்ற இந்த இடத்திற்கு முதன் முதலாக வந்தபொழுது மிகவும் அசாதாரணமான அதிசயமான ஒரு பிரதேசத்திற்குள் நுழைந்தது போன்று உணர்ந்ததாக உயிரியலாளரான ( Biologist ) ஜோன் மக்கினன் கூறுகின்றார்.

பல வருடங்களுக்கு முன்னர் வட வியற்நாம் இராணுவ வீரர்கள் தங்கியிருந்த ஒரு சிறிய இராணுவத்தின் தளமொன்றில் செயற்படு முகமாக உலக வன விலங்கு நிதியத்தின் ஏற்பாட்டில் ஜோன் மக்கினனும், வியற்நாமிய ஆய்வுக் குழுவினரும் முதன் முதலாக 1992 மே மாதம் தமது ஆய்வுப் பயணத்தை இந்த அதிசய பூமியை நோக்கி மேற் கொண்டனர். இவர்களுடைய முக்கியமான நோக்கம் என்னவென்றால், இது வரையில் விஞ்ஞானிகளால் ஆய்வு ஒன்றும் மேற்கொள்ளப்படாத மனிதனுடைய மூளைத் திறனுக்கு அப்பாற்பட்ட ஈரலிப்பான அடர்ந்த காட்டுப் பிரதேசத்தில் வாழ்ந்த – வாழுகின்ற விலங்குகளைப் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளுதலாகும்.



**மெதுவாக ஓடும் மான்**

*இதனுடைய மண்டை ஓட்டு அமைப்பைக் கொண்டே, உயிரியல் ஆய்வாளர்களினால் இதன் கொம்பின் உருவமைப்புப் பெறப்பட்டது. இவ்விலங்கின் முழுமையான தகவல்களைப் பெறு முன்னரே இவ்வினம் அழிந்து போகக்கூடும் என்று கருதப்படுகிறது.*

**வியட்நாம், லாவோஸ் காடுகளினுள் மூன்று புதிய மிருகங்களை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.**

மலைக்குச் சென்ற முதன் நாள் மக்கினன் திரும்பிக் கொண்டிருக்கின்ற வழியில் காட்டு ஆடுகளைப் பற்றிப் பலதையும் கதைத்து வீட்டுத் திரும்பிக் கொண்டிருந்த விலங்கியல் நிபுணரான டுடியூக் ( Do Tuoc ) என்பவரைச் சந்தித்தார்.

வேட்டையாடுபவர்களின் வீட்டுச் சுவர்களில் தொங்க விடப்பட்டிருந்த படங்களில் நீண்ட வளைந்த கொம்புகளையுடைய ஆட்டு மண்டை ஓடுகள் காணப்பட்டதாக டுடியூக் வர்ணித்த பொழுது மக்கினனுக்கு மின்னல் வெளிச்சம் போன்று சந்தோஷம் ஏற்பட்டது. ஏனெனில் தென்கிழக்காசியாவிலேயே அப்படியான அமைப்புடன் ஆடுகள் இருந்திருக்கவே இல்லை என்பது மக்கினனுக்கு நன்கு தெரிந்திருந்த படியால், '' அவற்றை எனக்குக் காட்டுங்களேன் '' என்று கேட்டுக் கொண்டார்.

அந்த புது விதமான மண்டை ஓடுகளைக் கண்டதும் ஒரு நொடிப் பொழுதிலேயே விஞ்ஞான உல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்கு இது வரை தெரியாத ஒரு வகைப் புதிய விலங்கு இது என மக்கினனுக்குப் புரிந்து விட்டது.

இதனைத் தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொண்ட பொழுது மேலும் புதிய தகவல்கள் கிடைத்தன. ஹொலன்ட் நாட்டிலுள்ள கொப்பென்னேகன் பல்கலைக்கழகத்தில் (University of Copenhagen) இது பற்றிய ஆய்வுகளை மேற்கொண்ட பீற்றர் ஆர்சன்டர் அதனுடைய கருப் பொருளின் மூலக் கூற்றிலிருந்து இது ஏறக்குறைய நூறு கிலோ கிராம் எடையுள்ள மிருகமென்றும்; வூகுவாங் எருது, போலி எருது, சாவோலா (Sao La) என்றும் பலவாறு அழைக்கப்படுகின்ற இது ஒரு புதிய இனமல்ல, ஆனால் பல இனங்களின் சேர்க்கையால் உருவாக்கப்பட்ட ஒரு கூட்டம் (Genus) ஆகும். அதாவது மனிதனுக்குப் பல வழிகளிலும் பயன்படுகின்ற மாட்டு இனத்திற்கு உறவினர்களான இவை கடந்த 5–10 மில்லியன் ஆண்டுகளாகப் பிரிந்து வாழுகின்ற ஒரு தனி இனமாகும் என்பன ஆய்வுகள் மூலம் கண்டு பிடிக்கப்பட்டது.

இந்த நூற்றாண்டில் இதுவரையில் இந்த மண்ணில் இருக்கக் கூடிய மூன்று பெரிய விலங்குகளைக் கண்டு பிடித்து ஆவணப் படுத்தியிருக்கிறார்கள். இது வரையில் கண்டு பிடிக்காததைக் கண்ட இத்தகைய இன்னொரு பிரமாண்டமான இனத்தைக் கண்டு பிடித்தது பெரும் திகைப்பையும், ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியது. ஆனாலும் மக்கினன் கண்டு பிடித்த இந்த புதிய விலங்கு இனமானது வூகுவாங் கிராமத்திலும் அதனை அடுத்துள்ள வியற்நாம் லாவோஸ் காடுகளிலும் இருந்து எழப் போகின்ற அதிசயங்களில் ஒன்றாகவே கருதப்படுகின்றது. கடந்த இரண்டு வருடங்களில் விஞ்ஞானிகள் மான் போன்ற உருவக அமைப்புடைய ஒரு பிரமாண்டமான விலங்கையும், மீன் தொட்டிகளில் வளர்க்கின்றது போன்ற மீன் இனமொன்றையும் கண்டு பிடித்தார்கள். ஆய்வுகளும் ஆரம்ப கட்டத்தினில் இருப்பதனால் போகப் போக இன்னும் பல புதிய விலங்குகள் கண்டுபிடிக்கப்படலாம் என்கின்ற நம்பிக்கை பிரமாதமாக இருக்கின்றது.

ஆசியாக் கண்டத்தில் கடந்த இருபத்தைந்து வருடங்களாகத் தள உயிரியிலாளனாகப் பணிபுரிந்த அனுபவமுள்ள மக்கினன், 'இந்தப் பிரதேசம்'' உயிரியலில் தங்கச் சுரங்கம் (A Biological Gold Mine) என வர்ணிக்கிறார்.



முன்ற்ஜாக்

*Giant Muntjac*

மான்போன்ற உருவத்தை ஒத்த இம் மிருகத்திற்கு நீண்ட கோரப்பல் இருப்பதனால், அப் பல்லின் உதவியுடன் தன்னை நெருங்கும் ஆண் மிருகங்களுடன் போராடும் வல்லமை படைத்தது, இது பல இலட்சம் வருடங்களுக்கு முற்பட்ட ஓர் இனம்.

அவுஸ்திரேலியாவின் தேசிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கொயின் குருவ்ஸ் வர்ணிக்கையில் இந்த வருடத்தில் இது வரையில் கண்டுபிடிக்கப்பட்டதை விட இந்தப் பிரதேசம் பன்மடங்கு பிரதிநிதித்துவப் படுத்துகின்றது. இந்த நூற்றாண்டின் கண்டு பிடிப்பு இந்தப் பிரதேசம் எனக் கூறலாம் என்கிறார். ஏனெனில் இது வரையில் இந்தப் பிரதேசத்தில் சண்டைகளும் குழப்பங்களும் நடைபெற்றுக் கொண்டிருந்ததால் இது வரை வெளியுலகிலிருந்து தனிமைப் படுத்தப்பட்டிருந்த இந்தப் பிரதேசம் சடுதியாக இப்போது இயற்கையின் வரலாற்றைப் படிக்கின்ற வகுப்பாக மாறிவிட்டது என ஆனந்தமடைகின்றார்கள்.

இந்தப் புதிய மிருகங்கள் இன்னும் புதிராகவே இருக்கின்றன. இதுவரையில் அவற்றினுடைய எலும்பும், தோலும் பற்றித்தான் தெரியும்.

ஆனால் நியூயோர்க் வன விலங்கு பாதுகாப்புச் சங்கத்தின் ஒப்பந்தத்தின் கீழ் பணிபுரியும் பிரிட்டிஷ் குழுவினரும் லாவோசியன் பணியாளர்களும், லாவோசியன் இராணுவக் குழுவினர் பிடித்து வைத்துள்ள உயிர் விலங்கிலிருந்து பரீட்சிப்பதற்காக இரத்தம் பெறப்பட்டது என்கிறார்கள்.

இவர்கள் கூறுவது சரியாக இருந்தால் பெரிய முன்ற்ஜாக் மிருகம் (Giant Muntjac) பற்றி வியற்நாமிய ஆய்வாளர்களும், மக்கினனும் கூறுவது சரியாகக் கருதப்படும். மேலும் ரூடியோக் என்பவரும், இந்திய உயிரியலாளரான சாந்தினி டோசன் என்பவரும் கொண்டு வந்த மண்டை ஓட்டையும் (Skull) மக்கினன் ஆராய்ந்து பார்த்தார். ஆசியாக் கண்டத்தின் குரைக்கின்ற சிறிய மானை ஒத்திருந்தாலும் கிளைகளைக் கொண்ட கொம்புகள் (Antlers) மிகவும் பெரியவையாகவும், வேறு விதமாகப் பொருந்துபவையாகவுமே காணப்பட்டன. பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையான மண்டை ஓடுகளைப் பரிசீலித்த பின்னர் இந்தப் புதிய உதாரணம் ஒரு தனித்துவமான இனமாக இருக்க வேண்டும் என்கின்ற முடிவுக்கு வந்தார். கருப்பொருளை (Dna) ஆய்வு செய்து ஆர்ச்சன்டர் இதனை உறுதி செய்தார். அத்துடன் இது ஒருவேளை பல இனங்களின் கூட்டாகவுமிருக்கலாமெனச் சிலர் கூறுகின்ற கருத்தைத் தள்ளி வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஏனெனில் இந்தப் பாரிய மானினம் வழமையான மானினத்தை விட ஏறக்குறைய 45 கி. கிராம் எடை அல்லது, 50 சதவீதம் அதிகமானது என்கின்ற மக்கினனின் கருத்து அவர்களுடைய கருத்தை மழுங்கடித்து விட்டது.

ஆ குவாங் கிராமத்தின் வடக்குப் பகுதியிலுள்ள பூமற் (Pumat) என்கின்ற - கிராமத்திற்கு வூகுவாங் எருதைத் (Vu Guang Ox) தேடிப் போன வியற்நாம் உரிமையாளரான நாகூயென் நிங்கோக் சினா என்பவரின் ஆய்வுகளினால் மூன்றாவது புதிய பாலூட்டி மிருகத்திற்கான தடயங்கள் கிடைத்தன. அவர் அங்கிருந்து திரும்புகின்ற பொழுது கிராம மக்கள் அழைக்கின்ற மெதுவாக ஓடுகின்ற மான் ஒன்றின் மண்டை ஓட்டைக் கொண்டு வந்திருந்தார். இதனால் விஞ்ஞானிகள் இதனைச் சின்னாமான் எனச் சொல்வதற்கு இன்னும் கொஞ்சக் காலம் எடுக்கும் என்கிறார்கள். மேலும் ஆர்ச்டண்டார் ஆய்வு செய்கின்ற கருப்பொருள் இதுவரையில் தெரிந்த எந்தவொரு மானினத்தையும் ஒத்ததாக இல்லை என்கிறார்.

சனநெருக்கடி உள்ளதும், இடைவிடாத காடளிப்பும் நடைபெறுகின்ற வியற்நாம் நாட்டில் இயற்கை வளம் நிறைந்த இந்த வூகுவாங் கிராமம் எப்படி வெளிஉலகிற்கு இதுவரையில் தெரியாமல் இருந்தது என்பது பலருக்கும் ஆச்சரியமான கேள்வியாகவே இருக்கின்றது. இதற்குரிய பதிலின் ஒரு பகுதியாக அந்தப் பிரதேசத்திற்குரிய பகுதிகள் மிகவும் கூர்மையான மேடு பள்ளங்களையுடைய கடுமையான வேட்கை, அல்லது ஈரலிப்பைக் கொண்ட பகுதிகளாக இருப்பதனால் அங்கு யாரும் செல்லவில்லையென நினைக்கின்றார்கள்.

தென் சீனக் கடலிலிருந்து ஆவியாகும் நீராவியை வியற்நாமையும், லாவோசையும் பிரிக்கின்ற மலைத் தொடரின் முதுகெலும்பு பற்றிக் கொள்வதனால் வழமைக்கு மாறாக நிலையான காலநிலை நிலவிய போதிலும் மனித சௌகரியத்துக்கு உதவாத காலநிலையாகும். மேலும் மலைகளிலும், மற்றும் பாறைகளிலும் வளருகின்ற அல்கா (Slick Algae) என்கின்ற ஒரு வித பாசியை இந்தப் பிரதேசத்தில் மழைக் காலத்தில் அடிக்கடி பெய்கின்ற மழையும் வறண்ட காலத்தில் கூட்டங் கூட்டமாகக் கொட்டுகின்ற முகிற் கூட்டமும் வளர்ப்பதற்குப் பெரிதும் உதவுகின்றன. இதனால் ஏற்படுகின்ற கடுமையான வழுக்கல் நிலையினாலும் இந்தப் பிரதேசத்தை அடைய முடியாத நிலை தோன்றுகின்றது. ஏன் ஆ குவாங் எருதின் கால்கள் ஓடுங்கி இரண்டு விரல்களையுடைய உட்புறமாக வளைந்த கால்களாகப் பாதம் அமைந்திருக்கின்ற தென்றால் இந்த வழுக்கலான பாறைகளிலும், மலைகளிலும் பற்றி ஏறுவதற்காகவே அவ்வாறு விருத்தியடைந்திருக்கின்றதென விஞ்ஞானிகள் கருதுகின்றார்கள்.

சறுக்கி வழுக்குகின்ற கற்பாறைகள் ஒரு புறம், நகரத்தை விட மோசமாக வெப்பமும், சீரான மழை வீழ்ச்சியும் மறுபுறம், மலேரியா நுளம்புகளும், இரத்தத்தை உறிஞ்சும் அட்டைகளும் இன்னொரு புறமாக மனிதனுடைய நடமாட்டத்தையே வெறுக்க வைக்கின்றன. எனவே வியற்நாமியர்கள் வழமையாக வேட்டையாடுபவர்கள் கூட இந்தப் பிரதேசத்திற்குப் போக முடியாமல் ஆங்காங்கே பொறி வைத்து, அல்லது நாய்களைப் பழக்கி வைத்திருக்கிறார்கள். நாய்கள் இந்தக் காட்டுப் பகுதிக்குள் சென்று விலங்குகளைத் துரத்திக் கொண்டு வருகின்ற பொழுது இவர்கள் மனிதர் நடமாடக்கூடிய இடங்களிலிருந்து அவற்றைப் பிடிக்கிறார்கள்.

வியற்நாமும், லாவோசும் உள்நாட்டு யுத்தங்களினாலும், பொருளாதாரத் தடைகளினாலும் வெளி உலகிலிருந்து தனிமைப்படுத்தப் படாமல் இருந்திருந்தால் வூகுவாங் எருதும், பெரிய மானும், மெதுவாக ஓடுகின்ற மானும் எப்பொழுதோ உலகின் கவனத்திற்கு வந்திருக்கக்கூடும். கிளைகளைக் கொண்ட மானின் கொம்புகளின் பெறுமதி தெரியாமல் அவை விஞ்ஞானத்திற்குப் புதிய இனத்தை பிரதிநிதித்துவம் செய்பவை என்பதனைப் புரியாமல் வேட்டையாடுபவர்களும், லாவோயியன் உத்தியோகத்தர்களும இவற்றை வீடுகளில் தொப்பி தொங்க விடுவதற்கான கொழுவிகளாகவும், விழாக்களில் ஞாபகார்த்தப் பொருள்களுமாகவே பயன்படுத்தி வந்தார்கள். ஹனோயின் கூர்ப்பியல் நிறுவனத்திலும் உயிரியல் களஞ்சி (Hanois, Institute of Ecology and Bio Logical Resources) யத்திலும் தூசுக்கள் படிந்த 1960 களிலிருந்து பிரித்தே பார்க்காத எலும்புகளின் தொகுதியிலிருந்து மக்கினன் அவர்கள் மெதுவாக ஓடும் மானின் மண்டை ஓட்டைத் தேடிப் பெற்றுக் கொண்டார். இவற்றை வியற்நாமியர்கள் தமது தேடுதல்களின் போது சேகரித்தவையாகும். அண்மையில் இந்த நிறுவனத்திற்கு மீண்டும் விஜயம் செய்த மக்கினன் எலும்புகள் வைக்கப்பட்டிருந்த பெட்டியைக் கூர்ந்து கவனித்த போது மேலும் ஒரு புதிய கிளைகளைக் கொண்ட கொம்பைக் கண்டார். இது என்ன, நான்காவது புதிய விலங்கினத்துக் குரியதா? என்கின்ற சந்தேகம் எழுந்தது. இதற்கான வாய்ப்புக்கள் மறுக்கப்பட்ட போதிலும் ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட மூன்று விலங்குகளிலும் உள்ள பொதுவான அம்சம் என்னவென்றால் பல காலமாக இவை தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப நிலையிலிருந்து (Primitire Stage) குணாதிசயங்களிலிருந்து மாறவேயில்லை என்பதாகும். மெதுவாக ஓடும் மானின் சாதாரண கொம்பு ஆர்ச்சன்டருக்கு விக்கிங்கின் தலைக்கவசத்தை ஞாபகப்படுத்தியது. மான்கள் இனத்தைச் சேர்ந்த மிருகங்களுக்கு இருக்கின்ற - சண்டையின்போது பயன்படுத்துகின்ற நீண்ட வெட்டுப் பற்கள் இந்த பாரிய மானினத்திற்கும் இருந்திருக்கின்றன. இவை பற்களால் முதலில் தாக்குதலில் ஈடுபட்ட பின்னர் தமது கொம்புகளைப் பயன்படுத்துகின்றன. மேலும் இந்த மூன்று விலங்குகளுக்குமுரிய மூளைக் கவசமும் அவற்றினுடைய உருவக அமைப்புடன் ஒப்பிடுகின்ற பொழுது சற்றுச் சிறிதாக இருக்கின்றது. குரூவ்ஸ் (Croves) கருத்துத் தெரிவிக்கையில்வூ குவாங் எருது இந்தியாவில் ஐந்து மில்லியன் வருடங்களுக்கு முன் வாழ்ந்த ஹெமிபோஸ் (Hemibos) என்கிற விலங்கை ஒத்திருக்கின்றது என்கிறார்.

ஆதிகாலத்து விலங்கினம் இங்கிருக்கக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றது. ஏனென்றால் வூகுவாங் கிராமமும் அதன் சுற்றுப்புறச் சூழலும் பல மில்லியன் ஆண்டுகளுக்கு மாசுபடுத்தப் படவோ இடையூறுகள் ஏற்படவோ இல்லை எனறு கருதுகிறார்கள். அதன் சூழல் மிகவும் பாதுகாப்பாகவே இருந்து வந்திருக்கின்றது. மேலும் சீரற்ற காலநிலை நிலவாத காரணத்தால் ''இவ்வாறான புனிதமான மிருக இனங்கள் நீண்ட காலத்திற்குப் பாதுகாப்பாக இருக்கக் கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன'' என ஆர்ச்சன்டர் தெரிவிக்கின்றார். இந்தப் பிரதேசத்தில் நிலவுகின்ற வித்தியாசமான சூழ்நிலையைக் கருத்திற் கொள்ளுகின்றபோது பெருமளவிலான தாவரஉண்ணி விலங்குகளும் தற்போது ஆய்வுகளினால் கண்டுபிடிக்கப்பட்ட புதிய விலங்குகள் உட்பட இன்னும் பலவிதமான யானைகள், பூனை இன மிருகங்களும், சாதுவான மானினமும், ஒருவித கம்பளி ஆடுகளும், தென் கிழக்காசியாவில் – ஏனைய பகுதிகளில் சீரற்ற காலநிலை நிலவுவதனாலும் இவை இந்த பிரதேசத்தில் அடைக்கலம் புகுந்திருக்கலாம் என ஆர்ச்சன்டரும், குரூவ்ஸும் கருதுகின்றார்கள்.

இப்போதுள்ளதைப் போலன்றி ஒரு காலத்தில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட விலங்குகள் யாவும் ஒரு பெரிய இடத்தில் உறுமிக் கொண்டு உலாவித் திரிந்தன. இந்த நூற்றாண்டில் காலநிலையில் ஏற்பட்ட மாற்றங்களினால் விலங்குகளுக்கு இந்தப் பிரதேசத்தில் ஏற்பட்ட இடையூறுகளைவிட மனித நடமாட்டத்தினால் அதிசுளவு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. மேலும் இந்த இடையூறு பெருமளவில் முடுக்கிவிடப் பட்டுள்ளது. அண்மைக்காலம் வரையில் அதாவது ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் கூட வியற்நாமில் ஏறக்குறைய ஐம்பது சதவீதமான காடுகள் இயற்கையானவையாகவே இருந்தன. ஆனால் தற்பொழுது பத்து சத வீதத்திற்கும் குறைவான காடுகளே நவீனமயமாக்கலினால் அழியாமலிருக்கின்றன. எப்பொழுதுமே வீணாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் காட்டினுள் முன்னரைவிடத் தற்போது ஆழமான காட்டிற்குள் செல்வதனால் புதிய இன விலங்குகளைக் கண்டுபிடிக்கக் கூடியதாக இருக்கின்றது. வூ குவாங் கிராமத்திற்கு வியற்நாமியர்கள் 1950 ஆம் ஆண்டு வரும்வரையில் அது மனித சஞ்சாரமற்ற பிரதேசமாகவே இருந்தது. அதனால் ஆதிகாலத்து விலங்கினங்கள் இன்னும் அங்கே தப்பிப் பிழைத்திருக்கின்றன. ஆனால் தற்பொழுது வேட்டையாடுபவர்கள் பொறிவைத்து அகப்படுகின்ற அனைத்து மிருகங்களையும், ஆபத்தான சூரியக்கரடி, புலி என்பவற்றைக்கூட கொன்றுவிடுகின்றார்கள். யானையின் எண்ணிக்கையை ஏறக்குறைய ஐந்தாகவும் இதே போன்று இன்னும் கண்டுபிடிக்காத எத்தனையோ விலங்குகளையும் அடியோடு அழிந்து போகுமளவிற்கு மனிதனுடைய அழுத்தம் அங்கே ஏற்பட்டிருக்கின்றது. மெதுவாக ஓடுகின்ற மான் (Slow Running deer) இனத்தை விஞ்ஞான ரீதியாக விபரிக்க முன்னரேயே அதன் பெயரிற்கேற்ப இலகுவில் இல்லாதொழிந்துவிடுவார்கள் என மக்னினன் கவலையடைந்துள்ளார்.

லாவோசின் பக்கத்து நிலைமை சற்று மேலானது. லாவோசின் சனத்தொகையினர் மிகவும் ஐதாக தூரத்தூரவே வாழ்கிறார்கள். ஆனாலும் ஹெமொங் ஆதிவாசிகளும் (Homong Tribesman) எல்லையைக் கடந்துவரும் வியற்நாமியர்களுமே இடைவிடாமல் அனைத்து விலங்குகளையும் இந்தப் பிரதேசத்தில் வேட்டையாடுகின்றார்கள். வனவிலங்குப்பாதுகாப்புச் சங்கத்தின் (Wildlife Conservation Society) உயிரியலாளரான ஜோர்ஜ் ஸல்வேர் தனது அவதானிப்பில் அநேகமான கிராமங்களில் பதின்மூன்று வயதிற்கு மேற்பட்டவர்கள் நீண்டகால யுத்தத்தின் பின்னர் விடப்பட்ட சாதாரண இழுவைத் துப்பாக்கிகள் வரை தம்வசம் வைத்திருக்கிறார்கள் என்றார்.

இந்தப் பிரதேசத்தில் ஏராளமான விதம்விதமான மிருக இனங்கள் இருக்கின்றன. ஆனால் வேட்டையாடுவதினால் பல இனங்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது என்கின்றார் உலக வனப்பாதுகாப்பு சங்கக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் அலன்ரபினோவிஸ். மேலும் அயல் நாடுகள் லாவோசின் காடுகளும் பெருமளவில் அழிக்கப்பட்டு வருகின்றன.

ஆசியாக் கண்டம் முழுவதுமே படிப்படியான பாலைவனமாக மாறிக்கொண்டு வருவதைத்தடுத்து நிறுதத உதவிசெய்வதற்கும் தமது இயற்கையான நீர்வளங்களையும் காடுகளையும் காப்பற்ற வேண்டிய தேவையில் வியற்நாமும் லாவோசும் தற்போது இருக்கின்றன. உலகளாவிய ரீதியிலும் இந்தப் பிரதேசம் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் பல்வேறுபட்ட உயரினமாற்றங்களும் அவை எவ்வாறு உருவாக்கமடைகின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது பற்றியும் அறிவதற்கு உலகில் இதுவே சிறந்த இடமாகக் கருதுகின்றார்கள். இங்குள்ள கரடு முரடான மலைப்பிரதேசத்திலுள்ள உயிரினச் செல்வங்களை ஆராய இன்னும் ஆரம்பிக்கவேயில்லை என்கிறார்கள் விஞ்ஞானிகள். பல்வேறுவகையான உயிரின மாற்றங்களை மனித இனம் காப்பாற்ற வேண்டுமாயின் பல்வேறுவகையான உயிரின மாற்றங்கள் நடைபெறுகின்ற இடமென நிரூபிக்கப்பட்ட இடமாகிய வூ குவாங் போன்ற இடத்திலேயே ஆரம்பிக்கவேண்டும். என்கிறார் ஆர்சன்டர்.

இரண்டு நாடுகளுமே இந்த இயற்கையான சூழலமைப்புக்களைப் பாதுகாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

### ஆ - குவாங் எருது

மாட்டைப் போன்று சற்று வினோத உருவமைப்பைக் கொண்ட இம் மிருகத்தின் எடை 100 கிலோ கிராம். இதன் கால் குளம்பு உட்குழிவான ஒடுங்கிய வடிவில் அமைந்து இருப்பதால் மலைப்பிரதேசங்களின் மேற்பரப்பில் நிதானமாக நடக்க உதவுகிறது.



மக்கினனினதும் உலக வனவிலங்கு நிதியத்தினதும் ( World Wild Fund - WWF ) சிபார்சின் அடிப்படையில் வியற்நாம் அரசாங்கமானது வூகுவாங் கிராமத்தின் பாதுகாக்கப்பட்ட பிரதேசமாக 16, 000 சதுர ஏக்கரிலிருந்து 60, 000 சதுர ஏக்கராக அதிகரித்துள்ளதுடன் பூங்காவினுள் பிரவேசிப்பதையும் தடுத்து நிறுத்திவிட்டது. லாவோஸிலுள்ள 365, 000 சதுர ஏக்கர் விஸ்தீரணங் கொண்ட பாதுகாப்புப் பிரதேசமான நாகை நாம் தேயும் தேசிய பல்வேறு உயிரியல் பாதுகாப்புப் பிரதேசத்துடன் ( Nakai Nam Theum National Biodiversity Conservation Area ) இணைவதனால் இரண்டு பிரதேசங்களும் இணைந்து மேலதிகமாக 750,000 ஏக்கர் நிலமும் சுற்றுப்புற மலைப் பிரதேசமும் வியற்நாமில் பாதுகாப்புப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. லாவோசில் பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தையும் இதனுடன் இணைப்பதற்கான உத்தேசத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் பிரதேசம் என்பது நடைமுறைப்படுத்தப்படும் போது மாத்திரமே அர்த்தமுள்ளதாக இருக்கும். இரண்டு நாடுகளுமே திறந்த சந்தைகளுடன் தமது உத்தியோகஸ்தர்களையும், வியாபார விற்பன்னர்களையும் பணம் சேர்ப்பதற்கு ஊக்கப்படுத்திவிட்டுள்ள நிலையில் 700, 000 சதுர ஏக்கர் விஸ்தீரணங் கொண்ட இந்தப்பிரதேசத்தை வேட்டையாடுபவர்களிடமிருந்தும், பொழுதுபோக்குபவர்களிடமிருந்தும் பாதுகாப்பதற்குச் சாதாரண சட்டதிட்டங்கள் பெரிதும் பயன்படாது.

இருந்தபோதிலும் இந்த பின்தங்கிய தடைசெய்யப்பட்ட பிரதேசம் பாதுகாக்கப்படும் என்கின்ற நம்பிக்கை இருக்கின்றது. வியற்நாமிற்குரிய உலக வனவிலங்கு நிதியத்தின் பிரிவுத் தலைவர் டேவிட் விறல்ஸ் கருத்துத் தெரிவிக்கையில், கிராமப்புற மக்கள் தமது அன்றாட உணவுப் பிரச்சனைக்காகவே வேட்டையாடுகின்றார்கள். தனித்துவமான இயற்கை வளத்தைப் பாதுகாப்பதற்கான இதனைக் கைவிடச் சொன்னால் அவர்களுக்கு சற்று நெருக்கடி ஏற்படத்தான் செய்யும் என்கின்றார் இருந்தபோதிலும் செல்வம் மிகுந்த சில வியற்நாம் மக்கள் தமது இயற்கைக்காட்டுவனம் அழிவதைப்பற்றி எச்சரிக்கை அடைந்துள்ளனர். பிரான்ஸ் மற்றும் அமெரிக்கப்படைகளுக்கு எதிராகப் போரிட்ட வட வியற்நாமின் இராணுவத்திற்கு பிரதம மூலகர்த்தாவாக இருந்த பிரபல இராணுவத்தளபதி ஜெனரல் வோ நிக்புயேன் கைய்ப் ( General Vo Nguyen Giap ) " நாம் பல தசாப்தங்களாகப் பிரான்ஸ் மற்றும் அமெரிக்க இராணுவத்திற்கெதிராகப் போராடியது சுதந்திரம் கிடைத்ததும் எமது இயற்கைச் சொத்துக்களை வீணாகுவதற்காக அல்ல " என வியற்நாமிற்கு வந்த விருந்தாளிகளிடம் கூறியிருக்கிறார். உண்மையில் பெரிய வல்லரசு ஒன்றின் ஆதிக்கத்திற்கு எதிராகப் போராடும் மனவுறுதி கொண்ட வியற்நாம் மக்கள் வூ குவாங் கிராமத்தையும் அதன் பல பெருமைகளையும் பாதுகாக்கின்ற திறனை நிச்சயம் கொண்டிருப்பார்கள்.

ரைம், ஜூன் 20, 1994

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது அறிவுப் புதிர்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# உடலைப்பற்றி ஒரு வினா-விடைப் போட்டி

மொழியாக்கம்: டாக்டர் எஸ். பி. ஆர். சிர்மாறன்

மனித உடம்பைப் பற்றிய பூரணமான அறிவை நீங்கள் இப்போது பெற்றிருக்க வேண்டும். ஏனெனில் நீங்கள் வாழ்வது கூட அதிலொன்றில் தானே. ஆனால், ஆச்சரியப்படத்தக்க விதத்தில் எங்களுடைய உடலைப்பற்றி எவ்வளவு எங்களுக்குத் "தெரியும்" என்பது இலகுவான உண்மையல்ல. உடலைப்பற்றித் தீர்வு காணப்படாத புதிரான விடயங்களும் அதேயளவிற்கு இருக்கின்றன. எங்களுடைய பௌதிக உடலின் அதிசயங்களில் சிலவற்றைக் காணும் பொருட்டு உடற்கூற்றியலின் உலகத்தைச் (World of Anatomy) சுற்றி ஒரு குறுகிய பயணத்தை மேற்கொள்ளுங்கள், உங்களுக்கு வரைபடமோ, ஈயலேகினியோ தேவையில்லை. சரியாக இலக்கத்தில் இருந்து ஆரம்பிப்பதுடன் அறிவுறுத்தல்களையும் தொடருங்கள். வாழ்க உங்கள் பயணம்!

எழுதியவர்: டாக்டர் டேவிட் ரியூபென்

01. உங்களுடைய உடலிலுள்ள இரத்தக் குழாய்கள் அனைத்தையும் ஒரு முனையில் இருந்து மறு முனைவரை நீட்டி வைத்தால் அவை எவ்வளவு தூரத்தை எட்டும் தெரியுமா?
   - (அ) எண்பது மைல்கள் ஆயின் 29 ஆம் இலக்கத்திற்குச் செல்லுங்கள்.
   - (ஆ) 60,000 மைல்கள் எனின் 18 ஆம் இலக்கத்திற்குத் தாவுங்கள்.

02. நீங்கள் சரியாக ஆணி அடித்து விட்டீர்கள். நடு விரலில் நகமே அதிகளவு வேகமாக வளரும் சாதனையைப் பொதுவாக விரைவில் நீளம் கூடக்கூட நகம் வளருகின்ற வேகமும் அதிகரிக்கும். (சராசரியாக ஒரு வருடத்தில் ஒன்றரை இஞ்சிகள் நீளம் வளரும்.) அதில் ஆச்சரியம் என்னவென்றால் நீங்கள் உங்களுடைய நகத்தைக் கடித்தால் அவை இன்னும் விரைவாக வளரும். அதாவது இருபது சதவீதம் வேகமாக வளரும். இப்போது வினா 7 இற்குப் பாயுங்கள்.

03. குரல்வளையை (Vocal cords) அதிரச் செய்யாமலே மனிதர்களால் கதைக்க முடியும், உண்மை. போங்கள் 32 இற்குப் போய், 17 இற்குப் போங்கள்.

04. பிழை. கண்ணின் இமையிலுள்ள (Eyelashes) முடிகள் (கண்களின் புருவத்திலுள்ள முடிகளும் தான்.) சில மாத காலத்திற்கே நிலைக்கக் கூடியவை. வினா 9 -ஐப் பாருங்கள்.

05. நடு இரவில் நீங்கள் தொலைக்காட்சியில் பயங்கரமான படம் ஒன்றைப் பார்த்துக் கொண்டு இருக்கின்றபோது உங்களுக்கு ஆச்சரியமான சத்தமொன்று கேட்கிறது. திடீரென வாத்து மாதிரிப் பறவை பாரிய சத்தத்துடன் வந்து நிற்கிறது. எப்படி வந்தது?
   - (அ) இந்த ஊடுருவுகின்ற அழையா விருந்தாளியை நீங்கள் உங்கள் உருவத்தைப் பெரிதாக்கிக் காட்டிப் பயமுறுத்த முயற்சிக்கிறீர்கள். வினா 38 இற்குச் செல்லுங்கள்.
   - (ஆ) தோலிலுள்ள சிறிய இரத்தக் குழாய்கள் சுருங்குகின்றன. இதனால் தோலில் சுருக்கங்கள் (Pucker) ஏற்படுகிறது. வினா 35 இற்குச் செல்லுங்கள்.

06. ஒரு நாளைக்குச் சராசரியாக எவ்வளவு உமிழ் நீரை உங்களது உடல் சுரக்கிறது தெரியுமா?
   - (அ) கிட்டத்தட்ட ஒரு தேனீர்க் கோப்பை அளவு இருக்குமல்லவா? வினா 36 இற்குப் போங்கள்.
   - (ஆ) இரண்டு பைந்தை விட அதிகம். அதாவது நான்கில் ஒரு (Quart) கலன். வினா 25 இற்குச் செல்லுங்கள்.

07. சத்திர சிகிச்சை மூலம் உள்நாக்கு (Tonsils) அகற்றப்படுவது நீண்டநாள் நடைமுறைகளில் ஒன்று. அதற்குரிய தொழிற்பாடு என எதுவுங் கிடையாது.
   - (அ). உண்மை. வினா 11 இற்குச் செல்லுவோமா?
   - (ஆ) படுபொய். தயவுடன் வினா 34 இற்கு வாருங்கள்.

08. முழுமையாக அல்ல. வினா 20 -ஐ முயற்சித்துப் பாருங்கள்.

09. செல்லவேண்டியிருக்கிறது. தலையிலுள்ள முடி சராசரியாக இரண்டு தொடக்கம் எட்டு வருடங்கள் வரை இருக்கக் கூடியவை. கண்ணின் இமைகளில் இருக்கின்ற முடிகளைவிட ஏறக்குறைய 10 மடங்கு அதிகமாகும். வினா 3 இற்குப் பாய்ந்து போங்கள்.

10. எங்கே பார்ப்போம். பிறக்கின்றபோது பெண்களின் கருப்பையின் வலது இடது புறத்திலுள்ள இரண்டு சூலகங்களும் (Ovaries) முதிர்ச்சியடையாத நூறாயிரம் முட்டைகளைக் கொண்டிருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. பெண் பூப்பெய்து முன்னர் இவற்றில் பல இயற்கையாகவே தேய்ந்து அழிந்துவிடும். பூப்பெய்த (Puberty) நாளிலிருந்து மாத விடாய் நிற்கின்ற (Menapause) காலம் வரையிலுள்ள பெண்களின் வாழ்க்கையின் போது ஏறக்குறைய 400 முட்டைகள் வெளிப்படுகின்றன. இவற்றில் சராசரியாக இரண்டே கருக்கட்டுகின்றன. இருந்தாலும் ஆயிரக் கணக்கில் முட்டைகள் சேமிப்பில் இருக்கின்றன. ஆனால் ஆண்களினுடைய விதைகளிலுள்ள விந்துக்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகின்ற போது இது எம்மாத்திரம். வினா 21 ஐப் பாருங்கள் புரியும்.

11. அது சரியே அல்ல. மீண்டும் 7 இற்கு ஓடுங்கள்.

12. சொந்த மண்ணின் விளையாட்டு, பொதுவாக கருமையான கண்களைக் (Dark Eyes) கொண்டவர்களுக்கு மென்மையான நிறக் கண்களைக் கொண்டவர்களைவிட ஒளி வீச்சுத் திறன் (Reaction Time) அதிகமாகும். ஏனெனில் கண்களினுடைய ஒளி வீச்சுத் திறன் அதனுடைய நிறப்பொருள் (Pigment) படத்தில் பெரிதும் தங்கியிருப்பது வெளிப்படையான உண்மை. எனவே, கருமையான கண்களுக்கு மேலதிகமான நிறப்பொருள்கள் இருப்பதனால் கண்ணிற் படுகின்ற ஒளிக்கதிர்களின் தூண்டல்களைப் பார்வை நரம்பின் ஊடாக மூளைக்குக் கடத்துகின்றன. இதனால் ஏனையோரைவிடப் பொருள்கள் விரைவாக இவர்களுக்குத் தெரிகின்றன. வினா 27–ஐ நோக்கி முன்னேறுங்கள்.

13. எந்த உறுப்பு ஆகக் கூடிய சேமிப்பைக் கொண்டது?
(அ) ஆணினுடைய விதைகள் (The male Testi -cle) வினா 21 இற்குப் புறப்படுங்கள்.
(ஆ) பெண்ணினுடைய சூலகம். (The Female Ovary) வினா 10 இற்குப் போவோமா?

14. நீங்கள் தவறி விட்டீர்கள். வினா 31 -ஐப் பாருங்கள்.

15. எங்களுடைய முடிமயிர்கள் தொடர்ந்து ஒரு புறம் கொட்டிக்கொண்டும், மறுபுறம் முளைத்துக் கொண்டுமிருப்பதை நாம் பலரும் அறிவோம். இதில் எந்தவகை நீடித்து நிலைத்து நிற்கிறது.
(அ) தலையிலுள்ள முடிமயிர்கள். வினா 9 இற்கு வாருங்கள்.
(ஆ) கண் இமையிலுள்ள மயிர்கள். வினா 4 இற்குப் போவோமா?

16. எந்த விரலிலுள்ள நகம் மிகவிரைவாக வளருகிறது?
(அ) நடுவிரலிலுள்ள நகம். வினா 2 இற்குப் போங்கள்.
(ஆ) சிறுவிரலிலுள்ளது. வினா 26 இற்கு வருகிறீர்களா?

17. ஆ வினா 32 ஐப் பாருங்களேன்.

18. மிகவும் சரி. எமது உடலில் கோடானுகோடி (Trillions of cel's) கலங்கள் இருக்கின்றன. இதில் ஒவ்வொரு கலத்திற்கும் இரத்தக் குழாய் மூலம் இரத்தம் சென்றாக வேண்டும். வினா 15 இற்குத் தாவிச் செல்லுங்கள்.

19. கையில் இரேகைகள் (Finger Prints) இருப்பதன் அர்த்தம் இலகுவானதும், நம்பிக்கையானதுமான அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காகும். வினா 41 இற்குப் போங்கள்.
(அ) கைப்பிடியை (Grip) மேம்படுத்துவதற்கு. வினா 24 இற்கு வாருங்கள்.

20. அது சரி! மனிதனுடைய எலும்புகளோ, இரும்பைக் கொண்டு உறுதிப்படுத்தப்பட்ட சீமெந்தைவிட, உறுதிவாய்ந்தவை. இதன் இரகசியம் என்னவென்றால் கல்சியம் என்கின்ற உலோகமும், பொஸ்பரசும் (Phosphorus) மூலகமும் சேர்ந்த கலவைக்கு ஒக்ஸிஜன் (Oxygen) என்கின்ற உயிர் வாயுவும் சேருவதனால் சீமெந்து போன்று உறுதி பெறுகிறது. வினா 42 இற்குப் போங்கள்.

21. இது ஒரு நல்ல தெரிவு. உடலுறவின் போது (Sexual Intercourse) ஏறக்குறைய 300 மில்லியன் விந்துக்கள் வரை ஆணிலிருந்து வெளியேறுகிறது. ஓர் ஆண் - பெண் சோடி மாதமொன்றில் எட்டுமுறை உடலுறவு கொள்ளும் போது பெண்ணின் உடலிலிருந்து விடுபடுகின்ற ஒவ்வொரு முட்டைக்கும் ஏறக்குறைய 24,000 மில்லியன் விந்துக்கள் வெளியேறுகின்றன. இவ்வளவிற்கும் பெண்ணின் முட்டையைக் கருக்கட்டுவதற்கு ஒரேயொரு விந்துவே தேவைப்படுகின்ற நிலையில் இதனுடைய உண்மையான உதவியாளர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 2,399,999,999 விந்துக்கள் ஒவ்வொரு மாதமும் என்பது மிகவும் வியப்புக்குரியது. வினா 44 இற்குப் போங்கள்.

22. இருதயத் துடிப்பைத் தூண்டுவதற்கான சமிக்ஞைகள் மூளையில் இருந்தும் முண்ணான் நரம்புத் தொகுதியிலிருந்துமே (Spinal cord) கிடைக்கின்றன.
(அ) உண்மை வினா 14 இற்குப் போவோமா?
(ஆ) படுபொய். வினா 31 இற்குப் போங்கள்.

23. எந்த நாட்டைச் சேர்ந்தவருக்கு உடலின் மணம் (Body Odor) ஆகக்குறைவு?
(அ) சுவீடன் நாட்டைச் சேர்ந்தவருக்கு. வினா 28 – இற்குப் போங்கள்.
(ஆ) கொரியா நாட்டைச் சேர்ந்தவருக்கு வினா 33 - இற்குப் போங்கள்.

24. ஆம், நிச்சயமாக இந்தக் குறுகிய மடிப்புக்கள் உள்ளங்கையிலும் விரல்களிலும் உள்ள நிலப்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரப்பைப் பெரிதும் அதிகரிக்க உதவுகிறது. இதனால் உராய்ப்பு கூடுகின்றது. இத்துடன் இந்த மடிப்புக்களில் உள்ள வியர்வைச் சுரப்பி களில் இருந்து மேலும் வியர்வை சுரக்கப்படு வதனால் கையினால் பிடிக்கின்ற பொருள் களை இறுக்கமாகப் பற்றிக் கொள்ள உதவு கிறது. இப்போது வினா 22 – இற்குப் போங் கள்.

25. சரி உங்களுக்கு ஏராளமான உமிழ்நீர் தேவை. ஏனெனில் அதற்கு நிறையவே வேலைகள் உண்டு. உமிழ்நீர் இல்லாமல் மிகவும் சிரமத் துடனேயே கதைக்கவும் உணவுகளை விழுங்க வும் முடியும். மேலும் உணவுப் பொருள்கள் வாய்க்குள் வந்ததுமே சினைப்பர் தாக்குதல் மூலம் ( Snipping ) மாப் பொருள்களைத் தாக்கி வெல்லமாக மாற்றிச் சமிபாட்டை ஆரம் பிப்பதற்கு சலைவா உதவுகிறது. அத்துடன் வாயில் ஏற்படுகின்ற இரணங்கள் கூட விரை வாக ஆறுவதற்கும் உதவி செய்கின்றது. நாக் குத் தவறுதலாகக் கடிபட்டு புண் ஏற்படுகின்ற போது மிக விரைவாகப் புண் ஆறுவதற்கு இதனடிப்படையிலேயே விளக்கம் தரப்படுகின் றது. இனி வினா 13 – இற்குப் போவோம்.

26. அந்த விடையை அழித்துவிடுங்கள். உண்மை யில் சின்ன விரலின் ( Little Tinger ) நகமே ஆகக்குறைந்த வேகத்தில் வளருகின்ற நகமா கும். வினா 2 – ஐப் பாருங்கள்.

27. அவுன்ஸ் அவுன்ஸாகப் பார்த்தால் எது மிகவும் உறுதியானது?
 (அ) மனிதனுடைய எலும்பு. வினா 20 –இற்குப் போங்கள்.
 (ஆ) இரும்பு இடப்பட்டு உறுதி செய்யப்பட்ட சீமெந்து. வினா 8 – இற்குப் போங்கள்.
 (இ) மார்பிள். வினா 37 – இற்குப் போங்கள்.

28. மன்னித்துக் கொள்ளுங்கள். வினா 33 – ஐ மீளாய்வு செய்யுங்கள்.

29. நீங்கள் வழி தவறி விட்டீர்கள். மீண்டும் சென்று வினா 1 – ஐத் திரும்பவும் முயற்சி செய்யுங்கள்.

30. மிகக் கடுமையாகப் பார்த்தால் நீங்கள் சரி. ஆனால் வினா 39 – ஐப் பார்த்தால்.

31. ஆச்சரியம் ஆனால் உண்மை. இருதயம் முழுக்க முழுக்கத் தன்பாட்டிலேயே துடிக்கக்கூடியது. மனித உடலிலிருந்து வெளியில் எடுத்த பின்னர் கூட அது துடிக்கும் தன்மை கொண்டது. அது மட்டுமல்ல இருதயத்தசையின் நார் ஒன்றை ஏன் அதன் ஒரேயொரு கலத்தைக்கூட ஒரு பரிசோதனைக் குழாயில் இட்டு அதற்குத் தேவையான சரியான சத்துணவுப் பொருள் களை இட்டால் இருதயத்தின் தசைநார் அல்லது கலம் தொடர்ந்தும் துடிக்கும் தன்மை கொண் டது. இப்போது வினா 5 – இற்குப் போங்கள்.

32. ஆம் எமது குரல்வளையை அதிரச் செய்யா மலேயே நாம் முழு நேரமும் கதைக்கின்றோம்; இதனைக் குசுகுசுத்தல் ( Whispering ) என்கின் றோம். மூச்சுக் குழாயில் இருந்து வெளிவரும் மெல்லிய காற்றின் ஒலியைக் கொண்டு வாய், பற்கள், நாக்கு, இதழ்கள் என்பவற்றினால் செய் கைகளை உருவாக்குகின்றோம். வினா 40 – இற் குப் பாய்ந்து போங்கள்.

33. சரியானது; உலகத்திலேயே ஏனைய இனத்த வருடன் ஒப்பிடுகின்ற போது கொரியா நாட்ட வர்களின் தோலிலேயே மிகக் குறைந்தளவு நறுமணச் சுரப்பிகள் காணப்படுகின்றன. இனி மேல் வினா 19 - இற்குப் போங்கள்

34. மிகவும் சரியாக. கிருமிகளிடமிருந்து காக்க வென உடலில் இருக்கின்ற பாதுகாப்பு அரசான நிணநீர்க்கலன் தொகுதியின் ( Lymphatic System) ஒரு பகுதியே இந்த உள் நாக்காகும். ( Tonsils ) ஆனால் சில வேளைகளில் இதனைச் சத்திரசிகிச்சை மூலம் அகற்ற நேரிடுகிறது. ஏனெனில் இதுவே கிருமிகளினால் முழுமை யாகப் பாதிக்கப்பட்டு விடுகின்றது. வினா 23 – இற்குப் போவோமா? என்ன களைத்து விட்டீர்களா?

35. நிச்சயம் இல்லை. நீங்கள் திடுக்கிட்டுப் பயப்படு கின்றபொழுது இரத்தக் குழாய்கள் சுருக்க மடைவது என்னமோ உண்மைதான். ஆனால் வாத்துப் போன்ற பயங்கரமான திடீர் ஒலிக்கு இது காரணமல்ல. எனவே வினா 5 – ஐ மீண் டும் முயற்சி செய்யுங்கள்.

36. அப்படியானால் உங்களுக்குச் சகிக்கமுடியாத வறண்டுபோன வாயல்லவா இருந்திருக்க வேண்டும்? மீண்டும் வினா 6 – இற்கே போங்கள்.

37. தவறானது. வினா 20 – ஐ முயற்சி செய்யுங்கள்.

38. ஆம் மிகவும் உண்மை, உடலிலுள்ள அனைத்து முடிமயிர்களும் நிலைநிறுத்துகின்ற தசைநார் ( Erector muscle ) இணைந்துள்ளது. இந்த தசை நார் தான் இணைந்துள்ள முடிமயிரை இழுத்து ஆட்டி நிலையாக வைக்குந் தன்மை கொண் டது. சில மில்லியன் வருடங்களுக்கு முன்னர் எமது மூதாதையர்களுக்கு அவர்களுடைய உடலில் ஏராளமான முடிமயிர்கள் இருந்ததி னால் காட்டுவிலங்குகள் அவர்களை மிரட்டு கின்றபோது அவர்களுடைய முடிமயிர்கள் எழுந்து நிற்பதனால் அவர்களுடைய உருவம் பார்ப்பதற்குப் பயங்கரமாகவும் பெரிதாகவும் இருந்தது. இது அவர்களுக்கு காட்டு விலங்கு களிடமிருந்து ஒருவழி பாதுகாப்பை அளித்தது. ஆனால் இது இப்போது அதிகம் பயன்படாத தினால் இது பற்றி பெரிதும் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. ஆனால் வாத்துச் சத்தம் இன்னும் இடையிடையே வெளியே பார்த்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய சம்பவங்கள் எப்படி இருந்தன என அடிக்கடி ஞாபகமூட்டுகின்றன. வினா 6 – இற்குப் போங்கள்.

39. எருதின் கண்கள். உண்மையில் ஒவ்வொருவருக்கும் மூன்றாவது கண் இருக்கிறது. இது மூளையின் ஒரு தளத்தில் அமைந்துள்ளது. பைனியல் சுரப்பி ( Pineal Gland ) என்கிற இதற்கும் மூன்றாவது கண்களையுடைய பல்வேறு மீன்களுக்கும், தவளைகளுக்கும் இடையே தொடர்பு நெருங்கி இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உண்மையான கண்களைப்போன்று பைனியல் சுரப்பியும் வெளிச்சத்துக்கு மாற்றங்களைக் காட்டுகின்றன. ஆனால் கண்களைப் போன்று விம்பங்களை மூளைக்கு அறிவுறுத்தாமல் மெலற்றோனின் என்கின்ற ( Molatonin ) ஹோமோனைச் ( Hormone ) சுரக்கிறது. இது மனிதனுடைய மன நிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதுடன் பூப்பெய்தலுடனும்சம்பந்தப்பட்டதாகும். நீங்கள் இப்போது இந்த வினா விடைப் போட்டியின் அரைவாசியைத் தாண்டி விட்டீர்கள். இனிமேல் வினா 16 – ஐ நோக்கி விரைவாக ஓடுங்கள்.

40. மண்ணிறமான கண்களை உடைய கூடைப்பந்தாட்ட ( Base Ball ) வீரனுடைய சராசரி பெறுபேறுகள் நீலக்கண்களை உடைய கூடைப்பந்தாட்ட வீரனை விட அதிகமானதாகும். ஏனைய யாவும் இருவருக்கும் சமமானதாகும்.

(அ) உண்மை. எனின் வினா 12 – இற்குப் போங்கள்.

(ஆ) பிழை. எனின் வினா 42 – இற்குப் போங்கள்.

41. கைஇரேகைகள் அடையாளங் காணப்படுவதற்கு மிகவும் சிறந்தவையாகும். சீனர்கள் தமது ஆவணங்களில் கையெழுத்து இடுவதற்காகப் பயன்படுத்தத் தொடங்கியதிலிருந்து பல ஆயிரம் ஆண்டுகளாக இதனை நடைமுறைப் படுத்தி வருகின்றார்கள். ஆனால் இது எங்களுடைய தேவைகளில் ஒன்று. இயற்கையினது அல்ல. ஆகவே வினா 19 – ஐ மீண்டும் முயற்சி செய்யுங்கள்.

42. பெரும்பாலானவர்கள் மூன்றாவது கண்ணுடனேயே பிறக்கிறார்கள்.

(அ) உண்மை. வினா 39 – இற்குப் போங்கள்.

(ஆ) பிழை. 30 – இற்குப் போங்கள்.

43. சுழலுங்கள்; ஒன்று தவறிவிட்டது. வினா 40 ஐ மீண்டும் முயற்சியுங்கள்.

44. வாழ்த்துக்கள்: நீங்கள் சாதித்து விட்டீர்கள். எனவே இப்போது அனைத்தையும் ஒன்றாக முன்னோக்கிப் பாருங்கள், தோமஸ் எடிஸன் ( Thomas Edison ) கூற்றுடன் முடிப்போம். '' உங்களுடைய உடம்பின் பிரதானமான கடமை உங்களது மூளையைக் காவிக்கொண்டு வலம் வருவதாகும். '' ( The chief function of your body is to carry your brain around) மீண்டும் அடுத்த பயணத்தில் சந்திப்போம்.

*றீடேர்ஸ் டைஜஸ்ட், ஜூன் 1994*


காலத்திற்கேற்ற கோலம்

ஆம் நாமும் அச்சுக்கலையில்

புதுக் கோலம் பூண்டிருக்கின்றோம்

உங்கள் பதிப்புக்கள் வண்ணத்தில்

மிளிர வேண்டுமா?

தரமாய் அமைய வேண்டுமா?

ஒருதரம் வருகைதந்து பாருங்கள்!

உங்களை நீங்களே பாராட்டிக் கொள்வீர்கள்!

இராசன் அச்சகம்

114, அருச்சுனா சாலை, யாழ்ப்பாணம்.


வெளியிடுவோர்: உலக உலா நிறுவனம், (3–ம் மாடி) 144, அருச்சுனா சாலை யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொத்த வியாபாரிகளே....!

வியாபார நோக்கத்தைப் பூர்த்தி செய்து
தொழிலுக்கொரு பெருமை சேர்ப்பான்.

## ★ சோழன் ★

**சோழன் நெல் அரிசி வாணிபம்**
பலாலி வீதி, திருநெல்வேலி.

**சோழன் அரிசி ஆலை**
மீசாலை,

**சோழன் அரைக்கும் ஆலை**
சங்கத்தானை, சாவகச்சேரி,

**சோழன் நெல் அரிசி வாணிபம்**
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

**சோழன் அரைக்கும் ஆலை**
சிவலிங்கப்புளியடி யாழ்ப்பாணம்.

**சோழன் அரைக்கும் ஆலை**
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

**சோழன் சாக்கு கொள்வனவு நிலையம்**
சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்.

**சோழன் நடமாடும் வர்த்தக நிலையம்**




**களங்களோடு போரிட்டு**
**வளம் சேர்ப்பான் சோழன்**

**மக்களின் நலன்**
**கருதி இரவும் பகலும்**
**உழைக்கும் தோழன்**

# ★ சோழன் ★


பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்



அச்சுப்பதிப்பு: இராசன் அச்சகம், அருச்சுனா சாலை, யாழ்ப்பாணம்.
அட்டைப்பதிப்பு: அந்திவானம் பதிப்பகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org